

நாச்சியப்பன்
பாடல்கள்
2
தமிழாலயம்

# நாச்சியப்பன்
# பாடல்கள்

## இரண்டாம் தொகுதி

பதிப்பாசிரியர்
நா. செல்வம்



தமிழாலயம்
137, ஜானி ஜான் கான் சாலை
சென்னை—600 014

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | — | Nāchiappan Pādalgal Vol. II |
| Author | — | Nārā Nāchiappan |
| Editor | — | N. Selvam |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | June, 1981. |
| Copy right holder | — | Author |
| Paper used | — | 10.9+11.6 kg. White Printing |
| Size of the book | — | Crown Octavo |
| Printing types used | — | 10 point |
| Number of pages | — | 48+288=336 |
| Number of Copies | — | 1200 |
| Printers | — | NOVEL ART PRINTERS Madras—600 014. Phone : 82731 |
| Binding | — | Paper Back |
| Price | — | Rs.15 (Rupees Fifteen only) |
| Subject | — | A collection of verses on various topics composed by the author |
| Publishers | — | Thamizhalayam 137, Jani Jan Khan Road, Madras—600 014. |

# படைப்பு



குயில்கள் பூமாலைகளை எதிர்பார்த்துக் கூவுவதில்லை.

அருவிகள் யாருக்காகவும் தாளம் போட்டுக் கொண்டு குதிப்பதில்லை.

மயில்கள் கைதட்டுதலை எதிர்பார்த்துத் தோகை விரித்தாடுவதில்லை.

அவை தம்முள் ஏற்பட்ட இன்ப உந்துதலின் காரணமாகச் செயல்படுகின்றன.

ஒரு புலவனின் கருத்தூற்றுக்களும் இவற்றைப் போலவே நெஞ்சுள் பொங்கும் உணர்ச்சியின் உந்துதல் காரணமாகப் பாடல்களாய் வெளிப்படுகின்றன.

ஆனால் ஒரு வேற்றுமை.

பாராட்டுக்கள், புலவனின் ஊற்றுக் கண்ணைக் கிளறிவிட்டு அகலமாய், ஆழமாய் ஆக்கி விரைவாய்ப் பெரிதாய் இடையறாது, தொடர்ந்து பாயச் செய்யும் மந்திரக் கருவிகளாய் விளங்குகின்றன.

பாராட்டுக்கள் கிடைக்காமல் பல ஊற்றுக் கண்கள் அடைபட்டுப் போய் இருக்கின்றன.

போற்றுவார் இல்லாமல் பல ஊற்றுக்கள் ஊறுந் தன்மையை இழந்திருக்கின்றன.

புகழ் மாலைகள் தொடர்ந்து விழுந்ததன் காரணமாகப் பல புலவர்கள் காப்பிய உலகில் வியக்கத்தக்க பெரும் விந்தைகளை ஆக்கியிருக்கின்றனர்.

போற்ற வேண்டியவற்றைப் போற்றும் தூய மனம் எல்லாரிடமும் இருப்பதில்லை.

அந்த மனம் குறிப்பிட்ட சிலரிடம் இருப்பதால்தான், உலகில் பல திறன்கள் ஒளிவீசுகின்றன. பல்துறையிலும் புதிய ஆக்கங்கள் உருப்பெறுகின்றன.

பாட்டெழுதும் ஆர்வத்தை என்னிடம் வளர்த்தவர் களிலே குறிப்பிடத்தகுந்தவர் பொன்னி ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் அவர்களேயாவர்.

தமிழ் நாட்டில், தமிழ் இனப்பற்றுள்ள பல எழுத்தாளர் களையும் கவிஞர்களையும் இலக்கிய உலகில் புகழ் பெற்று நிற்கச் செய்தவர் முருகு அவர்களேயாவர்.

'பொன்னி' இதழின் மூலம் என்னைத் தமிழ்ப் பாவலனாக அறிமுகப்படுத்திய முருகு அவர்களுக்கு என்றும் நன்றி யுடையேன்.

இருபதாண்டுகளுக்கு முன் சில பாடல்களுக்கு அறிஞர் கா. அப்பாத்துரையார் அவர்களும் வேறு சில பாடல் களுக்கு டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களும் வழங்கிய கருத்துரைகளைப் பெருமையோடு இங்கே வெளி யிடுகிறேன்.

சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் இளவரசு அவர்கள் அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். தமிழ் மறவரான அன்னாரின் பாராட்டுக்கும் நன்றியுடையேன்.

உலகத்தமிழாராய்ச்சிநிறுவனத்தைச்சேர்ந்தவர்களான உயர்நிலை ஆய்வாளர் டாக்டர் க. காந்தி அவர்களின் கருத்துரையும், ஆய்வாளர் திரு இரா. பாலசுப்பிரமணியம் எம். ஏ., எம். ஃபில் அவர்களின் ஆய்வுரையும் இந்நூலுக்கு

அணி செய்கின்றன. ஆர்வமும் அன்பும் பண்பும் நிறைந்த இவ்விரு இளநண்பர்கட்கும் என் பெருநன்றி உரித்தாகும்.

முதல் தொகுதியைப் போலவே, இவ்விரண்டாம் தொகுதியையும் தமிழ் மக்கள் குமுகாயத்தின் திருமுன் படைக்கின்றேன்.

நாரா நாச்சியப்பன்

# கருத்துரை

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்
எம்.ஏ., எம்.எல்.சி.,
தலைமை ஆசிரியர்: ஆங்கிலத் தமிழ் அகராதித் துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

திரு. நாரா நாச்சியப்பன் அவர்கள் இயற்றியுள்ள காதற் கவிதைகளைத் தாங்கி வரும் இந்நூலினைப் படித்துக் களிப்புற்றேன்.

மலரைக் காட்டிலும் மெல்லியது காதல் என்பார்கள். அவ்வளவு மெல்லிய பொருளைப் பற்றி இவ்வளவு அழகியதாகப் பாடுதல் இயலுமோ என்று திகைத்து வியப்புறக் கூடிய வகையிற் கவிஞர் நாச்சியப்பன் இக் கவிதைகளை இயற்றியுள்ளார்.

இவர் செய்யுட்களின் கருத்தாழமும், அகலமும், செவிக்கினிமையும், மெய்ப்பாட்டுணர்ச்சியும் படிப் போரை வயம் இழக்கச் செய்கின்றன.

சில கீறல்களைக் கீறி அக்கோட்டினுள்ளே ஓருயிரினைப் பிழம்பு கொள்ளச் செய்யும் சிறந்த ஓவியரைப்போல இக் கவிஞர் சில சொற்களால் மங்கையரை உருக்கொண்டு எதிரே வந்து பேசுமாறு செய்து விடுகிறார்.

காதலர்களுடைய வேணவாக்களும், ஏமாற்றங்களும், பிரிவுத் துயர்களும், உவகைச் செயல்களும் உயிரோவிய மாகத் திகழ்கின்றன.

பகுத்தறிவுக்குப் பொருந்தாத பழமைக் கருத்துக்களை இவர் அழகுறச் சாடுதலையும், புத்தம் புதிய கருத்துக்களை இடமறிந்து இனிதாகச் சேர்த்துத் தருதலையும் காண்போர் இந்நூலைப் பெரிதும் வரவேற்பர் என்பது உறுதி.

திரு நாரா நாச்சியப்பன் சிறந்த கவிஞர் உள்ளம் படைத்தவர்; நிறைந்த கவித்துவம் வாய்ந்தவர். இவர் தொட்டனவெல்லாம் பாட்டாகித் தித்திக்கின்றன. இவர் வெற்றிமாலை சூடுதற்குரியர் என்பது என் துணிபு.

அன்புள்ள

சென்னை-5
15-12-59

அ. சிதம்பரநாதன்

# அன்புரை

பன்மொழிப் புலவர், அறிஞர்
**கா. அப்பாத்துரையார்**

கவிஞர் நாரா நாச்சியப்பனைப் 'பொன்னி' பிறை யிதழாக நடந்த காலையிலிருந்து தமிழகம் நன்கறியும். அவர் கவிதையேயன்றிக் கதை கட்டுரைகள் பத்திரிகையுலகில் நல்ல வரவேற்புப் பெற்றுள்ளன. பொன்னியால் வந்த புகழை வளர்த்து மன்னிய புகழாக்கும் எண்ணத்துடன் இள அன்பர்கள் அவர் சிதறிய கவிதை மலர்களைப் பல வண்ணப் பூந்தொடையல்களாக்கித் தமிழகத்துக்குப் படையல் செய்ய விழைந்துள்ளனர்.

பல்வண்ணத் தொடையல் வரிசையிலே இது பல்சுவைத் தொகுதி. பல் சுவைகளுமே ஒன்றையொன்று வெல் சுவைகளாகவே திகழ்கின்றன.

மாணவராயிருக்கும் போதே கவிஞர் நாரா நாச்சியப்பன் கவிதையில் மழலையாடியதை நான் அறிவேன். இத்தகு மழலைக் கவிதைகள் அன்று தந்த இன்பம் எனக்குப் பெரி தெனினும், இன்று நாரா நாவின் எண்ணக் கவிதை— வண்ணக் கவிதையாகக் காணும்போது, என் இன்பம் தமிழகம் பெறும் இன்பக் கடலில் ஒரு துளியாகி அதில் பரவி விடுகிறது!

கவிதையில் கனவும், அறிவில் திட்பமும், செயலில் வீறும், புகழில் உலக நலனும் ஒருங்கே வளமாகப் பெற்றுப் பொங்குக தமிழின வாழ்வு!

**கா. அப்பாத்துரை**
10-11-59

# அணிந்துரை

**டாக்டர். இரா. இளவரசு**
*தமிழ்த்துணைப் பேராசிரியர்*
*மாநிலக் கல்லூரி-சென்னை-600005*

*ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன் தென்றல் என்றோர் கிழமை இதழ் விரிந்துகொண்டிருந்தது. மொழியறிஞர் தேவநேயப்பாவாணர், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் முதலியோரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அவ்விதழில் கமழ்ந்து கொண்டிருந்தன. திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடைய பாவலர்களின் பயில்களமாகவும் அவ்விதழ் அமைந்தது. கிழமைதோறும் வரும் அவ்விதழின் வெண்பாப் போட்டிப் பகுதியில் ஏராளமானோர் எழுதிவந்தார்கள். நானும் சில வெண்பாக்களை எழுதியுள்ளேன். பாவலர் நாரா நாச்சியப்பன் அவர்களை, அந்த இதழ் வாயிலாகவே முதன் முதல் நான் அறிவேன். ஏராளமான வெண்பாக்களை அழகொளிர அவர் எழுதி வந்ததும், சுவைமிக்க பாடல்களைத் தொடர்ந்து தந்ததும் இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. பாட்டுலகில் என்னைப் போன்றவர்கள் குறுகுறு நடந்தபோது இவர்பீடுநடை போட்டவர். அந்த நினைவோடு இந்தத் தொகுப்பு நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதுவதில் நான் அகமகிழ்கிறேன்.*

*இன்றைய இலக்கிய அரங்கில் பாடல்களைப் படிப்பவர்களைவிடப் பாடல்களைப் படைப்பவர்களே பலராக உள்ளனர். ஒரு பாவலனே மற்ற பாவலர்களின் பாடல்*

களைப் படிப்பதில் போதிய ஈடுபாடு காட்டுவதில்லை. பாடல்களை வெளியிட நூல்வெளியீட்டாளரும் தயங்கு கின்றனர். இந்தச் சூழலில், பாடல் நூல் வெளியிடுவதற்கு அதுவும் ஏறத்தாழ முந்நூறு பக்க அளவில் வெளியிடுவதற் குத் தனித்துணிவு தேவை. அத்துணிவை மிகப்பெற்று இந் நூலைக் கொணர்ந்துள்ள பாவலரைப் பாராட்ட வேண்டும்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பாடல்கள் பல காலத்தன. பெரியோர் ஈ.வே ராவின் எழுபதாம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்தையும் (பக். 217), அவர் மறைந்த பிறகு பாடிய பாடல்களையும் (223) இத்தொகுப்பில் காண் கிறோம். ஏறத்தாழ முப்பதாண்டு கால இடைவெளியில் மலர்ந்தவைகளே இப்பாடல்கள் எனலாம். பாடல் மலர்ந்த காலக் குறிப்பு ஆங்காங்கே தரப்பட்டிருப்பின் பாவலரின் வளர்ச்சிப் போக்கைக் கணித்தறிய ஆய்வாளர் களுக்குப் பயன்பட்டிருக்கும்.

பாடல்கள், தமிழ், தமிழர், தமிழ்நாடு, இயற்கை, காதல், சான்றோர், பகுத்தறிவு, நூலாக்கம் எனப் பல பொருள்களைப் பேசுகின்றன.

தமிழை, உலக முதன்மொழியாகக் கருதும் (பக்.1) பாவலர் பிறமொழிக் கலப்பைத் தவிர்த்து அறிவியல் முதலிய அனைத்தையும் தனித் தமிழில் கூறவேண்டும் (24, 28) என்பதோடு, கோயில் முதலிய பல இடங்களில் வேற்று மொழிகள் இடம்பெற்றிருப்பதைக் கண்டு (40, 52) வருந்துகின்றார்.

"போற்றிசெயும் கோயிலிலே, பாட்டுப் பாடும்
புலவர்களின் அரங்கத்தே, அறமன் றத்தே,
ஆற்றல்பெறும் கல்லூரிக் கூடம் தன்னில்
அரசுபணிச் செயலகத்தே, திரும ணத்தே

கூற்றுவரும் இழவகத்தே கூட உன்னைக்
கூடாமற் செய்துவிட்ட கோலங் கண்டு
நேற்றுவரை போராடிப் போரா டித்தான்
நெஞ்சுறுதி பெற்றுவரு கின்றோம் தாயே!" (52-53)

எனப் பாவலர் குறிப்பிடுவது எண்ணத்தக்கது. இந்தி, வடமொழி ஆங்கிலம் ஆகிய மொழிகளின் வல்லாண்மையி லிருந்து தமிழைக் காப்பாற்ற வேண்டும் எனும் பாவலரின் விழைவு போற்றத் தக்கது. ஆங்கிலமொழி வல்லாண்மை யால் தமிழுக்குற்ற கேட்டினைப் (37, 38, 50, 51, 82, 83) பாவலர் குறிப்பிடுவது தனித்துச் சுட்ட வேண்டிய சிறப் பாகும்.

தமிழர்கள் உரிமை உணர்வின்றி உள்ளத்தாலும் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்களே, இவ்வடிமைநிலை வழி வரும் தமிழர்களையும் வீழ்த்தி விடுமே எனப் பாவலர் துன்பப்படுவதை,

"உடலடிமைப் பட்டாலும் உள்ளத் துள்ளே
ஊறிவரும் உரிமையுணர் விருக்கு மானால்
கெடலில்லை யம்மனிதன் அழிந்தாலுந்தன்
கீழ்வருமோர் பரம்பரையார் வீரங்கொண்டு
அடிமைநிலை மாற்றுதற்குப் போராட் டங்கள்
ஆயிரமா யிரமாகச் செய்து வெற்றிக்
கொடிபறக்கச் செய்வரிது மெய்யே; உள்ளம்
கொள்ளுகின்ற அடிமைநிலை துன்பம் அம்மா! (51)

எனும் எண்சீர் விருத்தம் தெளிவாக உணர்த்துகிறது.

முன்னோரைத் தழுவி மூவேந்தர் பெருமையை (12) இவர் பேசினாலும் இந்திய நாட்டு வரலாற்றில் பண்டையோர் தொட்டு, கட்டபொம்மன், வ.உ.சி. வரை யிலான பலரும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ள இழி நிலையை எவரிடம் போய்ச் சொல்வது! (14) எனும்

பாவலரின் வருத்தம் சரியானதே. தமிழ் நாட்டைப் பற்றிப் பாடுகிற போது,

"அன்றும் இன்றும் என்றும் தமிழே
ஆளுந் தமிழ் நாடே!" (30)

"வகுத்த நெறியில் வழுவா திருக்கும்
பண்புத் தமிழ் நாடே!" (31)

"தோழமை யாலே ஏழைமை மாய்த்துச்
சுடரும் தமிழ் நாடே!" (32)

எனக் குறிப்பிடும் பகுதிகள் பாவலர் எதிர்பார்க்கும் தமிழ் நாட்டைக் காட்டுகின்றன. இருக்கும் தமிழ் நாட்டைத் 'தமிழ் வளர்கிறது' எனும் பாடல் (33) அழகாகப் படம் பிடிக்கிறது.

"தமிழினை வளர்ப்போ மென்றும்
தமிழர்நா டடைவோ மென்றும்
அமிழ்தென மொழிவோ ரெல்லாம்
அவரவர் கொள்கை கொண்டு
சுவைசுவை யாகத் தீமை
தோற்றுவித் திடுதல் கண்டேன்" (34)

"அரைப்படிப்புக் காரரெல்லாம் தமிழ்வ ளர்க்கும்
ஆர்வமுள்ள எழுத்தாள ராகி விட்டார்!
திரைப்படத்தின் எழுத்தாள ரெல்லா மிந்தத்
திருநாட்டில் அறிஞர்களாய் உலவு கின்றார்!
உரைப்படிப்புப் பண்டிதரோ புதுமை யென்றால்
ஒதுங்குகின்றார்; நூற்பொருளில்திருத்தம் சொன்னால்
கறைப்படுத்தி விட்டோமென் றலறு கின்றார்!
காண்பதெல்லாம் விந்தைகளே! தமிழர் நாட்டில் (35)

போன்ற பாடற் பகுதிகள் நடப்புநிலைத் திறனாய்வாக அமைகின்றன. வடவரின் பிடியினின்றும் வளர்தமிழ் நாட்டை மீட்கத் திரளும் படையினில் தன்னையும்

சேர்த்துக் கொண்டதாகப் பாவலர் குறிப்பிடுவது (33) அவரின் கடந்த காலச் சார்பு நிலையைச் சுட்டுகின்றது.

"மிகுந்தநலம் ஒருவர்உற நாட்கள் தோறும்
மேனியெலாம் கருமையுற வேர்வை ரத்தம்
உகுத்திடுக ஒருவரென்று மன்றில் சட்டம்
உண்டாக்கி வைத்தபெரும் சண்டாளர்யார்?" (42)

என வினா எழுப்பி,

"வண்ணானின் சேயையொரு வண்ணானென்று
வகுத்துவிட்ட மடையர்களைப் பெரியோரென்றே
அண்ணாந்து பார்க்கின்ற அறிவற்றோரே" (43)

எனச் சாடி,

"...இந்த நாட்டில்
அழுதொருவன் இருக்கும்வரை விடுதலையை
அடைந்துவிட்டோம் என்பதெல்லாம் வெறும்
கூப்பாடே! (43)

எனத் தெளிவுபடுத்தி,

"அனைவருக்கும் பொதுவிந்த உலகமென்ற
நேரியதோர் கொள்கையினைத் தமிழர் நாட்டில்
நிலைக்க வைத்தால் யாவருக்கும் விடுதலைதான்!"(44)

என வழி காட்டுகின்றார். பொதுமை நெறியில் உண்மையான விடுதலையும், உரிமை வாழ்வும் கிடைக்கும்-நிலைக்கும் என்பதைப் பாவலர் கண்டு காட்டுவது பாராட்டத் தக்கது.

இயற்கையைப் பற்றிப் பாடும் பாவலர் 'எரிக்கும் வெயில்' பற்றி எப்போதோ பாடிய பாடல் இவ்வாண்டின் கோடை வெயிற் கொடுமையைத் தேக்கி நிற்கின்றது.

"எடுத்து வைக்கும் அடியில் சுட்டாய்
தலையும் கொதிக்க வைத்தாய்

படுத்தி ருக்கும் மனித ருக்கும்
வியர்த்துக் கொட்ட வைத்தாய்"

இவ்வடிகள் நாமெல்லாம் பட்டதைப் படம் பிடிக்கின்றன அல்லவா?

சிறிய வயதில் அவளின் வடையையும் பொம்மையையும் பறித்து விளையாடிய பாவலனுக்கு இப்போது பருவ மெய்திய அந்தப் பாவையையே அடைய வேண்டுமென்ற ஆவல் மேலிடுகின்றது. இளமைத் துணிவு எங்கோ ஓடி விடுகின்றது.

"மீசை திருகி நடக்கவில்லை—அந்த
மின்னலைத் தாக்கிடும் எண்ணமில்லை
ஓசைப் படாமலே கொல்லைவழி—அவள்
ஓடி வருவதை யெண்ணி யெண்ணி
ஆசைப் பட்டிங்கு வாடுகின்றேன்—அவள்
அருட்கண் பார்வையை நாடுகின்றேன்
பாசங் கொண்டேன் இச்செய்தியினை—அந்தப்
பாவைக் குரைத்திட வேண்டுமடா?" (153)

என்று பாடுகிறார். நமக்கும் 'ஐயோ பாவம்' என்று இரங்கத் தோன்றுகின்றது. 'திருமண வாழ்த்து' எனும் பாடல் (158) எல்லா மணமக்களுக்கும் உரிய பொது வாழ்த்தாக, என்றும் எவரும் பாடும் சிறப்பு வாழ்த்தாக அமைந்துள்ளது; நாம் கூட அதனைத் திருமண வாழ்த்தாக எழுதி விடுக்கலாம், வாழ்த்தி மகிழலாம்.

நெஞ்சங் கவர்ந்த தலைவர்களைப் போற்றிப் பாடுதல் தொன்று தொட்டு வழங்கும் நெறி, அந்நெறியில், பாரதியார், பாவேந்தர், பெரியார், அண்ணா ஆகிய தலைவர்களை ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களில் நிலைநிறுத்தியுள்ளார். கனக கப்புரத்தினம் பாரதிக்குத் தாசனானது எவ்வாறு பொருந்தும் என வினா எழுப்பி அதற்கு விடை

வழங்கும் பாவலரின் திறம் பாராட்டத் தக்கது. மறை மலையடிகள், கலைஞர் கருணாநிதி, சொல்லின் செல்வர் சம்பத்து, தம்பிக் கோட்டை கணபதி முதலியோரையும் பாட்டில் நிறுத்தும் பாங்கு மனங்கொளத்தக்கது. நாவலர் நெடுஞ்செழியனைக்,

"கோவேந்தர் பாண்டியரைக் கொண்ட திருவுருவம்!
நாவேந்தர் அண்ணாவின் நம்பிக்கைப் பேரிமயம்;
பாவேந்தர் பாராட்டும் பைந்தமிழின் பொற்பேழை!
மூவேந்தர் பண்பும் முதிர்ந்த நெடுஞ்செழியன்!
எந்தை பெரியார் எழிற்கருத்தைக் கேட்போரின்
சிந்தை பதியத் தெருத்தோறும் பாய்ச்சிவரும்
மைந்தன்; இளந்தாடி என்னும் மணிப் பெயரன்
நிந்தைக் கிளையா நிமிர்தோள் நெடுஞ்செழியன்!"
(230)

எனவும், ஔவை சண்முகத்தை,

"கற்றவரைப் பின்பற்றும் கலைஞன்; நல்ல
கவிஞர்களைப் போற்றுகின்ற சுவைஞன்; தன்னைப்
பெற்றவரைத் தவம்பெற்றார் ஆக்கி விட்ட
பெருமைந்தன்; தமிழன்னை பெற்ற செல்வன்;
உற்றபெருந் தலைவர்கட்கு நிதி வழங்கும்
ஒருவள்ளல்; கூத்தியலாம் தமிழ்க்க லைக்கு
வற்றாத ஊற்றனைய களஞ்சி யம்போல்
வளஞ்சுரக்கும் சண்முகத்தை வாழ்த்தாய் நெஞ்சே!
(232)

எனவும் படம் பிடிக்கும் பகுதிகளை நம் பாராட்டு பிடித்துக் கொள்கின்றது. இவ்வாறு தலைவர்களைப் போற்றும் இவர்,

"கோவையிலே ஒருபெண்ணைக் காத லித்துக்
கூடலிலே ஒருத்தியுடன் மணம்மு டித்துத்

தேவையுள்ள போதெல்லாம் வேறு வேறு
தேடுகின்றார் சிலதலைவர் இந்த நாளில்!
காவியத்து நாயகரின் மேன்மை பற்றிக்
கழகத்துக் கூட்டத்தும், பத்தி ரிக்கை
ஓவியத்தும் காண்பதன்றித் தலைவர் என்போர்
உள்ளத்தில் நடைமுறையில் காணற் கில்லை. (178)

என இன்றைய தலைவர்தம் இயல்புகளை அங்கைக் கனியாக்கும் போது 'ஆகா' என வியந்து 'வாழ்க துணிவு' எனப் பாராட்டத் தோன்றுகிறது.

பொங்கலைப் போற்றிப் பாடும் பாவலர், தீபாவளியைக் கண்டித்துப் பாடும் பாடல்களையும் காண்கின்றோம். பொருந்தா மணத்தைக் கடிந்தும் கைம்பெண் மணத்தை வரவேற்றும் பாடுகின்றார்.

காற்றையும் தீயையும் தன்வச மாக்கிக்
காட்டினார் மேலை நாட்டினோர்—திரு
நீற்றையும் மண்ணையும் குழைத்து நெற்றியில்
தீட்டினார் நமது நாட்டிலே! (243)

எனும் ஒப்பீடு பாவலரின் பகுத்தறிவுப் பார்வையைப் புலப்படுத்தும்.

நாள்தோறும் நாம் கண்டு வரும் பிச்சைக்காரர்களின் தொல்லையும் பாடலாகின்றது.

ஊருக்கொரு பிச்சைக்காரர் விடுதிவேணுங்க—அங்கே
ஊமைசெவிடு குருடையெல்லாம் சேர்க்க வேணுங்க
ஊருநடுவே பிச்சைகேட்டால் பிடிக்க வேணுங்க—அவரை
உடனே அங்கே கொண்டுபோயி அடைக்க வேணுங்க!
(260)

எனச் செயல் திட்டமும் வழங்கப்படுகின்றது. எதையெதையோ பெறவேண்டுமென்று பிற நாடுகளுக்குச் சென்று, உழைப்பால் அந்நாடுகளை உயர்த்தி, ஏதிலிகளாகத்

திரும்பிவரும் தமிழர்களை நோக்கிப் 'பெற்ற தாய்நாட்டை விட்டுப் பிற நாட்டுக்கேன் போனாய்?' என்று வினா எழுப்பிப் பாவலர் வடிக்கும் கண்ணீர் (261) அவர்தம் பட்டறிவையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது போலும்;

சிறுகதைக்கும், நெடுங்கதைக்கும் என்ன வேறுபாடு?

அடுத்தடுத்து வாழ்க்கையிலே தொடரும் சிக்கல்
அத்தனையும் வகைப்படுத்திப் பிரித்தெடுத்துத்
தொகுத்துரைக்கும் ஆற்றலினால் உண்மை வெல்லச்
சொல்லுகின்ற பாங்கிருக்கும் பெருங்கதையில்;
விடுத்ததொரு கவண்கல்லில் மோதிக் கீழே
விழுகின்ற கனிச்சுவையைத் துய்த்தல் போலே
எடுத்ததொரு கற்பனையின் திறத்தி னாலே
இசைப்பதுதான் சிறுகதையின் ஆற்றலாகும்! (267)

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இவ்வரையறை, நூற்பாவைப் போல் அமைந்துள்ளதன்றோ? கதைஞர்கள் எத்தகு கதைகளை எழுத வேண்டும், எத்தகைய கதைகளை எழுதக் கூடாது என்பதற்கு விளக்கமாக,

ஆடைகுறைக் கின்றகதை வேண்டாம்; நல்ல
அறிவுவளர்க் கின்றகதை படைத்தல் வேண்டும்!
வாடைமதுக் குடிக்கதைகள் வேண்டாம்; தூய்மை
வளர்க்கின்ற சிறுகதைகள் வரைதல் வேண்டும்!
பீடைமதஞ் சாதிகதை வேண்டாம்; அன்பு
பெருக்குகின்ற திருக்கதைகள் மிகுதல் வேண்டும்!
மேடையிலே வீசுகின்ற பூங்காற் றைப்போல்
மிகவினிய சிறுகதைகள் படைப்போம் வாரீர்! (269)

எனும் பாடல் அமைகின்றது. நூல் வெளியீடு பற்றியும், பதிப்பாளர் பற்றியும் பேசுகிற பாடல்களும் பொருட் செறிவோடு அமைந்துள்ளன.

பம்பாயில் வீசிய புயல் பற்றியும் (236), வங்கப்போரில் பெற்ற வெற்றி பற்றியும் (277) பாடியிருப்பது பாவலர்தம் பார்வை விரிவைக் காட்டுவதாம். ஆங்கிலப் பாடல்களைத் தழுவி இயற்றப்பட்ட சில எளிய பாடல்களும் (94, 106, 256) இடம் பெற்றுள்ளன.

பொருளைத் தெளிவாகப் புலப்படுத்தவும், பொலிவு சேர்க்கவும் உவமைகள் பயன்படுகின்றன.

பூங்காவில் வாழ்வோன் பொந்தனைய இல்லத்தே
பாங்காய்ச் சுழல்விசிறி பாய்ச்சுவளிக் கேங்குதல்போல் (3)

"ஏட்டிலே புதுமை சேர்க்கும்
எழுத்தாளர் செயலைப் போலே" (57)

"பச்சைக் குழந்தை பளபளக்கும் தேன்முகத்தில்
மச்சமிட்டு வைத்து மருவாக்கும் தன்மையென" (209)

இவை, பானைச் சோற்றுக்குப் பருக்கைப் பதமாகச் சுட்டப் பெறும் சில புத்துவமைகள்! நூலுள் நுழைந்து பாருங்கள்! மேலும் உவமைகள் மின்னிடும்! 'தவளையின் சொர்க்கம்', (253) 'பொய் மகள்' (263) போன்ற கவிதைகள் பாவலரின் உருவகத் திறனைக் காட்டும் நெற்றித்திலகங்கள். வேற்றுப் பொருள் வைப்பணி, (3) சொற்பொருள் பின்வரு நிலையணி போன்றவை நூலின் பல இடங்களில் அணி செய்கின்றன.

ஒத்திருக்கும் இளம்பருவம் காதல் நெஞ்சம்
உடையவர்கள் மணமக்கள் என்றால் அன்பு
வைத்திருக்கும் மனத்தின்பம் வளர்ந்தி ருக்கும்
வாழ்க்கையிலே நிலைத்திருக்கும் ஒருமை யெண்ணம்
கத்திருக்கும் பழம்போலே; உரமி ருந்தால்
தழைத்திருக்கும் செடிபோலே இல்ல றத்தில்
ஒத்திருக்கும் மனப்பான்மை குடியி ருந்தால்
உயர்ந்திருக்கும் குடித்தனமும்! வாழ்க்கை வெல்லும்
(166)

இவ்விருத்தம் கவிதை யோட்டத்தையும் காட்டிச் செல்கிறது.

ஆசிரியம், அறுசீர் எண்சீர் ஆசிரிய விருத்தங்கள், வெண்பா, சிந்துப் பாடல்கள், இசைப் பாடல்கள் எனப் பலவகை யாப்புகள் கையாளப்பட்டுள்ளன. இவற்றுள், எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம் பரவலாக இடம் பெற்றுள்ளன. எனினும் வெண்பா இயல்பாக எளிதாகக் கைவந்திருப்பது தனித்துச் சுட்டத்தக்கதாம்.

இத்தொகுப்பில், குடிப்பாட்டும் (35), திணிப்பர் (69), பனியன் (87), பாவோர் (1), பூவன் (106) முதலிய புதிய சொல்லாட்சிகளையும், இளக்கம் (218), ஒளிவு (18) கும்மாளம் (194), குறப்பயல் (107) சுருக்கு (46) துள்ளாட்டம் (278), பையப்பைய (155), பொல்லாப்பு (125), போதலையா (238), வேணமட்டும் (60) முதலிய வழக்குச் சொற்களையும் காண்கிறோம். இதயாசனம் (2) ரசம் (6), சங்கதி (96), சம்பம் (75), தினம் (42) பங்கயம் (2) புளகாங்கிதம் (134), லோகத்திலே (144), வாலிபர்கள் (284), விஞ்ஞானம் (28) முதலிய பிறமொழிச் சொற்களும் தென்படுகின்றன.

கற்பனை, பாடலுக்கு அழகூட்டுவனவற்றில் சிறப்பிடம் பெறுவது. பாவலரின் கற்பனை யாற்றலைப் பல பாடல்கள் (87, 90, 98, 206, 241...) புலப்படுத்துகின்றன. இரவில் ஒளிவிடும் விண்மீன்கள் பகலில் தெரிவதில்லை. அவை ஒளிந்து கொள்கின்றனவாம். அதற்குக் காரணமென்ன?

"கதிரவன் வரவு கண்டு
காரிருள் போன பின்னர்
உதிர்ந்திடா வெண்முத் தென்ன
ஒளிரும்விண் மீன்களெல்லாம்
மதிக்கவே செய்யா ரிந்த
மான்விழிப் பெண்க ளென்றே

அதிர்ந்துபோய் ஒளியும் காட்சி
அதிசயம் பாராய் தம்பி!" (88-89)

'மாறும் முடி' (98) எனும் பாடலில் ஞாயிற்றை மன்னரணியும் முடியாகக் கற்பனை செய்திருப்பது நோக்கத் தக்கது.

இன்றைய தமிழனை 'மயங்காதே மறவாதே சீறிப் பாய்வாய்' என வேண்டுகோள் விடுக்கும் பாவலர், அவனைக் காலில் கழலணிந்தவனாகவே கொண்டு,

"செறிகழற்றான் மிகவொலிப்பச் சீறிப் பாய்ந்து
சிங்கமென முழக்கிடுவாய் ஆர்ப்பரித்தே!" (18)

எனப் பாடுவதும், வேத காலத்திற்குத் திரும்பும் ஆரிய சமாசப் போக்கில்,

"பாராட்டும் வண்ணம் பழந்தமிழர் பெற்றிருந்த
சீராட்சி யிங்குத் திரும்பிவர—நேரான
பாதை நடப்போம்..." (163)

எனக் குரல் கொடுப்பதும் பாவலரின் அற்றைநாட் பழமை இறுக்கத்தைக் காட்டுகின்றன.

'அகவன் மகளே'...எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலின் (23) ஓசை யமைப்பைப் 'பாடுக வண்டே' (102) எதிரொலிக்கின்றது. முகிலை யானைக் கூட்டமாகப் பாவலர் காண்பதும் (91),

'துஞ்சுபுலி இடறிய குருடன் போலே
வஞ்சகரின் இந்தியொடு வந்து விழுந்தார்' (67)

எனும் பகுதியும் புறநானூற்றுப் பாடல்களை (369, 73) நினைவூட்டுகின்றன. குறட்கருத்துகள் சில இடங்களில் (120......) விளக்கம் பெறுகின்றன. குழந்தைப் பாடல்கள் நிரம்ப எழுதிய பாவலர் கவிமணியிலும் தோய்ந்தவர் என்பதைக் 'குறிப்புகள்' (97) வெளிப்படையாக்குகின்றது. 'தவிப்பதற்கோ பிள்ளை' எனும் கண்ணதாசனின் குரலை,

'ஏன்பிறந்தாய்' (116) பாடலில் இன்னொரு வகையில் கேட்கின்றோம். எனினும், பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவரிடமே பாவலருக்கு மிகுந்த ஈடுபாடு என்பதனை இத் தொகுப்பு நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

பாரதியின் 'வாழிய செந்தமிழ்' அமைப்பை அப்படியே தழுவி,

"வாழிய தமிழ்மொழி வாழிய தமிழ்க்குடி
வாழிய தமிழ்த்திரு நாடே!" (27)

என 'நாட்டு வாழ்த்து' பாடுகிறார். ஆங்கிலேயனும் ஒரு தேசபக்தனும் எதிரெதிர் உரையாடும் அமைப்பில் வின்சு துரையும், வ.உ.சியும் உரையாடுவதாகப் பாரதி பாடிய இரு பாடல்களைத் தழுவி 'இந்திக்காரன் தமிழ் நாட்டானிடம் கூறுவது' (76), 'தமிழன் இந்திக்காரனிடம் கூறும் பதில்' (77) என இரண்டு பாடல்களை எழுதியுள்ளார்.

அந்தக் காலத்தில் முருகு சுப்பிரமணியம் நடத்திய 'பொன்னி' இதழில் 'பாரதிதாசன் பரம்பரை' என்னும் குறிப்புடன் பல பாவலர்கள் நாட்டுக்கு அறிமுகப் படுத்தப் பட்டனர். அவர்களுள் பாவலர் நாரா நாச்சியப்பனும் ஒருவர். பாவேந்தரிடம் இவருக்குள்ள ஈடுபாடு மிகப் பெரிது. 'என்னாசான் பாவேந்து' (210) எனத் தம்மை அவர் மாணாக்கராக்கிக் கொள்வதே இதனைக் காட்டும். இவர் அவரைப் பாடிய பாடல்கள் ஒருபுறமிருக்க, அவர் கையாண்ட தொடர்களையும், அமைப்புகளையும் பலவிடங்களில் பின்பற்றுவதைக் காணலாம்.

"சூழ்ச்சிதன்னை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தூள்தூளாய்த் தொலைப்பதற்குத் தொடங்கி விட்டார்" (56)

என்னும் வரிகளும்,

"நீலநிற வானில் நிலவெரிக்கும்; அப்பம் போல்
கோலமுழு துங்காட்டிக் கொண்டிருக்கும்" (131)

என்னும் பகுதியும் இதனை உணர்த்தும். குந்துதல் (24, 70, 79..) குட்டை மனிதர் (135) மின்னல் இடைச்சி (146) போன்ற சொல்லாட்சிகளில் பாவேந்தரைக் காண்கிறோம். 'பகலவன் வரவு' (87) 'மழை' (90), 'அழகுமங்கை' (100) ஆகிய பாடல்கள் பாவேந்தரின் 'அழகின் சிரிப்பு'ப் பாடல்களோ என்று ஐயுறுமளவிற்கு ஒத்திசைக்கின்றன. 'சேசு பொழிந்த தெள்ளமுது' எனும் பாவேந்தரின் பாடலுடையை 'வெல்லத் தமிழ்காக்க வேங்கையெனப் போராடு' (82), 'மதவெறிக்குப் பலியானார்' (215) ஆகிய இரு பாடல்களும் அணிந்திருக்கின்றன.

"உடல்தளர்ந்து முதுமையுற்றுக் கிழவி யாகி
உடனிருக்கும் மனைவிக்கும் உள்ளம் உண்டு
நடப்பதற்கும் முடியாது படுக்கை மீது
நலிவடைந்து கிடக்கின்ற போதும் அன்புத்
தொடர்பிருக்கும் மணவாளன் அருகி ருக்கும்
தூயநினைப் பெழும்போது மனங்க ளிக்கும்
கடற்கரையும் முழுநிலவும் தென்றல் காற்றும்
கருத்தினிலே புகுந்தின்பம் மிகுத்துக் காட்டும்!"
(170)

எனும் பாடல் 'குடும்ப விளக்கு' முதியோர் காதலின் பிழிவாகவே அமைந்துள்ளது. சஞ்சீவி பர்வதச் சாரலின் வஞ்சி தந்த முத்தமும், எதிர்பாராத முத்தத்தில் கொண்ட ஈடுபாடும் 'முத்தம்' (154), 'கட்டி முத்தம்' (155) ஆகிய பாடல்களைப் பாடப் பாவலரைத் தூண்டியிருக்குமோ? இவ்வாறு பாவேந்தரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள இப்பாவலர் அவரிலிருந்து ஓரளவு மாறுபடவும் செய்கிறார். பாவேந்தர்,

'மங்கை யொருத்தி தரும் சுகமும் எங்கள்
மாத்தமிழுக்கு ஈடில்லை கண்டீர்'

என்றார். இவரோ,

"தீங்கவிதை செந்தமிழிற் பாடி, என்றன்
செவிகுளிர எழுப்புகின்ற பண்ணி லேனும்
நான்கேட்க மென்மொழியால் அவளெ ழுப்பும்
நாதத்திற் கீடான இன்ப மில்லை!" (172)

என்று இனிய தமிழ்ப் பண்ணினும் காதலியின் மென்மொழி தரும் இன்பமே மேலானது என்கிறார். அவர் இன்பத்தில் நாம் குறுக்கிடக் கூடாது.

பாவலர் செட்டி நாட்டுக்காரர் என்பதைக்,

"கட்டிவைத்த மனைவியையே வீட்டில் வைத்துக்
கடல்கடந்து பொருள்திரட்டச் செல்லு கின்ற
கெட்டவொரு பழக்கத்தால் ஆண்க ளெல்லாம்
கெட்டுவிட்டார்! பெண்களுக்கும் இன்ப மில்லை!
வட்டிக்கு வட்டியெனப் பொருள்பெ ருக்கி
வாழ்ந்தவர்கள் சொத்தெல்லாம் வைப்புக் காசு!
தொட்டுவிட்ட மனைவிதனைத் தனியில் வைத்துத்
தொலைபோகும் பழக்கத்தை நிறுத்த வேண்டும்!"
(168)

எனும் பாடல் பளிச்செனக் காட்டும். 'குறிப்பேடு', 'பேரேடு' (119) ஆகியவற்றை அவர் குறிப்பிடுவதோடு,

"நகரத்தார் வரலாறு தமிழர் நாட்டின்
நாகரிக வரலாற்றின் பகுதி யாகும்." (189)

என முத்தாய்ப்பும் வைக்கிறார்.

பாவலர் பல கதைப் பாடல்கள் எழுதியுள்ளார். அவை முதல் தொகுதியில் ஒளிர்கின்றன. அவற்றோடு பல நெடுங்கதைகளும், சிறுவர் கதைகளும் எழுதியுள்ள இவர் 'சிறுகதைகள்' என்னும் தலைப்பில் (266) பாடும் போது, புதுமைப்பித்தன், அறிஞர் அண்ணா, செயகாந்தன்,

டி. கே. சீனிவாசன் முதலிய பலரையும் குறிப்பிட்டு இறுதியாகப் "பயன்கவிதைக் கதையெழுதும் நாச்சியப்பன்" எனத் தன்னையும் சிறுகதையை வளர்த்தவர்களோடு இணைத்துக் கூறுகிறார். தனக்கு ஒன்றுமே தெரியாது என்றோ, எல்லாமே தெரியும் என்றோ ஏமாற்றிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், தனக்குத் தெரிந்தைத் தெரியும் என்று சொல்வதற்குத் துணிவு தேவை. தகுதி மிக்க அத்துணிவு பாவலர்க்கு இருப்பதறிந்து பாராட்டுகிறேன்.

'நூல் வெளியீடு' (270) எனும் பாடல் செறிவமைந்த திருப்பாடல். 'அழகாக வெளியிடுக', 'தரமாக வெளியிடுக', 'பிழையின்றி வெளியிடுக', 'மலிவாக வெளியிடுக', 'பலவாக வெளியிடுக', 'உணர்வுடன் வெளியிடுக', 'கலைப்படைப் பாய் வெளியிடுக'. என வெளியீட்டாளர்களுக்கு நெறிமுறை வழங்கும் இப்பாடலில், நூல் 'கவர்ச்சி மிக்கதாக அமைய வேண்டும்' என்னும் கருத்தை வலியுறுத்தும்போது,

"தலைப்பிலே ஒரு கவர்ச்சி! எழுதுகின்ற
தமிழ்நடையில் ஒருகவர்ச்சி! படிக்கும் நெஞ்சை
வலைப்படுத்தும் அச்சமைப்பில் ஒருக வர்ச்சி" (272)

அமையவேண்டும் என்கிறார். இத்தொகுதியில், தலைப்பிலும், தமிழ் நடையிலும் அமைந்துள்ள கவர்ச்சியை அச்சமைப்பில் காணமுடிகிறதா என்பது ஐயமே!

ஒரு பாட்டரங்கில் கேட்போரை நோக்கி

"அச்சுத் தொழிலாளி யான்படும் பாட்டிதனை
மெச்சிப் புகழ்வீரோ, வேறாய் நினைப்பீரோ" (209)

என்கிறார் பாவலர். இவ்விரண்டாம் தொகுதியை நம்முன் வைத்து அவர் கேட்கிற கேள்வியாகவே இதனைக் கொண்டு,

நாச்சியப்ப! உன்பாடல் நல்ஆடகப் பொன்னாம்
பூச்செதற்கு? நாட்டும் புகழ்.

என விடையிறுக்கலாம். இத்தொகுதியின் இறுதிப் பாடல் மனங் கொளவேண்டிய ஒன்று. எல்லோரும் எழுதிய இயற்கை, காதல் முதலிய பாடுபொருள்களையே இனி நானும் எழுதவோ என வினா எழுப்பி,

"அத்த ணைக்கும் மேலதாய்
அறிஞர் போற்றும் நூலதாய்ப்
புத்தம் புதிய பாடலாய்ப்
பொருளும் சுவையும் கூடவே
மெத்த மெத்த முயன்றுநான்
விரும்பிப் படைக்கப் போகிறேன்
இத்த ரைக்கோர் புதுமையாய்
இருக்கும் அந்தக் கவிதையே! (288)

என விடை தந்து முடிப்பது, முடியாத வருங்காலம் இவற்றினும் மேலான பாடல்களை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளப் போகின்றது எனக் கட்டியங் கூறும் தன்னம்பிக்கை வெளிப்பாடாகும். இந்நம்பிக்கை வெல்வதாக! நாச்சியப்ப மணற்கேணியில் நல்ல நல்ல பாட்டூற்றுக்கள் கிளைப்பனவாக! அவற்றால் நாடும் உலகமும் நலம் பெறுவனவாக! என என் விருப்பத்தைச் சொல்லாக்கி விடைபெறுகின்றேன்.

24—5—1981 இரா. இளவரசு
சென்னை—17

# கருத்துரை

டாக்டர் க. காந்தி
உயர்நிலை ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை—20

கவிவளமும் கதைவளமும் இருவேறு துருவங்களாகக் கருதப்படும் இந்நாளில் இவ்விருவகை வளமும் ஒருங்கே இணையப்பெற்றுத் தமிழ், தமிழர், தமிழர் பண்பாடு காப்பதே இலக்கியத்தின் கோட்பாடாகக் கொண்டு செயலாற்றிவரும் கவிஞர் நாரா நாச்சியப்பனார் தனது கவிதை முயற்சிக்கு உருவம் கொடுக்கத் தலைப்பட்டதன் விளைவாகக் கவிஞரின் இரண்டாம் தொகுதி தமிழுலகில் உலா வருகின்றது. பொன்னியில் பிறந்து தென்றலில் தவழ்ந்து இளந்தமிழனாகக் காலூன்றிய கவிஞரின் வாழ்வு தொழில் நிலையிலும் இலக்கிய வாழ்வாக அமையப் பெற்றிருப்பது மேலும் சிறப்புக்குரியது. இக்கவிதைப் பூங்கா பன்னிற மலர்களால் தொடுக்கப்பட்ட பூமாலையாகப் பாமாலைகளைக் கொண்டு விளங்கக் காண்கிறோம். இலக்கியம் சமுதாயம் சார்ந்ததாக அமைய வேண்டுமென விரும்பிய புரட்சிக் கவிஞர் வழிநின்று பழந்தமிழ் மரபும் பண்பாடும் காத்திருக்கும் பான்மை பாராட்டிற்குரியது.

கவிஞர் பல நிலைகளில் பல்வேறிடங்களில் பாடிய கவிதைகளின் தொகுப்பாக இத்தொகுதி அமைந்தாலும் அவற்றில் தமிழரைக் காக்கும் பண்பாட்டு மரபு இழையோடிச் செல்வதைக் காண முடிகின்றது. கவிஞர் தான் உணர்ந்து வந்ததைக் கவிதையில் எந்தளவுக்குச் சிறப்பாக

உணர்த்தியுள்ளனர் என்பதிலேயே கவிஞரின் கவிதை வாழ்வு எடை போடப்படுகின்றது. அந்நிலையில் நின்று கவிஞரின் கவிதைகளை நோக்கும் பொழுது படிப்போர்க்கு எங்குமே எவ்வித உதவியும் தேவையில்லாமல் கொண்டு சென்றிருப்பது அவரது கவிதையின் வெற்றிக்குச் சான்றாகும். இலக்கியத்தின் சிறப்புக்குப் பல்வேறு கூறுகள் நின்றாலும் மானுட உணர்ச்சிக்கு முதன்மையளிப்பதில் கவிஞர்களே படைப்பாளர்களுள் முதன்மை பெறுகின்றனர். உள்ளத்து உணர்ச்சி மிக்கவர்களே படைப்பாளராகின்றனர் என்ற கருத்துமுண்டு. அது ஒரு விதத்தில் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. சிந்தனைத் தெளிவும் செயல் திறமும் கொண்டு விளங்கும் கவிஞர் பிழைபொறுக்கா நெஞ்சினர். அதனை அவரது கவிதைகளில் அங்கங்கே காணமுடிகின்றது.

கவிஞர்கள் சமுதாய உணர்வுடையோராக விளங்க வேண்டும் என்பர் திறனாய்வாளர். கவிஞர் தமிழ்ச் சமுதாய உணர்வுகளைத் தட்டியெழுப்பும் நிலையில் நம்பிக்கையுணர்வூட்டும் வண்ணம் பாடியிருப்பது அவரது முற்போக்குச் சிந்தனையினைத் தெளிவுறுத்தும். தமிழரின் வாழ்க்கை மரபுகளையும் இலக்கிய மரபுகளையும் போற்றிச் சென்றிருப்பதனை இக்கவிதைத் தொகுதியின் பல்வேறு தலைப்புகளிலும் காண முடிகின்றது. கவிதையில் உவமையின் இடம்பற்றிக் கவிஞர்,

'ஆவியைக் கவர்ந்திழுக்கும் உவமையணியின்
அழகெலா மடைந்ததும் எவ்வாறோ''

என விதந்து பாடுகின்றார். புராணங்கள் மூடநம்பிக்கைகளை வளர்க்கும் சாதனங்கள் எனச் சாடும் போது கவிஞர் பகுத்தறிவு இயக்கத்தின் சார்பாளராகக் காட்சியளிக்கின்றார்.

வருங்காலத் தமிழகத்தைக் கனவு காணும் கவிஞரின் போக்கு எழுத்தாளர்களை ஊக்கமூட்டும் நிலையில்,

''விலைக்கு வரும் உங்கள்நூல் தமிழ்ச் சிறப்பை
விளக்குமெனில் புதுமையெனில் ஆதரித்துத்
தலைக்கேற்றித் தூக்கிவிடப் பண்டிதர்கள்
தாமுதலில் வருங்காலம் தூரத்தில்லை''

என நம்பிக்கையுணர்வோடு பாடிச் செல்கின்றார். தமிழனிடம் இருந்துவரும் குறைபாடு நல்லது செய்தாரைப் போற்றாமை எனும் பண்பாகும். அப்பண்பு கடிந்து தமிழ்ப் பண்பு காக்கக் கவிஞர்,

'நமை மறவா திருந்தார்க்கு வாழ்வு நாளில்
நன்றிசெய்ய மறந்துவிட்டோம் இறந்த பின்னும்
அமையுமொரு செயல்செய்யா திருந்துவிட்டால்
அழகல்ல தமிழ்மகனே மறந்திடாதே'

என அறிவுறுத்துகின்றார். தமிழன் தன் மொழி வளர்ச்சிக்காகச் செய்ய வேண்டியவற்றை,

''அழைத்துவந்து தமிழறிவைப் புகுத்த வேண்டும்
அழகுதமிழ் நடைசிறக்க உழைத்தல் வேண்டும்
பிழையில்லாச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்
பேருலகில் தமிழ முழக்கம் எழுப்ப வேண்டும்''

எத்திசையும் உலகரங்கில் முதலிடத்தை
நமைப்பெற்ற தமிழ்த்தாய்க்கே நல்கும் வண்ணம்
நாட்டிடுமோர் உணர்ச்சியுடன் உழைக்க வாரீர்

எனப் பட்டியலிட்டுக் காட்டி அறைகூவல் விடுக்கின்றார்.

'புதிய தமிழ்நாடு' என்ற கவிதையில் கவிஞரின் பகுத்தறிவு எண்ணங்கள் வெளிப் பட்டிருக்கின்றன. புரட்சியின் தொடக்கத்தினைக் கவிஞர்,

''பொறுமைக்கோர் எல்லையினைக் காணச் செய்தீர்
எண்ணாமல் இருந்துவிட்டீர் பொறுமைக் கெல்லை
என்றாலே புரட்சிப்போர்த் தொடக்க மென்றே''

எனக் காட்டியிருப்பது உலக வரலாற்று அனுபவ வெளிப்பாடாகக் கருதத்தக்கது. உண்மையான சுதந்திரத்தின் அடையாளத்தை,

"..............இந்த நாட்டில்
அழுதொருவன் இருக்கும்வரை விடுதலையை
அடைந்துவிட்டோம் என்பதெல்லாம் வெறும்கூப்
பாடே"

எனக் கவிஞர் இனங் காட்டுகின்றார். ஏழை மக்களின் நிலையைக் கவிஞர்,

"ஏழ்மையெனும் நீரருந்தி உழைத்து ழைத்தே
இன்பமெனும் நற்குளத்தில் நீரருந்த
வாழ்வினிலே இயலாமல் வாட்ட முற்று
வாழுகின்ற பெரும்பகுதி......"

என வருணித்துள்ளார். சுரண்டலற்ற சமுதாய அமைப்பை விழையும் கவிஞர் அதனை அளிக்க வல்லது பொதுவுடைமைக் கொள்கையே என்பதை,

"ஆரமுது தினம்படைத்தே யுண்ண வேண்டின்
அனைவருக்கும் பொதுவிந்த உலக மென்றே
நேரியதோர் கொள்கையினைத் தமிழர் நாட்டில்
நிலைக்க வைத்தால் யாவருக்கும் விடுதலைதான்"

எனத் தெளிவாகச் சுட்டிவிடுகின்றார்.

தமிழரின் முரண்பட்ட வாழ்க்கையான அந்நிய மோகத்தை,

"வீட்டினிலே திருவிளக்கை ஏற்றி வைத்து
விழாக்கள்கொண் டாடுதல்தான் தமிழ் வழக்கம்
ஊட்டமுடன் ஆங்கிலங் கற்றோர் விளக்கை
ஊதியணைத் துப்பிறந்த நாள் கொண் டாடும்
வாட்டமுள்ள பழக்கத்தைக் காணுகின்றோம்
வளர்ச்சிக்கு வழியுண்டோ அடிமைப்போக்கால்?"

எனக் கவிஞர் அடிமையின் மோகமாகக் காட்டுவது பழக்கத் திற்கடிமையான மக்களைச் சிந்திக்கச் செய்யும் நிலையின தாகும். 'வட்ட நிலா' என்ற கவிதையில் நிறைமதியை உருட்டி வைத்த வெண்ணெயோடும் வெள்ளையப்பத் தோடும் ஒப்பிட்டுக் காட்டி இருப்பது கருத்துப் புலத்தைக் காட்சிப் புலமாகக் காண்பதற்கு வழி வகுக்கின்றன.

நாட்டு வழக்கில் காதலுக்குக் கண்ணில்லை என்பர். கவிஞர் காதலுக்கு வித்தே கண்கள்தான் எனப் பல்லிடங் களில் (பக் 115, 117, 138, 161, 211) காட்டியிருப்பது புதுமை இலக்கணம் வகுப்பதற்குச் சான்றுகின்றது. காதற் பார்வை கருணைப் பார்வையாக மாறுதற்குத் திருமணம் எவ்வாறு ஒரு கருவியாகப் பயன்படுகிறது என்பதனை,

'வெட்டுவிழி யம்பாலே
வீழ்த்துகின்ற கொடியவளைக்
கொட்டுமருட் பார்வையினைக்
கொண்டவளாய் மாற்றுகின்ற
கட்டழகும் சொற்சுவையும்
காதலெனும் ஒருணர்வால்
ஒட்டுறவும் கொண்டவர்கள்"

என விவரித்துச் செல்லக் காண்கிறோம். சொல் வேறு செயல் வேறு என நடித்துத் திரியும் உயர்ந்தோரின் உலக நடைமுறையினை,

"காவியத்து நாயகரின் மேன்மை பற்றிக்
கழகத்துக் கூட்டத்துப் பத்திரிக்கை
ஓவியத்தும் காண்பதன்றித் தலைவர் என்போர்
உள்ளத்தில் நடைமுறையில் காணற்கில்லை"

என வெளிப்படுத்திப் புரட்சி செய்கின்றார். திருமணத்திற்கு விளக்கமாக,

பூக்கின்ற போதுமலர் மணத்தை வீசும்
பொருத்தமுடன் ஒருத்தியையும் ஒருவனையும்
சேர்க்கின்ற போதுமணம் கூட லாலே
திருமணமென் றுரைத்தார்கள்..."

எனப் புது விளக்கம் தருகின்றார். இக்கவிதைத் தொகுதியில் பலவிடங்களில் புறநானூறு, திருக்குறள், பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் கருத்துக்களை எடுத்துத் தம் கவிதைகளில் பயன்படுத்தியுள்ளார். தமிழ், தமிழர், தமிழ்ப் பண்பாடு காக்கும்கவிஞரின் கவிதைப் பணி மேலும் தொடர்ந்து தமிழகம் பகுத்தறிந்து முன்னேற வழிகாட்டு வார் என நம்பிக்கை கொள்வோம்.

13-5-81 க. காந்தி

சென்னை-20

# ஆய்வுரை

இரா. பாலசுப்பிரமணியம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு, சென்னை-20

பொதுவாகக் கவிதையினை இருவகைப்படுத்தலாம். ஒன்று மிகைக்கவிதை; மற்றொன்று இயல்புக்கவிதை என்பதாகும்.

முன்னது இவ்வுலகத்தில் இல்லாததை, நடக்காததை, நடக்க முடியாததை நடப்பதாகக் காட்டி புதியதோர் உலகத்தினை உருவகித்துக் காட்டும். கற்பனைக் குதிரையின் வேகத்திற்கு இங்குக் கட்டுப்பாடு ஏதுமில்லை. ஆனால் இவ்வுலகச் சமுதாயத்திற்கு இத்தகு கவிதை எத்தகு பலனை அளிக்கும் என்பது கேள்விக் குறிதான்...

பின்னது, இவ்வுலகத்தைப் பாடுவது; இருப்பதைப்பாடுவது. எப்படி இருந்தால் இவ்வுலக வாழ்க்கையில் சிறக்கலாம் என்பதைப்பற்றிப் பாடுவது; அஃதாவது இவ்வகையை வாழ்க்கையின் விமர்சனம் என்று கூடச் சொல்லலாம்.

திரு. நாச்சியப்பன் அவர்கள் கவிதையை நுகர்ந்த போது அதன் பதிவு (Totality of impression) இரண்டாவது வகையை வலியுறுத்துவதாக அமைவதைக் காணமுடிகிறது. எனவே, பொன்னாலாகிய கதவுகளைத் திறந்து சொர்க்க புரிக்கு அழைத்துச் செல்கிறார் என்பதைவிட, மரக்கதவுகளைத் திறந்து உண்மையுலகிற்கு (Realism of life) அழைத்துச் செல்கிறார் என்று கூறினால் மிகையாகாது.

கவிதையைப்பற்றிய அணுகுமுறை (approach) இரண்டு விதங்களில் அமையலாம். ஒன்று கவிஞர்தம் கவிதைவழி சமுதாயத்தை உணருதல்; இரண்டு கவிஞரின் வாழ்க்கை வரலாற்று வழி அவர்தம் கவிதையை உணருதல்; இவற்றில் பிந்தையது எல்லோராலும் இயலாது. ஏனெனில், அத்தகு அணுகுமுறையை அணுகுபவர் கவிஞரின் சமகாலத்தவராக இருப்பதோடு நெருங்கிய நண்பராகவும் கவிஞரைப் பற்றிப் புரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வகையில் இவ்வாய்வுரை முதல்நிலை அணுகுமுறையில் அமைகிறது என்பதைக் கூறிக்கொள்ள விழைகிறேன். குறிப்பாக கவிதையை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் தனித் தன்மையை (individuality or personality) உணர முற்பட்டுள்ளேன்.

படைப்பின் தன்மை இயல்புக் கவிதையில் இரண்டு வகையில் அமையலாம். அஃதாவது வாழ்க்கை நிகழ்ச்சிகள் எப்படியிருந்தனவோ அல்லது எப்படி இருக்கின்றனவோ அப்படியே படைப்பது ஒருவகை. எப்படியிருக்க வேண்டும் என்ற நம்பிக்கை (அல்லது எண்ணம்) நிலையில் அமைவது இரண்டாவது வகையாகும். இவற்றில் முதல்வகையை நடப்பியலுடனும் (Realism) இரண்டாவது வகையை நல்லெதிர்கால நம்பிக்கையிலும் (Optinism) அடக்கலாம். நடப்பியல் என்பது முழுமையளவில் அமைந்தால் வெல்லமில்லாத கூழாகத்தான் இருக்கும். ஒருவேளை நாவல் வகைக்கு இத்தன்மை பொருந்தியதாகவும் இருக்கக்கூடும். கவிதையனுபவத்தில் கவிஞனுக்கு நடப்பியல் மட்டும் இருத்தல் சிறக்காது. நல்லெதிர்கால நம்பிக்கையும் இழையோடவேண்டும் (அதற்காக மிகைக் கவிதையாகப் படைக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. இவ்வுலக வாழ்க்கைக்கு நடப்பியலுடன் தொடர்புடைய நல்லெதிர் கால நம்பிக்கையும் அமைதல் வேண்டும்) இவ்விரண்டும் இணைந்து செயல்படுமியல்பு திரு. நாச்சியப்பன் கவிதை

—C—

களில் பலவிடங்களில் காணமுடிகிறது. கவிதையின் வெற்றிக்கு இத்தன்மையும் ஒரு காரணியாக அமைகிறது.

கவிஞரின் பாடுபொருளை வரையறைக்குள் அடக்குதல் இயலாது. சூழ்நிலையுணர்வால் பாடுபொருளும் மாறிமாறி யமையும். இக்கவிதைத் தொகுப்பின்வழி பாடுபொருள் கீழ்க்கண்டவாறு அமைகின்றன எனலாம்.

1. இயற்கை
2. மொழிப்பற்று
3. நாட்டுப்பற்று
4. சமுதாயப் பார்வை

அ. வாழ்க்கை தொடர்பானவை

ஆ. குறைகள் அல்லது சாடல் தொடர்பானவை

இ. விழிப்புணர்ச்சி வேண்டுதல்—என்பதாகும்

இயற்கையைப் பாடாத கவிஞர் பெரும்பாலும் இருப்பதில்லையெனலாம். இருப்பினும் இயற்கையைப் பாடும் கவிஞரை இருவகையில் அடக்கலாம். இயற்கையை இயற்கையாக வருணித்து விட்டுப் போகும்முறை. இயற்கையில்கூட சமுதாயத்தை இணைத்துப் பார்க்கும் முறை. இவ்விரண்டாவது முறையைப் பாரதிதாசனிடம் தெளிவாகக் காணலாம். அடுத்து, திரு. நாச்சியப்பன் கவிதையில்தான் இத்தகு தன்மையைக் காணமுடிகிறது. என்று கூறினுல் தவறில்லை. காட்டாக, நிலவைப் பாடவந்தவர் அதனை வர்ணனைக் கவிதையாக (Descriptive poetry) அமைத்து விட்டுச் சென்றிருக்கலாம். இருப்பினும் வானுலகு நிலவின் வருகை பூவுலக மாந்தரின் இயல்போடு ஒப்பிடும் நிலையில்,

"வாழ்வினிலே முன்னேற்றம்
காண வருவார் போல்

சூழிருட்டைக் கிழித்துவரும்
முழுநிலவைப் பாராய்.'' (வட்டநிலா, ப. 105)

மேற்கண்டவாறு பாடல் அமைகிறது.

கவிஞரின் மொழிப் பற்றினைப் பகரும் வகையிலமையும் பாடல்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

அ. தமிழ் மொழிமொழியின் சிறப்பு கூறுதல் (கனிரசமோ, ப.9)

ஆ. தமிழைப் பிறமொழியுடன் இணைத்துத் தமிழின் பெருமையை வலியுறுத்துதல் (தாயும் பேயும், ப.81.)

இ. தமிழ் மண்ணின் பெருமையைக் கூறுதல் (முத்துத் தமிழ்நாடு ப. 30-32)

ஈ தமிழ் வளர்த்த பெரியாரைப் போற்றுதல் (மறை மலையடிகளை மறந்திடாதே ப. 24)

கவிதை அமரத்துவம் பெறுகின்ற முறை உள்ளத்து உணர்வுகளைச் சித்தரிக்கும் முறையில் இருப்பதாகக் கூறலாம். திரு. நாச்சியப்பன் அவர்கள் கவிதையும் அமரத்துவ நிலையினை அடைகிறது என்று கூறுவதற்கு வாழ்க்கையுடன் தொடர்புடைய காதல், மோதல், வீரம், சோகம் போன்ற பல்வகைப் பாடல்கள் சான்றாக அமைகின்றன.

சில செய்திகளைக் கேட்பதற்கு நமக்குப் பிடிக்காமல் தான் இருக்கும். இருப்பினும் புரையோடிப்போன நம் குறைகளை நாம் புரிந்து கொள்ளத்தான் வேண்டும். இத்தகு கவிதைகள் குறைகள் அல்லது சமுதாயச் சாடல் வகைக் கவிதைகளாக மலர்ந்திருக்கின்றன. திரு. நாச்சியப்பன் அவர்கள் தாயின் நிலையிலிருந்து குற்றத்தைச் சுட்டிக் காட்டி கவிதைவடிவில் குட்டுவதாகக் கொள்ளலாம். (மறு மலர்ச்சி வீரர், ப. 15) அப்பட்டமாக நம்மை வெளிப்

படுத்துவது நாகரிகமில்லை யென்றாலும் கவிஞனைப் பொறுத்தமட்டில் அஃது தேவையான ஒன்றாக அமைந்து விடுகிறது.

குறைகளைமட்டும் சுட்டுபவர் சமுதாய வளர்ச்சியில் பற்றுக்கொண்டவர் என்று கூறுதல் இயலாது. குறைகளைக் களைய தக்கதொரு விழிப்புணர்ச்சியினையும் ஏற்படுத்த வேண்டும். 'மறுமலர்ச்சி வீரர்' என்ற தலைப்பில் அமைந்த கவிதையைப் படிக்கும்போது கவிஞரின் சாடல் என் உள்ளத்தைத் தூளைத்தது. நம்மிடமுள்ள குறையினால் குற்ற உணர்வு விஞ்சியது. இரண்டொரு பக்கங்களைப் புரட்டி 'தமிழ் முழக்கம் செய்வீர்' என்ற கவிதையைப் படிக்கும் போது...எங்கோ ஊதுகின்ற எக்காளச்சத்தம் கேட்டு போர் மேற் சென்ற வீரர்கு, வீரப்போதை ஏறுகின்றதைப்போல ஏதோ ஒருவகை விழிப்புணர்ச்சி என் நரம்புகளில் ஊடுருவிப் பாய்வதை உணர்ந்தேன். இத்தன்மையில் பல கவிதைகள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

திரு. நாச்சியப்பன் அவர்கள் கவிதையைப் படித் துணர்ந்தபோது கீழ்க்கண்ட தனித்தன்மைகள் நிறைந் திருப்பதை உணரமுடிகிறது.

கவிதை நடை (Poetic diction) ஆற்றோட்டம்போல தங்கு தடையின்றிச் செல்கிறது. அஃதாவது கவிதையைக் கூறும் ஆசிரியர் உருவத்தில் பெரியவராகவும் நாமெல்லாம் சிறு குழந்தையாகவும் இருப்பதுபோன்ற அரவணைப்பு உணர்வு ஏற்படுகிறது. இதற்குக் காரணம் நடை (Style) மிகவும் எளிமையாக உள்ளது என்பதாகும். சொல்லடுக் கினைப் பகட்டிற்காக அடுக்கிச் செல்லும் செயற்கைத் தன்மை இல்லையென்பதைக் குறிப்பாகக் காணமுடிகிறது.

இவர்தம் கவிதையைப் படிக்கும்போது உணர்ச்சிப் புயல் (Passitionate) அடிப்படையென்னவோ உண்மைதான்.

இத்தகு தன்மையை விழிப்புணர்ச்சிப் பாடலில் மிகுதியாகக் காணமுடிகிறது. ஆனால் அவ்வுணர்ச்சி (Feeling) எங்கும் மிகைப்பாடாக வெளிப்படாமல் இவர்தம் கட்டுக்குள் அடங்கியே வெளிப்படுகிறது. இவ்வெளிப்பாடு எல்லாக் கவிஞர்க்கும் வந்துவிடாது எனபதும் இங்கு நினைவூட்டத் தக்கதாகும்.

கவித்துவச் சிந்தனை (Poetic thought) சமுதாய நோக்கில் மிகைப்பட அமைந்திருக்கிறது. எனவே வாழ்வு தொடர்பான சீர்திருத்த எண்ணங்கள் கவிதை வடிவில் வெளிப்படுகிறது எனலாம். இவர்தம் இலட்சியங்கள் (Aspirations) பகுத்தறிவுச் சிந்தனையைச் சார்ந்தமைகிறது.

இறுதியாகக் கூறுமிடத்து (Totality of impression) தமிழ்ப்பற்று, தமிழ்ச் சமுதாயம் ஆகிய இரண்டும் ஆசிரியரின் இருகண்களாக அமைந்திருக்கிறது எனக் கூறலாம்.

இரா. பாலசுப்பிரமணியம்

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | தமிழ்த் தாய் வணக்கம் | 1 |
| 2. | சுவையமுதே<br>தித்திக்கும் சொல்லோவியமே! | 5 |
| 3. | அன்னாய் வாழி | 7 |
| 4. | யாவும் தமிழே | 8 |
| 5. | கனிரசமோ? | 9 |
| 6. | யாருக்கும் பணியாத வீரம் | 10 |
| 7. | தமிழ் மறவர் | 11 |
| 8. | தமிழ் மன்னர் | 12 |
| 9. | யாரிடம் போய்ச் சொல்வேன்? | 13 |
| 10. | மறுமலர்ச்சி வீரர் | 15 |
| 11. | செந்தமிழ் வேண்டும் | 17 |
| 12. | மயங்காதே! மறவாதே! | 18 |
| 13. | பேதை மாது | 20 |
| 14. | அன்னை துயர் | 21 |
| 15. | கனவு பலிக்குமா? | 23 |
| 16. | மறைமலையடிகளை மறந்திடாதே! | 24 |
| 17. | தமிழ் முழக்கம் செய்வீர்! | 26 |
| 18. | நாட்டு வாழ்த்து | 27 |
| 19. | தனித் தமிழில் பொறியுறுப்பு | 28 |
| 20. | முத்துத் தமிழ் நாடு | 30 |
| 21. | தமிழ் வளர்கிறது! | 33 |
| 22. | சிவனும் பெருமாளும் போற்றும் செந்தமிழ் | 40 |
| 23. | புதிய தமிழ் நாடு | 42 |
| 24. | நம் நாடு | 45 |
| 25. | சிந்தை பறிக்கும் விந்தை நூல்கள் | 47 |

| | | |
|---|---|---|
| 26. | உறுதி மொழி | 48 |
| 27. | தமிழ் வாழ்வு | 49 |
| 28. | அமுதுண்ணும் பெருநாள் | 54 |
| 29. | தமிழர் திருநாள் | 55 |
| 30. | பொங்கல் திருநாள் | 57 |
| 31. | பொங்கல் வந்ததே! | 59 |
| 32. | பொங்கல் வாழ்த்து | 60 |
| 33. | பொங்குது பால்! | 61 |
| 34. | எது என்ன ஆனாலும் | 63 |
| 35. | வெஞ்சமர்க்கெழுந்த வீரர் | 65 |
| 36. | இந்த உயிரென்ன பெரிதா? | 68 |
| 37. | அன்றும் அடிமையடா—நீ இன்றும் அடிமையடா | 72 |
| 38. | இந்திக்காரன் தமிழ் நாட்டானிடம் கூறுவது | 76 |
| 39. | தமிழன் இந்திக்காரனிடம் கூறும் பதில் | 77 |
| 40. | இந்திக்கு வழிகாட்டு | 78 |
| 41. | தாயும் பேயும் | 81 |
| 42. | வெல்லத் தமிழ் காக்க வேங்கையெனப் போராடு | 82 |
| 43. | பிறமொழி | 85 |
| 44. | எங்கள் நாடு | 86 |
| 45. | பகலவன் வரவு | 87 |
| 46. | தாமரைக் குமரி | 89 |
| 47. | வண்டுக் காதல் | 89 |
| 48. | மழை | 90 |
| 49. | பரிதி வரவு | 92 |
| 50. | அழகு மழை | 93 |
| 51. | அவிழ்ந்த கூந்தல் | 95 |
| 52. | தூது | 96 |
| 53. | குறிப்புகள் | 97 |
| 54. | மாறும் முடி | 98 |

| | | |
|---|---|---|
| 55. | அழகு மங்கை | 100 |
| 56. | பாடுக வண்டே | 102 |
| 57. | அழகான மயில் | 104 |
| 58. | வட்ட நிலா | 105 |
| 59. | தாமரை | 106 |
| 60. | தேனீ | 107 |
| 61. | இயற்கை வழி | 108 |
| 62. | பொதிய மலை | 110 |
| 63. | எரிக்கும் வெயில் | 111 |
| 64. | மரக்கலத்துச் சரக்கெல்லாம் கூடைமுத்துக்கு ஈடாகாதே | 112 |
| 65. | கண்கள் கண்டேன் | 114 |
| 66. | பாராமற் போனாள் | 115 |
| 67. | ஏன் பிறந்தாய்? | 116 |
| 68. | மாலையில் வா | 117 |
| 69. | தடுக்கின்றார் | 118 |
| 70. | காட்டவில்லை | 119 |
| 71. | தெரிந்து கொண்டேன் | 120 |
| 72. | அவர் போக்கு | 121 |
| 73. | பொறுத்திருப்பாய் | 122 |
| 74. | கோழை | 123 |
| 75. | பயனில்லாத ஆசை | 124 |
| 76. | பொல்லாப்புச் சேர்க்காதே | 125 |
| 77. | இரவும் பகலும் | 126 |
| 78. | புதுக்கூட்டு | 127 |
| 79. | தேடற்கரிய திரு | 130 |
| 80 | இரவின் விரைவு | 131 |
| 81. | பிறை நிலவு | 132 |
| 82. | தலைவன் தலைவிக்கு | 133 |
| 83. | அவளைப் பார்த்தேன் | 133 |

84. ஓரப் பார்வை 134
85. தணியாக் காதல் 135
86. உறுதி மறந்தான் 136
87. காதலர் நினைவு 137
88. அழகி 138
89. பேடன்னம் 139
90. கொலைகாரி 140
91. பித்தம் பிடித்தவன் 141
92. வாட்டாதே 142
93. முகம் மறைத்தாள் 143
94. காதல் கவர்ச்சி 144
95. இணைப்பாடல் 145
96. புதிய வாழ்வு 147
97. வெட்கமாயிருக்குதடி 148
98. கூத்தாடினாள் 149
99. நீயே என் காதலி 150
100. ஒருமுறை கண்ட திருமுகம் 151
101. பிறர் தோட்டத்துப் பூ 152
102. முத்தம் 154
103. கட்டி முத்தம் 155
104. இல்லம் விரைந்தேன் 157
105. திருமண வாழ்த்து 158
106. திருமணக் காட்சி 159
107. பெருகி வாழியவே! 161
108. ஈடில்லா இன்பம் 171
109. நிலைத்த இன்பம் காதல் 174
110. குறள் நெறிக் குடும்பம் 177
111. துறந்தோர் காதல் 183
112. காதற் சோலை 186
113. முத்துப் பூங்குழலி
திருமணப் பாட்டரங்கம் 189

114. பாரதியார் 194
115. பாரதிதாசன் 198
116. பாரதியும் பாரதிதாசனும் 201
117. பாரதியார் விரும்பிய மொழி 206
118. பாவேந்தரின் இளைஞர் இலக்கியம் 209
119. மதவெறிக்குப் பலியானூர் 215
120. மனம் துடித்தது 216
121. வாழ்த்திடக் கூடுவீர் 217
122. கிழச்சிங்கம் 218
123. பெரியார் 219
124. பெரியார் வாழ்க 220
125. தமிழர் தலைவர் 222
126. இயக்கமாய் நின்ற தந்தை 223
127. தென்னாட்டின் விடிவெள்ளி 225
128. அண்ணன் எங்கள் கண்ணன் 226
129. எங்கள் அண்ணு; சான்றோர் தம்பி 228
130. அருந்தமிழ்ச் செல்வன் 229
131. நிமிர்தோள் நெடுஞ்செழியன் 230
132. சம்பத்துக்கு வாழ்த்து 231
133. வற்ருத களஞ்சியம் 232
134. தம்பிக் கோட்டைக் கணபதி 233
135. வள்ளுவர் காட்டும் ஈகை 234
136. பம்பாய்ப் புயல் 236
137. படிப்பும் பயனும் 238
138. ஏனிந்த மாற்றம்? 239
139. திருந்த வேண்டும் 240
140. மடமையின் ஆட்சி 241
141, தீபதரிசனம் 243
142. தீபாவளித் திருநாள் 244
143. அறிவியக்கம் பரப்புவோம் 248
144. திருக்குறள் பரப்பிடுவீர் 249

145. பொருந்தாமணம் 250
146. பாழ்படலாமோ? 251
147. தவளையின் சொர்க்கம் 253
148. அழுது விட்டான் 255
149. அன்புத் தாய் 256
150. தெருவோரப் பாதையிலே 257
151. பிச்சைத் தொல்லை 259
152. ஏன் போனாய்? 261
153. பொய் மகள் 263
154. சிறு கதைகள் 266
155. நூல் வெளியீடு 270
156. பதிப்பாளர் 273
157. வெற்றித்தாய் சிரித்தாள் இங்கே! 277
158. பெருந்தைக் கொளுத்துவார் 281
159. நகை கொடுப்போம் 282
160. கதை பேசம்மா, கதை பேசு! 286
161. புகழ்தேடி ஓடாதீர் 287
162. நான் எழுதப் போகும் கவிதை 288

# நாச்சியப்பன் பாடல்கள்

(முதல் தொகுதி)

தினமணிச் சுடர் 14-12-80 இதழில் வெளிவந்த

## மதிப்புரை

முப்பத்து ஐந்து ஆண்டுகளாகத் தொடரும் நாரா நாச்சியப்பனின் கவிதைப் பணி முழுமை பெற்று வீதியுலாப் புறப்பட்டுள்ளது.

பிற மொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து, தொடர்களைக் கண்டபடி பிரித்துப் பக்கங்களை நிரப்பிக் கவிதை இதுதான் எனப் புறப்படும் புற்றீசல்களின் நடுவே, நெறி கெட்டுப் போகும் இலக்கியக் கலங்களை இலட்சியக் கரைக்கு அழைக்கும் கலங்கரை விளக்கமாக இவர் பாடல்கள் உள்ளன.

இயற்கை அழகும், உவமை நயங்களும் இன்பச்சுவையும் உலகியலும் பின்னிப் பிணையும்போதே கவிதைகள் உயிரோட்டம் பெறுகின்றன. புதுமைப்பண்பு பொலிகின்றன.

எப்போதும் சிள் வண்டின் ஓசை கேட்கும்
　　இடையிடையே காய் சருகு சலசலக்கும்
கொப்போடு கிளைமுறியும் ஓசை கேட்கும்
　　குமுறிவரும் காட்டாற்றின் சீற்றம் கேட்கும்
எப்போதோ புலி உறுமும் சத்தம் கேட்கும்
　　இடையிடையே யானைகளோ பிளிறியோடும்!

என்று தாமரையாள் சொல்கின்ற காட்டைக் கவிஞர் பாடும்போது நாமே அக்காட்டில் நடப்பது போன்ற உணர்ச்சி தோன்றுகின்றது.

முன்னைய கவிஞர் சொல்லிச் சொல்லி நைந்து போன உவமைக் கந்தல்களைத் தள்ளிப் புதுப்புது உவமைகளைக் கவிதைத் தாய்க்குச் சூட்டியுள்ள பாங்கு வியத்தற்கு உரியது.

காலகண்டன் வந்தக்கால்
 கட்டிமார்க் கண்டேயன்
ஓடிச் சிவலிங்கம் ஒன்றித்
 தழுவினாற் போல்

என்ற இடத்துப் பழைய செய்தியே உவமையாகிப் புதுமை வடிவம் கொள்வதைக் காண்கின்றோம்.

பூத்தமலர் பேய்க்காற்றில்
 பொன்னிதழைப் போக்கடித்து
மீத்து நிற்கும் காம்பே போல்

'பேன் ஒன்று கூந்தலுக்குள்
 நுழைந்தாற் போல'

பட்டுப் பட்டெனப் பட்டாசு
 விட்டது போல்

இவ்வாறு புத்தம் புதிய உவமைகள் பக்கம் தோறும் பலப்பல நின்று நம் மனத்தைப் பிணிக்கின்றன.

சென்னைக் கடற்கரையில் சிற்றலையும் பேரலையும்
ஒன்றன்பின் ஒன்றாக ஓடித் தொடர்ந்து வந்து

மோதிக் கரை மணலை முத்திப் பணிந்தங்கே
வேதன் அடியார் போல் வீழ்ந்து மறைந்தனவே

வந்த அலை மறைய வாரி நுரை எழும்பிப்
பிந்தி வரும் அலையும் பின்னும்மறைந் தொழியும்

என்ற அடிகளைப் படிக்கும்போது கடலலைகளோடு கவிதைப் பெருக்கும் நம் இதயமாகிய கரையை மோதுகின்றது. தொட்ட தொட்ட இடமெங்கும் சுவைகள் சொட்டச் சொட்டக் கவிபாடும் ஆற்றல் தமக்கு உண்டு என்பதை நாச்சியப்பன் ஒவ்வொரு பாடலிலும் நிரூபணம் செய்துள்ளார்.

வழக்கில் பயிலாத அருஞ்சொற்களே இல்லாமல் படித்தவுடனே மனத்தில் பதிந்துவிடுகின்ற அழகுத் தமிழ்ச் சொற்களால் ஆன அமுதக் கலசம் இது.

பாடல்கள் எழுதி வெளியிடுவது சந்தையில் விலை போகாத சரக்கை உருவாக்குவது போலாகும் என்கிறார் கவிஞர். இக்கருத்து இப்பாடல்களுக்குப் பொருந்தாது. இது விலை போகும் சரக்கு மட்டும் அல்ல. இலக்கிய உலகுக்கு இன்றியமையாத சரக்கு. கதைகள் எழுதினேன் கைச் செலவுக்கு, பாடல்கள் எழுதினேன் மனநிறைவுக்கு என்கின்றார். யாருடைய மனநிறைவுக்கு என்று குறிப்பிடவில்லை. வாசகர்களின் மனநிறைவுக்கே இப்பாடல்கள் எழுதியுள்ளார் என்பதே பொருந்தும்.

இத்தொகுப்பிலுள்ள ஒவ்வொரு கவிதையும் கதையும் அமரகாவியம், அழகு ஓவியம். கவிதை எழுதத் துடிக்கும் இளைஞர்க்கு வழிகாட்டி. அத்தனையும் கற்கண்டு! அதனைப் புகழ்வது எச்சொற் கொண்டு?

—அரங்க சீனிவாசன்

# Nachiappan Padalgal

## PART—I

A REVIEW BY

**Indian Express—Madurai—8.11.80.**

The story poem "Ilavarasi Mullai" is an imaginary historical mini-epic of 200 verses cast in virutham style. It is replete with romance and adventure.

The whole book is written in traditional poetry of different kinds like Kalivenba, Viruthам, Agaval, Venba all conforming to the requirements of prosody unlike modern verse libre to which most budding poets and poetasters fall a prey. The style is simple and racy, requiring no dictionary or pandit for help.

The biography of E. V. Ramaswami Naicker entitled "Erotu Thaatha" is an example of such fine simplicity, recounting the struggle he carried on against society and the Government to preach and achieve his ideals of social justice, political equality and rationalism.

Taking upon himself the role of a mentor for children, the author has composed a hundred and odd adages, some of which are original in perception.

His "Nalvazhippa", prescribing good conduct for children in 44 stanzas claims to make heroes and wisemen of them.

Casteism, capitalism, other worldliness, idolatory, untouchability etc. are the targets of attack in some of the verses. Women's liberation, equality, love of one's language and country are espoused in some other verses.

In the section called "Pillai thamizh" the author sets a new pattern as against the traditional one. Here he describes the bewitching smiles, plays, pranks and prattle of the child as such in an impersonal approach, without reference to any particular person of dignitary, divine or temporal with all the conventional subtitles like Kaappu, Sengeerai, Thaal, Sappani, Muthum, Ammaanai, Ambuli, Vaaraanai, Neeraadal, Usal, Sirril, Siruparai and Siruther. But instead of the conventional ten stanzas under each head, he has composed only three under the above thirteen heads each. The ideas are novel and original to some extent.

—R. KRISHNAMOORTHY



பாவலர் நாரா. நாச்சியப்பன்

# தமிழ்த்தாய் வணக்கம்

நல்ல தமிழ்நூல் நடையெழுத நீயெனக்கு
வல்லமைதா வென்று வணங்கினேன்—தொல்லைப்
பலகாலந் தொட்டுப் பருவங் குலையா
திலகுதமிழ்த் தாயே இனிது

என்றும் உனதுபுகழ் யான்பேச வேண்டுமென
நின்று தொழுகின்றேன் நீயருள்வாய்—தொன்று
முதலாகத் தோன்றி முடிபுனைந்து பாவோர்
இதழ்வாழும் தாயே இனிது

உலக மொழியெல்லாம் உன்னடியில் தோன்றி
இலகும் எழில்கண்டேன் இன்ப—நலமிக்க
ஆதித் தமிழே அழியாத தத்துவமே
சோதிப் பொருளே துதி.

காலை மலரின் கவினழகும் கற்பகப்பூஞ்
சோலைக் கனியின் சுவைநயமும்-ஆலயத்துத்
தெய்வ அருளும் திருவும் இலங்குமணிப்
பைந்தமிழே வாழ்த்துமென் பாட்டு

பொங்கல் படைத்துப் புதுமகிழ்ச்சி வெள்ளத்தில்
எங்கும் தமிழர் இனிதிருக்கத்—தங்கத்தாய்ச்
செந்தமிழே கன்னித் திருவேஉன் சீர்பரப்பிச்
சிந்தை மகிழ்வோம் சிரித்து!

மஞ்சள் முகமலர்ந்து மாதர் கரும்புமொழி
கொஞ்சி வழங்கக் குதுகலிக்கும்—நெஞ்சுடனே
சங்கொலித்துப் பால்பொங்கும் தைத்திருநாள் இன்றுனது
பங்கயத்தாள் சார்ந்தோம் பணிந்து!

இன்னமு தாகிய என்னனை யேஉனை
என்னித யாசன மேற்றினேன்—கன்னலின்
செந்தமி ழாகிய தேன் கவி பாய்ந்திட
வந்தருள் செய்கவே வாழ்த்து.

வாழ்த்துகவி யாலிந்த வையக முற்றுமே
ஆழ்த்துவேன் இன்பநல ஆக்கமெலாம்—சூழ்ந்திடவே
நன்னெறியே பாடி நலஞ்சேர்ப்பேன் எந்நாளும்
உன்னருளே தாராய் உவந்து.

தமிழ்படித்த தாலிவர்கள் தாழ்ந்தோர் எனவே
நமைப்பழித்தார் எல்லாமிந் நாட்டில்—அமைதியொடு
வாழ விடுங்கொடுமை நாட்டில் மறைந்தொழிய
ஆளவரு வாய்நீயம் மா!

பாழும் பகைசூழ்ந்து பைந்தமிழின் வேரறுத்து
வாழும் நிலைகண்டேன் வையத்தே—தாழும்
தமிழர் கிளர்ந்தெழவே தாயே நின் சக்தி
அமிழ்தை வழங்கி யருள்.

நல்ல தமிழிங்கு நாடாள வேண்டுமென்றால்
புல்லர் தலையெடுத்துப் பொங்குகின்றார்—வல்ல
தமிழ்த்தாயே உன்மக்கள் தாமாய்க் குழியில்
அமிழுந் துயரை அகற்று.

பொய்யும் புரட்டும் புதுவாழ்வு சேர்க்குமென
நையும் தமிழர் நலங்காண—மெய்யறிவைத்
தந்துகாப் பாற்றத் தமிழே அருள்பொழியச்
சிந்தை செலுத்து சிறிது.

அன்பு மொழியாலே நெஞ்சை அணைக்கின்ற
இன்பத் தமிழே எழில்வடிவே—உன்புகழைப்
பாடுகின்ற போதெல்லாம் பாய்கின்ற இன்பத்தால்
ஆடுகின்ற தென்றன் அகம்.

தென்னகத்தைச் சேர்ந்திருக்கும் செந்தமிழர் வாழ்க்கையிலே
முன்னேறும் போதெல்லாம் மூளுகின்ற—இன்பத்தை
இங்குன்னை விட்டிங்கே யார்க்குரைப்பேன்; ஆற்றுக்குப்
பொங்கு கடலே புகல்.

வள்ளுவனைப் பெற்று வளர்த்த மடிதனிலே
துள்ளிவிளை யாடும் துடிப்புடைய—பிள்ளைநான்
தோன்றியதை எண்ணுங்கால் தோன்றும் பெருமையிலே
ஊன்றி நிலைத்த துவப்பு.

பூங்காவில் வாழ்வோன் பொந்தணைய இல்லத்தே
பாங்காய்ச் சுழல்விசிறி பாய்ச்சுவளிக்—கேங்குதல்போல்
உள்ள தமிழ்நூல் உயர்வறியார்; வேற்றுமொழி
யுள்ளித் திரிவார் உழன்று!

எண்ணி முயன்றால் இயலாத வொன்றில்லை
வண்ணத் தமிழில் வடித்தெடுக்க - மண்ணில்
அறிவுத் துறைச்சொல் அகராதி யாக்கம்
உறல்கடிதோ அன்னாய் உரை.

பெற்றதாய்க் காகஅறம் பேசும் வலிவற்றோர்
முற்றும் அறிவில்லா மூடரெனக்—குற்றம்
உரைப்பேனைச் சூழ்ந்தெதிர்க்க ஓரா யிரம்பேர்
திரண்டாலும் அஞ்சேன் சிறிது

எங்கும் தமிழாய் எதிலும் தமிழேயாய்
மங்கா திலங்கி மதிப்புயரச் — சிங்கத்
தமிழன் எனவாழும் சீரான வாழ்வுக்
கமிழ்தென் றொருபெயருண் டாம் !

பெற்றெடுத்த பிள்ளையுடன் பேசிக் களிப்பதற்கு
மற்ற மொழிதேடி மாய்வாரே ! — உற்ற
வளங்கொழிக்கும் அன்னை வழிமொழியை நாடா
திளங்குருத்திற் சூடேற்றி யாங்கு !

பூவுலகில் பேரறிஞர் புத்தாக்கம் செய்வதெலாம்
நாவுலவு செந்தமிழில் நல்ல பெயரிட்டுக்
கூற வியலாதாம் ! கோணல் மனங்கொண்டார்
சீறு துறரே தெளிவு

நல்ல தமிழிருக்க நாடிப் பிறமொழியை
வல்லே வழங்கி வழக்காடும் — புல்லர்களைச்
சேரா திருக்கநான் செந்தமிழே என்தாயே !
வாராய் துணையாக வா.

அறிவு பயத்தலால் அன்பு வளர்த்துச்
செறிவு நிறைத்தலால் செந்தேன் — இறுகியாங்கு
என்றும் சிறத்தலால் என்தாய்த் தமிழின்வே
றொன்றும் கொளாதென் உளம்.

## சுவையமுதே!
## தித்திக்கும் சொல்லோவியமே!

ஆதிமுதல் தாயே! அருந்தமிழே! நல்வாழ்த்து!
சாதிவரு முன்னே தமிழ்நாட்டில் மக்கள்

பிறந்து சமத்துவமாய்ப் பேருலகில் வாழச்
சிறப்புடனே பெற்றெடுத்த செந்தமிழே நல்வாழ்த்து!

கண்ணகியைப் பெற்றெடுத்துக் கற்பின் திறங்காட்டி
மண்ணுலகைச் சீர்படுத்தும் மாணிக்கச் செந்தமிழே!

அவ்வைமூ தாட்டி அறம்பாடக் கூழூட்டிச்
செவ்வை யுறவளர்த்த செந்தமிழே நல்வாழ்த்து!

போரில் புறங்கொடுத்த புல்லன் மகனென்றால்
மார்பறுக்கத் தான்துணியும் மங்கையினைப் பெற்றவளே!

தாய்நாடு வாழத் தனதருமைச் சுற்றமெலாம்
போய் வீரப் போர்புரியப் போக்குந் திருமகளை

ஊட்டி வளர்த்தவளே! ஓங்கு பெருமையினை
நாட்டிச் சிறப்படைந்த நற்றமிழே வாழ்த்து!

திருமறைசொல் வள்ளுவர்க்கும் தேர்ந்தகபி லர்க்கும்
பெருமையுறுந் தாயான பெண்ணணங்கே வாழ்த்து!

முடிமன்னர் மூவருக்கும், முன்வாயில் வந்து
படிமிதித்த ஏழை பசிதீர்க்கும் வள்ளலர்க்கும்

நல்லன்னை யாகி நலம்புரியும் செந்தமிழே !
பல்லுலகும் போற்றும் பழந்தமிழே வாழ்த்து !

கனிபோலே நல்ல கனிரசத்தைப் போலே
இனிதான செந்தமிழே ! எங்கள் பெருந்தமிழே !

கற்கண்டு போலே கருப்பஞ்சாற் றைப்போலே
சொற்சுவையும், சொல்லின் பொருட்சுவையும்! சொக்கும்

கவிச்சுவையும் சேர்ந்திருக்கும் கற்பனையைக் காட்டும்
சுவையமுதே தித்திக்கும் சொல்லோ வியமே !

அறப்புலவர் சான்றோர் அணிவகுத்து நின்று
புறங்காக்க வாழ்வடைந்து புல்லறி வாளர்களின்

சூழ்ச்சி தவிடாக்கித் தொன்றுமுதல் இன்றுவரை
வீழ்ச்சியின்றி வாழ்ந்து விளங்கும் பெருமாட்டி !

என்றும் இளமையினை ஏற்றுத் திகழுகின்ற
தென்றமிழ்த் தாயே ! நற் றேன்பெருக்கே நல்வாழ்த்து !

பொய்யா நெறிகாட்டிப் புத்துலக வாழ்க்கையினைச்
செய்தாயே வாழ்க சிறந்து.

## அன்னாய் வாழி

பலப்பல மொழிகளுள்ளே
பழமொழி யாக நின்றாய்
சிலச்சில இறந்த வேனும்
செம்மைபெற் றிலங்கு கின்றாய்
புலமிக உடையா ரெல்லாம்
போற்றிநின் னெழிலைக் காக்கும்
நலத்தினில் ஈடு பட்டார்
நன்றுநீ வாழ்க மாதோ!

அன்னையோ அன்னாய் உன்றன்
அழிவின்மை யென்றும் நிற்றல்
என்னையோ என்றேன் மைந்த
எழுந்தநாள் முதலா யின்றும்
என்மக்கள் எவரும் ஒப்பாய்
எண்ணினர் அதனா லென்றன்
நன்னிலை கெடுதல் இல்லை
என்றனை யன்னாய் வாழி!

சின்னதாம் முத்துத் தானும்
சிறந்தொளி வீசு தல்போல்
உன்னருங் குறளி னாலே
உலகெலாம் புகழ்ப ரப்பித்
தென்றலாய் வந்தென் னுள்ளிற்
றேனென ஓடு கின்றாய்
இன்றமி ழன்னாய் ! யானிங்
கினிதுனை வாழ்த்து கின்றேன்.

எத்தனை யணியி ழந்தாய்
எதிர்த்திடும் பகைவ ராலே
சித்தம்நீ கலங்க வில்லை
சேய்களோ அஞ்ச வில்லை
பித்தங்கொண் டலையு மந்தப்
பேயினப் பகைவர் தம்மைச்
சித்தத்தில் அச்சங் கொள்ளச்
செய்தஎன் அன்னாய் வாழி !

## யாவும் தமிழே !

அன்னைதரும் பாலமுதம் செந்தமிழே —அவள்
அன்பு முத்தம் அத்தனையும் செந்தமிழே !
என்னுயிரும் என்னுணர்வும் செந்தமிழே — உள்
இழைத்துவரும் மூச்செல்லாம் செந்தமிழே !
பன்னுமொழி அத்தனையும் செந்தமிழே — நான்
பாடுமிசைப் பாட்டெல்லாம் செந்தமிழே !
தென்னகத்து வீதியெலாம் செந்தமிழே — உளம்
தேடுகின்ற உறவெல்லாம் செந்தமிழே !

## கனிரசமோ?

கனிரசமோ? பாகோ? அடிக்
கரும்பின் சாருே? தேனே?
கனிரசமோ? பாகோ?
நனி யுவப்பை யுள்ளத்தில்
நாட்டும் செந்தமிழ்
நாம் விரும்பிக் குடிக்கும் அமுதோ?
கனிரசமோ? பாகோ?

காவியம் என்னுமோர் பானையில் வைத்துக்
கவிதையாய்ப் பொழிந்த தெள்ளமுதோ?
ஆவியைக் கவர்ந்திடும் உவமை யணியின்
அழகெலா மடைந்ததும் எவ்வாருே?
கனிரசமோ? பாகோ?

எத்தனை மெல்லியள் செந்தமிழ் மங்கை
இன்பத்தின் ஊற்றெனு நின்றவளே
சித்தத்தில் தேக்கிடும் புத்தமு தெல்லாம்
சேர்த்தெடுத் தோதுவ தெவ்வாருே?
கனிரசமோ? பாகோ?

நாடகத் தமிழென ஆடினுள் ஆடி
நல்லிசைப் பாட்டெனப் பாடினுள் இயலில்
ஓடினுள் கடல்கடந் துலவினுள் எங்கும்
உற்றிடும் வெற்றியில் முழக்கினுள் வீரம்
கனிரசமோ? பாகோ?

# யாருக்கும் பணியாத வீரம்

அன்னையடா தமிழ் அன்னை—உலகில்
யாருக்கும் பணியாத வீரத்தைச் சேர்த்தவள்
அன்னையடா தமிழ் அன்னை.

பண்டு திருக்குறளைப் படைத்து வைத்திந்தப்
பாருக்குன்னைத் தெரியப் படுத்தி வைத்தவள்
அன்னையடா தமிழ் அன்னை.

அகம்புறம் என்றிரு நூல்வழி வகுத்தாள்
ஐந்நில இலக்கணம் தானவள் தொகுத்தாள்
புகும் வெளி நாட்டினர்க் கெல்லாம் அறிவைப்
புகட்டி நாகரிகம் பரப்பினு ளுன்றன்
அன்னையடா தமிழ் அன்னை.

தோள்தின வெடுத்திடின் போர்க்களம் காட்டித்
தொண்டுக்கு மகிழ்ந்திசைப் பரணியும் பாடி
ஆள்பவன் நீயென அரியணை காட்டி
அன்னியர்க்குன் வீரம் விளக்கமாய்க் காட்டும்
அன்னையடா தமிழ் அன்னை.

சூழ்ச்சியால் உன்னை வென்றனர் தீயவர்
சூழ்ந்தன பேதங்கள் வீழ்ந்ததுன் வீரமும்
ஆழ்ந்தெண்ணிப் பார்க்கும் அறிவைநீ இழந்தனை
அகமிக நொந்தவள் அலறியே நைந்தவள்
அன்னையடா தமிழ் அன்னை.

# தமிழ் மறவர்

மறவர் என்ற சொல் தமிழரைக் குறிக்கும்—இந்த
மாநிலம் தமிழர்கள் சொற்படி குதிக்கும்!
மறவர் என்ற சொல்......

பெண்ணுக்கு மாணுக்கும் வேற்றுமை யின்றிப்
பிறைபோற் கத்தி,வில் வழங்குமிந் நாட்டில்
மறவர் என்ற சொல்.....

எங்கள் வண்டமிழ் இகழ்ந்தவன் யாரே
என்றெழுந் தோடும் செங் குட்டுவன் மாரே
மங்கை கண்ணகி வீறுளம் மகிழ
மார்தட்டிப் போருக்குப் புறப்படும் நாட்டில்
மறவர் என்ற சொல்......

பரணிகள் ஆயிரம் பாடியெம் வீரம்
பாருக்குக் காட்டிடும் பாவலர்க் காரம்
தருவது தானெங்கள் வெற்றியின் விளைவாம்
தாரணி தானெங்கள் போர்க்களம் ஆமாம்!
மறவர் என்ற சொல்......

தேர்விடு வானொரு சேயவன் தோளும்
தெவ்வரை யடக்கிடும் அம்பு, வில், வாளும்
பேருக்கும் பிரிவினை யடைந்தது மில்லை
பேச்சென நினைப்பவர் நேர்வந்து பாரீர்
மறவர் என்ற சொல்......

# தமிழ் மன்னர்

வில்லும் புலியும் மீனுங் கொண்டு—வென்று
விளங்கினர் தமிழ் மன்னர் பண்டு
வில்லும்...

அல்லும் பகலும் தமிழ் ஆர்வத்தினுலே
அவர் செய்த போர்கள் பல்லாயிர மாமே!
வில்லும்...

பாண்டியன் ஆரியப் படைகடந்தான்
பல்கடலும் தாண்டி வளம் கொணர்ந்தான்
ஆண்டநற் செல்வங்கள் கடற்படை யாலே
அதை விளக்கத் தக்ககுறி மீன் கொடிதானே
வில்லும்......

சோழனே தோள்வலி மிக்குடையானும்
சோறுணும் ஆரியர் இமயம் வென்றானும்
வாள் வீசிப் புலி பாய்வதைப் போலே
வருவதைக் காட்டுதல் புலிக்கொடிதானே
வில்லும்......

சேரன் தமிழ் மண்ணைப் பழித்த ஆரியரைச்
சென்றடக்கி வென்றுவந் தானன்றே முன்னே
வீரத்தில் விண்முட்டும் புகழ்கொண் டானிதை
விளக்கிக் காட்டுதல் விற்கொடிதானே
வில்லும்......

# யாரிடம் போய்ச் சொல்வேன்?

செந்தமிழ் நாட்டு வரலாறு—நீ
தெரிந்துகொள்ள வேண்டுமடா தம்பி
வந்த எந்த நாட்டினர்க்கும்—வாழ்த்தி
வரவேற்பளித்த நாடிதடா தம்பி!
(செந்தமிழ்)

சிங்களந் தன்னை ஆண்டதுண்டு—அயல்
சீனரின் நாட்டில் வாணிபம் செய்து
தங்கமும் பொருளும் சேர்த்ததுண்டு—நல்ல
தமிழ் நாட்டின்புகழ் ஆர்த்ததுண்டு பாரில்!
(செந்தமிழ்)

ஆருயிரங்கல் தொலைகடந்து—கடல்
அலைகடந்தே அயல்நாட்டினரோடு
சீராய் வாணிபம் செய்தனரே—புவிச்
செல்வ மெல்லாம் குவித்தனரே நாட்டில்!
(செந்தமிழ்)

போரென வந்த வீரர்களை—மாய்த்துப்
புகழினை ஏற்கச்செய்ததுண்டு தமிழர்
வீரம் பேசிய வீணர்களை—அடித்து
வீழ்த்திப் புகழுற வாழ்ந்தவரும் தமிழர்!
(செந்தமிழ்)

போரின் முரசைக் கேட்டவுடன்—செம்
புலியெனப் பாய்ந்து குதித்திடும் வீரர்
யாரும் இரந்திட வந்துவிட்டால்—தீம்
பாகென இளகிடும் நெஞ்சுடைய தோழர்
(செந்தமிழ்)

கொடையிற் சிறந்த குமணனென்பார்—அவன்
கொண்ட கொள்கை இரக்கமெனச் சொல்வார்
படையிற் சிறந்த செங்குட்டுவனே—இந்தப்
பார்முழு தேத்தும் வீரனடா தம்பி! (செந்தமிழ்)

ஆரியப்படையைக் கடந்தவன்—வெற்றி
ஆக்கிய மன்னன் நெடுஞ்செழியன் கண்டாய்
வாரி வழங்கிய பாரி வள்ளல்—தனை
மாரி யென்றே புகழ்ந்திடுவார் கற்றோர் (செந்தமிழ்)

ஔவைக் கிழவியின் பாட்டாலே—நல்ல
அறமும் நெறியும் வளர்ந்ததுண்டு நாட்டில்
செவ்விய திருக்குறள் ஏட்டாலே—புவி
செம்மை அமைந்திட வழியுண்டு கண்டாய்
(செந்தமிழ்)

நெஞ்சை யள்ளும் காவியங்கள்—நல்ல
நீதி நூற்கள் பற்பலவும் எழுதி
கொஞ்சமுங் குற்ற மில்லாதே—உயர்
கொள்கைகொண்டு வாழ்ந்தனரே தமிழர்
(செந்தமிழ்)

கொட்ட மடித்த வெள்ளையார்க்கே—வரி
கொடுக்க மறுத்துப் போரிட்ட வீரன்
கட்டபொம்மனின் பெயர் சொன்னல்—இரு
கைகளும் வாளினை ஏந்திடத்துடிக்கும் (செந்தமிழ்)

வெள்ளைய ராட்சியை எதிர்த்தவராம்—உயர்
விடுதலைக்கே உழைத்தவராம் நெஞ்சிற்
கள்ளமில்லாத சிதம்பரனார்—அவர்
கப்பலோட்டிய தமிழரடா தம்பி! (செந்தமிழ்)

எத்தனை நல்ல செய்திகளும்—நம்
இந்திய நாட்டு வரலாற்றில் இல்லை
அத்தனை செய்தியும் இருட்டடித்தார்—இந்த
அவமானத்தை யாரிடம் போய்ச் சொல்வேன்?
(செந்தமிழ்)

## மறுமலர்ச்சி வீரர்

மறுமலர்ச்சி யெழுத்தாளர் கூட்ட மென்று
மார்தட்டி அரங்கேறும் இளைஞர் காள்நீர்
குறும்பு செயும் நோக்கமென்ன? பண்டி தர்தம்
கூட்டத்தை இகழ்வுசெயும் நோக்கமென்ன?
குறுகுமனப் பான்மையினை யெதற்குக் கொண்டீர்?
குப்பைகளாம் புராணங்கள் இந்த நாட்டில்
சிறப்படையப் பண்டிதர்கள் செய்தா ரென்றால்
செழிப்படையச் செய்ததலால் வேறென் செய்தீர்?

பண்டிதர்போல் நூல்கள்பல படித்ததில்லை
பார்த்த தில்லை பழந்தமிழர் இலக்கியங்கள்
மண்டையிலே இலக்கணமோ பதிவ தில்லை
மரபுவழா மற்பேசத் தெரிவ தில்லை
கண்டகண்ட புராணத்தைக் கதை கதையாய்க்
கதைக்கின்றீர் கொச்சைமொழி அடுக்கி வைத்து!
தொண்டுகொலோ தமிழ்மொழிக்கு நீங்கள் செய்தல்
துரோகமன்றோ? சற்றாழ்ந்து சிந்திப் பீரே!

பழந்தமிழர் இலக்கியங்கள் அறியீ ரென்றால்
படித்தவரை ஏனிகழ்வு செய்கின் றீர்கள்?
அளக்கவொரு வம்புமின்றி ஊர்க்கதைகள்
அளப்பவனைப் போல்நீவிர் கற்பனைதான்
உளத்தூற வில்லையெனில் புராணத்திற்கே
உருவமொன்று புதிதாகக் கொச்சைப் பேச்சில்
அளிப்பதனால் தமிழ்நாட்டில் குப்பை கூடும்
அதுவேண்டாம் பேனாவை மூடி வைப்பீர்!

இலக்கியங்கள் கற்ருலும் கற்க வில்லை
என்ருலும் அதுபற்றிக் கவலை யில்லை
விலைக்குவரும் உங்கள்நூல் தமிழ்ச் சிறப்பை
விளக்குமெனில் புதுமையெனில் ஆதரித்துத்
தலைக்கேற்றித் தூக்கிவிடப் பண்டிதர்கள்
தாமுதலில் வருங்காலம் தூரத்தில்லை!
மலைக்குப்பை வளர்ப்பதெனப் புராணப் பாட்டை
மக்களிடைப் பரப்பாதீர் ஒதுங்கிப் போவீர்!

மானிடரின் அறிவுயர்வைக் காட்டி நம்மை
மலைக்கவைக்கும் காப்பியங்கள் துறைப்பா டல்கள்
தேனைவிட இனிதெனும்பல் இலக்கியங்கள்
திருநாட்டில் மலிந்திருக்கப் புராண மென்னும்
கூளியைப்போய்ப் புணர்கின்ருர் பண்டிதர்கள்
குள்ளமனப் போக்குங்கள் உள்ளம் விட்டுப்
போனதில்லை! பண்டிதர்க்குப் போட்டியானீர்
போட்டிமனப் போக்கிலவர் மேற்பாய் கின்றீர்!

குப்பைகளைப் பெருக்குவதில் போட்டி போடும்
கூளங்காள்! பண்டிதர்காள், மறு மலர்ச்சிச்
சிப்பாய்காள்! உமக்கெல்லாம் சேதி யொன்று
சிந்திப்பீர், சிந்திப்பீர்! நாளும், நாளும்
தப்பான வழிச்சென்றீர் இனிமே லேனும்
தமிழென்ருல் சிந்தனைக்கு விருந்தளிக்கும்
நற்பாடல் எனுமுண்மை மக்கள் மன்றில்
நாட்டிடுவீர்! புகழடைவீர்! வாழ்க நன்றே!

# செந்தமிழ் வேண்டும்

பிழையறத் தமிழை எழுதிடும் பழக்கம்
பெருமை தரும்நற் பழக்கம்.
இளையரும் முதியோர் யாவரும் இன்றே
ஏற்றிடத் தக்க பழக்கம்.

தாய்மொழி என்ற காரணத் தாலே
தள்ளிவைத்திடு வீரேல்
வாய் மொழி யாகும்; வளர் மொழியாகா
வகையற்றிடும் நாளடைவே

எழுத்தொடு பேச்சே; என்றுஞ் செந்தமிழாய்
இருப்பது பெருமை சேர்க்கும்
வழுத்திடும் வீதிப் பேச்சொடு நின்றால்
வளர்ச்சி இருந்தி டாதே !

இலக்கணம் கற்றான் இனிய சொற்பொழிவே
எவரையும் தன்பால் ஈர்க்கும்
தலைக்கனம் கொண்டான் வழிநடை மொழியோ
தவறிய நெறியில் சேர்க்கும்.

திருக்குறள் ஒன்றே உலகம ளாவித்
திகழ்ந்திடும் செய்தி யறிவீரே
நரிக்குற வன்பேச் சுலகொப்பிடுமோ
நன்கு சிந்தித் துணர்வீரே !

# மயங்காதே! மறவாதே!

குன்றொத்த தோளுடையாய்! குறித்துப் பார்க்கும்
கொடியவுளம் உடையாரைக் கூர்வேல் கொண்டு
கொன்றொத்த புகழுடையாய்! கோவே செம்மை
கோடாத வாழ்வுடையாய்! கொடிய ராய
இன்றொத்த மாற்றலர்கள் ஏமாற்றித் தம்
இனவாழ்வின் நினைப்புடனே இனிக்கப் பேசிச்
சென்றொத்த உயர்வடைவார், சிதைப்பார் உன்னைச்
செந்தமிழா மயங்காதே! சினத்தைக் கொள்வாய்!

குளிர்மிக்க இமயத்தில் கொடி நாட்டிப் பின்
கொடுங்கோலர் தமையெல்லாம் அடக்கியாண்டு
வெளிநாடும் வென்றாண்ட வீறுடையாய்!
விழிப் பொன்றால் உலகத்தை நடுங்க வைத்தாய்
ஒளிவாக நூல்களிலே சூழ்ச்சி செய்து,
உன்நாட்டார் தமைப் பழித்தார், உளங் கொதிக்க
தெளிவாக உணர்ந்திடுவாய் செய்த தீமை
செந்தமிழா மறவாதே சீறிப் பாய்வாய்!

அறிவின்மை யுலகத்தை யாண்ட காலை
அறிவுடனே அன்புடனே ஆட்சி செய்து
நெறிதனிலே உலகத்தை நிறுத்திக் கண்டாய்
நெடுவளவா! செந்தமிழா! நேற்று வந்த
வெறி பிடித்த நெஞ்சினர்தீ வினையி னாலே
வெறுநாடாய்த் தமிழ்நாட்டைச் செய்யலானார்
செறிகழற்றான் மிகவொலிப்பச் சீறிப் பாய்ந்து
சிங்கமென முழக்கிடுவாய் ஆர்ப்பரித்தே!

முன்னொருநாள் போர்க்களத்தில் முந்திச் சென்று
முகிலிடித்தாற் போலார்த்து வாளின் வீச்சே
மின்னிடப்போர் செய்தவனே, வெற்றித் தோளா !
மீன்கொடியாய், இந்நாளில் எதிர்த்து வந்தார்
பின்புறத்தில் அம்பிட்டுப் பேரெதிர்ப்பைப்
பின் வாங்கச் செய்திடுவார், ஆதல், அன்னார்
முன்புறத்தில் திரும்பிடுவாய் முழக்கி யம்பு
முனைதன்னில் வெற்றிதனை முடித்து வாராய் !

அன்றொரு நாள் புகழ்சுமந்த அரசர் கோவே
அறியாமைக் கோட்டையென இலகுகின்ற
நின்னுடைய கோயில்நிலை நினைத்துப் பாராய்
நீசர்தமை ஒறுத்தொழிக்க எழுந்து வாராய்
அன்னவர்கள் செந்தமிழன் உள்ளந் தன்னை
அறிந்திருந்தும் மறந்தனர்காண், ஆத லாலே
சின்னவர்கள் மடமையினை வளர்க்கலானார்,
செந்தமிழா ! இப்பொழுதே சீறிப் பாய்வாய் !

# பேதை மாது

செந்தமிழ் மாதென்னும் பேதையளே — நான்
செப்பும் உரைகள் சற்றுக் கேளடியே !

ஒன்றே குலமென்று நீயுரைத்தாய் — எனில்
ஒழுக்க மற்றவர் உள்ளத்திலே
நின்றே நிலைத்தது சாதியெனும் — பெரும்
நீசப் பிரிவினைப் பிசாசதுவே !

அண்டியே வந்தவர் யாவரையும் — நீ
ஆதரித்தாய் அவர் சூழ்ச்சியினால்
தண்டமிழே உன்றன் மக்களெல்லாம் — இன்று
தனித்தனியாய்ப் பிரிந்தேங்குகின்றார்.

ஒருவனே தேவனென்று நீயிசைத்தாய் — அவர்
ஒன்றல்ல முப்பத்து முக்கோடி
இருக்கின்ற தேவர்கள் என்றுரைத்தார் — உன்
இசையை மறைக்கத் துணிந்துவிட்டார்.

சூழ்ச்சியால் வெல்லும் பகைவர்களை — அடி
தொலைக்க வேண்டும் என்றேயெழுவாய்
வீழ்ச்சி வீழ்ச்சி பகைவர்கட்கே — என்று
வீரர்கள் கிளம்புவர் பாரடியே !

# அன்னை துயர்

கன்னல் தமிழ்மொழி எங்களின் மொழியே
கருத்தொடு வளர்க்கக் காண்பமோர் வழியே
என்ன மொழிந்தனை செந்தமிழ் மகனே
ஏனிந்த வேடம் எனக் கதைப் புகலே
மின்னல் எனப்படை கொண்டிங்கு வந்தே
மேவும் பகைகளை வீழ்த்துவ மென்றே
இன்னுந் தமிழர்கள் ஏனெழ வில்லை
ஏனெழ வில்லையென் றேசினள் அன்னை!

சொந்த அறிவெனக் கொஞ்சமும் இல்லை
சோர்ந்தனை அன்பென்றன் நெஞ்சினில் இல்லை
நிந்தனை செய்தவர் நீடுவாழ் கின்றார்
நீயவர் தாளிணை பற்றிநிற் கின்றாய்
செந்தமிழ் அன்னைநின் சீர்கண்டு மகிழச்
சிங்கமென் றார்த்தெழு மற்றவர் இகழின்
வெந்திடு வீரெனக் கண்ணில்தீப் பொறியே
விளைத்திடு பகையினைக் கைகொட்டிச் சிரியே!

அன்னைநின் துயர்கண் டயர்த்தழு கின்றாள்
அவளழல் கண்டும் பேசா திருக் கின்றாய்
உன்னைத் தன் மகனென உரைத்திடக் கூசி
ஓடினள் குமரிக் கடலினுள் மூழ்கித்
தென்னவன் பாண்டியன் அழைத்திட வந்தாள்
தெய்வமென் றேத்தினர் சேரரும் சோழரும்
பின்வந்த நீயோ பேசிட வில்லை
பேசினேன் அன்னை பெருந்துயர் சொல்லி!

அன்னையின் அணிசில அழிந்தன கேளாய்
அழித்தஅப் பெருங்கடல் அடக்கினர் தோழா
முன்னையந் தமிழர்கள் மொய்ம்புறக் காத்தார்
முன்னவர் பின்வந்த நீயோ வேர்த்தாய்.
இன்றுநம் இலக்கியம் அழிப்பவ ரெல்லாம்
ஏதுமில் மனிதப் பிறவிகள் கண்டாய்
அன்னவர் தமைவெல ஆசைநீ கொண்டால்
அந்நொடி கிட்டுதல் வெற்றியே கண்டாய்!

அன்னையின் துயரினை யாதெனச் சொல்வேன்
அன்பநீ காதினை சற்றிங்கு திருப்பாய்!
உன்னிலை எண்ணி ஒப்விலாத் துயரே
உற்றன என்னை உன்நிலை நினைவாய்.
என்னைநின் வாணிகம் என்னைநின் சமயம்
ஏனெங்கும் 'அடிமை' எனஇருக் கின்றாய்?
முன்னவர் வழியினை உன்னிநீ பாராய்
முன்வர வழியினைத் தேடியே வாராய்!

## கனவு பலிக்குமா?

கண்ட கனவு பலிக்குமா என்றென்
கை பார்த்துச் சொல்லடி—குறத்தி
என்றன் கைபார்த்துச் சொல்லடி

தை மாதம் வந்த வுடனே இங்கே
தமிழரின் இல்லம் நிறைவது போலே

கண்ட கனவு...

செந்தமிழ் நாட்டுத் தலைவரை இந்தச்
செகத்துத் தலைவர் அத்தனை பேரும்
வந்து வணங்குவ தாகவும் பரிசு
வண்டி வண்டியாய்க் குவிப்ப தாகவும்

கண்ட கனவு...

அண்டை யயலில் உள்ள நாட்டினர்
அன்பி லாததோர் வன்பகை யாலே
சண்டை நேரிடின் சமரசம் பேசத்
தமிழர் தலைவரை நாடி வருவதாய்க்

கண்ட கனவு ..

எத்திசை நாட்டிலும் செந்தமிழ் நாட்டின்
ஏற்றம் புகழ்ந்தவர் பாட்டிசைத் திடவும்
சித்த மகிழ்ந்திங்கே நாட்டிய மாடவும்
சிரித்த முகத்துடன் மாதர் உலாவரக்

கண்ட கனவு...

வில்லும் புலியும் மீனும் பொறித்த
வீரத் தமிழ்க் கொடி கட்டிப் பறக்கச்
செல்லும் கப்பலில் உலக வளத்தைச்
சென்று காணநான் நின்றது போலே

கண்ட கனவு பலிக்குமா?

## மறைமலையடிகளை மறந்திடாதே

இனித்திருக்கும் செந்தமிழில் வடமொழிக்கேன்
    இடங்கொடுத்துத் தமிழ்ச் சுவையைக் கெடுக்கவேண்டும்?
தனித்திருக்கும் வன்மையுள்ள தமிழினோடு
    தகுதியிலாப் பிறமொழியைக் கலக்க வேண்டாம்
எனத்திருவாய் மலர்ந்தவர்யார்! இசைத்த வண்ணம்
    இலக்கியங்கள் தூய்தமிழில் ஆக்கி வைத்துத்
தனித் தமிழின் நலங்காத்தார் மறைமலையார்
    தமிழ் மகனே அவர் பெருமை மறந்திடாதே!

பல மொழியும் கற்றறிந்தார்; தமிழிற் சேர்ந்த
    பண்பாட்டை யுணர்ந்திட்டார்; இனிமை கண்டார்
உலகமொழி அனைத்தும்வந் தெதிர்நின் றாலும்
    ஒருதமிழ்ச் சொற் கீடாகா தெனவறிந்தார்
விலகுகவே விலகுகவே என்று கூறி
    வேற்றுமொழிச் சொல்களைந்து தமிழில் நூற்கள்
பலதந்து தமிழ் காத்தார் மறைமலையார்
    பழந்தமிழா அவர்நினைவு மறந்திடாதே !

சந்தேகம் தமிழில்லை ஐய முண்டோ?
    சந்தோஷம் தமிழில்லை மகிழ்ச்சி கண்டீர்
குந்துமொரு வண்டியைப் போய் சைக்கிள் என்பீர்
    குறையுண்டோ மிதி வண்டி என்னும் சொல்லில்
எந்திரத்தை விசைப் பொறிதான் என்று சொன்னால்
    'இளக்கமில்லை பெருமையென எடுத்துக் காட்டிச்
செந்தமிழைத் தூய்தாக்கி ஸ்ரீயை நீக்கித்
    திருத்தந்தார் மறைமலையார் மறந்திடாதே!

தமிழ்காக்கத் தனித் தமிழின் பெருமை காக்கத்
தமிழ்நாட்டார் தம்மதிப்புக் காக்க வென்றே
இமைதுடிக்க மறந்தாலும் நினைவு மாறு
திருந்துபல செயல்செய்தார் மறைமலையார்
நமை மறவா திருந்தார்க்கு வாழ்வு நாளில்
நன்றிசெய்ய மறந்துவிட்டோம் இறந்த பின்னும்
அமையுமொரு செயல்செய்யா திருந்து விட்டால்
அழகல்ல தமிழ்மகனே மறந்திடாதே.

நல்லபழம் அருகிருக்கப் பச்சைக் காயை
நன்றென்று கடித்துண்ணும் செயலைப் போலே
முல்லைப்பூ மலர்ந்திருக்கப் புல்ப றித்து
முடிக்குழலில் செருகிக்கொள் வதனைப் போலே
வெல்லமெனும் தமிழ்ச்சொற்கள் தம்மை விட்டு
வீணுகப் பிறமொழிச்சொல் ஆளும் போக்கை
வல்லமையாய்க் கடிந்துதமிழ் நலத்தைக் காத்த
மறைமலையைத் தமிழ்மலையை மறந்தி டாதே !

# தமிழ் முழக்கப் செய்வீர்

எங்கணும்பால் பொங்குமொரு மகிழ்ச்சி கண்டேன்
இன்பத்தில் திளைத்திருக்கும் மாந்தர் கண்டேன்.
பொங்கிவரும் பூரிப்பில் திளைத் திருக்கும்
புத்துலகச் சிற்பிகளே! மாணவர்காள்!
உங்களுக்கோர் ஆணையிட்டேன், தமிழை யுங்கள்
உயிர்போலப் போற்றுவதாய் உறுதி செய்வீர்!
சிங்கத்தைப் போல்பாய்வீர் தமிழ் கெடுக்கும்
சிறுநரிகள் தமைக்கண்டால் எழுச்சி கொள்வீர்!

தமிழ்நாட்டில் தமிழரெனப் பிறந்தவர்க்குத்
தாய்த்தமிழைப் போற்றுவதே கடமை யென்பேன்!
தமிழராய்ப் பிறந்திருந்தும் தமிழ்படிக்கத்
தக்கநல்ல வசதியின்றித் தவித்திருக்கும்
நமையொத்த தமிழர்க்கே உதவி செய்தல்
நம்கடமை! மாணவர்காள் ஓய்வு நாளில்
அமைத்திடுமோர் சங்கத்தின் மூலமாக
அருந்தமிழைக் கல்லாதார் கற்கச் செய்வீர்!

பிழையின்றிப் படித்தற்கும் எழுதுதற்கும்
பெரும்பாலோர் முயல்வதில்லை. இலக்கணத்தை
நுழைப்பதற்கு மூளையிலே இடமுமில்லை
நொண்டியென வாசகத்தை எழுதுகின்றார்.
அழைத்துவந்து தமிழறிவைப் புகுத்த வேண்டும்.
அழகுதமிழ் நடைசிறக்க உழைத்தல் வேண்டும்.
பிழையில்லாச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்.
பேருலகில் தமிழ்முழக்கம் எழுப்ப வேண்டும்.

நமையெல்லாம் மகிழ்ச்சியிலே ஆழ்த்துகின்ற
நல்லதொரு செய்தியுண்டு கூறுகின்றேன்.
தமிழ்நாட்டில் ஆட்சிமொழி தமிழே என்று
தக்கதொரு சட்டத்தை ஆக்கிவிட்டார்.
இமைப்போதும் தாழ்க்காதீர் தொண்டுசெய்வீர்!
எத்திசையும் உலகரங்கில் முதலிடத்தை
நமைப்பெற்ற தமிழ்த்தாய்க்கே நல்கும் வண்ணம்
நாட்டிடுமோர் உணர்ச்சியுடன் உழைக்க வாரீர்!

## நாட்டு வாழ்த்து

வாழிய தமிழ் மொழி வாழிய தமிழ்க்குடி
வாழிய தமிழ்த் திரு நாடே!
சூழிய நல்லறம் சூழிய நன்மைகள்
சூழிய இன்ப மெல் லாமே!
நாடிய பொருள்பல தேடிய போதினில்
கூடிட மகிழ்ச்சி நிலைத்தே!
ஓங்குக உலகினில் யாங்கணும் தமிழர்கள்
ஓங்குக பெரும்புக ழோடே!
வாழிய தமிழ்மொழி வாழிய தமிழ்க்குடி
வாழிய தமிழ்த்திரு நாடே!

# தனித்தமிழில் பொறியுறுப்பு

தென்னாட்டான் செந்தமிழன் என்னூர்க் காரன்
தெளிவான நாட்டுணர்ச்சி மிக்க வீரன்
எந்நாட்டும் புகழ்நாட்டும் விஞ்ஞா னத்தால்
இயங்குமொரு பொறிசெய்தான் வியக்கு மாறே!
மின்னாற்றல் கொண்டியங்கும் அப்பொ றிக்கு
மேலான செந்தமிழில் பெயர்வைத் திட்டான்
தன்னாற்றல் மிக்கபொறி யுறுப்புத் தோறும்
தனித்தமிழில் பெயர்பெற்றுச் சிறந்த தன்றே!

பார்வியக்கும் பொறி செய்யும் திறமை மிக்க
பல்கலையும் கற்றவர்க்குத் தமிழில் அந்தப்
பேர் உரைக்கும் திறனில்லை என்று சொன்னால்
பித்துடையார் கூற்றன்றோ நம்பப் போமோ?
கூர்பிடித்த வாளுக்கு வேலை வைத்தால்
குருதிகக்கச் செய்திடத்தான் நேர மாமோ?
நேர்மையுடன் நாட்டுணர்வும் நிலைத்துக் கூடின்
நினைப்பதெலாம் நடந்துவிடும்! தயக்க மில்லை!

விடியாது விடியாதென் றோதிக் கொண்டே
வீணாகச் சோம்பேறி படுத்தி ருப்பான்!
முடியாது முடியாதென் றோதிக் கொண்டே
முரணான பேர்வழிகள் நடித்தி ருப்பார்!
கடியார முள்ளோடும் கணக்கைப் பார்த்துக்
கடிதாக உழைக்கின்ற தமிழர்க்கென்றும்
படியாத தொன்றில்லை; உழைப்பிற் குண்மைப்
பயன் சேரும்; புகழ்கூடும் பாரெல் லாமே!

குட்டையடா குட்டையிந்த வெட்டரிவாள்; தென்னங்
குலைசாய்க்கக் கூடுவதோ என்றுரைப்பார் போலே
நெட்டையராம் வெள்ளையரின் விஞ்ஞானச் சொற்கள்
நேர்தமிழிற் கூற வியலா தென்றுரைப்பார்; மேலே
வட்டநிலாச் சுற்றிவரும் வல்லமையைக் கண்டு
வாய்பிளக்கும் சோம்பேறிக் கூட்டத்தார் என்றும்
பட்டைச்சோ றுண்பவர்க்குப் பகுத்தறிவா கூடும்!
பாடுபட்டால் வெற்றிபெறத் தாமதமா ஆகும்?

மொழித்துறையின் அறிவில்லார் புதுச் சொல்லின் ஆக்கம்
முடியாது தமிழிலெனக் கூட்டங்கள் போட்டுப்
பழித்திருப்பார்; கைகொட்டிப் பார்த்திருப்பார் மற்றோர்
படித்தவர்கள் இவரெல்லாம்! செந்தமிழ் நாட்டாரே!
விழித்துவிட்ட தமிழகத்துள் தாமிருந்து கொண்டே
வேடிக்கைக் கருத்துக்கள் உதிர்த்திருக்கும் இந்த
மழித்ததலைக் காரரெல்லாம் இந்நாட்டைச் சேர்ந்த
மக்களென்ற காரணத்தால் பிழைத்துள்ளார் அன்றே!

இலக்கணத்தும் இலக்கியத்தும் பெரும்புலமை எய்தி
எழிற்றமிழைக் கொழிக்கின்ற வல்லமையும் பெற்றுக்
கலக்கமற்ற திறனறிவு வாய்ந்திருக்கும் நிலையில்
கணக்குடனே விஞ்ஞானத் தொழிற்கல்வி கற்றோன்
வலக்கையைப் பெற்ற பயன் பெற்றவனும்! இந்த
வையத்தின் மேன்மைக்கும் அச்சாணி ஆவான்!
மலர்க்குவியல் தருமழகு மல்குவிக்கும் சொற்கள்
வழங்கிடுவான் விஞ்ஞானத் துறையெல்லாம் அவனே!

# முத்துத் தமிழ் நாடு

இன்ப வளங்கள் கொழித்து விளங்கிய
   திந்தத் தமிழ் நாடே!
ஏற்ற மடைந்தும் ஆற்றல் நிறைந்தும்
   இருந்த தமிழ் நாடே!
அன்பு வளர்க்கும் அறிவு நெறியில்
   அடர்ந்த தமிழ்நாடே!
அன்றும் இன்றும் என்றும் தமிழே
   ஆளுந் தமிழ் நாடே!

சிங்கத் தமிழர் சிலங் காக்கத்
   திரளும் தமிழ் நாடே!
சேயும் இனத்து மானங் காக்கச்
   சீறும் தமிழ் நாடே!
சங்கத் தமிழை வளர்த்த நாலே
   தழையும் தமிழ் நாடே!
தானை மன்னர் புலவர்க் கடங்கும்
   சந்தத் தமிழ் நாடே!

தாழம் பூவும் மகிழம் பூவும்
   மணக்கும் தமிழ் நாடே
சந்தனக் காட்டுத் தென்றல் வந்து
   தவழும் தமிழ் நாடே
வேழ வேந்தர் பகையை முறிக்கும்
   வெற்றித் தமிழ் நாடே
வில்லை வளைத்தே அறத்தை நிமிர்த்தும்
   வீரத் தமிழ் நாடே!

ஓடி யுழைத்தவர் கூடி வாழ்ந்தே
உயர்ந்த தமிழ் நாடே
உழவுந் தொழிலும் பேணி வளர்த்தே
உவந்த தமிழ் நாடே
ஆடிப் பாடிக் கலைகள் வளர்க்கும்
அழகுத் தமிழ் நாடே
அறிவுப் பணியில் நிறைவு கண்ட
அன்புத் தமிழ் நாடே!

தொகை தொகை யாகப் பாடல் எழுதித்
தொகுத்த தமிழ் நாடே
தோகையர் காதல் போற்றி வளர்த்த
தூய தமிழ் நாடே
வகை வகையாகக் காவிய நூல்கள்
வரைந்த தமிழ் நாடே
வள்ளுவர் குறளை வையகந் தனக்கு
வழங்கிய தமிழ் நாடே!

தொகுத்த செல்வம் பிறருக் குதவத்
துணையாம் தமிழ் நாடே!
தொண்டு கிழவர்க் கென்றும் உயர்வு
கொடுக்கும் தமிழ் நாடே!
வகுத்த நெறியில் வழுவா திருக்கும்
பண்புத் தமிழ்நாடே!
வாழும் வாழ்வு சீரியதாக
வளரும் தமிழ் நாடே!

எங்கள் பெரியார் பிறந்த மண்ணை
இருக்குந் தமிழ் நாடே!
இருளை விலக்கி ஒளியைக் கண்ட
இன்பத் தமிழ் நாடே!

சிங்கத் தமிழன் பெரியார் உலவச்
சிறந்த தமிழ் நாடே!
தீய மூடக் கொள்கை சாயத்
திகழும் தமிழ் நாடே!

ஏற்றத் தாழ்வால் இருண்டு கிடந்த
எங்கள் தமிழ் நாடே
எந்தை பெரியார் அறிவு விளக்கை
ஏற்றும் தமிழ் நாடே!
ஆற்றல் மறவர் அறிவியக்கம்
ஆர்ந்த தமிழ் நாடே!
அகன்று போன மடமை கண்டே
ஆர்க்கும் தமிழ் நாடே!

சூதும் வாதும் தூளாய்ப் பறக்கத்
துலங்கும் தமிழ் நாடே!
தோழமை யாலே ஏழைமை மாய்த்துச்
சுடரும் தமிழ் நாடே!
வேத புராணம் வகுத்த நீதி
விலக்கும் தமிழ் நாடே!
வேற்றுமை யாளர் தோற்றுத் தொலைய
வென்ற தமிழ் நாடே!

மூடத் தனத்தை முறிய டிக்கும்
முத்துத் தமிழ் நாடே!
முயற்சி யாளர்க் குயர்வு கொடுக்க
முந்துந் தமிழ் நாடே!
பாடப் பாட உவகை நல்கும்
பண்டைத் தமிழ் நாடே!
பகுத்தறிவு வழி நடக்கும்
பண்புத் தமிழ் நாடே!

# தமிழ் வளர்கிறது

விடுதலைத் தமிழ ரென்று
வீறுடன் பேசு கின்ற
முடிநிலை காண்ப தற்கு
முழக்கடா சங்க மென்று
திடுமென வீர ரெல்லாம்
திரண்டுவந் தெழுப்பு மோசை
கடிதினிற் கேட்டேன் இன்பக்
களிப்பினில் துள்ளி வந்தேன்.

வடவரின் பிடியி னின்றும்
வளர்தமிழ் நாட்டை மீட்கத்
திடமுடன் தொண்ட ரெல்லாம்
திரண்டனர் என்ற போது
கடனெலாம் தீர்ந்தவன் போல்
களிப்புடன் ஓடி வந்து
படையினில் சேர்ந்து கொண்டேன்;
பாடினேன் தமிழ்வாழ் கென்றே.

தமிழரின் நாட்டை மீட்போம்
தமிழ்நறு மொழியைக் காப்போம்
தமிழரின் கொடியை ஏற்றித்
தமிழ்மகள் மானம் காப்போம்
தமிழரின் அரசு நாட்டித்
தமிழர்பண் பாடு காப்போம்
தமிழரின் வீட்டி லெல்லாம்
தமிழ்மணம் கமழச் செய்வோம்.

எழுச்சியும் ஆர்வத் தீயும்
என்னுளே எழுந்து பொங்கக்
கிளர்ச்சிசெய் வாரைக் கூடிக்
கிடந்திடும் அந்தப் போதில்
தளர்ச்சிநான் உற்றே னென்றால்
தனிவியப் படைவீர், அந்த
வளர்ச்சியின் நிலையைக் கண்டால்
வடிந்திடும் கண்ணீ ரன்றே !

தமிழினை வளர்ப்போ மென்றும்
தமிழர்நா டடைவோ மென்றும்
அமிழ்தெனு மொழிவோ ரெல்லாம்
அவரவர் கொள்கை கொண்டு
சுமைசுமை யாகத் தீமை
தோற்றுவித் திடுதல் கண்டேன்.
அமைந்திடும் தமிழர் நாட்டுக்
கவர்பணி வேண்டாம் ! வேண்டாம் !

சொல்லழகு மனம்பறிக்கப் புலவன் பாட்டுச்
சுவையறிந்து பரிசளித்துத் தமிழ்வ ளர்த்த
நல்லதமிழ் மன்னர்வழிப் பிறந்தி ருந்தும்
நாடாளும் அமைச்சர்களாய் வீற்றி ருந்தும்
மெல்லமெல்லப் பிறமொழியைத் திணிப்ப தற்கு
மேலுதவி செய்துவரும் போக்கைக் கண்டு
நல்லவர்கள் மனம்வருந்தப் புல்ல ரெல்லாம்
நன்மைவந்த தெனக்களித்துக் குதிக்கின் றாரே !

பொய்யான கருத்தெல்லாம் தமிழர் நாட்டில்
புகுத்துகின்ற கதைகளையே வெறுத்தொ துக்கச்
செய்யாரோ எனநினைத்தால் கலைத யத்தைச்
செந்தமிழில் இறக்கிவைத்த கவிதை யென்று

மெய்யாக விழாக்கள்பல நடத்தி வைத்து
மேன்மேலும் அக்கதையே பெருக்கு வார்கள்
செய்யாதே என்பதனைச் செய்வ தற்கே
திரண்டோடி வருவாரிம் முரண்டர் கண்டீர் !

தென்றமிழில் வடமொழியின் சொற்கள் வந்து
திரிந்ததெனை ஆராய்ச்சி நடத்திக் காட்டி
அன்றிருந்த தமிழ்ச்சொல்லும் வடசொல் லென்றே
அழிவழக்குப் பேசிடுமோர் கூட்டத் தாரும்
இன்றமிழை வளர்க்கின்றோம் யாங்க ளென்றே
ஏமாந்த தமிழ்நாட்டார் முன்னே வந்து
நின்றிருப்பார்; பூமாலை கைச்செண் டோடே
நிகழ்த்திடுவார் வரவேற்புத் தமிழர் தாமே.

பெண்கல்வி வேண்டுமென்றே ஒருவர் சொன்னால்
பெரியவளாய் ஆகும்வரை படிப்ப தென்று
தண்டமிழ்க்குப் பண்டிதர்கள் உரைவ குத்த
தந்திரம்போல் மற்றொருவர் விளக்கம் சொல்வார்.
கண்ணைநிகர் கல்வியினைக் கற்ப தற்கே
கல்லூரி வருமந்தக் கன்னி தன்னை
மண்டுதமிழ் மாணவரோ சுற்றி வந்து
மனமயக்கம் கொண்டிடுவார் மான மின்றி !

தமிழ்நாட்டில் வானொலியை இயக்கு விக்கும்
தனியுரிமை பெற்றவரோ வடமொ ழிப்பேர்
அமைத்ததனை அழைக்கின்றார்; இந்தி தன்னை
அருமுயற்சி செய்திங்கே பரப்பு கின்றார்.
சமைத்துவைத்த அறுசுவைசேர் உணவி ருக்கச்
சரக்குதனைக் குடிப்பாட்டும் சழக்கர் போலே
நமைத்துன்பப் படுத்துகின்ற ஆள வந்தார்
நாட்டுமொழி வளர்ச்சியினைத் தடுக்க லானார் !

கொள்ளைகொலை ஆபாசச் செய்தி யென்னும்
குப்பையெலாம் பரப்புகின்ற செய்தித் தாள்கள்
கள்ளமிலா நாட்டினரின் உள்ளந் தன்னைக்
கயமைவழிச் சேர்க்கின்ற கதையி தழ்கள்
வெள்ளம்போல் பெருக்கிநம்பால் விலைப்ப டுத்தி
விந்தையுறத் தமிழ்வளர்ப்ப தாகக் கூறும்
குள்ளர்களும் இந்நாட்டில் பெருகிப் போனார்
குணங்கெட்டார் இவைபடித்தார் நூறு நூறாய் !

இருசொற்கள் புணர்ந்திடுங்கால் தோன்று மொற்றை
எடுத்துவிட்டுத் தமிழெழுதும் கூட்ட மொன்று,
''விரியுலக வழக்கினிலே விளங்கு கின்ற
வேற்றுமொழி பலகண்டோம் புணர்ச்சி யென்னும்
ஒருவிதியைக் கண்டதில்லை ! தமிழில் மட்டும்
உண்டெனிலோ அதுபடிக்க நேர மில்லை
கருதுவதை யெழுதுங்கால் ஒற்று மிக்குக்
காண்பதனால் என்னபயன்'' என்று கேட்கும் !

செந்தமிழில் மறுமலர்ச்சி சேர்ப்ப தற்கே
சிறுகவிதை புதுக்கவிதை வசனப் பாட்டு
விந்தையுற எழுதுகிறோம் என்று சொல்லி
விளையாடும் எழுத்தாளர் கூட்ட மொன்றும் !
அந்தநாள் ஆபாசக் கதையை யெல்லாம்
அச்சாக்கி மலிவான விலைக்கு விற்றுச்
செந்தமிழைப் பரப்புவதாய்ப் பசப்பு கின்ற
சிறுவணிகர் கூட்டந்தான் மற்றொன் றாகும் !

இலக்கியத்தைத் தெருவெல்லாம் பரப்ப வென்றே
எழுந்ததோர் இயக்கமெனில், தெருவின் பேச்சை
இலக்கியமாய்த் தொகுத்தெழுதிப் பெருக்கு தற்கும்
எதிரியென ஓரியக்கம் இருக்கக் கண்டோம்.

கலக்கமின்றித் தெளிவான நீர்கு டிக்கக்
கருதியொரு திருக்குளத்தில் இறங்கும் போது
மலக்குவையைத் தனக்குணவாய்க் கொள்ளும் பன்றி
மணிக்குளத்தில் நீராடித் திரிதல் போலே !

வருவானோ வாராளென் றெழுது வோனும்
வருவாளே ரெழுத்தாளன் என்று கூறி !
திருவான தமிழோடு தெருவில் வந்தால்
செழித்தோங்கும் எனநம்பி வழிதி றந்தோம்.
தெருவீதிப் புழுதியெலாம் பறந்து வந்து
திருவீட்டில் நுழைந்துதமிழ் ஏட்டி லேறி
உருவான தமிழொளியை மறைக்கக் கண்டோம் !
உடன்புழுதி துடைப்பதற்கோர் இயக்கம் வேண்டும் !

ஆங்கிலத்தைத் தமிழ்மொழியில் கலப்ப தாலே
அறிவுயரும் மொழிவளரும் நாட்டிற் கென்றும்
தீங்கில்லையே எனமொழிவார்; தமிழில் எங்கும்
செஞ்சொற்கள் இல்லையென்றும் கூறி நிற்பார்.
தேங்கியுள்ள சாக்கடையின் தண்ணீ ராலே
தேனாற்றில் பெருக்கெடுத்த தென்பார் போலே
பாங்கிலுள்ள வடமொழியும் சொற்கள் தந்து
பழந்தமிழை வளர்த்ததுவே சான்று மென்பார் !

கற்கண்டைக் கடியாமல் விழுங்கிப் பல்லைக்
காப்பாற்ற வேண்டுமென்றும், அதனைப் போலே
கற்கண்டைக் கல்கண்டென் றெழுதி னாற்றான்
கடுந்தமிழைப் புரிந்துகொள்ள முடியு மென்றும்
சொற்களிலே எளிமையினைத் தோற்று விக்கத்
தோன்றிவந்தோம் நாமென்று சொல்லிக் கொண்டு
முற்கழகப் புலவர்தமை மூட ராக்கி
முன்னேறும் புதுப்புலவர் பல்லோர் வந்தார் !

தாய்போன்ற பெண்ணொருத்தி தன்னைச் சுட்டித்
தடித்தனமாய் அவள்வந்தாள் இவள்போ னாளென்
றோயாமல் எழுதுவதும், இலக்க ணத்தில்
உள்ளபடி தானெழுது கின்றே மென்று
வாயாலே அடிப்பதுவும் சான்றோர் சொல்லை
மறுப்பதுவும் தொழிலான சிற்றி னத்தார்
தாயான தமிழ்நாட்டின் விடுத லைக்கே
தாமுழைக்க வந்ததுவாய்க் கூவு கின்றார் !

ஆங்கிலத்தில் கணக்கெழுதும் வேலை பார்ப்போன்
அவசரத்தில் ஒருபிழையை எழுதி விட்டால்
பாங்கினிலே பணிசெய்யத் தகுதி யில்லை
படிப்பில்லை என்றவனை விலக்கி வைப்பார் !
ஓங்கிவளர் தமிழ்மொழியில் கலைப டைப்போர்
உண்டுபண்ணும் பெரும்பிழைகள் ஒன்றி ரண்டா ?
ஈங்கிதனைக் கூறிடவோர் ஆளும் இல்லை
எழுத்தாளர் பிழைத்தமிழும் கொழுத்துப் போச்சாம் !

அரைப்படிப்புக் காரரெல்லாம் தமிழ்வ ளர்க்கும்
ஆர்வமுள்ள எழுத்தாள ராகி விட்டார் !
திரைப்படத்தின் எழுத்தாள ரெல்லா மிந்தத்
திருநாட்டில் அறிஞர்களாய் உலவு கின்றார் !
உரைப்படிப்புப் பண்டிதரோ புதுமை யென்றால்
ஒதுங்குகின்றார் ! நூற்பொருளில் திருத்தம் சொன்னால்
கறைப்படுத்தி விட்டோமென் றலறு கின்றார் !
காண்பதெல்லாம் விந்தைகளே! தமிழர் நாட்டில்.

ஏனென்று கேட்பதற்கோர் ஆளு மின்றி
இருக்கின்ற காரணத்தால் தமிழர் நாட்டில்
தானென்று திரிகின்ற போக்குக் கொண்டார்
தலைகனத்துத் திரிகின்ற நிலைமை கண்டோம்.

பேறென்று தலையேறி இருந்து விட்டால்
பெருமையுள்ள தாய்விடுமா என்று பார்த்தால்.
யானென்றும் உயர்ந்தவனென் றெண்ணு கின்ற
அவர்நிலைமை யறிந்திடுவார்; உண்மை காண்பார் !

வள்ளுவனின் மறைவளர்ந்த தமிழர் நாட்டில்.
வளங்கொழிக்கும் கீழ்க்கணக்கு நூல்க ளாலே
உள்ளமெலாம் தெளிவுற்று நெறிகைக் கொண்டே
ஒப்பற்ற சான்றோர்கள் வாழ்ந்த நாட்டில்,
தெள்ளுதமிழ் வளர்கின்ற விந்தை யான
சிலநிகழ்ச்சி நாம்கண்டோம். இந்தப் போக்கே
கொள்ளுமெனில் இந்நாட்டில் முன்னேற் றத்தைக்
கொண்டுவரல் முயற்கொம்பே கண்டீர் ! கண்டீர் !

ஒழுக்கமுடன் வளர்கின்ற பிள்ளை யன்றோ
உயர்ந்தவனாய் விளங்கிடுவான் ! நடத்தை தன்னில்
வழுக்குடைய பேர்வழியும் சிறப்ப துண்டோ ?
வான்கோழி மயிலைப்போல் ஆவ துண்டோ ?
அழுக்குடையோன் நோயின்றி வாழ்தல் உண்டோ ?
அழகுடைய தமிழ்கெடுக்கும் அன்ப ரெல்லாம்
இழுக்குடைய கொள்கைகளை விட்டு விட்டே
என்றும்நல்ல தமிழெழுதி வாழ்க நன்றே !

## சிவனும் பெருமாளும் போற்றும் செந்தமிழ்

*வாயிற் பிறந்து வழங்கு மொருமொழியைத்
தாய்மொழியென் றுரேனோ சாற்றிடுவீர் ? —தாய்தான்
எடுத்தணைத்துக் கொஞ்சி யிருந்தக்காற் சொல்லிக்
கொடுத்ததனை நெஞ்சிற் குறித்து.*

*பிறமொழியைக் கற்றறிந்து பேசுமொழி யாக்கி
யுறவுமொழி நீத்தாலென் ஓது ? —நறுந்தேனே
நேரான பாதைவழி நின்றிருந்தும் முட்காட்டைச்
சீராக்க வெண்ணுவதே வீண் !*

*விஞ்ஞானம் கற்பதற்கு வேற்றுமொழி வேண்டுமெனில்
அஞ்ஞான மேதமிழா லாமன்றோ ? —மெய்யான
எஞ்ஞான மும்தமிழில் ஏற்றிடலாம் மக்களுளத்
தஞ்ஞானந் தீர்ந்துவிட்டக் கால் !*

*பன்மொழியார் சேர்ந்திருக்கும் பாரதநன் னாட்டுமொழி
ஒன்றுபொது வேண்டாமோ ஓதிடுவீர் ?—ஒன்று
பொதுவானால் மற்றவெலாம் போக்கற் றொழியும்
அதையாய்ந் திடவேண்டா மா ?*

*அரசு பொதுமொழியால் ஆட்சிபெற மக்கள்
உரைபழகத் தாய்மொழியும் உண்டே ! —வரிசையுறு
முத்தனைய பல்லாய் மொழிதான் அரசிழந்தால்
எத்தனையும் முன்னேறு தே !*

திருக்கோயில் தெய்வங்கள் பேணுத் தமிழை
விருப்போடு கொள்ளவா வேண்டும் ?—சிரிப்போ(டு)
உயிர்வாங்கும் செந்தேனே யொண்டமிழ்பின் னேடி
மயலானுன் அப்பெரு மாள் ?

உமைநத்தும் செஞ்சடையா னேதிக் களிப்ப
தமைவுற்ற ஆரியத்தை யன்றே ?—சமைவுற்ற
பொற்சிலேயே தேவாரம் போற்றி நடமிட்டான்
சிற்றம் பலத்தே சிவம் !

செந்தமிழை விட்டுச் சிவனும் பெருமாளும்
இந்தநாள் வேற்றுமொழி யேற்றதேன் ?—மந்தநகை
மின்னுளே சாதி வகுத்திட்ட மேற்படியார்
இந்நாளே செய்தா ரிடர் !

செந்தமிழர் நாட்டுத் திருக்கோயில் அத்தனையும்
எந்தநாள் இன்தமிழை ஏற்குமோ ? —அந்தகமாய்ப்
பக்திசெயும் அன்பர் பகுத்தறிவை மேற்கொண்டால்
அக்கணமே மானே அறி !

பகுத்தறிவை மேற்கொண்டால் பக்தி மறைந்து
மிகுத்திங்கு நாத்திகமோ மேவும் ? —தொகுத்த
மலர்க்கொண்டைக் காரிகையே வாலறிவன் நற்றுள்
தலேக்கொண்டால் நாத்திகமா சாற்று !

# புதிய தமிழ் நாடு

தமிழ் நாட்டில் இந்நாளில் தலைவி ரித்துத்
தகிகிணத்தோம் போட்டாடும் பஞ்ச மெல்லாம்
குமுறுகின்ற ஏழைமக்கள் உள்ளந் தன்னில்
குதிகொள்ளும் சிந்தனையைத் தூண்டி விட்டே
எமையிந்த நிலைக்குவரச் செய்த தற்கே
எதுமூலம் எனவறியத் துடித்த போது
தமிழ்நாட்டைக் கெடுத்ததெலாம் வேற்று மையாம்
தடையென்று தெரிந்ததனை யொழிக்கச் சேர்வோம்!

மனிதரெனப் பிறந்துவிட்டோம் சண்டை யிட்டு
மாய்வதிலே பொருளில்லை இந்நாள் மட்டும்
அனைவருக்கும் பொதுவான உலகில் நீவிர்
ஆட்சிசெய் அடிமையென நாங்கள் வாழ்ந்தோம்.
தினந்தினமும் உண்டுறங்கிக் கொழுத்த நீவிர்
திடீரென்று பொதுவுடைமை கூறக் கேட்டால்
மனங்கலங்கல் இயற்கையதை மாற்று தற்கும்
மருந்துண்டு பகுத்தறிவென் றுரென்று கண்டீர்!

பகுத்தறிவில் சற்றுழ்ந்து பார்ப்பீ ராயின்
பாரினிலே மனிதரிலே வேற்று மைகள்
வகுத்ததெலாம் சோம்பேறி யாக வாழ்ந்து
வந்தகொடும் பாதகரே யென்று காண்பீர்!
மிகுத்தநலம் ஒருவர்உற நாட்கள் தோறும்
மேனியெலாம் கருமையுற வேர்வை ரத்தம்
உகுத்திடுக ஒருவரென்று மன்றில் சட்டம்
உண்டாக்கி வைத்தபெரும் சண்டா ளர்யார்?

வண்ணனின் சேயையொரு வண்ணனென்று
வகுத்துவிட்ட மடையர்களைப் பெரியோ ரென்றே
அண்ணாந்து பார்க்கின்ற அறிவற் றோரே
யான் சொல்லும் சொற்கேளீர்! ஏழை நெஞ்சம்
புண்ணாக நடைமுறையில் தாழ்வு செய்து
பொறுமைக்கோர் எல்லையினைக் காணச் செய்தீர்!
எண்ணாமல் இருந்துவிட்டீர் பொறுமைக் கெல்லை
என்றாலே புரட்சிப்போர்த் தொடக்க மென்றே!

தொழிற்பெயரைச் சாதியென்று வகுத்த பின்னர்
தோன்றியவள் வறுமையெனும் ஆட்டக் காரி,
எழிற்பிறவி மானிடமென் றறிஞர் சொல்வார்
யாமுமந்தப் பிறவிதனை யடைந்தும் வாடி
நிழல்காண வகையின்றி நிற்க நேர்ந்தால்
நெஞ்சந்தான் கொதியாதோ? இந்த நாட்டில்
அழுதொருவன் இருக்கும்வரை விடுத லையை
அடைந்துவிட்டோம் என்பதெல்லாம் வெறும் கூப் பாடே!

ஏழ்மையெனும் நீரருந்தி உழைத்து ழைத்தே
இன்பமெனும் நற்குளத்தில் நீர ருந்த
வாழ்வினிலே இயலாமல் வாட்ட முற்று
வாழுகின்ற பெரும்பகுதி கண்டும், செல்வர்
ஆளுகின்ற மனப்போக்கும், உழைப்ப தின்றி
அளாவிடுவோம் போகமெனும் நிலையும் கண்டால்
கூழுமின்றி வாழுகின்ற மக்கள் உள்ளங்
கொதியாம லிருப்பாரோ சிந்திப் பீரே!

வீரமுள்ள இளைஞர்களே இங்கு வாரீர்!
விடுதலைக்கு வழிவகுப்போம் தமிழ ரெல்லாம்
வீரரென வாழ்ந்தநாள் பொதுமைக் கொள்கை
விளங்கியதென் றிலக்கியத்தில் சான்று கண்டோம்,

ஆரமுது தினம்படைத்தே யுண்ண வேண்டின்
அனைவருக்கும் பொதுவிந்த உலக மென்ற
நேரியதோர் கொள்கையினைத் தமிழர் நாட்டில்
நிலைக்கவைத்தால் யாவருக்கும் விடுதலைதான்!

பொதுமையெனில் பசுவருகில் புலிகள் வந்து
பொதுக்குளத்தில் நீரருந்தல் என்று சில்லோர்
மதியின்றிப் புகல்கின்றார் தமிழர் நாட்டில்
மாடென்றும் புலியென்றும் பேத மில்லை,
புதிதாகும் தமிழகத்தில் உள்ளோர்க் கெல்லாம்
பொதுவாகத் தமிழரென்று பெயரே யன்றி
நிதிபடைத்தார் இவரிவரே வறிய ரென்னும்
நிலைபோகும் வளமாகும் தமிழர் நாடே!

வாடியொரு மகனழவும் மற்றோர் செல்வன்
வயிறடைத்து மகிழ்வதுவும் தமிழர் நாட்டில்
ஓடிமறைந் தொளிந்துவிடும் மாந்தர் தம்மில்
ஒருமையென்றும் நிலவும்! இன்பம் நிலவும்! துன்பம்
தேடியலைந் தாலுமினிக் கிட்டா தென்று
திருநாட்டில் வளம்பெருகும்! உழைப்பும், இன்பம்
கூடுவதும் எல்லார்க்கும் இயல்வ தாகும்
குத்துவதும் வெட்டுவதும் இல்லா தேசும்!

புதியதமி ழகத்தெவரும் எவர்க்கும் தொண்டு
புரிவதில்லை என்றநிலை நிலவும்! நல்ல
மதிப்புலவர் கொள்கையுயர் வெய்தும்! இன்ப
மலர்ப்பூங்கா வெனத்திகழும் நாடு! மக்கள்
பொதுமையெனும் தேனருந்தி வாழ்வர்! காதல்
புரியுமெழில் வனிதையர்கள் இளைஞ ரெல்லாம்
இதயந்திறந் தளவளாவும் நிலைவந் தின்பம்
இருக்கும்எழில் இருக்கும்என முழக்கு வோமே!

# நம் நாடு

கொக்கரக்கோ கொக்கரக்கோ எழுந்திருங்கள் என்று
கூரையிலே சேவல்நின்று கூவுமொலி கேட்டே
அக்கரைக்குத் தலைவைத்துப் படுத்திருந்த தங்க
ஆதவனுர் பசும்போர்வை விலக்கியெழக் கண்டே
'அக்கக்கா' என்றுகிளி அழைத்திருக்கக் காகம்
ஆகாகா! என்றுவர வேற்பிசைக்க நாலா
பக்கத்தும் உயிரினங்கள் கண்மலரக் கண்டு
பரவசங்கொள் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே!

பச்சைவயல் அத்தனையும் பொன்பரப்பிக் கொண்டு
பகலவனுர் கண்விழித்துப் பார்க்கின்ற போதில்
இச்சையுடன் முகமலர்ந்து வரவேற்புக் கூறி
இதயத்தைத் திறக்கின்ற பூக்களினம் கோடி!
கச்சிதமாய்க் கோலமிட்டு வாசலிலே தங்கள்
கைம்மலரால் எழில் பரப்பும் மாதர்களின் தோற்றம்
அச்சிட்ட நெஞ்சினராய்த் தொழில்நாடிச் செல்லும்
அன்பினர்வாழ் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே!

காடுகளும் சோலைகளும் காவிரியின் ஆக்கம்
கமழ்கின்ற தமிழ்மணமோ வைகைக்கரைத் தேக்கம்
வீடுகளும் ஆலயமும் இசை கமழும் பாக்கம்
வீணையுடன் நாதசுரம் விளைக்குமிசை காற்றில்
ஓடிவரும் உளம்நிறையும் உவகையிலே கூத்தும்
உண்டாகி எங்கணுமே ஆனந்தம் சேர்க்கும்
ஆடுகளும் மாடுகளும் கழுத்துமணி அசைய
ஆடிவரும் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே!

திருக்கோயில் யானையுடன் பாகன்வரும் போது
சிறுவரெலாம் ஓடிவந்து பழங்கொடுத்து மகிழ்வர்
கருக்கொண்ட முகிலினங்கள் மழைபொழியும் போது
கப்பல் விட்டுத் தெருநீரில் விளையாடி மகிழ்வர்
தெருக்கோடிப் பள்ளியிலே விளையாட்டு நேரம்
சீருடையில் பயிற்சிசெயும் காட்சி ஒரு கோலம்
சுருக்காகச் செயல்புரியும் வருங்கால மக்கள்
சூழ்ந்தாடும் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே!

நாற்றங்கால் நடுகின்ற போதிலொரு பாட்டு
நன்கு பயிர் வளர்ந்த பின்னே அறுவடைக்கோர் பாட்டு
ஏற்றநீர் இறைக்கின்ற போதிலொரு பாட்டு
ஏரியிலே தோணிவிடும் போதிலொரு பாட்டு
மாற்றலர்மேல் படையெடுக்கும் போதிலொரு பாட்டு
வாகைபெற்றுத் திரும்பிவரும் போதிலொரு பாட்டு
காற்றடிக்கும் போதெல்லாம் காதில்விழும் பாட்டு
களிபெருக்கும் செந்தமிழ்த்தாய் நாடெங்கள் நாடே!

## சிந்தை பறிக்கும் விந்தை நூல்கள்

தேவாரப் பண்ணைத் திருவா சகத்தேனை
நாவாரப் பாடி நயங்கண்டு செந்தமிழின்
இன்னிசையிற் சொக்கி நான் இன்ப வயமாகித்
தன்னை மறந்தநிலை தன்னில் இருந்ததுண்டாம்?

ஆரியத்தைக் கம்பன் அழகாக்கிச் செந்தமிழில்
ஊற வைத்துத் தந்த உயர்கா வியத்தைப்
படித் தென்றன் நெஞ்சைப் பறிகொடுத்துக் கள்ளுக்
குடித்தவனைப் போல் மயக்கம் கொண்டு திரிந்ததுண்டாம்!

குற்றால நாதர் குறவஞ்சிச் செந்தமிழில்
வற்றாத கற்பனையாய்ப் பாய்ந்துவரும் தேனருவி
சிந்தும் அழகினிலே சிந்தை பறிகொடுத்து
விந்தை விந்தை யென்றே வியப்புற் றிருந்ததுண்டாம்!

சொல்லழகில் கற்பனையில் சொக்குந் தமிழ்நடையில்
வல்லனவாய்க் காவியங்கள் பல் வகையாய்க் கண்டெனது
நெஞ்சைப் பறிகொடுத்து நின்றேன் எனினு மதில்
கொஞ்சங் குறையுண்டு கூறிடுவேன் கேளீரோ

சாதியால் கெட்ட சமயத்தால் தீமைமிகு
நீதியால் நாடு நிலைகெட் டிருக்குங் கால்
சாதி பெரிது சமயம் சிறந்ததெனை
ஓதுகின்ற காதைகளால் உண்மை நலமுண்டோ?

## உறுதி மொழி

தான்வாழத் தமிழ்கற்றுக்
 கொண்ட கேடன்
தமிழ்வளர்ச்சிக் கிடையூறு
 செய்கின்றானல்,
வான்மீதும் தமிழுயர
 வேண்டுமானல்
வண்மொழியைக் கற்கவரும்
 யாவ ரையும்,
''நான்வாழ வகைசெய்யும்
 நற்றா யேநின்
நலத்திற்கோர் இடையூறு
 வருங்கா லந்தில்
நான்மாள நேர்ந்தாலும்
 அஞ்சா துன்றன்
நலங்காப்பேன்'' எனஉறுதி
 பகரச் செய்வீர் !

# தமிழ் வாழ்வு

பாவிரியும் மதுரையிலே புலவர் நாவில்
பழகிவந்த பெருமாட்டி! வள மிகுந்த
காவிரியின் கரைகளிலே இளமை கூட்டிக்
காஞ்சியிலே பெருமைதனை நிறுத்திக் காட்டி
பூவிரியும் வஞ்சியிலே புதுமை சேர்த்துப்
புகழ்விரியும் தொண்டையிலே எழிலைக் கூட்டித்
தாவிவரும் வங்கத்தின் குமரி யான
தனித்தமிழாந் திருத்தாயே வணக்கம் அம்மா!

திருஞா ன சம்பந்தன் பாடிப் பாடிச்
செம்மாந்த தமிழ்மொழியே! அப்பர் பெம்மான்
அருள்வாக்கு மழைபெய்து குளிரச் செய்த
அழகுடைய தண்டமிழே! சுந்த ரர்தம்
திருவாக்கின் கற்கண்டே! வையை வெள்ளந்
திரண்டது போல் பாய்ந்துவரும் தேன்பெருக்கே!
உருவான ஓவியமே! தமிழர் வாழ்வின்
ஒளி விளக்கே! என்தாயே! வணக்கம் அம்மா!

தப்பாத வாழ்வுடைய சான்றோர் பல்லோர்
தமிழ்ச் சங்கம் கூட்டியுனை வளர்த்து மூப்புக்
கப்பாத இளமையுடன் திகழச் செய்தார்
கவின்வாழ்வு பெற்றாய்நீ! வள்ளு வர்தம்
முப்பாலாம் திருக்குறளால் உலக முற்றும்
முன்னேற்ற வழிகாட்டி அழைத்துச் சென்றே
எப்பாலும் புகழ்மணக்கும் தமிழணங்கே!
என் தெய்வத் திருத்தாயே! வணக்கம் அம்மா!

பதினெட்டாம் நூற்றுண்டில் வெள்ளைக் காரப்
பாவிமகன் நம் நாட்டில் காலை வைத்தான்;
மிதிபட்டும் அடிபட்டும் குண்டு பட்டும்
மேலுலகம் சென்றுர்கள் நமது வீரர்
மதிகெட்ட பேரெல்லாம் வாழ்ந்திருந்தார்
மனங்கெட்டுத் தன்மானம் கெட்டோர் மீது
சுதிகெட்ட வீணையைப்போல் ஆங்கி லத்தைச்
சுமத்திவைத்துப் படுபாவி ஆட்சி செய்தான்.

எங்கிருந்தோ வந்ததுரை இந்த நாட்டின்
எழின்மொழியைத் தான்கற்றல் கடின மென்றே
இங்குள்ள எல்லாரும் ஆங்கி லத்தை
ஏற்றுவிட்டால் தனக்குமிக வசதி யென்றே
அங்கங்கே கல்லூரி நிறுவி மக்கள்
அனைவ ரையும் பரங்கிமொழி கற்கச் செய்தான்.
மங்கிவரும் வாழ்வுகண்ட மக்கள் பல்லோர்
மனமொப்பி ஆங்கிலத்தைக் கற்க லானுர்!

ஆங்கிலத்தைக் கற்றவர்கள் தம்முள் ளேயும்
அடிமைமனம் படிந்ததனுல் குடிகா ரர்போல்
தீங்குதரும் வழிகளையே நாடு கின்றுர்
திருநாட்டை மீளாத அடிமைப் போக்கில்
தேங்கிநிற்கச் செய்கின்றுர்; வாத மிட்டுத்
தேயத்தைக் காப்பாற்ற வந்தார் போலே
ஓங்கியபேச் சாடுகின்றுர் ஆங்கி லத்தை
ஒப்பற்ற மொழியென்று போற்று கின்றுர்.

அடிமைமனம் கொண்டவர்கள் போக்கைக் கண்டால்
ஐயையோ! நெஞ்சு வெடித் திடுமே யம்மா!
குடிபோதை யகலாத குடிகாரன் போல்
குழறிடுவார் உளறிடுவார் தம் கூற்றைத்தான்

பிடிவாதம் பிடித்துவற் புறுத்தி நிற்பார்
பிறர் பேசும் மெய்வாதம் ஏற்க மாட்டார்
கடிவாளம் இல்லாத குதிரை யைப்போல்
கண்விழித்துக் கொண்டே போய்க் குழியில் வீழ்வார்!

உடலடிமைப் பட்டாலும் உள்ளத் துள்ளே
ஊறிவரும் உரிமையுணர் விருக்கு மானல்
கெடலில்லை யம்மனிதன் அழிந்தாலுந்தன்
கீழ்வருமோர் பரம்பரையார் வீரங் கொண்டு
அடிமைநிலை மாற்றுதற்குப் போராட்டங்கள்
ஆயிரமா யிரமாகச் செய்து வெற்றிக்
கொடிபறக்கச் செய்வரிது மெய்யே! உள்ளம்
கொள்ளுகின்ற அடிமைநிலை துன்பம் அம்மா!

வீட்டினிலே திருவிளக்கை ஏற்றி வைத்து
விழாக்கள்கொண் டாடுதல்தான் தமிழ் வழக்கம்
ஊட்டமுடன் ஆங்கிலங்கற் றோர் விளக்கை
ஊதியணைத் துப்பிறந்த நாள்கொண் டாடும்
வாட்டமுள்ள பழக்கத்தைக் காணு கின்றோம்
வளர்ச்சிக்கு வழியுண்டோ அடிமைப் போக்கால்?
நாட்டமுள்ள தமிழரெல்லாம் தமிழர் வாழ
நலஞ்சேர்க்கும் நெறியான வழியைக் காண்போம்!

பிழைப்புக்கே ஆங்கிலத்தைப் படித்த வர்கள்
பிழைத்துத்தான் போகட்டும்! நாட்டைக் கேட்டுக்
கழைக்கின்ற செயல்தன்னை விட்டால் போதும்!
அருந்தமிழைப் பழிக்கின்ற கூச்சல் வேண்டாம்!
உழைப்புக்கு மதிப்புண்டு! தமிழர் நாட்டில்
உண்மைக்கு வாழ்வுண்டு! புலமிக் கோரின்
அழைப்புக்குத் திரண்டுவர இளைஞர் உள்ளார்
அஞ்சாத சிங்கத்தின் கூட்டம் அன்னார்!

கல்லூரிப் படிகளிலே தமிழ்ஒ லித்தால்
கணக்கின்றி விஞ்ஞானப் புதுமை தோன்றும்!
கொல்லருலைக் களங்களிலே தமிழ்ஒ லித்தால்
குவிகின்ற பொருள்களிலே உறுதி தோன்றும்!
சொல்லாடும் அறமன்றில் தமிழ்ஒ லித்தால்
தோற்றோடும் பழிபாவம்! அறம் நிலைக்கும்!
நல்லாராம் தமிழறிஞர் வழி நடந்தால்
நாடெல்லாம் முன்னேறும் இதுமெய் மெய்யே!

துறைதோறும் உன்மொழியைக் குறைப்ப தேதம்
தொழிலாகக் கொண்டிருந்தோர் சூழ்ச்சி யாலே
பிறைதோறும் மறைந்துவரும் மதியைப் போலே
பெருமாட்டி உன் ஒளிதான் குறையக் கண்டே
மறைதோறும் மறைதோறும் மனம்பு ழுங்கி
மாண் டொழிந்தார் தொண்டர்பலர்! உன்னைச் சேர்ந்த
கறை நீக்கி முழுநிலவாய்க் காண்ப தற்கே
கழகங்கள் பலகண்டார் வீரர் பல்லோர்!

தீங்குடையான் ஒழிந்துவிட்டால் இன்னல் தீரும்
திருவுடைய தாகுமிந்த நாடே என்றிங்(கு)
ஏங்கியவர் மனங்களிக்கப் பரங்கி கப்பல்
ஏறிவிட்டான் என்றாலும் விட்டுச் சென்ற
ஆங்கிலந்தான் கற்றவர்கள் உள்ளந் தன்னை
ஆட்கொண்டு நாட்டுக்குச் செய்யும் கேடு
வான் பெரிது வான்பெரி தே! இந்த நாட்டின்
வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் முட்டுக் கட்டை!

போற்றிசெயும் கோயிலிலே, பாட்டுப் பாடும்
புலவர்களின் அரங்கத்தே, அறமன் றத்தே,
ஆற்றல் பெறும் கல்லூரிக் கூடம் தன்னில்,
அரசுபணிச் செயலகத்தே, திரும ணத்தே,

கூற்றுவரும் இழவகத்தே கூட உன்னைக்
கூடாமற் செய்துவிட்ட கோலங் கண்டு
நேற்றுவரை போராடிப் போரா டித்தான்
நெஞ்சுறுதி பெற்றுவரு கின்றோம் தாயே!

பூக்காட்டில் பூமணக்கும் புதுமை யில்லை!
பொன்னிநதிக் கரைதனிலே மாம ணக்கும்!
சாக்காட்டில் வீரர்திருப் புகழ் மணக்கும்!
சங்கத்துப் பாடல்களில் மணக்கும் காதல்!
நோக்காட்டில் வீழ்ந்தவர்க்கோ மருந்தின் நாற்றம்
நொடி தோறும் கவலையினை அதிக ரிக்கும்!
வாக்காடிப் பயனில்லை தமிழ றிந்தோர்
வழிபற்றித் தமிழகத்தை நடக்கச் செய்வோம்!

கவிந்திருக்கும் இருள்முற்றும் விலக வில்லை!
கதிரொளியின் அறிகுறிதான் தோன்றிற் றிங்கே!
குவிந்திருக்கும் தமிழ்ச் சிங்கக் கூட்டத்திற்கோ
குறிக்கோளைக் காட்டிவிட்டாற் போதும்! வெம்பி
அவிந்திருக்கும் தமிழுள்ளம் ஊட்டம் பெற்றே
ஆர்வமுற மறுமலர்ச்சி யடைய வையம்
புரிந்திருக்கும் தமிழறிஞர் வழிந டப்போம்
புத்துலகம் படைத்திடுவோம்! இதுமெய் மெய்யே!

# அமுதுண்ணும் பெருநாள்

தமிழனுக் கொரு திருநாள்— பொங்கல்
அமுதுண்ணும் பெருநாள்
தமிழனுக் கொரு திருநாள் !

தமிழ னென்ற உணர்ச்சி யோடு
அமைதி அன்பு அறிவு கொண்ட
தமிழனுக் கொரு திருநாள் !

உழைத்த உழைப்பின் பயனைக் கண்டு
விளைத்த செந்நெல் வீட்டில் கொண்டு
அழைத்த விருந்து மனைவி மக்கள்
அனைவ ரோடுங் கூடி யுண்ணும்
தமிழனுக் கொரு திருநாள் !

மூன்று வேந்தர் ஆண்ட நாட்டில்
முத் தமிழ்க் கலை யார்ந்த நாட்டில்
தோன்றி வந்த பெருமை யோடு
தோள் புடைத்து வீரம் பேசும்
தமிழனுக் கொரு திருநாள்!

அவனி முற்றும் பெருமை நாட்டும்
அருமைக் குறளும் புலவர் பாட்டும்
உவகை யோடு பாடிக் காதல்
ஒருத்தி யோடு கூடி வாழும்
தமிழனுக் கொரு திருநாள் !

# தமிழர் திருநாள்

வீரமிக்க என்வெற்றித் தமிழே யுன்னை
வேரறுக்கத் துணிந்து சில வீண ரெல்லாம்
ஊரறியப் பலமுயற்சி செய்தார் பின்னர்
உன்மக்கள் தமைப்பிரித்து வைத்தார். ஆனால்,
சீரகமாம் தமிழகத்தில் செழித்த உன்றன்
செம்மைதனை நீக்குதற்கு முயன்ற பேரை
வேருடனே பறிப்போமென் றுர்ப்ப ரித்து
வீறுடனே யுன்மக்கள் கிளம்ப லானார்!

நெடுஞ்செழியன் ஆரியத்தின் படைக டந்தான்
நெடுங்கதையாம் சிலப்பதிகா ரத்தை நாட்டிக்
கொடுத்தஇளங் கோவினுடை யண்ண னந்தக்
கொடியவரைச் சிறையிட்டான். பின்வ டக்கே
படையெடுத்துக் கலிங்கத்தை வென்று வந்து
பாரரசன் அநபாயன் பரணி கொண்டான்.
தடைக்கற்கள் வருந்தோறும் தாவித் தாண்டித்
தாரணியிற் புகழடைந்தார் தமிழ மக்கள்!

முயற்சியெலாம் ஊரறியச் செய்து விட்டால்
முன்னேறும் தமிழ்மக்கள் கோபம் கொண்டு
துயர்கொடுப்பார் என்றறிந்த சூழ்ச்சிக் காரர்
தூயசில நூல்கள்தமைத் தீயிலிட்டார்.
கயலோடும் நீரிலிட்டார்! கயமைத் தன்மை
காய்த்ததனால், பழுத்ததனால், காரங் கொண்டு
வியத்தக்க நூல்களுள்ளே சிலபாட் டுக்கள்
வேண்டுமென்றே புகுத்தியவர் தமிழ்கெ டுத்தார்!

கீழ்ச்செயல்கட் கஞ்சாத பகைவர் தங்கள்
கெடுதல்செயும் நினைப்பினையும் செயலில் அன்னார்
சூழ்ச்சிசெயும் திறத்தினையும் கண்ட மக்கள்
உளங்கொதித்தார், வெகுண்டெழுந்தார், ஊரிலெல்லாம்
வீழ்ச்சியுற்ற தமிழர்நிலை விளக்கிக் காட்டி
வீணான வேற்றுமைகள் விலக்கச் சொல்லிச்
சூழ்ச்சிதன்னை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தூள்தூளாய்த் தொலைப்பதற்குத் தொடங்கிவிட்டார்

பகைவர்களை எச்சரிக்கும் ஒருநா ளாகப்
பாண்டியரின் வழிவந்த தமிழ மக்கள்
மிகையான மகிழ்ச்சியிலே திளைத்தி ருக்கும்
மேலான ஒருநாளா யிலங்கு கின்ற;
வகைவகையாய்த் தானியங்கள், கரும்பு மஞ்சள்
வண்டிவண்டி யாய்க்குவியும் வளங்க ளார்ந்த
வகைசெய்யும் நன்னாளைப் பொங்கல் நாளை
வாழ்த்தியவர் திருநாளாய்க் கொள்ள லானார் !

கழகங்கள் பலவமைத்தார் செயல்க ளாற்றக்
கடிதினைஞர் பல்லோரும் துணிந்து வந்தார்
உளமார்ந்த தொண்டாற்றி யூர்கள் தோறும்
உயர்த்துகின்றார் செந்தமிழை வான ளாவ !
பழகுதமிழ்ச் சொல்லருமை கேட்டு மக்கள்
பைந்தமிழ்க்குத் தொண்டுசெயக் காத்து நிற்கக்
குழைந்தபொங்கல் ஏந்திவந்து தமிழ மங்கை
குமரருக்கும் செல்வியர்க்கும் படைக்க லானாள் !

# பொங்கல் திருநாள்

செங்கதிர் தெற்கு நோக்கித்
திரும்பிடும்; வாடை போக
எங்கணும் தென்றல் வீசும்;
இளம்பச்சை நெல்மு திர்ந்து
தங்கமாய் வண்ணம் மாறித்
தமிழரின் களஞ்சி யத்தில்
தங்கிட வந்து சேரும்
தைமுதல் நாளே வாழி !

உழவர்கள் ஆண்டு முற்றும்
உழைத்ததன் பலனை ஈந்தாய் !
பழையதோர் வீடும் வெள்ளைப்
பாங்குறச் செய்தாய் ! எங்கும்
எழில்பெறும் கோலம் காட்டி
இல்லங்கள் தோறும் நல்ல
அழகிய பெண்க ளுக்கோ
அவசர வேலை வைத்தாய் !

வீட்டிலே பயன்ப டாமல்
வீணுறக் கிடக்கு மந்த
ஓட்டைகள் கிழிசல் எல்லாம்
ஒதுக்குவார்; பழமை போக்கி
ஏட்டிலே புதுமை சேர்க்கும்
எழுத்தாளர் செயலைப் போலே
கூட்டுவார் மெழுகு வார்நற்
கோலமிட் டழகு சேர்ப்பார் !

அடுப்பிலும், அடுப்பில் உள்ள
அழகிய பானை மீதும்,
எடுப்புற வீட்டு வாசல்
எதிரிலும், கூடத் துள்ளும்
தடுப்பவர் தடுத்த போதும்
தம்பெரும் குணத்தி னாலே
கொடுப்பவர் உள்ளம் போலே
குதுகலம் சேர்க்கும் கோலம் !

தோரணம் வாயி லெங்கும்
தொங்கிடக் கண்டேன்; நாட்டில்
பூரண இன்ப மெங்கும்
பொங்கிடக் கண்டேன்; நல்ல
ஆரணங் குகளோ பொங்கல்
அமுதினைப் படைக்கக் கண்டேன் !
பாரணங் கோ மலர்ந்து
பளிச்செனச் சிரிக்கக் கண்டேன் !

கன்றுகள் துள்ளிப் பாயும்
காளைகள் வண்ணக் கொம்பால்
கொன்றிடப் பாய்வ தைப்போல்
குதித்தோடும் இளங் காளைகள்
சென்றுவால் முறுக்கிக் கொண்ட
செருக்கடக் கிக்க ழுத்தில்
ஒன்றிய மாலை பற்றி
உவக்குமோ ராட்டங் கண்டேன் !

ஆட்டமும் பாட்டும் இன்ப
ஆக்கமும் சேர்க்க வந்தாய்
கூட்டமும் விழாவும் சேர்த்துக்
குறள் தரு தமிழ் வளர்க்கும்

நாட்டமும் சேர்த்து விட்டாய்
நல்லதைப் பொங்கல் வாழி !
வாட்டமும் போரும் இன்றி
வையகம் வாழி ! வாழி !

## பொங்கல் வந்ததே!

புதுமைகாட்டும் சுவையை யூட்டப்
பொங்கல் வந்ததே
புதிய நெல்லும் கரும்புங் கொண்டு
பொங்கல் வந்ததே
சங்கம் முழக்கிப் பொங்கல் உண்டு
தமிழர் மகிழ்கிறார்
சிங்க உள்ளத் திளைஞர் பெண்கள்
சிரித்து மகிழ்கிறார்
செல்வம் கல்வி சிறப்பு வாழ்வு
செழித்து வளர்கவே
கல்வி வல்லார் நண்பர் சுற்றம்
களித்து வாழ்கவே !

# பொங்கல் வாழ்த்து

தோரணங் கட்டினர் துள்ளித் திரிந்தனர்
நேற்றுத் தோன்றிய காளைகளே !
ஆரணங் குகளோ கோலம் வரைந்தனர்
இன்பத் தாடினர் பாடினரே !
பூரண இன்பம் பெற்று மகிழ்ந்தனள்
தாய் பொங்கல் படைத்தனளே !
ஆரமு துண்டனர் தந்தை யுவந்தனன்
அன்புக் குடும்பம் வாழியவே !

★

ஆணும் பெண்ணும் கூடி வாழும்
இன்ப வாழ்விலே
ஆனந் தத்தின் உச்சி யான
பொங்கல் நாளிதே
வேண மட்டும் கரும்பு தின்று
மகிழ்ந்தி ருக்கலாம்
விலாப் புடைக்கச் சோறு பொங்கி
யுண்டிருக்கலாம்

காணக் காண இன்ப மாகப்
பெண்கள் கூடியே
கையி ணைத்துக் கும்மி பாடும்
போதில் உள்ளமே
வேணும் பொங்கல் விழாக்கள் நாளும்
வேணு மென்றுதான்
விரும்பு தையா அரும்பு மின்பப்
பொங்கல் வாழியே !

# பொங்குது பால் !

பனி யொழிந்தது ! பனி யொழிந்தது ! — தைப்
பாவை வந்தனள் தோழியரே !
இனி யெழுந்திடும் இனி யெழுந்திடும் — நம்
இல்லம் எழிலுறத் தோழியரே !

கோலம் எழுதுவீர்! காலை மலர்ந்தது ! — புதுக்
கோலங் கொண்டிடத் தோழியரே !
ஞாலம் செழித்திடப் பாலை வடித்து நீர் — எழில்
நாட்டம் பெருக்குவீர் தோழியரே !

இஞ்சியும் மஞ்சளும் ஏலம் பருப்புடன்
இனிக்கும் சர்க்கரைப் பொங்கலடி !
வஞ்சியாள் என்னைக் கொஞ்சி மகிழ்பவன்
வந்தனன் நெஞ்சம் பொங்குதடி !

பாலும் பொங்குது ! ஊதும் சங்கொலி
பாய்ந்து மங்கலம் சேருதடி !
ஆல மரமென வையம் தழைத்திட
ஆயிர மங்கலம் பாடுங்கடி !

சோலைக் கரும்புடன் சூழ்ந்த சிறுவரின்
தூய உள்ளமும் பொங்குதடி !
கால நாயகன் தேரும் திரும்பிடக்
கண்டு வையகம் பொங்குதடி !

மூடப் பழமைகள் ஓடி மறைந்திட
முன்னேற்றச் சங்கு முழங்குதடி !
நாடு தழைத்தது ! நலங்கள் கொழித்தன !
நல்லவர் வாழ்வு விளங்குதடி !

சூது பொறாமைகள் சூழ்ந்த பட்டியல்
துண்டு துண்டாகக் கிழிந்ததடி !
மோது பகைகள் தூளாய்ப் பறந்தன !
முற்றிலும் இன்பம் நிறைந்ததடி !

அண்ணன் தம்பியர் அன்பில் இணைந்தனர்
ஆயிரம் வெற்றிகள் குவிந்ததடி !
திண்ணம் வாய்மையே வெல்லும் என்றிடும்
தேன் மொழி யோங்கி நிலைத்ததடி !

நெல்லும் மணியும் பொன்னும் பொருளும்
நிறைந்து விளங்கும் தைத்திருநாள் !
நல்ல கருத்தும் வாழ்த்தும் வழங்கி
நாடு களிக்கும் தைத்திருநாள் !

அன்னையர் கூடி அன்பு தழைத்திட
அமுதம் வழங்கும் தைத்திருநாள் !
தன்னை யுணர்ந்து தலை நிமிர்ந்திடும்
தமிழர்க் கினிய தைத்திருநாள் !

# எது என்ன ஆனாலும்

(அழுகிணிச் சித்தர் பாட்டு மெட்டு)

வடக்கு மொழியடியோ வாழ்விழந்த இந்திதனை
இடக்குத் தனத்தாலே இங்குவந்து புகுத்துகின்றார்
ஒடுக்கும் அதிகாரம் உண்டென்ற வீறாப்போ ?
துடிக்கும் தமிழர் முன்னே என்கண்ணம்மா — அது
தூளாகிப் போகாதோ ?

அதிகாரம் உண்டென்ற ஆணவத்தால் இந்திதனை
சதிகாரர் கொண்டுவந்து தமிழ் நாட்டில் நுழைப்பாரேல்
விதிதானே என்று சொல்லி வெகுளாமல் இருப்பாரோ ?
அதிகார வெறி யொழித்தே என் கண்ணம்மா — அவர்
ஆணவந்தூள் ஆக் கோமோ ?

புதுடில்லிப் பட்டணத்தான் போட்டதெல்லாம் சட்டமென்றால்
அது இங்கே பலித்திடுமோ ? ஆணவமும் நிலைத்திடுமோ ?
எது என்ன ஆனாலும் இந்திவர விடமாட்டோம்
அது முடியா தென்றுவிட்டால் என் கண்ணம்மா — நாம்
அனைவரும் செத் தொழியோமோ ?

நோக்கம் அறிந்தேதான் நுழைப்போம் இந்தியென
வாக்குக் கொடுத்தவரும் வாய்மாறிப் போனாலும்
ஊக்கம் தளராமல் ஒன்றாகிப் போரிட்டால்
வாக்கும் நிறைவேறி என் கண்ணம்மா — மன
வாட்டந் தான்தீராதோ ?

வெறிநாயைப் போல்வந்து விழுமந்த இந்தியென்றால்
வெறிநாயை அடிப்பதுபோல் விரட்டி யடித்திடுவோம்
அறிவாளர் தமிழ்நாட்டில் ஆகாத இந்தி வந்தே
வெறியாட்டம் போடுமென்றால் என் கண்ணம்மா — அதை
விட்டு வைத்திடவோ?

பொல்லாத இந்திக்குப் போக்கிடந்தான் இல்லையென்றால்
நல்லாரின் தமிழ்நாட்டில் நடமாட நுழைவதுவோ?
நல்லாரின் தமிழ்நாட்டில் நடமாட வருமென்றால்
எல்லாரும் சேர்ந் தெதிர்த்தே என் கண்ணம்மா — அதன்
எண்ணத்தை முறிக் கோமோ?

பேயான இந்திமொழி பெரிதாக வளர்வதற்குத்
தூய்தான தமிழகந்தான் தோதாகப் பட்டதுவோ?
தாயான தமிழ்நாட்டில் தலைகாட்டும் இந்தியெனில்
பாய்ந்தோடும் புலிபோல என் கண்ணம்மா — தமிழ்ப்
படையும் கிளம்பாதோ?

வளமில்லா இந்திமொழி வளர்வதற்குத் தமிழகந்தான்
களமாகக் கிடைத்ததுவோ கருத்தும் அழிந்ததுவோ
களங்காணும் தமிழ்வீரர் கண்நெருப்புப் பட்டாலும்
ஒழிந்து தொலையாதோ என் கண்ணம்மா — அது
உயிரிழந்து போகாதோ?

இந்திவந்த போதெல்லாம் எதிர்த் தெதிர்த்துப் போராடி
வந்தவழி திருப்பிவிட்ட வண்டமிழர் பரம்பரையில்
வந்தவர் நாம் என்றறிந்தும் மறுபடியும் மறுபடியும்
வந்து வந்து புகுமென்றால் என் கண்ணம்மா — அதன்
வாழ்வை முடிக் கோமோ?

## வெஞ்சமர்க் கெழுந்த வீரத் தமிழர்

வெள்ளைக் காரன் வீசி யெறிந்த
நொள்ளைச் சுதந்திரம் தன்னைப் பெற்றுப்
பத்தாண் டுகளும் பறந்து போயின
இத்தனை காலம் என்ன நடந்தது!

நாட்டில் நின்று வாட்டும் பசிப்பிணி
ஓட்ட முயன்ற துண்டா? நன்கு
படித்து முடித்துப் பட்டம் பெற்றுப்
படிதொறும் ஏறிப் பல்லைக் காட்டி
வேலைக் கலைந்து பெறாது திரும்பிச்
சாலையி னோரம் தளர்நடை போட்டே
எதிர்கா லத்தை இருட்டாய் எண்ணி
விதியை நொந்து விழிநீர் பெருக்கித்
திரிவார் நிலையைத் திருத்தத் தொண்டு
புரிந்த துண்டா அரசு புரிவார்?

புழுவினும் கேடாய்ப் புழுதி மண்ணில்
குழந்தைக ளோடு கூடி வாழ்ந்து
தெருத் தொறும் தெருத்தொறும் திரிந்த லைந்து
வருத்தும் பசியை நிறுத்துதற் காகப்
நொண்டி நடந்தும் நோயுடல் காட்டியும்
அண்டி நெருங்கி அவலக் குரலிடும்
மனிதப் பிறவிகள் மணிதொறும் மணிதொறும்
தனி பெரு கினவே நாடாள் வோரே,

என்ன செய்தீர் இழிநிலை போக்க?
என்ன செய்தீர் எளியவர் வாழ?

புத்தகம் எழுதிச் சொற்பொழி வாற்றி
மெத்தப் படித்தவர் நேரு, கல்வி
வித்தகர் என்று வெளிநாட் டவரின்
மொத்தப் புகழையும் மூட்டை கட்டிக்
கொண்டு வந்தவர் சொந்த நாட்டுத்
தொண்டர் கருத்தை உணர்ந்தவர் ஆட்சியில்
இருக்கும் போதே இந்தியை நுழைக்கும்
கருத்தில் பிறக்கும் ஆணைகள் கணக்கில!

நொடிதொறும் நொடிதொறும் மனிதத்தொகைதான்
கொடுநஞ் செனவே கூடிப் பெருகுது
வறுமையும் நோயும் வளர்ந்து பெருகுது
சிறுமைத் தனமோ செழித்துப் பெருகுது

நாட்டு வளத்தைப் பெருக்கித் துயரை
ஓட்டி விரட்ட ஒரு திட்ட மேனும்
கோட்டை யிலிருந்து கொடிபிடித் தாளும்
கூட்டத் தவரே, கொண்டுவந் தீரா?

நாடு நாடாய் ஓடி யிரந்து
கோடி கோடியாய்க் கடனை வாங்கி
வந்த ஆள்வோர் அந்தப் பணத்தால்
இந்தியைப் பரப்பவே எங்கும் முனைந்தார்!

தேசத்தைப் பிடித்த காச நோய்போல்
நீச இந்தியை நீளப் பரப்ப
அரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத்
வரிந்து கட்டிக் கொண்டுநிற் கின்றார்!

நாட்டவர் கருத்தைக் கேட்டறி யாமல்
இந்தியைப் புகுத்தோம் என்று மொழிந்த
நேருவின் உறுதியும் நிலைமாறிப் போச்சு
பிரசாத் ஆணையே பெரிதாகி விட்டது!

அறுபத் தைந்தாம் ஆண்டில் நாடெலாம்
துறை தொறும் இந்தி தொழிற்பட வேண்டுமாம்.
அரசிய லாரின் அலுவ லகத்தும்
நெறிவழங் குகின்ற நீதி மன்றத்தும்
பிறபிற துறையிலும் அறுபத் தைந்தில்
குறிக்கோள் மாறுது கொண்டு வந்தே
இந்தியை இருத்த வேண்டு மென்றே
அந்தத் தலைவர் ஆணையிட் டாரே !

வருத்தும் நோயைக் குறைக்க அறியான்
மருத்துவன் எனப்பெயர் பொறித்துக் கொண்டென,
குடிமக்கள் உள்ளத் துடிப்புண ராதவர்
குடியரசுத் தலைவராம் கொடுமை ! கொடுமை !

ஊர்வளம் பார்க்க உருகிய நாடு
சேர்ந்திரே அரசியல் தெரிந்து கொண்டீரா ?

மக்கள் விரும்பி மதியா மொழியை
மிக்க வண்மையாய் மேன்மேற் றிணிக்கும்
பழக்கம் அங்கே பார்த்த துண்டா ?
கிளர்த்து வீரே ! கீழ்மனத் தோரே !

துஞ்சுபுலி இடறிய குருடன் போலே
வஞ்சகரின் இந்தியொடு வந்து விழுந்தார்
அஞ்சாப் புலியனைய செந்தமிழர் நாட்டில்
வஞ்சகரின் மொழிபுக வழிகிடைத் திடுமோ?

நெஞ்சு கொதித்து நிற்கும் தமிழர்முன்
பஞ்சாய்ப் பறக்கும் பாதகர் இந்தியே !
வெஞ்சமர்க் கெழுந்த வீரத் தமிழர் முன்
அஞ்சி யொழியும் அறிவிலார் இந்தியே !

# இந்த உயிரென்ன பெரிதா?

(ஆனந்தக் களிப்பு மெட்டு)

நேற்றுப் பிறந்திட்ட தென்றே — கற்றோர்
நிந்தித் திடுமோர் இந்தியின் நிலையைச்
சாற்றத் துணிந் திட்டேன் கேளீர் — நமக்குச்
சஞ்சலம் தருமந்த வஞ்சக மொழியே !

இந்தியக் கண்டத்தில் எங்கோ — மூலை
இருட்டில் கிடக்கின்ற குருட்டுக் கிழவி
இந்தி மொழியென்று சொன்னால் — அதில்
எள்ளள வேனும் தள்ளுதற் கில்லை !

வள்ளுவர் குறள்போல் ஒரு நூல் — அந்த
வளமற்ற இந்தியில் உளதென்று சொன்னால்
உள்ளத்தில் வேற்றுமை யின்றி — நாம்
ஒன்றாகச் சேர்ந்ததை நன்றாகக் கற்போம் !

தொன்மைச் சிறப்பில்லை எனினும் — புதிதாய்த்
தோன்றிய இலக்கியச் சான்றுக ளுண்டா ?
தன்மை சிறிதேனும் இன்றி — அதை
நாட்டில் புகுத்துதல் கேட்டினை விளைக்கும் !

இந்தி மொழியாளர் வாழும் — அந்த
இடமெல்லாம் நன்றாகக் கொடிகட்டி விடட்டும்
செந்தமிழ் நாட்டினில் இங்கே — ஆட்சி
செலுத்த நினைத்திட்டால் வலுத்தானே குறையும் !

புகைவண்டி நிலையங்கள் எல்லாம் — இந்தி
புகுந்ததும் தமிழர்கள் வெகுண்டெழ வில்லை
மிகையாக அஞ்சல் துறையில் — இந்தி
மேன்மேலும் வந்தது நாமெழ வில்லை.

பள்ளிக் கூடத்தி லெல்லாம் — விருப்பப்
பாடமென் றதனைக் கூடவே சேர்த்தார்
துள்ளிப் போர்க் கெழ வில்லை — அதைத்
தொலைத்திட அன்றே தலைப்பட வில்லை !

ஆட்சி மொழி யென்று சொன்னார் — தமிழர்
ஆர்ப்பரித் தெழுந்து போர்ப்படை திரட்டி
வீழ்ச்சிப் படுத்திட வில்லை — அன்றே
விழிப்புற் றெழவில்லை மொழிப்பற் றுடையோர் !

துறைதொறும் துறைதொறும் இந்தி — இனித்
துரைத்தனம் சீராய் நடத்திடு மென்றே
அறிக்கை பிறப்பித்து விட்டார் — மைய
ஆட்சித் தலைவரினி மீட்சியு முண்டோ ?

நொந்த உளத்தினில் வேலை — மீட்டும்
நுழைத்திடல் போலிந்தி நுழைத்திட வந்தார்
இந்த உயிரென்ன பெரிதா ? — தமிழா
இன்றே எழுச்சிகொள் இன்றமிழ் காப்பாய் !

இந்தி நூல்களை எரிப்போம் — நம்
எண்ணக் கொதிப்பினைக் கண்ணுக் கெதிராய்
அந்தத் திணிப்பர் அறியப் — போர்
அணி கொண்டு நெஞ்சத் துணிவோடு நிற்போம் !

இந்திப் பெயர்களை அழிப்போம் — நம்
இதயக் குமுறலைச் சதிகார ருள்ளம்
சிந்தித் தறிந்திடச் செய்வோம் — எங்கள்
சீற்றத்தின் முன் இந்தி தோற்றோடு மென்போம் !

அமைச்சர்கள் இல்லத்தின் முன்னே — இந்தி
அழகான தமிழ்நாட்டில் நுழையாமல் செய்வீர்
எனச் சொல்லி முழக்க மிடுவோம் ! — இந்தி
எடுபடும் வரையிலே அடங்கிட மாட்டோம் !

அஞ்ச லகத்தினி லெல்லாம் — நாம்
அணியணி யாகத் துணிவோடு சென்று
கொஞ்சமு மிந்திக் கிங்கே — இடம்
கொடுக்கக் கூடாதென்று முழக்க மிடுவோம்

சட்ட சபையிலும் இந்தி — தன்னைத்
தடுத்திடுஞ் சட்டம் கொடுத்திடு மென்று
கொட்டி முழக்க மிடுவோம் — நாம்
கொண்ட கொள்கை புரண்டிட மாட்டோம் !

இந்தி எடுபட்ட தென்ற — அந்த
இன்பச் செய்திதான் தென்படும் வரையில்
குந்தி யிருந்திட மாட்டோம் — நாம்
குரலைத் தளர்த்திப் பிரியவும் மாட்டோம் !

துப்பாக்கி கொண்டு வந்தே — நம்மைத்
தொலைத்திடச் சுட்டாலும் சளைத்திட மாட்டோம்
சிப்பாய்த் தடிகளினாலே — மண்டை
சிதற அடித் தாலும் பதறிட மாட்டோம் !

தலைமை பெற்றோரைப் பிடித்துச் — சிறையில்
தள்ளிவிட் டாலும்நாம் துள்ளி யெழுவோம்
குலையை நடுக்கும் கொடுமை — செயினும்
கோழைக ளாகநாம் மாறிட மாட்டோம் !

கண்ணியம் கடமை தவறோம் — கொண்ட
கட்டுப் பாட்டையும் விட்டிட மாட்டோம்
எண்ணிய எண்ணம் முடிக்க — நன்மை
இல்லாத வழிகளிற் செல்லவு மாட்டோம் !

மொழிப் பற்றுக் கொண்ட வீரர் — நம்
முழக்கத்தின் முன்னந்தக் குழப்பத்தை விளைக்கும்
செழிப்பற்ற இந்தி ஒழியும் ! — அன்றேல்
செந்தமிழ் நாடே யொழிந்திட வேண்டும் !

முழக்குக ! முழக்குக ! தமிழா !—இந்தி
மொழிகொண்டு வந்தாரை விழிகொண்டே எரிப்பாய் !
முழக்குக ! முழக்குக ! தமிழா ! — இந்தி
மொழிபோகும் இன்றேல்எம் உயிர்போகும் என்றே !

உயிரோட்டம் உள்ள வரைக்கும் — உடலில்
ஒருசொட்டு இரத்தம் இருக்கின்ற வரைக்கும்
திமிராட்டம் போடும் இந்தி — எங்கள்
தென்னாட்டில் வாலாட்ட மாட்டாமல் செய்வோம்!

முழக்குக ! முழக்குக ! தமிழா ! — இந்தி
மொழிக்கிங்கே இடமில்லை ! விழிப்புற்று விட்டோம் !
முழக்குக! முழக்குக ?தமிழா! — தமிழ்
மொழிவாழ்க ! இன்பத் தமிழ்வாழ்க ! நன்றே ;

# அன்றும் அடிமையடா — நீ இன்றும் அடிமையடா.

ஓர் இந்தி மொழிக் காரன் ஒரு தமிழனைப் பார்த்து இவ்வாறு பழிக்கிறான்:

அடிமைப் படப் பிறந்தாய் — உனக்கு
ஆள்கின்ற நினைப் போடா?
குடியர சாட்சியிலே — உனக்குக்
கூடப் பங்கோடா?

ஆங்கிலத்தைப் படித்தே — நல்ல
அடிமை யாகிவிட்டாய்
தீங்குளதோ மேலும் — இந்தி
தெரிந்து கொண்டு விட்டால்?

அன்றும் அடிமை யடா — நீ
ஆங்கில வெள்ளையர்க்கே!
இன்றும் அடிமை யடா — நீ
இந்தி மொழியினர்க்கே!

மான முனக் கிருந்தால் — இந்தி
வருமுன்னே தடுத்திருப்பாய்!
ஈனத் தமிழா நீ — இன்று
என்ன செய்திடு வாய்?

ஆட்சி அதிகாரம் — படை
ஆதிக்க முனக் குண்டா?
சூழ்ச்சி தவிர்ப்பதற்கும் — உனக்குச்
சொந்த அறிவுண்டோடா?

ஒழிக இந்தி யென்றே — நீ
உரக்கக் கூச்சலிட்டாய்!
ஒழிந்து போய் விடுமா? — சட்டம்
உன் கையில் உள்ளது வா?

தில்லியில் இருப்பவரே — எங்கள்
தெய்வ மெனத் தொழுதாய்
சொல் வது கேட்டிடுவாய் — உனக்குச்
சொந்த மொழி வேண்டாம்!

இந்தி படித் திடுவாய் — 'நான்
இந்தியன்' என்று சொல்வாய்.
சொந்தத் தமிழ் மொழியை — குப்பையில்
தூக்கி எறிந்திடுவாய்!

தமிழைப் படித்தவர்க்கு — வேலை
தருமோ அரசாங்கம்?
இமைப் போதும் தாழ்க் காதே — இன்றே
இந்தி படித் திடுவாய்!

இந்தி தெரி யாதவர்க்கு — வேலை
இல்லை யென்ற சட்டம்
முந்தி வந்து விட்டதடா — தமிழ்
மூடனே அறிந்திடுவாய்!

எத்தனை தடவைகள் நீ — எங்கள்
இந்தியை எதிர்த்திடுவாய்?
ஒற்றுமை யற்றவனே! — வெறும்
உணர்ச்சி என்ன செய்யும்?

சமத்துவம் பேசிக் கொண்டே — கெட்ட
சாதி வெறி வளர்ப்பாய்
தமிழ்த் தாய் மொழியிருக்க — ஆங்கிலம்
தன்னைப் புகழ்ந்திடுவாய்!

சொந்த மொழியிற் பாடம் — நீ
சொல்லிக் கொடுப்பாயா?
இந்தி மொழி வருதே! — அந்த
இடத்தைப் பிடித்துக் கொள்ள.

அன்னிய நாட்டுமொழி — யான
ஆங்கிலத்தைப் போற்றிடும் நீ
இந்தியப் பொது மொழியாய் — எங்கள்
இந்தியும் ஏற்றிடுவாய்!

தொன்மைத் தமிழ் மொழியை — வளர்க்கத்
துணிவு கெட்டவனே
இன்னும் ஆங்கிலத்தையே — நீ
ஏற்றிப் புகழுகின்ருய்!

ஆங்கில மோகத்துடனே — அடே
அடிமைத் தமிழ் மகனே
பாங்குள இந்தியையும் — உடனே
படித்துக் கொண்டிடுவாய்.

அண்டிப் பிழைக்க வந்தால் — இந்தி
அறியாதவனை நாம்
கண்டிப் பாய்த் தள்ளி வைப்போம் — இதைக்
கட்டாயம் புரிந்து கொள்வாய்!

மொழிப் பற்றுனக் கெதற்கோ? — போர்
முழக்கம் தானெதற்கோ?
விழிப்புற் றென்னசெய்வாய்? — அடிமை!
வீண் கூச்சல் தவிர்த் திடுவாய்!

ஆளவந்த எங்கள் — இருகால்
அடியைத் தொழுது நிற்கும்
மோழைத் தமிழ் மகனே — வாய்
மூடிக் கிட போடா!

கூச்ச விடுவாயேல் — நெஞ்சைக்
குண்டால் துளைத் திடுவோம்
வாய்ச் சம்பம் பேசி நின்றால் — சிறையிட்டு
வாட்டி வதக் கிடுவோம்.

ஊர்வலம் வந்துவிட்டால் — இந்தி
ஒழிந்து போய்விடுமா?
தேர்வலம் வந்தாலும் — இந்தி
திரும்பிப் போய் விடுமா?

அடிமைத் தமிழ் மகனே! — வீணே
ஆணவம் கொள்ளாதே!
குடியைக் கெடுக்காதே — இரத்தம்
கெட்டி மடியாதே !

இந்திய நாட்டிற்க்கெல்லாம் — எங்கள்
இந்தி பொது மொழியாம்
வந்த சட்டந் தன்னை — இனி
மாற்ற முடியாதே !

## இந்திக்காரன் தமிழ்நாட்டானிடம் கூறுவது

நாட்டைக் கூறு போட்டிட வேநீ
நாடினாய் ... எம்மைச் சாடினாய்!
கூட்டங்கள் கூட்டிக் கொள்கை விளக்கங்கள்
கூறினாய் ... சட்டம் மீறினாய்!

எல்லோரும் இந்தியர் என்ற கொள்கையை
எள்ளினாய் ... பகை யுள்ளினாய்!
இல்லாத தெல்லாம் சொல்லியே மக்களை
எழுப்பினாய் ... படை கிளப்பினாய்!

வடக்கு வளருது தெற்குத் தேயுதென
வைகிறாய் ... தீமை செய்கிறாய்!
அடக்கம் கொண்டாரை முடுக்கும் சொற்களைநீ
அடுக்கினாய் ... தொல்லை கொடுக்கிறாய்!

வரிப் பணத்தால் எங்கள் வடக்குக் கொழுப்பதாய்
வாதித்தாய் ... பகை போதித்தாய்!
உரிக்காமல் தோலை விட்டதனால் உண்மைகள்
உரைக்கிறாய் ... மிக விரைக்கிறாய்!

இந்தித் திணிப்பை எதிர்த்துப் படைகிளப்பி
ஏவினாய் ... மிகக் கூவினாய்!
சொந்தத் தமிழில் மக்களுக் குணர்ச்சியை
ஊட்டினாய் ... ஒன்று கூட்டினாய்!

வெஞ்சிறைக் குள்ளே உன்னைத் தள்ளியே
வீழ்த்துவோம் ... துயர் ஆழ்த்துவோம்!
மிஞ்சிய தொண்டர்கள் வெருண்டோடக் குண்டுகள்
வீசுவோம் ... எதற்கும் கூசிடோம்!

# தமிழன் இந்திக்காரனிடம் கூறும் பதில்

நெஞ்சிலே வஞ்சகம் நினைப்பவர் உறவின்
நீங்குவோம் எதையும் தாங்குவோம்!
கொஞ்சமும் நேசம் கொள்ளாதவர் நட்பிலே
கூடவோ துன்பம் தேடவோ?

ஆலையும் தொழிற் சாலையும் வடக்கே
ஆக்குவீர் நலம் தேக்குவீர்!
சேலையும் நெய்ய நூலையும் கொடாமலே
சீறுவீர் நியாயம் மீறுவீர்!

ஒற்றுமை ஒற்றுமை என்று சொல்லியே
ஓதுகின்றீர் உள்ளம் கொதிக்குதே!
உற்ற தமிழர்தாம் உம்கா லடிக் கீழ்
ஒழிவதோ சிக்கி அழிவதோ?

செந்தமிழ் நாட்டில் இந்தி புகுத்துதல்
சீர்மையோ என்ன நேர்மையோ?
சொந்த மொழியிற் பேசவும் உரிமை
கொடுக்கிலீர் இது அடுக்குமோ?

சிங்கத்தைக் கூட்டில் அடைத்தாலும் வீரம்
சிறுக்குமோ மனம் பொறுக்குமோ?
சங்கத் தமிழைக் காக்கத் துணிந்தவர்
சாய்வரோ பயந் தோய்வரோ?

குண்டுக்குப் பயந்து கொண்ட கொள்கையில்
குலைவுறோம் என்றும் கலைவுறோம்
அண்டிக் கெடுக்கும் இந்தியை ஓட்டாமல்
அயர்ந் திடோம் — எதற்கும் பயந்திடோம்!

# இந்திக்கு வழிகாட்டு

சிங்கக் குட்டியே! சிறுத்தைப் புலியே!
செந்தமிழ் நாட்டு வீரக் காளையே!

சிந்தனை என்னுமோர் தென்றல் வீசினால்
செந்தமிழ் நாட்டுச் சிறுமையும் பெருமையும்
மனக்கண் முன்னால் வந்திடக் காண்பாய்.
முதலில் உன் பெருமை முழுக்கச் சொல்வேன்
அதுகேட்டுத் தோள் பூரிப்பாய்! ஆனால்
சிறுமை கேட்ட நொடியிலேயே
சிறுத்தைப் புலியது சிறு வதைப்போல்
துடிதுடித்துக் கிளம்ப வேண்டும் தெரியுமா?

இமயத் துச்சியில் புலிக்கொடி பொறித்தவர்
குமுறி ஆரியப் படையினைக் கடந்தவர்
மனம் போன போக்கில் தமிழைப் பழித்த
கனக விஜயராம் ஆரியர் சுமக்க
இமயத்துக் கல்லைக் கங்கை நீராட்டிக்
குமரியில் சேர்க்கக் கொண்டு வந்தவர்
சேர சோழ பாண்டியர் அன்னார்
வீர மரபிற் பிறந்தவனே உன்
பாட்டன் காலத்துப் பெருமை எல்லாம்
கேட்டுக் கேட்டுப் பூரித்தாய் அல்லவா!
அந்தப் பெருமைக்கும் இந்தநாள் சிறுமைக்கும்
எடைபோட்டுப் பார் எத்தனை வேற்றுமை?

வெள்ளைக் காரனை வெளியேறச் சொல்லி
உள்ளே தாழ்ப்பாள் போட்டுக் கொண்டோம்.
வெற்றி பெற்றோம் விடுதலை யுற்றோம்
இதுதான் உண்மையென்று இசைபாடி னோயே

சந்தேக மில்லையென்று சதிராடி ஞயே
கொஞ்சம் மூலையில் குந்தி யிருந்து
நெஞ்சைத் தொட்டு நீ நினைத்துப் பாரப்பா.

அஞ்சாது தில்லியில் அரசாளு கின்றவர்
ஆணை யிடுகிருர் அனைத்திந்தி யாவிலும்
இந்தி மொழியே இருக்க வேண்டுமாம்
செந்தமிழ் நாட்டுச் சந்துபொந் தெல்லாம்
இந்திக்குப் பள்ளிகள் எழுப்பச் சொன்னுர்
அரசியல் மன்றம் அனைத்திலும் இந்தியே
உரைசெய வேண்டுமாம் உத்தர விட்டாரே

பேரொலி எழுப்பும் நீராவி வண்டி
நிற்கும் இடத்திலும் நெஞ்ச முவக்கக்
கற்கும் நூலிலும் கடித உறையிலும்
நாணயத் தாளிலும் இந்திப் பெயரே
காணு கின்ருேம் வேறு நாட்டார்
யாரும் வரினும் வரவேற் போரின்
சீருடை மொழியால் வரவேற் பளித்தல்
கூடா தென்ருர் இந்திதான் கூடுமாம்
வாடா திருக்குமோ வண்டமிழ் மொழியே

சங்கம் வளர்த்த தண்டமிழ் நாட்டில்
எங்கும் இந்தியை வளர்ப்ப தென்ருல்
செந்தமிழ் நாட்டுச் செல்வ மெல்லாம்
தேய்ந்து தேய்ந்து சல்லியா காதோ !

எழுத்தும் பேச்சும் இந்தியில் வந்தால்
பழுத்த செந்தமிழ்தான் பயனுடைத் தாமோ ?

கொம்பை நாடிடும் கொடிபோல் தீம்பால்
செம்பைத் தூக்கிச் சிற்றடி வைத்து

நடந்து வருந்தன் நாயகி யோடு
கிடந்து மகிழ்ந்தே இன்புறு வேளையில்
அன்பே அமுதே அழகே என்று நம்
இன்பத் தமிழில் இசைவதை நிறுத்தி
பியாரீ என்றும் பிரியே என்றும்
தியானம் இந்தியில் செய்கெனச் சட்டம்
ஆக்கினும் ஆக்குவர் அது வியப் பில்லையே !

தூக்கிய வாளென முறுக்கிய மீசை
இளைஞனே உன்றன் இரத்த நரம்புகள்
புடைக்க வில்லையா பொன்மலைத் தோள்கள்
துடிக்க வில்லையா தூய்தான நெஞ்சு
பொங்க வில்லையா போர்க்கொடி ஏந்துவாய்
சங்கத் தமிழை வளர்க்கத் துணிவாய்
வந்த வழியே திரும்பச் சொல்லி
இந்திக்கு வழிகாட்டு எழுந்திரு தோழனே !

## தாயும் பேயும்

தமிழெங்கள் தாயென்று போற்று ! — இன்பத்
தமிழைச் சிதைக்க வந்திடும் இந்தி
கெட்ட—பேயென்று தூற்று !

தமிழெங்கள் வாழ்வென்று மதிப்பாய் ! — இன்பத்
தமிழைக் கெடுக்க வந்திடும் இந்தி
வெறும்—தூளென்று மிதிப்பாய் !

தமிழெங்கள் அழகென்று கொள்ளு ! — இன்பத்
தமிழை யழிக்க வந்திடும் இந்தி
பொல்லாக்—கழுகென்று தள்ளு !

தமிழெங்கள் உயிரென்று பாடு ! — இன்பத்
தமிழை யொழிக்க வந்திடும் இந்தி
அற்பம் — இழிவென்று போடு !
[தமிழெங்கள் தாயென்று போற்று

தமிழுக்குப் புதுநூற்கள் சேர்ப்பாய் ! — இன்பத்
தமிழுக்குப் பகைநூற்கள் ஏதேனும் கண்டால்
நெருப்பிட்டுக் கொளுத்தியே தீர்ப்பாய் !

தமிழுக்குப் புகழ்சேர உழைப்பாய் ! — இன்பத்
தமிழுக்குப் பழிசேர்க்க முனைவாரைக் கண்டால்
கைக்கூலிப் பிறப்பென்றே பழிப்பாய் !

தமிழுக்கு நலஞ்சேர்க்கத் துடிப்பாய் !— இன்பத்
தமிழுக்குப் பிழைசெய்து வாழ்வாரைக் கண்டால்
தகாதென் றேதுரத்தி அடிப்பாய் !

தமிழுக்குத் தொண்டென்றும் செய்வாய் ! — இன்பத்
தமிழுக்குக் கேட்டினை விளைத்திடும் பகைமேல்
அனல்கக்கும் குண்டென்று பாய்வாய் !
[தமிழுக்குப் புதுநூற்கள் சேர்ப்பாய்

# வெல்லத் தமிழ் காக்க வேங்கையெனப் போராடு!

போரென்ற முழக்கம் புறப்பட்ட தேனடி தோழி?
நேருவின் வாக்கு நிலைமாறிப் போனதால் தோழா!

தவறும் படிநேரு தந்தவாக் கென்னவோ தோழி?
எவர்மீதும் விருப்பின்றி இந்திதிணி யோமென்றே தோழா?

இந்தியைக் கட்டாயம் இன்றேன் திணித்தாரோ தோழி?
அந்தக் குடித்தலைவர் இராசேந்திரர் ஆணைதான் தோழா!

கட்டளை யிட்டவர் கருத்துத்தான் என்னேடி தோழி?
சட்டத்தால் எண்ணத்தைச் சாதிக்க லாமென்றே தோழா!

எண்ணத்தில் என்னதான் எண்ணி யிருக்கின்றார் தோழி?
உண்மையில் இந்திக் குயர்வு தருமெண்ணம் தோழா!

இந்தி உயர்வானால் ஏற்படும் தீதென்ன தோழி?
செந்தமிழ் நலிந்து சிதைந்திடும் காணென்றான் தோழா?

ஒன்று வளர்ந்தால் ஒன்று தளருமோ தோழி?
கன்றொன்று மேய்ந்தால் களத்துப் பயிரென்னும் தோழா?

ஆங்கிலத் தால்தமிழ் அழிந்து போனதோ தோழி?
தீங்குகள் ஆயிரம் செவிமடுப் பாயென்றான் தோழா!

அறிவுக் கலையெல்லாம் ஆங்கிலத் துண்டேடி தோழி?
குறைந்தது தமிழென்றால் ஆங்கிலங் கொண்டதால் தோழா!

விஞ்ஞான நூலுக்கு வேண்டுமே ஆங்கிலம் தோழி!
எஞ்ஞான மானாலும் எளிதாகும் தமிழாலே தோழா!

கலைச்சொற்கள் தமிழிலே காண முடியுமோ தோழி?
தலைப் பட்டால் எத்தையும் தமிழிலே யாக்கலாம் தோழா!

அயலார் மொழியென்றால் ஆத்திரம் ஏன்கொண்டாய் தோழி?
அயலார் மொழி நம்மை அடிமைப் படுத்தலால் தோழா!

முன்னேற முடியாமல் முத்தமிழ் நின்றதேன் தோழி?
அன்னிய மொழிகளின் ஆதிக்கம் ஓங்கியதால் தோழா!

அன்னிய மொழியான ஆங்கிலம் போய்விட்டால் தோழி?
இன்று புதிதாக இந்தி நுழையுதே தோழா!

ஒற்றுமை இந்தியால் உண்டாகும் என்கிறார் தோழி?
மற்றவர் உணர்ச்சியை மதியாதார் கூற்றிது தோழா!

உறவுக் கொருமொழி உண்மையில் வேண்டாமோ தோழி?
வெறிகாரர் கட்டாய உறவை விரும்பாதே தோழா!

வெறிகாரர் என்றுநீ விளம்புவ தேனோடி தோழி?
நெறியற்ற முறைகளில் நீசத் தனம்புரிந்தார் தோழா!

நீசத் தனமென்ன நிகழ்ந்தது சொல்லேடி தோழி?
பேசினால் இந்தியில் பேசென்று கல்லெறிந்தார் தோழா!

தாய்மொழி பேசாரைத் தண்டித்தல் தவறோடி தோழி?
போய்ப்பேசி நின்றோர்க்குப் புரியாத மொழியது தோழா!

இப்போதே வெறியாட்டம் இத்தனை என்றிட்டால் தோழி?
தப்பாமல் பின்னாலே சர்வாதி காரந்தான் தோழா?

இந்தி வெறியாளர் எண்ணம் நிறைவானால் தோழி?
செந்தமிழ் ஓங்கச் சிறிதும் இடமில்லை தோழா!

வெறிப்போக்கைத் தடுக்கும் விதமென்ன சொல்லடி தோழி?
நெறியாகப் போராடி நிறுத்துதல் காணென்றன் தோழா!

அடக்கு முறையை அவிழ்த்து விடுவாரே தோழி?
துடிக்கு முணர்ச்சிக்குத் துன்பம் பெரிதில்லை தோழா!

சீறி யெழுவோரைச் சிறையில் அடைப்பாரே தோழி?
ஊறிப் பெருகும் உணர்ச்சியைத் தடுப்பாரோ தோழா!

குண்டும் தடியடியும் மண்டை பிளக்குமே தோழி?
தண்டமிழைக் காப்போர்க்குக் குண்டு மலர்ச்செண்டு தோழா!

கையிழந்து காலிழந்து கவலைப் படநேரும் தோழி?
மெய்யிழந்து போனாலும் மேன்மைத் தமிழ்சிறக்கும் தோழா!

உயிர்ச் சேதம் கூட உண்டாகக் கூடுமடி தோழி!
உயர் தமிழைக் காப்போர்க் குயிரும் பெரிதல்ல தோழா!

பண்டைத் தமிழ்வீரர் பண்பை எனக்களித்தாய் தோழி!
வண்ணத் தமிழ்காக்க வாழ்வைப் பயன்படுத்து தோழா!

சொல்லில் உணர்ச்சியினைத் தோய்த்துத் தருகின்றாய் தோழி!
வெல்லத் தமிழ்காக்க வேங்கையெனப் போராடு தோழா!

இந்திப் பகையொழிக்க இதயம் துடித்ததடி தோழி!
சொந்தத் தமிழ்காக்கத் துள்ளிப் புறப்படுவாய் தோழா!

அண்ணா குரல்கேட்டே ஆர்த்தெழுந்து விட்டேனடி தோழி!
பண்ணார் தமிழ்காக்கப் பாய்ந்து புறப்படுவாய் தோழா!

போர் முழக்கம் கேட்டவுடன் புத்துணர்ச்சி
கொண்டு விட்டேன் தோழி!
வீரத் தமிழ்காக்க விரைந்து புறப்படுவாய் தோழா!

புல்லர்களின் இந்திமொழி போக்கித் தமிழ் காப்பேன் தோழி!
வெல்க தமிழ்! வெல்க தமிழ்! வெற்றி பெறுக நீ தோழா!

வெறியாளர் இந்திமொழி வீழ்த்தித் தமிழ் காப்பேன் தோழி!
அறிவாளர் தமிழ் வாழ்க! அழியாத புகழோங்க! தோழா!

சனியான இந்திமொழி சாய்த்துத் தமிழ் காப்பேன் தோழி!
இனிதான தமிழ் வாழ்க! இசையோடு நீவெல்க! தோழா!

# பிற மொழி

கோயிலிலே பிறமொழியில் வணக்கமது கூறுகின்ற
தீயவொரு வழக்கமிந்தத் தமிழ்வழங்கும் திருநிலத்தில்
ஆயதன்றி வேறினத்தார் நாடுகளில் ஆட்சி செய்து
மேயதனைப் பார்த்ததில்லை எனமொழிவள் மேதினித்தாய்!

இனியதுவாய் இருக்கிறதீந் தமிழ்மொழியில் இசையேயில்லை
எனமொழியும் சூழ்ச்சிதனைப் போய்மொழிவ தெவரிடத்தில்?
மனமெனவொன் றிருக்கிறதோ? அலதவர்தாம் மாசுமிக்க
இனப்பகையால் தமிழழிக்கும் கொடுஞ்செயலில்
இறங்கினரோ?

அரசியற்குப் பிறமொழியை ஆதரித்தல் அடிமை யுள்ளம்
இரப்பதனைப் போலு மன்றோ? தமிழகத்தின் இளைஞர்
காள் நும்
திருவுளத்தில் இருக்குமெனில் இதுகருத்தைத் தீய்த்து விட்டிங்
கரியணையில் தமிழணங்கை உயர்த்திமகிழ் வடைவிர் நீரே!

பிறமொழியைக் கற்பதனால் அடிமையுளம் பெறுவ துண்டாம்
பிறமொழியை மக்களெலாம் கற்கவெனப் பேசு கின்றார்
சிறகொடித்துப் புதுச்சிறகு கொள்கவெனச் செப்பி, மக்கள்
திறமையெலாம் பறித்துப்போம் கொடியமனத் தீய ராமே!

பிறமொழியில் இலக்கியங்கள் கற்றவையே பெரிதென்
றெண்ணிச்
சிறப்பிலையே தாய்மொழியில் எனமொழியும் தீயரெல்லாம்
திறமையிலாப் பேடிகளாம்! அயல் மொழியாம் தீயில்வீழ்ந்த
விறகுகளாம்! குப்பைகளாம்! எனச்சினந்து விளம்புவேனே!

# எங்கள் நாடு

ஆரமுதாம் செந்தமிழே அன்னையெனக் கொண்டு
அந்தமிழே வாழ்கவென ஒலிமுழக்கித் தொண்டு
சேர வுழைத் தெதிர்வருமோர் இந்திமுத லான
செயலற்ற வட மொழிகள் புதைகுழியே காண
ஆருயிரே போமெனினும் அச்சமதை நீத்தே
ஆர்வத்தால் துடித்தெழுந்து செந்தமிழைக் காத்த
வீரதால முத்துநட ராசர் முத லானோர்
விளங்கிய செந்தமிழ் நாடெங்கள் நாடே!

செந்தமிழை இகழ்ந்தவனைச் சேர்ந் தெதிர்த்துக் கொல்வோம்
சிறிதளவும் அயராமல் உடன் சென்று வெல்வோம்
என்றுமொழிந் திழிகனக விசயரெனும் பித்தர்
எங்கள் தமிழ்க் கண்ணகிக்குச் சிலைசுமக்க வைத்துச்
சந்தி தெருச் சிரிக்கவைத்த திறனுடையான் சேரன்
சளையாமல் வடமலையில் புலிபொறித்த சோழன்
முந்தி தமிழ் காத்த பெரும் பாண்டியனார் ஆட்சி
முறை கண்ட செந்தமிழ் நாடெங்கள் நாடே!

அறப்பெரியார் ஈவேரா சொல்லாட்சி கண்டு
ஆர்வமுடன் தன்மான உரிமை எண்ணங் கொண்டு
மறத்தமிழர் அண்ணாவே தளபதியாய் இன்று
மாண்புடனே அணிவகுக்கப் படையினராய் நின்று
திறற்கவிஞன் கனகசுப்பு ரத்தினத்தின் பாட்டைத்
தெரு வெல்லாம் முழக்கிவந்து சூழ்ச்சியினால் கேட்டை
உறப்புரிவார் வாலொடுக்கி ஓடிடவே கண்டு
உளமகிழும் செந்தமிழ் நாடெங்கள் நாடே!

# பகலவன் வரவு

பகலவன் வரவு பார்த்துப்
பனியனு மகன்று போகப்
புகலிடம் அறியா தங்குப்
பொசுங்கினன் இரவு மன்னன்!
அகன்றனர் பகைவ ரென்று
மேகத்தின் அரச னிங்குத்
திகழ்ந்திடும் காட்சி தன்னைக்
காணநீ வாராய் தம்பி!

பச்சைநல் லாடை பூண்டு
பனித்துளி வயிரம் கோத்த
கச்சையை யணிந்தி ருந்த
கண்ணகல் ஞால மங்கை,
இச்சையைக் காட்டி யந்த
எழுங் கதிர் அழகிற் பட்டுக்
கச்சையை யிழந்த காட்சி
காணநீ வாராய் தம்பி!

வருகவே எங்கள் வீட்டுள்
வந்துநின் ஒளியை எற்குத்
தருகவே தருக வென்று
தரைதனில் நீர் தெளித்துப்,
பெருகிய குப்பை நீக்கிப்
பெண்களும் கோல மிட்டு
வருகிற கதிரை யேற்றல்
வந்துநீ பாராய் தம்பி!

செங்கதிர் வரவு நோக்கிச்
    செவ்விதழ் கூப்பி நின்ற
மங்கைநற் பங்க யத்தாள்
    மலர்முகம் திறந்து காட்டி
அங்கவன் கதிரை வீச
    ஆவலாய்த் தழுவிக் கொள்ளும்
மங்கலம் பொலியும் காட்சி
    வந்து நீ பாராய் தம்பி!

இருளினைக் கடந்து வந்த
    இளங்கதிர் பரப்பும் வெய்யோன்
வரவினைக் கண்ட தண்ணீர்
    வாழ்த்துமா றலைக்கை நீட்டிக்
குரலினை யுயர்த்தி யுள்ளம்
    குளிரவே பாட்டுப் பாடி
வரவினை யேற்கும் காட்சி
    வந்துநீ பாராய் தம்பி!

வானத்தில் எழுந்த பந்தின்
    வரவினை வண்டி னங்கள்
தாம் கண்டு கொண்ட தாலே
    தலை சுற்றத் தேன் குடித்தே
ஏனென்று கேட்ப தற்கோ
    எவருமிங் கில்லை யென்று
தேனூறும் தமிழி சைத்துத்
    திரிவதைப் பாராய் தம்பி !

கதிரவன் வரவு கண்டு
    காரிருள் போன பின்னர்
உதிர்ந்திடா வெண்முத் தென்ன
    ஒளிரும்விண் மீன்களெல்லாம்

மதிக்கவே செய்யா ரிந்த
மான்விழிப் பெண்க ளொன்றே
அதிர்ந்துபோய் ஒளியும் காட்சி
அதிசயம் பாராய் தம்பி !

இருளிலே கிடந்து வாடி
இருந்தஇச் செடிகள் எல்லாம்
வருந்துமோர் ஏழ்மை யாளன்
வாடிய முகந்தன் முன்னர்
பொருள் மிகக் கண்ட போது
பூரிக்கும் எழில் நிகர்க்கும்
திருவினை விளக்கும் பூக்கள்
திகழ் வித்தல் பாராய் தம்பி !

## தாமரைக் குமரி

காதலன் வந்த களிப்பில் தனது
கைகளை விரித்துக் கதிரைத் தழுவி
முகமிக மலர்ந்து முத்தமும் வாங்கி
அகமிகக் குளிர்வள் அரசிளங் குமரியே !

## வண்டுக் காதல்

மாலை நேரம் சோலைப் பக்கம்
போனே னங்கே பொன்வண் டொன்று
காதலி பூவைக் கட்டித் தழுவி
அவள்தன் வாயின் அமுதம் பருகி
முத்த மிட்டுச் சித்தம் நீங்கி
இருந்த எழிலை என்னென் பேனே !

# மழை

ஒளிர் வெயில் மறைந்திருந்த
　　ஒருபோதிற் காட்டுப் பக்கம்
குளிர் தரும் காற்று வந்து
　　குப் பென்று வீசி நிற்க,
விழுந்தது மழையின் தூற்றல்
　　விண்ணெலாம் ஆர வாரம்
எழுந்தது மேகம் மின்னி
　　இடித்தது சிங்கம் என்ன !

வையத்திற் கமுத மாக
　　வந்திடும் மழையைக் கண்டு
செய்யதம் உள்ள மாரச்
　　செடிகளும் கொடிகள் மற்றும்,
வெய்யவன் கொடுமை மாற்ற
　　விளங்கிடும் மரங்கள் தாமும்,
கையெனத் தளிர்கள் நீட்டிக்
　　களித்திடும் சீர்த்தி யென்னே !

மண்ணிலே புதைந்தி ருந்தோம்
　　மற்றுநின் வரவு கண்டோம்,
எண்ணிலா மகிழ்வ டைந்தோம்.
　　இனிது நீ வாழ்க வென்று,
வெண்ணிலா வரவு கண்டு
　　விரியுமோர் அல்லி போன்று
தண்ணீரில் தவளை யெல்லாம்
　　தாளப்பாட் டிசைத்த வம்மா !

வயற்புறம் உழவர் வந்து
வானத்தைப் பார்த்து நின்றார்,
செயற்கரும் பணியே யாய
செந்நெலை விளைக்கும் ஆற்றல்
புயங்களில் உள்ள தாலே
பூரித்து நின்றார், பின்னர்,
வயலினை உழச் சென் றார்கள் !
வாழிய உழவர்! செந்நெல் !

மழை சொட்ட நனைந்து போன
மதிகெட்ட ஒருகு ரங்கு
குளத்து நீர் மொண்டு யாரோ
கொட்டினா ரென நினைத்தே,
உளங் கொண்ட சினத்தை யெல்லாம்
உணர்த்திட நீரை மொண்டு
மளமளவென் றிறைத்த காட்சி
மதிக் கொரு நகை விருந்தாம் !

வானைச்சார் மேக மெல்லாம்
வலிமிகும் யானைக் கூட்டம்
யானைகள் ஒன்றை யொன்று
அழித்தன மோதி மோதித்
தேனைப்போல் இனிய சொல்லாய்
திகழ்ந்தன தந்த மாக
மீனைப் போல் ஒளிரும் உன்கண்
கவர்ந்திடும் மின்னல் கண்டாய் !

விழுந்திடும் மழையி னாலே
வீதியில் ஓடும் நீரில்,
எழுந்திடும் கொப்பு ளங்கள்
இன்முத்துச் சிப்பி யொக்கும்.

அழிந்திடும் அலைவயே பின்னர்
 அவ்விடம் வேறு தோன்றக்
குழந்தைகள் வியந்து பார்த்துக்
 கொட்டுமம் மழையில் நிற்கும் !

விலையிலா நெல் விளைத்தே
 விளையாடச் சிறுவர்க் கெல்லாம்
அலைநிலாம் ஆறென் றாக்கி
 அழகிய வீதி சேர்த்தே
உலகெலாம் தழையச் செய்தும்
 உணர்ச்சியோ டெழுச்சி தந்தும்
அளவிலாப் பணிக ளாக்கி
 யளித்திடும் மழைக்கெம் வாழ்த்தே !

## பரிதி வரவு

பொல்லாங்கு தீர்க்கப்
 புறப்பட்டுத் தொண்டாற்றும்
நல்லாரைப் போல் வந்தான்
 நற்பரிதி ! — புல்லும்
தலைநிமிரும்! பூச்சிரிக்கும் !
 தற்சூழ் இருட்டு
வலையறுத்துப் பூரிக்கும் வான் !

# அழகு மழை

கழுவித் தெருவை தூய்தாக்கிக்
கழனி வாழ்வைப் புதிதாக்கிப்
பொழியும் அழகு மழையேநீ
புவிக்குத் தீமை புரியாயே !

பளிங்குப் பாறைத் துகள்போலே
பஞ்சு வட்டத் துளியாகி
இறங்கி வருமுன் எழில்காண
என்றன் ஆசை என்னென்பேன்

மேலே இறைவன் இருந்திந்த
மேதினி ஆளும் உண்மைசொல
நீல வானத் திருந்திங்கே
நீயும் வந்து விழுகின்றாய் !

நல்லார் பொல்லார் எல்லார்க்கும்
நண்ணி நெருங்கும் அவனென்றே
மெல்ல மெல்லக் கீழ்வீழ்ந்தே
மேவி வருவாய் மழையே நீ

பெரிய கோளப் புவியின்மேல்
பெய்யும் மழையே நீயிறைவன்
உரிய அன்பை எனக்குத்தான்
உணர்த்து வதனைக் காண்கின்றேன்

இருளில் பொழியும் மழையேநீ
இந்தப் புவியில் ஒளிவெள்ளம்
திரளும் போது தூய்தாகத்
தெரியக் காட்டல் தெளிகின்றேன்

சன்னல் கதவின் மேலேநீ
சாய்ந்தடிக்கும் போதினிலும்
ஒன்றி நடத்தல் விழைகின்றேன்
உன்னில் இறைவ னேடிங்கே

வீழும் மழையில் புத்துணர்வு
விளைக்கும் நீரை அருள்கின்றாய்
வாழி இறைவா வாழியநீ
வாழி அருளின் தலைவாநீ

(லாராபாய்டு அம்மையார் எழுதிய ஆங்கிலக் கவிதை)

# அவிழ்ந்த கூந்தல்

பாலொளி வீசும் இரவினிலே — ஒரு
பக்கத்து மேடையில் போயமர்ந்தேன்
காலினைப் போலொரு மேகத்துள்ளே — மதி
கலந்து மறைந்தது கண்டிருந்தேன்

மேலும் ஒளிவிடும் மீன்சிலதை — அந்த
மேகம் மறைத்தது கண்டவுடன்,
''சால ஒளிவிடும் வைரங்களை — உன்
சால்வையிற் கோத்துள வானரசி,

கோல அழகுடை அன்னவற்றை — உன்
கூந்தல் மறைப்பது காண்கிலையோ ?
பாலினைப் போலொளிர் மேனிதன்னை — அவை
பழுப்புறச் செய்வ தறிகிலையோ ?

பேசடி !'' என்று நான் சொன்னவுடன் — அவள்
பெரிதாய் இடித்து முழக்கிநின்று
மாசடைக் கூந்தல் அவிழ்த்துவிட்டாள் ! — நான்
மழையில் நனைந்து திரும்பி விட்டேன்

# தூது

[நடுராத் திரியில் நாரை யொன்று
விழித்தே எழுந்து வெளியைப் பார்க்க
நிலவின் அழகில் நெஞ்சம் நீந்தக்
களிப்புடன் சிறகை விரித்துப் பறக்கவும்
அதனை நோக்கித் தாமரை சொல்லும்]

''நிலவின் ஒளியில் நீந்திச் செல்லும்
நாராய் நாராய் அழகிய நாராய்
என் சொல் யாவும் கேட்டுப் போவாய்
பகலவ னிருக்கும் பட்டணம் போனல்
பகர்வா யவனிடம் ''பகலவா அந்தப்
பருவப் பெண்உன் மருவற் கிழத்தி
பங்கய மங்கை சங்கதி யொன்று
கூறுவே னப்பா குறிப்பாய்க் கேள்நீ
நிலவின் ஒளியால் நெஞ்சம் எரிய
மதனன் அம்பு மார்பில் தைக்க
வாடையுங் குளிரும் நின் வரவின் நினைவும்
வாட்டி வதக்கிக் கூம்பச் செய்து
விட்டன'' என்று வேறெது மில்லையே !

# குறிப்புகள்

சருகுகள் ஆக்கும் ஒலிதன்னைச்
சற்றுக் கூர்ந்து கேளையா
உருகிடச் செய்யும் பண்ணொன்றில்
உலர்ந்த வாழ்வின் கதையுரைக்கும்!

எரியும் விறகில் எழும் ஒலியை
இருந்து சற்றுக் கேளையா
கரியும் வாழ்வின் நிலை தன்னைக்
கசந்து சொல்லும் இசையோடே!

ஆடிக் காற்றின் அலறலினை
அமைதி யாகக் கேளையா
ஓடிப் போகும் உயிரென்றே
ஓயா துரைத்துப் பறந்திடுமே!

குட்டிச் சுவர்கள், பாழ்மடங்கள்
கூறுங் கதைகள் எல்லாமே
வெட்டி வாழ்வின் நிலையாமை
விளக்கும் குறிப்புக ளாமன்றோ?

## மாறும் முடி

துயில்வது நீங்கிப் பயில்வது வேண்டி
மயிலின் மாதர் மஞ்சம் அகல
விடிந்தது விடிந்தது வீட்டில் இன்பம்
என்றெல் லோரும் இயம்பி யார்க்க
உறக்கம் என்னும் ஓர்நிலை யகற்றி
எழுச்சி யென்னும் இன்பம் பயக்கும்
செங்கோ லாட்சிச் செங்கதிர் வேற்கள்
எங்கும் பரப்பி இன்ப மார்க்கும்
'காலை' என்னும் கனிவு மிகுந்த
மன்னவர்க் கென்ன மாமுடி ஒன்றை
அன்பால் 'இயற்கை' யளித்தாள் கண்டீர்!

அன்பெனக் கல்லால் அடித்தது போல
இயற்கை யளித்த இக்கொடும் 'ஞாயிறு'
தலையில் வந்து தருக்கி யமரக்
காலை மன்னரும் கம்பி நீட்டினார்!

'நடுப்பகல்' அண்ணன் நடுங்கா வீரன்
''கொடுமுடி எங்கே கொடுத்துவிடுங்''கெனக்
கடுத்துக் கூறி எடுத்தே யணிந்தான்.

எடுத்தவ னணிந்த இருநா ழிகையில்
''சுட்டது போதும் விட்டுவி டென்னைக்
கொட்ட மடங்கிற் றித்தொடு போதும்''
என்று நடுங்கி யிறக்கினான் முடியை!

மேலைக் கோபுர வாயிற் காத்து
மலையில் வாழும் 'மாலை' மன்னன்
''மாமுடி எங்கே? தா, அடி இங்கே''
என்றுதன் காதலி 'இயற்கை யழகை'
விளித்து வேண்டி ஒளிமுடி வாங்கி
ஒளித்துக் கொண்டான் உயர்மலைப் பின்னே!

மலையில் ஒளித்த மாமுடி தன்னைக்
குளிர்புனல் சிந்தும் அருவியி லிட்டுத்
'தண்ணில' வாக்கித் தலையிற் சூடிக்
கடற்கரை வந்தான் காதல் அழகன்!

ஃ ஃ ஃ

இயற்கை யழகி இரவாய் மாற
அவளுட் கலந்தே யவன்மறைந் தானே!

# அழகு மங்கை

வாள்சுற்றிப் போர்செய்யும் பகைக்கஞ் சாத
வன்னெஞ்சப் போரேற்றின் தினவெ டுத்த
தோள்சுற்றும் வேகத்தில் துடிது டித்துத்
தோன்றியதோர் அழகுதனைக் கண்டேன்! அந்த
வாள்மின்னும் மின்னலிலும் கார்மே கம்போல்
வரும்யானைக் கூட்டத்தும், பவழம் போலத்
தூன்தூளாய்க் கதிரொளியில் மின்னும் ரத்தத்
தோய்வினிலும் சிரித்தவள்தான் தோன்றக் கண்டேன்!

வையத்தில் இருக்கின்ற பொருளி லெல்லாம்
வானத்தில் ஒளிர்கின்ற மீனி லெல்லாம்
தையலர்கள் மீனக்கண் ஒளியி லெல்லாம்
தானாகத் தோன்றியவள் கவிதை தந்து,
செய்யதிருப் பாக்களிலே நடம் புரிந்து
சிறுகுழந்தை புன்னகைப்பில் மின்னலாகிப்
பெய்திருக்கும் மழைநீரில் ஓடி வந்து
பெருமகிழ்வால் சிரித்தபடி பேசு கின்றாள்!

செந்நெல்லின் பச்சையிலே சேர்ந்து கொண்டாள்
சேற்றுக்குள் தாமரையாய் வளர்ந்து நின்றாள்
புன்னகையின் ஒளிதன்னைப் போர்த்துக் கொண்டாள்
பூரித்து நிற்கின்றாள் மாம் பழத்தில்!
அன்னத்தில் வெண்மைநிற மாகத் தோன்றி
அதுபடைத்த தளிர்வாழை தன்னிற் சேர்ந்து
சின்னக்கொவ் வைக்கனியிற் சிவந்து தோன்றிச்
செம்பவழந் தன்னிலவள் சிரிக்க லானாள்!

காலையிலே கடல்மீது தோன்று கின்ற
கதிரவனின் செவ்வொளியில் மிதந்து வந்தாள்
சாலையிலே நடுப்பகலில் மரத்தின் கீழே
சரிந்திருக்கும் நிழலிலே ஒட்டிக் கொண்டாள்.
மாலையிலே வானத்தின் செங்க ளத்தில்
வழிந்திருந்த குருதியிலே மின்னித் தோன்றிச்
சோலையிலே நிலவுவந்து பாலை யள்ளித்
தெளித்தவுடன் சிரித்துவிட்டாள் அழகு மங்கை!

வானத்து மீன்களிலே கண்சி மிட்டி
வருகவென அழைக்கின்றாள், அணுகும் போது
கானத்துத் தளிர்மேனி தழுவத் தந்து
காதலினை வளர்க்கின்றாள்! முல்லைப் பூவில்
நீமுத்தம் தாவென்று நெட்டு யிர்த்து
நெடுநாளாய் எதிர்பார்த்த செல்வத் தோடு
சீனத்துக் கப்பல்வரும் கடல் நுரையில்
சிரிக்கின்றாள் எக்களித்துக் குதிக்கின் றாளே!

தூரத்துப் பச்சையிலே காட்சி தந்தாள்
துள்ளிவரும் மான்முதுகில் புள்ளி யானாள்!
பூரித்துத் தோன்றுகிறாள் காலிக் கூட்டம்
புற்றரையில் மேய்கின்ற போது நெஞ்சம்
ஆரத்த ழுவுகின்றாள் தென்ற லாகி
அலையடித்து நுரை யெழுப்பிப் பாயும் ஆற்றின்
ஓரத்துக் கரைகளிலே மலர்ந் திருக்கும்
ஒளிவண்ணப் பூக்களிலே சிரிக்கின் றாளே!

# பாடுக வண்டே!

ஆடுக வண்டே! ஆடி ஆடிப்
பாடுக வண்டே! இன்பப் பண்ணில்
பாடுக காதற் பாட்டே!
இன்பக் கள்ளெனப்
பாடுக காதற் பாட்டே!

ஆடி யிறக்கை அடித்தடித்துந்
பாடிக் காற்றில் பறக்கும் வண்டே!
பாடுக காதற் பாட்டே!
உள்ளங் கனிவுறப்
பாடுக காதற் பாட்டே!

செம்மலர் உன்றன் சிறகடித்தல் கண்டு
விம்மிப் பூரித்து விரிக்கும் தன்னிதழ்
ஓடி யின்ப ஊற்றில் திளைத்துப்
பாடுக காதற் பாட்டே!
உள்ளங் களிப்புறப்
பாடுக காதற் பாட்டே!

விரிமலர் உன்றன் விழைவை யெழுப்பப்
பருவங் காட்டிநின் வரவுபார்த் திருக்கும்
உன்னிசை வுறுதல் உளங்கொண் டன்பால்
தன்னுடை நெகிழ்க்கும் தளிர்க்கும் உடலே!

ஓடிப் போவாய் உளம் உடல் ஒன்றிப்
பாடிப் புணர்ந்துபின் ஆடிக் காற்றில்
பாடுக காதற் பாட்டே!
இன்பம் ஓதிப்
பாடுக காதற் பாட்டே!

இன்னிசை யெழுப்பி நண்ணுவை யம்மலர்
தன்னோ டிணையும் தனிநேரத்தில்
பாடநீ மறப்பை பருவ மலரோ
கூடலைச் சுவைத்துப் பாடலை மறக்கும்!
ஆயினும் பின்னர் ஆடுவை! பாடுவை!
தூய்மலர் கசங்கித் தாயாய்ப் போகுமே!

தமிழிசை யேனும் செவிமடுப் போமென
மலருடல் தரையில் உலர்ந்த சருகாய்
விழுந்துபின் காற்றில் சுழன்று சுழன்றுனைத்
தேடி வருதல்பார்! தேனைத் தோன்றிப்
பாடிய நினக்குப் பரிசெனத் தன்னுயிர்
கலந்தவள் துன்பம் இன்னே களைந்திடப்
பாடுக காதற் பாட்டே!
காதல் கனிவுறப்
பாடுக காதற் பாட்டே!

# அழகான மயில்

அழகான மயிலொன்று
    ஆடுதுபார் நங்கையே!
அதோ பார்!

கண்ணைக் கவரும் வண்ணமடி—அது
    கால்பின்னி ஆட்டம் போடுதடி
எண்ணத்தில் மிகுந்த இன்பமே—அதை
    இப்படி யாட்டிப் படைக்குதடி!
அதோ பார்!

மேகத்தைக் கண்டு மயிலாடும்—போது
    மேனியெங்கும் விழி யாகும்
தோகையில் தான் எத்தனை வண்ணம்—நொடி
    தோறும் நெஞ்சிலின்பம் சேரும்!

பாட்டில் லாமல் அது ஆடும்—ஒரு
    பாதி தானடி குறைச்சல்
மீட்டிடு வாய் உன்றன் குரலை—மிக
    நன்ரு யிருக்குமடி நங்காய்!

காடும் மலையும் வானும்—தென்றல்
    காற்றில் மிதப்பது போலே
ஆகுமடி யுன்றன் பாட்டும்—மயில்
    ஆடும் அழகுமொன்று சேர்ந்தால்!

## வட்ட நிலா

வட்ட நிலா வட்ட நிலா
வானத்திலே பார்
பட்டப் பகல் போல் வெளிச்சம்
பரவுவதைப் பார்

உருட்டிவைத்த வெண்ணெய்தான்
ஓடியதோ வானில்
இருட்டையெல்லாம் விலக்கிவிட்டே
எழுந்ததுபார் ஆகா!

வாழ்வினிலே முன்னேற்றம்
காணவரு வார் போல்
சூழிருட்டைக் கிழித்து வரும்
முழு நிலவு பாராய்

தம்பிகையில் வைத்திருந்த
வெள்ளையப்பம் தானோ
எம்பிப் போய் உயரத்தில்
எழுந்ததுவே நிலவாய்.

வான் கடலில் மிதந்துவரும்
பனிக்கட்டி மலையோ
தேனிலவின் குளிர்ச்சியினைத்
தேர்ந்தறிந்து சொல்வாய்

தன்னந்தனி யாக அங்கே
தாங்கிடுவா ரின்றி
என்னமாய்த் தான் நிற்கிறதோ
என்றனக்குச் சொல்வாய்!

# தாமரை

அரியணைக் கேகி அரசியல் பற்றி
விரிவுற அமைச்சர்கள் விளம்பிய அனைத்தும்
கேட்கும் காலை 'வேட்கை' என்போன்
பூவனை யணுகிப் புகன்றனன் மாதோ!
''அரசே! அரசே! பூக்களின் அரசே!
விரைவில் என்றன் வேண்டுகோள் கேட்டு
மலரினத் தரச மங்கை யொருத்தியைத்
தருதல் வேண்டும், ஏனெனிற் புவியில்
'காதல்' என்னுமென் கண்மணி கோயிலில்
பொருதிய தொருபோர் புலவர்க் குள்ளே!
ஒருவர் மதிப்புடன் 'உரோசா தானும்
தூய அல்லிபோல் ஆயதில்' லென
ஒருவர் மறுப்பார் 'உண்மையில் இங்கே,
விருப்பம் கவர்ந்ததோ வெள்ளிய அல்லியும்?'
இவ்வா றெழுந்த இசைப்போர் தன்னைத்
தடுத்துடன் நிறுத்தத் தக்க விதத்தினில்
உரோசாப் பூவின் கவர்ச்சியும், அல்லியாள்
பெருமிதத் தோற்றமும் பிணைந்த ஒரு பூத்
தருமா றுன்னடி தன்னிற் பணிந்தேன்''
என்றதும் பூவன், ''எந்நிறத் தம்மலர்
இருத்தல் வேண்டும் விருப்பினைப் புகல்''லெனை,
''உரோசாச் செம்மை! ஓ! ஓ! வேண்டாம்
அல்லியின் வெண்மை! அதுவும் வேண்டாம்
இரண்டிலும் தரு''வென இணையடி தொழுதனன்
பூவனும் மகிழ்வாய்ப் புன்னகை தோய்தரும்
வாய்மலர் விரித்து, ''வருக, வருக,
கொள்க இம் மங்கையைக் கொள்க'' என்றே
பாவலர் இசைப் போர் பார்விட் டோடத்
தாமரை என்னும் மாமலர் தன்னைக்
கோமக ளென்னக் கொடுத்தன ளுமே!

—(ஆங்கிலக் கவி ஒன்றின் தழுவல்)

## தேனீ

மலர்அமு துறிஞ்சினை மகிழ்ந்தனை தேனீ
மற்றுநின் மகிழ்வினுற் பாடினை வாழி!

உலவினை மகிழ்வொடு ஊதினை விழவே
மகிழ்வினிற் பாடினை மனிதருக் கன்றே
மகிழ்வது மகிழ்வது வேண்டுவ தொன்றே
மகிழுங்காற் பாடுக மற்றவர் பற்றி
நினைப்பையேற் போகுமே மகிழ்வது வற்றி
மகிழ்வினைக் கெடுப்பவன் மாபெருந் தீயன்
மற்றவன் அன்பிலா மனமுடைப் பேயன்
வாழ்ந்திடக் கருதுவன் தானுமோர் பாழ்வில்
ஒடித்திடு வில்லெலாம் உலகினை வேறு
படுத்திடுந் தீமையைப் படுத்திடு நீறு.
குறப்பயல் தேன் கொள வருதலைப் பாரே
மறுத்தவன் தனைக்கொடுக்கால் கொட்டி வாவே!

# இயற்கை வழி

காலை மாலை வானத்தில்
　　கண்ட வண்ணம் பலவற்றில்
சேலை நெய்து மங்கைக்குச்
　　சிந்தை குளிரத் தந்தானே!

பச்சைக் கூந்தல் மரங்களிலே
　　பார்த்த பூவைப் பறித்துவந்து
இச்சைக் குரிய மங்கைக்கு
　　எண்ணங் களிக்கச் சூடினனே!

மலையின் முடியில் மாமதியின்
　　மாபே ரழகைக் கண்டவனும்
மூலையிற் சூடத் தக்கதுவாய்
　　முத்து வடத்தைக் கொணர்ந்தானே!

காலை வானின் பனிமுகத்தைக்
　　கண்டோ னுவந்து வெண்பொடியைச்
சேலை நிகர்க்கும் விழியுடையாள்
　　சித்தங் களிக்கக் கொடுத்தானே!

மலையின் இழியும் அருவிகளில்
　　மன்னும் அழகைக் கண்டவனும்
விலையில் வயிரத் தாலிதனை
　　விரும்பிக் கொடுத்தான் மங்கைக்கே!

வான வில்லின் அழகுதனை
வகுத்துப் பார்த்த அன்னவனும்
தேனின் இனிய மொழியாட்குத்
தேடித் தந்தான் மேகலையே!

இரவில் தோன்றும் விண்மீன்கள்
இயற்கை யழகில் ஈடுபட்டு
விரைவில் வயிரம் கொண்டுவந்து
வியப்புற மங்கைக் கழகுதந்தான்!

மனிதன் தோன்றிய நாள்முதலாய்
மன்னும் இயற்கை வழிச்சென்றான்.
தினமும் நமக்கு வழிகாட்டித்
திகழும் இயற்கை வாழியவே!

# பொதிய மலை

பாய்ந்து புலி ஓடும் மலை
பாம்பு நட மாடும் மலை
சாய்ந்து கதிர் வீழும் மலை
தமிழ் மணக்கும் பொதியமலை

காடு வளர்ந் தோங்கும் மலை
கரடி சிங்கம் வாழும் மலை
வேடுவர்கள் திரியும் மலை
விளங்கு தமிழ்ப் பொதிய மலை.

மேகம் வந்து சூழும் மலை
மின்னருவி பாயும் மலை
காகம் வந்து கரையும் மலை
கன்னித் தமிழ்ப் பொதிய மலை!

கனி மரங்கள் வளர்ந்த மலை
கட்டித் தேன் நிறைந்த மலை
பனி மலர்கள் மணக்கும் மலை
பழகு தமிழ்ப் பொதிய மலை!

சித்தரெல்லாம் மருந் தெடுக்கும்
செடி கொடிகள் அடர்ந்த மலை
மெத்த மெத்தப் புகழ் மணக்கும்
மேன்மைத் தமிழ்ப் பொதிய மலை!

# எரிக்கும் வெயில்

எரிக்கும் வெயிலே எரிக்கும் வெயிலே
எத்தனை துன்பம் உன்னாலே!

சிரித்து வெளியில் திரியும் சிறுவர்
தெருவில் வராமல் செய்தாயே
எரிக்கும் வெயிலே எரிக்கும் வெயிலே
எத்தனை துன்பம் உன்னாலே

எடுத்து வைக்கும் அடியில் சுட்டாய்
தலையும் கொதிக்க வைத்தாய்
படுத்தி ருக்கும் மனித ருக்கும்
வியர்த்துக் கொட்ட வைத்தாய்

வெப்பு நோய்கள் தொத்து நோய்கள்
வீடு வீடாய்ப் பரப்பக்
குப்பை மேட்டுப் புழுதிக் காற்றும்
கூடக் கொண்டு வந்தாய்

குடிக்கும் தண்ணீர்க் குளத்து நீரும்
கொஞ்ச மாக வற்ற
படிக்குப் படி பொன் அரிசி விற்கும்
பஞ்சம் கொண்டு வந்தாய்

எரிக்கும் வெயிலே எரிக்கும் வெயிலே
எத்தனை துன்பம் உன்னாலே!

## மரக்கலத்துச் சரக்கெல்லாம் கூடைமுத்துக்கு ஈடாகாதே!

பொங்கி யெழுந்து பொருமி வீழ்ந்தே
அங்கு மிங்கும் அலையும் கடலில்
பாய்மரம் விரித்துப் பல்கலம் செலுத்தி
மேய வாணிகர் மேலை நாட்டினர்
நீர்வழி நேர்ந்த நினைப்பருந் துன்பமும்;
சோர்வும், களைப்பும் துறந்தவ ராகிச்
செந்தமிழ் நாட்டுத் துறைமுகம் சேர்ந்து
தந்தம் மனத்தினில் தழைத்து வளர்ந்த
இன்பக் கனவெலாம் எய்தினே மென்று
சிந்தை களித்துச் சிரித்த முகத்துடன்
கரைவரும் நேரம் காரிகை யொருத்தி
திரைகடல் அடியில் தேடி யெடுத்த
ஒளிசேர் முத்துக் கூடை தூக்கி
வழிமறித் தனளே, வாணிக னொருவனை.
அவனோ,
கூடை முத்தில் கோடிக் கதிர்கள்
ஓடிப் பெருகும் ஒளியைக் கண்டான்!
கையில் எடுத்தவள் காட்டும் மாலையில்
செய்ய தாமரைச் சிவப்பொளி யேறிப்
பாய்ந்து முத்தைப் பவழ மாக்கும்
மாயச் செயலின் மாண்பினைக் கண்டான்!
காவிக் கண்கள் காட்டும் ஒளியும்

மேவிய செவ்வாய் முல்லைப் பல்லும்
கண்டு கண்டவன் திகைத்துப் போனான்.
ஒண்டொடி தூக்கி யோடி வந்த
கூடை முத்தோ கோடிப் பொன்பெறும்.
தேடி யெடுத்த செங்கை மாலையின்
கொள்மதிப் பென்ன? கோவை யிதழிடை
வெள்ளொளி முத்தின் விலைமதிப் பென்ன?
மரக்கலத் துள்ள சரக்குகள் யாவும்
விலைப்படக் கிடைக்கும் தலைப்பொன் காசெலாம்
முத்து வாங்கவும் பற்றா தென்றால்,
இரத்தினம் வாங்குதற் கேது செய்வேன்?
வயிரமும் மணியும் வாங்கு வதற்கும்
பயிர்நவ தானியப் பண்டங் கொள்ளவும்
தந்தமும் அகிலும் சந்தனப் பொடியும்
சுந்தரப் பூந்துகில் ஆடையும் பிறவும்
வாங்குதற் கென்ன வழியென எண்ணி
ஆங்கு மலைத்துநின் றதிசயித் தனனே!

# நஞ்சுக் கண்டேன்

பன்னீர்ப்பூக்கள் கொட்டிக் கிடக்கும் செம்மண்
பார்த்ததுபோல் அவள்வாயும் பல்லும் பார்த்துச்
சின்னேரம் நின்றிருந்தேன். அவளும் என்னைச்
செற்றழித்தல் போல்பார்த்தாள். கொல்லும்கண்ணாள்!
எந்நேரம் பார்த்தேன்என் றறியேன் சற்றே
இடம்விட்டுப் பெயர்ந்தேன்என் உள்ளம் மானின்
நன்னோக்கம் நாடிற்றுத் திரும்பிப் பார்த்தேன்.
நடுங்கினேன் கூற்றமெனும் கண்கள் கண்டேன்.

நீராடித் தோழியர்கள் சூழ வந்தாள்
நீலமயில் போல், கூந்தல் பின்அலைய
நேரோடி என்கண்கள் அவளைக் கண்டு
நீஎன்ன சொல்கின்றாய்? விருப்ப முண்டா?
கூறேடி எனவினவக் கோபம் கொண்டு
கொஞ்சுமெழில் முகத்தைமிகு செந்தீ யாக்கிப்
போராடி வாவென்றே என்றன் பக்கம்
போக்கிவிட்ட வேல்போலும் கண்கள் கண்டேன்.

பூங்கொடியாள் அவள்தலையில் மலர்ந்திருந்த
பூங்கொத்தில் ஒன்றெடுத்து முத்த மிட்டேன்.
பாங்கியரு கிருந்ததைநான் மறந்து விட்டேன்
பாவைமுகம் தீயாகி உயிரை எல்லாம்
வாங்கிவிடும் நஞ்சாகி என்றன் பக்கம்
வந்தபொழு துன்னமெலாம் பட்ட பாடு
பாங்கிளமுந் தகன்றபொழு தகன்று போகப்
பரிந்தென்னைப் பார்த்தமலர்க் கண்கள் கண்டேன்!

## பாராமற் போனுள்

நடையழகி நீரெடுக்கச் செல்லும் நேரம்
நான்கணித்த படிசென்று குளக்க ரையில்
இடைகுலுங்க இடதுகையில் குடம் குலுங்க
எடுத்தடிவைத் தடிவைத்தென் உளம் குலுங்க
படைக்கண்கள் நாற்றிசையும் பாய்ச்சி வந்த
பாவையைநான் பார்த்துவிட்டேன். எனினுமந்தக்
கடைக்கண்என் பால்திரும்ப வில்லை என்னைக்
கண்ணெடுத்தும் பாராமற் போய்விட்டாளே!

சந்தைக்குப் போய்த்திரும்பும் வழியில் சற்றும்
சரியாத படிதலையில் கூடை தூக்கிச்
சிந்தைக்கு விருந்தான காட்சி என்னச்
சேயிழையாள் நடந்துவரல் பார்த்து விட்டேன்.
முந்திக்கொண் டவளெதிரில் நடந்தேன் காதல்
முளையரும்பும் கண்ணிரண்டும் என்னை வந்து
சந்திக்கும் எனநினைத்தேன் என்னார்வத்தைச்
சற்றுமவள் காணுமற் போய்விட்டாளே!

கொஞ்சித்தன் தோழியுடன் பேசிக் கொண்டு
கோயில்செலக் கருதிவரும் வேளை தன்னில்
வஞ்சிவரும் வழிபார்த்துக் காத்தி ருந்தேன்.
வந்துவிட்டாள்! நானுமவள் அழகைக் கூட
மிஞ்சியசெவ் வாய்ச்சிரிப்பைப் பார்த்து விட்டேன்!
மிகமகிழ்வைத் தருவாளென் றெண்ணிக் கொண்டு
கெஞ்சியன்பைக் கேட்பதுபோல் நின்றேன் கோயில்
கீழ்வாயில் தனைப்பார்த்துப் போய்விட்டாளே!

# ஏன் பிறந்தாய்?

தொட்டிலிலே கிடந்துவிரல் சுவைத்தின் பத்தைத்
தோற்றுவிக்கும் ஊற்றினைஓர் பூவைப் போன்ற
கட்டழகைப் பெறவேண்டும் என்றி ருந்தேன்
கருதியவா றுன்னைநான் பெற்றெ டுத்தேன்
கட்டிஎன்னை முத்தமிட்டுக் களித்த அத்தான்
கண்ணெடுத்தும் இன்றென்னைப் பார்ப்ப தில்லை
வெட்டிவிட்டாய் அத்தானின் உறவை இந்த
வினைபுரிய வோமகனே நீபிறந்தாய்?

பாலாக்கித் தேனாக்கித் தமிழைப் பேசப்
பயில்கின்ற மழலையில்என் இன்பப் பேற்றை
மேலாக்கித் தருகின்ற ஒருகு ழந்தை
மேதினியிற் பெறவேண்டி உன்னைப்பெற்றேன்
தோலாக்கி நரம்பாக்கி எலும்புக் கூட்டின்
தோற்றத்தைப் போலாக்கி என்னை முன்னைப்
போலாக்கம் இன்றிஎன் அத்தான் வெறுக்கப்
புரிந்திடத்தா னோமகனே நீபிறந்தாய்?

மலர்க்கன்னம் விரிவடைய வண்டுக் கண்கள்
மகிழ்ந்தொளியை வாரிவிட இடுப்பை விட்டுக்
குலுக்கென்று தாவிப்போய் வரவ ழைத்துக்
கொள்ளுகிற அத்தானின் தோளிற் சேரும்
இலக்கியத்தைப் பெறவேண்டும் என்றி ருந்தேன்.
என்னாவல் தீரஉனைப் பெற்றெ டுத்தேன்.
விலக்கினையே அத்தானை என்னை விட்டு
வினையிதனைச் செய்திடவோ நீபிறந்தாய்?

## மாலையில் வா

கல்லூரிப் படியேறக் கால்வைக் குங்கால்
    கலீரென்னும் சிலம்பொலியைக் கேட்டு ளத்தில்
பல்லூறும் உமிழ்நீர்போல் இன்பம் ஊறப்
    பாவையுன தெழில்வெள்ளம் பருகுங் காலை
வல்லூறாய் மணியடித்து விலக்கிற் றன்றே
    வாய்த்திருந்த நல்நேரம் நீங்கிற் றன்றே
சொல்லூற்றில் தேன்கலக்கும் சுவையே நல்மாஞ்
    சோலையிலே தடையில்லை மாலையில் வா!

வரும்போதும் போம்போதும் கண்ணுற் பேசி
    வளருகின்ற காதலிலே காணும் இன்பம்
குறும்பாக மாணவர்கள் நம்மைக் கண்டு
    குழறுகின்ற மொணமொணப்பைக் கண்டபின்னர்
விரும்பாத பிரிவினையைக் கண்டோமன்றே
    விழைகின்ற கண்ணின்பம் நீங்கிற் றன்றே
கரும்பான மொழிமங்காய்! தடையில் லைமாஞ்
    சோலையிலே களிப்புறலாம் மாலையில்வா!

கண்மட்டும் தழுவுகின்ற இன்பந் தானே
    காதலுக்கு வித்தென்று சொல்வ ரேனும்
எண்ணத்தில் வளர்ந்துவிட்ட காத லாலே
    எடுத்துன்னைத் தழுவிவிடத் துடித்து விட்டேன்.
பண்பட்ட அழகுருவே என்னுள் ளத்தில்
    படிந்திருக்கும் சுவைப்பாட்டே, தடைப் படுத்தும்
கண்கெட்டார் இல்லாத மாஞ்சோ லைக்குக்
    கதிர்சாய்ந்து சிவக்கின்ற மாலையில்வா!

# தடுக்கின்றூர்

எழில்கொண்டு தேன்கொண்டு வண்டு தன்னை
எனைக்கண்டு மதுவுண்டு போவா யென்று
மொழிகின்ற மலரமுதை வீட்டில் இட்டு
மூடுகின்ற மூடர் அவள் அழகி னைத்தான்
விழலாக்கி மறைக்கின்றூர் எழில் சுவைக்க
விரிகின்ற உளங்கொண்ட என்னை; மின்னை
விழிகொண்டு காண்பதனைப் பருவத் தின்பேர்
விளம்பியவர் பிரிக்கின்றூர் தடுக்கின் றூரே!

புருவவில்லில் நாணேற்றிக் கண்ணும் அம்பைப்
போக்குகின்ற பெண்ணழகைத் தேனும் பாலும்
கரும்புமின்பக் கனிச்சுளையும் தெவிட்டு மென்று
கனிதமிழைக் கம்பிஇசைக் கருவி தன்னில்
தருகின்ற மென்மொழியை அழகே வந்து
தனிநடனம் புரியுமெழில் மெய்கொண்டாளைப்
பருவமடைந் தாளென்று சொல்லி என்னைப்
பார்க்கவிடா திருக்கின்றூர் தடுக்கின் றூரே!

பார்த்தகன்றும் மறையாத அழகை; பேசும்
பசுந்தமிழைக் கேட்டகன்றும் ஒலித்தொ லித்தே
ஆர்த்திருக்கும் பண்மொழியி னுளை, வீசி
அகன்றபின்னும் மெய்வருத்தும் கண்ணி னுளை;
வார்த்திருக்கும் சிலைபோன்ற மெய்யி னுளை;
வடிவழகைச் செந்தமிழை; என்னு ளத்தில்
கோர்த்திருக்கும் பைங்கொடியை நேரில் காணக்
கூடவிடா மற்பிரித்துத் தடுக்கின் றூரே!

# காட்ட வில்லை

கணக்கெழுதப் போய்ச்சேர்ந்தேன் அவரிடத்தில்
 கணக்கனெனும் முறையில்அவர் வீட்டி லுள்ள
பணக்குவியல் அத்தனையும், அவற்றைப் பற்றிப்
 பதிந்திருக்கும் குறிப்பேடு பேரே டெல்லாம்
கணக்கின்றிக் காண்பித்தார் எனினும் ஒன்றைக்
 காட்டவில்லை இருந்தும்அவர் காட்ட வில்லை
மணக்குமலர்க் குழலிஅவர் பெற்றெ டுத்த
 மங்கையைத்தான் என்எதிரில் காட்ட வில்லை!

நானிருக்கும் கணக்கறையைப் பணமிருக்கும்
 நடுவீட்டை, உள்ளறையை, அவர் தனித்துத்
தானிருக்கும் சிற்றறையை, விருந்துவந்து
 தங்குகின்ற கூடத்தை எல்லாம் பார்த்தேன்
தேனிருக்கும் செந்தமிழில் சொல்லி ருக்கும்
 திருவாயைக் கொண்டிருக்கும் நுண்ணிடையாள்,
மான்இருக்கும் அடுக்களையை நெய் மணக்கும்
 மணவறையைத் தானெனக்குக் காட்ட வில்லை!

காட்டவில்லை ஆனாலும்கண்டு கொண்டேன் மங்கையவள்
வாட்டடங்கண் கண்டு மயலானேன்—தேட்டார்
குடிப்பிறந்த காதலியைக் கொள்ளையிட்டென் வீட்டுக்
கடித்துவரத் திட்டமிட்டேன் யான்.

# தெரிந்து கொண்டேன்

பாய்வதற்குக் காத்திருக்கும் புறுவைப் போலும்
பார்வைகண்டு காமமெனும் நோயில் வீழ்ந்தேன்!
தூயஉளத் தாளென்றன் துடிப்பு நீக்கத்
துணிந்திடுவா ளோஅன்றிக் காத்தி ருந்து
மாயவிடு வாளோஎன் றெண்ணி எண்ணி
மனக்கவலை கொண்டிருக்கும் போதில் என்மேல்
பாய்ந்துவரும் மலர்க்கண்கள் கண்டேன்! அந்தப்
பாவைஇனி எனக்கென்று தெரிந்து கொண்டேன்!

தனிவழியில் ஒருநாளென் எதிரில் வந்தாள்
தாங்காத உளத்தோடு முகத்தில் இன்பம்
தனைத்தேக்கிப் பார்த்தேன்என் உள்ளரங்கம்
தனிலிருக்கும் உயிர்போன்றாள் தலை குனிந்தாள்!
எனதிருகண் வேறொன்றைப் பார்த்தல் போல
எடுக்கும் நொடி எனைநோக்கிப் புன்ன கையைக்
கனிவாயில் தேக்கிடுதல் கண்டேன்! அந்தக்
கன்னியினி எனக்கென்று தெரிந்து கொண்டேன்!

இருநாளில் வருமக்கள் கூட்டந் தன்னில்
தேன்மொழிவாய் மலர்க்கண்ணாள் இடையிருந்தாள்
ஒருபார்வை என்மனத்திற் குறுதி சொல்ல
உடனனுப்பி வைப்பாளென் றெண்ணி நின்றேன்
ஒருபோதும் எனைப்பார்த்த தில்லாள் போல
உடன்பார்த்தாள் பிறரறியா வண்ணம் என்னிற்
பொருந்திவிட்ட இருகண்கள் கண்டேன்! அந்தப்
பூவையினி எனக்கென்று தெரிந்து கொண்டேன்!

# அவர் போக்கு

நறுமலர்கள் குழல்சூடிப் படுக்கையறை சென்று
நடுச்சாமம் வரைகாத்துக் கொண்டிருப்பேன் அவரோ
உறங்காமல் நமக்கொருத்தி காத்திருப்பாள் என்றே
உளம்வருந்திக் கதிர்சாயும் முன்வீடு தேடிப்
பறந்துவந்த காலமெல்லாம் பறந்ததடி; இந்தப்
பாழ்இரவும் அன்னநடை போடுதடி! நெஞ்சில்
பிறமாதர் தமைத்தழுவிப் பேரின்பம் என்ன
பெற்றாரோ நானறியேன் அவர்போக்குச் சரியோ?

பால்காய்ச்சிச் சீனியிட்டுப் படுக்கையறை சென்று
படுத்துறங்க மனமின்றிக் காத்திருப்பேன். செங்கண்
வேல்பாய்ச்சி வழியிற்போம் ஆடவர்கட் கெல்லாம்
விழைவெழுப்பி உடல்விற்றுக் காதலியர் நெஞ்சில்
வேல்பாய்ச்சும் கன்னியரைத் தேடிப்போய்க் கூடும்
வெறிகொண்டார்; வேதனையைத் துணையாக்கி விட்டார்!
பால்நிலவும் கதிர்பாய்ச்சிச் சிரித்ததடி! உள்ளம்
பற்றிக்கொண் டெரியுதடி அவர்போக்குச் சரியோ?

பாய்விரித்துப் பணம்பறிக்கும் வல்லியர்பால் இன்பம்
பார்க்கின்ற என்னத்தான் எனைமறந்தார் இங்கே
பூவிரித்த மெத்தையிலே நானிருந்தும் தனிமை
பொறுக்காமல் துடிப்பதனை அறியாரோ? நாளும்
வாய்விரித்துப் பல்காட்டி வாசலிலே நின்று
வருகின்ற ஆடவரைக் கூடியின்பங் காணும்
பேய்மகளிர் துணையானார்; வேதனைதான் இந்தப்
பேதைக்குத் துணையென்றார் அவர்போக்குச் சரியோ?

# பொறுத்திருப்பாய்!

பொன்னழகே நின்முடங்கல் பெற்ற பின்னர்
பொறுமையில்லை; எனினும்உறை கிழித்துப் பார்க்கத்
தெம்புமில்லை; முதலாளி முகத்த மைதி
தெரியவில்லை; பொழுது விரைந் தேக வில்லை!
இன்பமது கைக்குவந்தும் எடுத்த ருந்த
ஏற்றஇடம் கடையல்ல, எனினும் உள்ளம்
உன்னையெண்ணிப் பறந்தோடும் நிலையில் என்றன்
உடலையொரு சிலையாக்கிக் கடையில் வைத்தேன்!

கடைதந்த விடுதலையைக் களித்துப் பெற்றுக்
காவிரியின் கரைவந்து படிக்க லானேன்.
மடைதிறந்த வெள்ளமெனச் சுவைப்பெ ருக்கை
மாந்திவிட்டேன் இன்பமெனும் கரையில் நின்றே!
அடைந்திருக்கும் நின்காதற் பேற்றை யெண்ணி
அகமகிழ்ந்தேன்; என்னைவர வேற்று நீயே
படைத்திருக்கும் தமிழமுதைப் பருகி விட்டேன்.
பண்பாடும் மடநங்காய் என்சொற் கேளே!

நின்னிடத்திற் பறந்துவர வேண்டு மென்று
நினைப்பிருந்தும் செயலில்லை, பறப்பதற்கோ
என்னிடத்திற் சிறகில்லை, வைய வாழ்வை
இனிமையுற நடத்தவழி என்ன வென்றால்,
பொன்னிடத்தில் நாட்டத்தைப் போக்க லன்றோ?
பொறுத்திருப்பாய் ஒருதிங்கள்! பொன்னும் நானும்
உன்னிடத்தில் சேர்கின்றோம்; படும் பாடெல்லாம்
உனக்காகத் தானேடி கன்னற் பாகே!

# கோழை

வட்டமிடும் புறாப் போலே இருகண் பார்வை
வாள்கொண்டு சுழற்றியவள் வருமப் போது
திட்டமிடும் அவளுள்ளம் புரிந்தி ருந்தும்
திருடன்போல் விழித்தபடி நின்றிருப்பேன்!
கட்டிலறை நினைவு வரும் அவளை யங்கே
காணுமொரு நாளையெண்ணி உள்ளம் வாடும்.
பட்டதெல்லாம் வெளிப்படுத்தும் பான்மை யின்றிப்
பாடுபடும் நானொருவன் கோழை யன்றோ?

பளிச்சென்ற மின்னலைப்போல் புன்சிரிப்பாம்
படைகொண்டு வளைத்தபடி வருமப் போது
களிக்கின்ற அவளுள்ளம் புரிந்திருந்தும்
கலங்கிப்போய் விழித்தபடி நின்றிருப்பேன்!
வெறிச்சென்ற என்வீட்டில் ஒளிசெய் கின்ற
விளக்கேற்ற அவள்வருமோர் நாளை யெண்ணிக்
கிளர்ச்சிபெறும் எண்ணத்தை வெளிப் படுத்தக்
கிஞ்சித்தும் உறுதியில்லேன் கோழை யன்றோ?

பொற்சிலைபோல் உடல்கொண்டு பவழ வாயில்
புன்சிரிப்பைத் தேக்கிவைத்து மலர்க்கண் ணாலே
கற்பனையைக் கிளறிவிட்டுக் காதல் தூவும்
கட்டழகி தனைக்கண்டு மெய்ம றப்பேன்!
அற்புதமாய் அவளுடனே கூடி யின்பம்
அடைவதற்கே என்னுள்ளம் ஆசை கொள்ளும்!
சொற்படுத்திக் கருத்துரைக்கத் துணிவில் லாமல்
சோர்ந்திருக்கும் நானுமொரு கோழை யன்றோ?

# பயனில்லாத ஆசை

அன்னநடை மின்னலிடை வண்ணப் பூவின்
அழகுடைய திருமேனி மேகக் கூந்தல்
பின்னலிலே பூக்காட்டை வண்டு மொய்க்கும்
பெண்ணொருத்தி தனைக்கண்டு மயங்கி நின்றேன்!
அன்னவள்தான் நம்தோழர் அழகு நம்பி
அகமுடையாள் என்றுரைத்தான் அன்புத் தோழன்.
என்னெஞ்சம் நாணிற்றுத் தலைகுனிந்தேன்
என்செய்வேன் பிழைசெய்தேன் என்செய்வேனே!

கொஞ்சுமொழி பேசியொரு கோதை வந்தாள்
கொடுப்பீரோ புத்தகத்தை என்று கேட்டாள்
நெஞ்சமெல்லாம் மகிழ்வெய்தக் கொடுத்து விட்டேன்
நேசித்தேன் அவளழகில் மயங்கி நின்றேன்
வஞ்சமில்லாப் பேச்சுடையாள் திரும்பி வந்தாள்
வடிவேலன் நலங்கேட்டு மகிழ்ந்து சென்றாள்.
நெஞ்சமெல்லாம் நாணிற்றுத் தலை குனிந்தேன்
நேர்மையில்லாக் காதல்கொண்டேன் என்செய்வேனே!

பாலுக்குச் சீனியைப்போல் தமிழன் பாடும்
பாட்டுக்கு நயத்தைப் போல் அடிசிவந்த
காலுக்குச் சிலம்பணிந்த கன்னி நல்லாள்
கட்டழகுக் கிலக்கியமாய் வந்து நின்றாள்!
சேலுக்குத் தானிகர்த்த கண்ணை என்பால்
செருகிடுவாள் காதலிப்பாள் என்ற வென்றன்
மாலுக்குச் சற்றுமவள் மதிப்பளிக்க
மனமின்றிப் போய்விட்டாள் என் செய்வேனே!

# பொல்லாப்புச் சேர்க்காதே

கோடி வீட்டினில் இருப்பவன் அந்தக்
குறும்புக் கார னுடனேநீ
ஓடித் திரிவதும் ஆடி மகிழ்வதும்
கண்டிந்த ஊரே சிரிக்குதடி.
தேடி யலைந்தாலும் கிடைப்ப தில்லையொரு
மாப்பிள்ளை இந்தக் காலத்திலே
போடி உன்றனைக் கட்டிக் கொடுக்குமுன்
பொல்லாப்புச் சேர்க்காதே வீட்டினுக்கே!

மாடியில் நின்றவன் கூவி யழைப்பதும்
மற்றங்கு நீயொரு சிட்டுப் போல்
ஓடிப் பறப்பதும் கூடிக் களிப்பதும்
கண்டிந்த ஊரே சிரிக்குதடி!
வேடிக்கை யல்லடி நாளைக்கொரு மாப்பிள்ளை
வேண்டும்பொன் அள்ளிக் கொடுத்தாலும்
நாடிட மாட்டான் உன்னையே யிது
நற்செயல் அல்லடி விட்டிடுவாய்!

வாடிக்கை யாக நீர்த்துறை செல்லும்
போக்குக் காட்டியவன் வீட்டினுள்ளே
ஓடிக்கை கொட்டிக் குதிப்பது மாடலும்
கண்டிந்த ஊரே சிரிக்குதடி!
கோடிக்கணக் காய்ப்பணத்தை யள்ளிப் போய்க்
கொட்டினும் நம் குலத்தி னுள்ளே
தேடிக்கை பிடிக்க ஒருமாப் பிள்ளை
கிடைப்ப தரிதடி விட்டிடுவாய்!

# இரவும் பகலும்

நிலாமுற்றம் சென்றமர்ந்து நேரிழையோ டன்பாய்
உலாவந் தெமைமகிழ் விக்கும்—நிலாக் கண்டு
பேரின்ப மாய்இரவிற் பேசுங்கால், ஏடி, நான்
சோர்ந்திறந்து போனால் ஒழியட்டும்—யாருக்கென்?
என்றோ யிருப்பாய் எனக்கேட்டேன். சொல்கின்றாள்
நின்ற நிலையின்று நீரிறந்தால்—நன்றென்(று)
உவப்பேன் என் றாளே. உடன்நான் கண் மூடி
உவப்பாய்நான் இன்றித் தனியே—உவப்பாயே
என்றுரைத்தேன் இன்பத்தை ஏந்திவரும் ஏந்திழையோ
நன்றோர் துணியெடுத்து நல்லுடலை—ஒன்ற
மறைத்துப்பின் ''செத்தார் மணமகனார் செத்தார்
பறையடிமின்'' என்று பலசொல்—உரைபகர்ந்தாள்.
சாகவில்லை என்றுஎழுந்து தையல் குழல்தடவ
போகாதீர் நீரினிமேல் போவீரேல்—மேகம்
தவழ்மதி போல் நான்தனியே தார்சூடி மிக்க
உவப்படைவேன் என்றாள், இன்று ஊர்விட்(டு)
—உவர்க்கடலைத்

தாண்டிப் பொருள்சேர்க்கச் செல்லத் தடைசெய்து
வேண்டுகின்றாள் போகவே வேண்டாமென்—றீண்டிந்தப்
பேதையை நீங்கிப் பிரித(ல்)துன்பம் வாழ்விற்கு
வாதைபொரு ளின்றேல் வரும்!

# புதுக் கூட்டு

மாமரச் சோலையில் ஒருபுறத்தில்—ஒரு
மானென ஓடினள் பெண் ணொருத்தி
காமர் உலகத்தின் தெய்வமதோ—பெரும்
களிப்புக் கடலின் திரட்சிகொலோ?
ஆமிந்தப் பெண்ணென யோசித்தனன்—அவன்
அவளை நெருங்கவும் அஞ்சிநின்ருன்.
தேமதுரக் கனிகள் பொறுக்கி—அந்தத்
தேன் குழல் ஓடினள் இங்குமங்கும்.

நெஞ்சில் எழுந்திடு மாசையினுல்—அந்த
நேரிழை யாளெதிர் சென்று நின்ருன்
வஞ்சனை யில்லாத அன்னவளும்—மெல்ல
வளைந்த உடல்தான் நிமிர்ந்திடவே
அஞ்சினள் பார்த்ததும் பின்னடைந்து—சற்று
யாரெனப் பார்த்தனள் கண்களினுல்
கெஞ்சியே நின்றிடும் கண்களுடன்—அந்தக்
கெண்டை விழிகள் கலந்தனவாம்!

சமய மறிந்தனன் மெல்ல மெல்ல—அந்தத்
தங்கத் தெதிரில் நெருங்கிவந்தான்
அமர்ந்தனன் பக்க மரத்தடியில்—பொன்னின்
அணங்கவள் நின்றனள் கல்லினைப் போல்
அமைதியில் லாத அவள்முகத்தைக்—கண்ட
அவனங்குச் சொல்லிய சொற் களிவை;
சமைந்த உனதின்பப் பொன்னுடலை—அடி
தத்தமாய்த் தந்திடச் சம்மதமோ?

என்ன கவலையில் ஆழ்ந்து விட்டாய்—அடி
இந்தச் சமயம் தவறிவிட்டால்
என்னடி செய்வேன் உனக்கெனக்கு—நேரம்
இனிஎப் பொழுதில் அமைந்திடுமோ?
என்ற உரைகள் செவி வழியே—தனது
இதயத்தில் ஏறிடத் தண்டமிழில்
கன்னல் நிகர்த்திடும் சொற்களினால்—அந்தக்
கன்னி மொழிந்தனள் நெஞ்சகத்தால்!

முன்னர் ஒருவன் எனைக்கலந்து—மணக்கும்
முன்னம் எனைவிட்டு நீங்கிவிட்டான்
பின்னர் ஒருநல்ல பிள்ளையினை—நான்
பெற்றது கண்டென்னைப் பெற்றவரும்
என்னைத் துரத்தியிக் காட்டினிலே—திரும்ப
இனிவரா தேயெனச் சொல்லிவிட்டார்
அன்னவன் செய்தஓர் சூழ்ச்சியினால்—நான்
ஆற்றற் கருந்துயர்ப் பட்டேனையா!

தத்தமாய்த் தந்திடச் சொல்லுகின்றீர்—ஆனால்
தக்க சமயம் அமைந்ததென்றீர்
வித்தகம் பேசிநீர் என்மனத்தை—இன்று
வீணாய்க் கெடுப்பது மாகுவதோ?
எத்துக்கள் செய்தெனை வஞ்சகத்தால்—நீர்
இப்படிக் கொள்ளுதல் நல்லதுவோ?
சற்றிதைச் சொல்லி விளக்குவிரேல்—நான்
சம்மதச் செய்தி யுரைத்திடுவேன்!

இந்த மொழிகளைக் கேட்டிருந்தான்—அந்த
இளைஞன் உளத்தெழும் காதலினால்
சிந்தையில் எண்ணிய தீக்குணத்தை—அவன்
சிந்தித் துணர்ந்துபின் சொல்லுகின்றான்:
''எந்தைக்கு நானஞ்சிச் சொல்லிவிட்டேன்—அதை
இனியோ நினைப்பது மில்லைகண்டாய்
வந்திங் கெரிகிற காதலினை—அடி
வஞ்சி யணைக்கநீ வாடி''யென்றான்!

வாடி யறியா மதத்தலைவர்—பெரும்
வாயை நெருங்கும் உணவதைப் போல்
மூடி யிருந்த முகந்திறக்கும்—மலர்
முகத்தைத் தழுவும் கதிரினைப் போல்
ஓடிப் பறந்தனள் தாவியவன்—நன்று
ஒட்டித் தழுவினன் அன்னவளை!
கூடிக் கலந்தனர் ஆவியொடும்—ஒரு
கூட்டுக்குள் ளாயினர் வாழியவே!

# தேடற் கரிய திரு

சிந்தையுறையும் திருவினை என்காதலியை
இந்த உலகத்தில் இன்பத்தைத்—தந்தெனக்குப்
பல்காலும் அன்பிற் பலசொற் குழைத்தூட்டி
வெல்லங் கசக்க விளைந்தசிறு—முல்லைகள்
தம்மை வரிசையுறத் தந்தம்போற் காட்டி. ஒளி
மின்ன விளங்கி என்றும் மின்னிமின்னி—என்னுளத்தைக்
கொள்ளை கொண் டாளையான் காணும் குறிக்கோளால்
வெள்ளை யுடுத்தி விரைந்தேன்என்—உள்ளத்தில்
பைந்தொடியாட் கென்ன பரிசளிப்ப தென்றேற்தான்
சிந்தித்தேன் அப்பரிசும் சீரியதாய்—இந்தத்
தினம்வரைக்கும் இல்லாத் திருவுடைத்தாய், என்றன்
மனம் விளக்கும் செவ்வைத்தாய், மாதின்—இனிய
முகத்தை மலர்வித்து வாய்முத் துதிர்த்தே
அகத்துற்ற செம்மை அதரந்—திகழ்விக்கும்
புத்தம் புதுப்பொருளாய் வேண்டும் பொலிவுடனே
சித்தங் கவர்ந்தந்தச் சேயிழையாள்—மெத்த
வியந்தென்னைக் கண்டு விளையாடி, இன்பம்
பயந்தென்றன் உள்ளம் பருகி—நயவுரைகள்
பன்னூறு சொல்லிப் பயின்றிடவும் வேண்டுமிதற்
கென்ன பொருள் நல்லதென எண்ணினேன்—சின்னஒரு
பூக்கொண்டு போவமெனில் புன்னகையால் அவ்வழகை
மேய்க்கின்ற கன்னமுண்டே மின்னுளுக்கு—ஆக்கம்
தருங்கனிகள் ஆமோ தருதற் கெனில் அவ்
விருகனியும் வாயாங்கொவ் வையும்—கருத்துறவும்
பாலாமோ வென்று பலநினைக்கக் கூர்மையுறு
வேலாற்கண் கள்படைத்தாள் விந்தைமொழி—தோலாது
பாற்கென்றே சிந்தை பகர்ந்திடவும், பின்னுமவள்
மேற்கருத்துச் சென்று மினுமினுக்கும்—மேற்கொண்டு
யாதும் நினைவின்றி அடைந்தேன்அச் சோலையினை
மாதவளும், "அத்தான் மனமிலையோ?—ஓதும்" என
ஓடி வந்தாள் யானுணர்ந்தேன் உள்ளமெனும் ஒன்றேதான்
தேடற் கரிய திரு.

# இரவின் விரைவு

நீலநிற வானில் நிலவெரிக்கும்; அப்பம் போல்
கோலமுழு துங்காட்டிக் கொண்டிருக்கும்—சாலவும்என்
உள்ளம் உவகையிலே துள்ளிற்று. யான்ஓடி
மெள்ளப் படியேறி மேற்சென்று—வெள்ளம்போல்
கொட்டி, அழகைக் குவிக்கும்நிலா முற்றத்தைக்
கிட்டினேன். இன்பம் கிளர்ந்தது. பின்—கொட்டினேன்
இன்பத் தமிழில் இசைப்பாடல் பற்பலவாய்!
மின்னிற்று வான்! உள்ளம் மேவிற்றே—என்னென்று
காண! உடனே கமழிசையைக் கட்டிவைத்துச்
சேணில் விழிநோக்கைச் சிந்தினேன்—பேணவந்த
பெண்ணழகொன் றங்குப் பெருமின்னல் போற்றோன்றிக்
கண்ணிழுத்துப் பின்என் கருத்திழுத்துக்—கொண்ட
திறத்தினையான் என்னென்பேன் சீரெல்லாம் ஒன்ருய்த்
திரண்டதுவோ! பெண்ணழகின் சேர்க்கைத் — திறமிதுவோ
என்றெல்லாம் எண்ணிற்றே எண்ணம். இசைகேட்ட
கன்றோடி, மேய்க்கும் சுருப்பனிடம்—சென்றிருந்த
பான்மைபோல் யானந்தப் பாவை யிருந்தமுற்றம்
தானெதுவென் றோய்ந்து தனி நடந்தேன்—நான் சென்று
தாழ்தட்ட எண்ணுங்கால் தான்வந்து சின்னநகை
யாழிசைத்து, "வாரீர் அடிமை என்றன்—பாழ்மனையில்
செல்வங் கொழிக்கவந்த சீராளா! என்றன்னுள்
வெல்ல மொழிகுழைந்து "வேந்தேஎன்—இல்லுள்
வரு"கென்ருள். சென்றேன்பெண் இன்ப வளத்தைப்
பருகென்ருள் அவளள்ளிப் பாயில்—உருவைத்தாள்
கன்னத்தில் தேன்வைத்தாள்; கள்ளின் வெறி வைத்தாள்.
என் னுள்ளத் தை வைத்தே யாணிருக்கும்—இந்நிலையில்
பொன்னனை நல்லிரவு போம்விரை(வு)இன் னைப்பொறுக்க
என்னல் இயலா(து) இனி!

# பிறை நிலவு

நிலவே நீ ஏன் தோன்றினாய்?
நீல வானிலே—நிலவே நீ ஏன் தோன்றினாய்?

உலகுக் கொளிதர உடுக்க ளிருக்கையில்
ஒற்றைப் பிறைக் கோடு கொண்டே
நிலவே நீ ஏன் தோன்றினாய்?

ஆளனும் நானும் அன்றோர் படகில்
ஆற்று வெள்ளத்தில் மிதந்த நினைவை
மீளவுந் தோன்றச் செய்திடத் தானோ?
மிகுதுயர்ப் பட்டுநான் மேலும் வருந்தவோ?
நிலவே நீ ஏன் தோன்றினாய்?

தேற்றவர் இல்லை; நீயும் இல்லை
நீங்கினார் என்றொரு துயருடன் இருந்தேன்
கூற்றுவ னாய்ப்பிறைக் கோட்டுடன் வந்தாய்
குலாவிய நினைவெல்லாம் தோன்றுதே மீண்டும்
நிலவே நீ ஏன் தோன்றினாய்?

## தலைவன் தலைவிக்கு

பொழுதித் தனைநீ
    பொறுத்திருந்தாய் சற்றே
அழாதிருப் பாய் என்
    அணங்கே! வெளுத்தந்தத்
திங்கள் வருமுன்னர்
    நான் வந்து சேர்கின்றேன்
உன்கண் விருந்துக் (கு)
    உவந்து!

விரிதாள் கண் ணுற்றேன்
    விழைவ தறிந்தேன்
இருப்பாய்! பொறுப்பாய்!
    இதோ நான் விரித்தேன்
சிறகைப் பறந்தேன்
    விரைந்தே நறுந்தேன்
உறவே வருவேன்
    உணர்!

## அவளைப் பார்த்தேன்

அவளைப் பார்த்தேன்—அவள்
அழகைப் பார்த்தேன்—நான்
ஆசை கொண்டேனே!

பூவைப் பார்த்தாள்—செம்
பொட்டைப் பார்த்தாள்—மஞ்சள்
பொடியைப் பார்த்தாளே!

இயற்கை யான—நல்
எழிலைக் கொண்டும்—அவளுக்கு
ஏனோ நிறைவில்லை?

செயற்கை யழகை—அவள்
தேடிக் கொண்டாள்—இதில்
சேர்ந்த பயனென்னை?

# ஓரப் பார்வை

சொல்லடி தோழி—மெய்யாய்ச்
சொல்லடி தோழி!
இல்லையென் ருலும் விடவே மாட்டேன் நீ
எதையும் மறைக்காதே என்னிடம் சொல்லடி தோழி!

வெல்லத்தை யள்ளி விழுங்க நினைப்பவர் போலே—அந்த
விந்தை மனிதர் உன்னைப் பார்த்திடும் போதே.
மெல்லத் திரும்பிநீ ஓரக் கண்ணினுலே
மெய்புள காங்கித மடையப் பார்த்தனை யல்லவோ?
சொல்லடி தோழி!

பழுத்த கனியைக் கண்டுகிளி பறப்பது போலே—அவர்
பார்வை வெள்ளம் உன்மீது பாய்ந்திடும் போதே
அழுத்த மாகப் பிறர் அறியாத வாறே
அஞ்சுகமேநீ மெல்லப் பார்த்தனை யல்லவோ?
சொல்லடி தோழி!

பத்துநாள் பசித்தவன் பிடிச்சோறு கண்டது போலே—அவர்
பறக்கும் உணர்ச்சியால் உன்னைப் பார்த்திடும் போதே
மெத்தப் படித்தோர் அலட்சியப் பார்வையைப் போலே
மெல்லப் பிறர்அறி யாமலே பார்த்தனை யல்லவோ?
சொல்லடி தோழி!

செக்கச் சிவந்த தாமரைக் கண்களினுலே—இளஞ்
சிங்கத்தை யொத்தவர் உன்னைப் பார்த்திடும் போதே
மிக்க மருண்டவோர் புள்ளி மானினைப் போலே
விளங்கினுலும் மெல்லவே பார்த்தனை யல்லவோ?
சொல்லடி தோழி!

வெட்கப் பட்டே என்னிடம் மறைத்து விடாதே—அந்த
வீரரை யடையத் துணைசெய்வேனடி நானே!
தக்க சமயம் அறிந்துவந்தே சொல்லிடுவேனே
தந்திரமாகவே தூதுபோய் வருவேன் அல்லவோ?
சொல்லடி தோழி!

## தனியாக் காதல்

நேற்றுப் பிறந்ததன்றே—காதல்
நெடுநாள் இருப்ப தன்றோ
வேற்று மனிதர்களால்—அன்பு
வெட்டப் படுமோடி?

வெட்ட வருவாரேல்—அது
வீணாய்ப் போகுமடி
கட்டை யரிவாளால்—இரும்புக்
கட்டி பிளப்பாரோ?

குட்டை மனிதரிவர்—காதல்
குணமறி யாதவர்கள்
தட்டத் தணிவ தில்லை—காதல்
தழைக்கும் உரிமையடி?

பவழ இதழ் நடுவில்—உள்ளே
பதித்த வயிரப்பல்
தவழ விடுமொளியில்—கொண்டேன்
தணியாக் காதலடி!

# உறுதி மறந்தான்

கண்ட துண்டோ சொல்லடி
எங்கேனும் நீ
கண்ட துண்டோ சொல்லடி!
கட்டிக் கரும்பனை யானை—என்
கண்ணின் மணி போன்றானைக்
கண்டதுண்டோ சொல்லடி!

விட்டுப் பிரிந்த போது
விரைவில் வருவே னென்றான்
எட்டிச் சென்ற பின்னே
என்னை மறந்து விட்டான்
கட்டுக் கடங்கா தென்றன்
கண்ணிரண்டும் தேடும்
தட்டுப் பட்டா லவனைத்
தப்ப விடவே மாட்டேன்
கண்ட துண்டோ சொல்லடி!

வாட்டும் வடவைக் காற்று
வந்துனைத் தீண்டு முன்னே
மீட்டும் விரைவில் வந்தே
மெய்யாய் மணப்பே னென்றான்
நீட்டிய கையி லடித்து
நிதம் புறுதி யென்றான்
ஓட்டைக் குடத்தைப் போலே
உறுதி யொழுகி னானைக்
கண்ட துண்டோ சொல்லடி!

# காதலர் நினைவு

அவர் வருவாரடி—தினந்தினம்
அவர் வருவாரடி

பாய்ச்சுகை வேலொடும்
பாலைத் தலை யோடும்
பேச்சுச் சுவை தந்திடப்
பேராவல் தள்ளி வர
அவர் வருவாரடி!

வீசி வருங்கையில் விளங்கும் மலரினை
ஆசை யுடன் அவர் அணியும் போதினில்
கூசித் திரும்பினுல் கொட்டிடும் கையுடன்
அவர் வருவாரடி!

மெள்ள வருவர் என் மேனி யழகினை
அள்ளிப் பருகுவர் ஆசைத் தணலிலே
தள்ளி விடுத்துப்பின் தாங்கி நடந்திட
அவர் வருவாரடி!

கொள்ளை யிடும்விழி கொஞ்சும் அவர் மொழி
கள்ளை நிகர்க்கும் என் காதல் மனத்தினில்
வெள்ளம்போ லின்பம் அள்ளித் தரத்தினம்
அவர் வருவாரடி!

# அழகி

அழகு அழகு தான்—அவள்
அங்க மெல்லாம் தங்கம் தான்!

விழி இரண்டும் வாளைப் போலவே
சுழற்றி வீசி மருண்டு நோக்குவாள்!

அழகு அழகுதான்!

எழுந்து தோழி தோளைத் தழுவுவாள்—என்றன்
இரண்டு தோளும் வாடிப் புழுங்குமாம்!
குழந்தை போலே பேசிக் கொஞ்சுவாள்—இரு
கோல வளைக்கை வீசிச் செல்லுவாள்!

அழகு அழகுத ான்
!

உதட்டில் சின்னச் சிரிப்பைத் தேக்குவாள்—என்
உயிரை வாங்கும் கண்ணால் நோக்குவாள்!
பதட்டப் பட்டங் கெழுந்து செல்லுவேன்—திரும்பிப்
பார்க்காமல் மேல் நடந்து செல்லுவாள்

அழகு அழகுதான்!

# பேடன்னம்

பேடன்னம் போகுதஹோ பார்
பின்னிய குழற்
பேடன்னம் போகுதஹோ பார்!

தேனை குடித்து வண்டு
திளைத்துப் பாட்டிசைக்கத்
தென்றல் வந்து வந்தவள்
தேன் குழல் அசைக்கப்
பேடன்னம் போகுதஹோ பார்!

மெல்லத் துவளும் சின்ன இடையே
மேலிற் புரளும் வண்ணச் சேலை
தன்னை யிழுக்கத் தாவுங் கையே
தாளஞ் சிலம்பு காலிற் போடப்
பேடன்னம் போகுதஹோ பார்!

புருவ வில்லிற் புறப்பட் டம்பாய்ப்
பொங்கொலி பாயும் கண்கள் இளைஞர்
கருதக் கருதத் திரும்பி வந்தே
கலக்கி மனத்தை யுலுக்கும் படியே
பேடன்னம் போகுதஹோ பார்!

சாய்ந்த குழலிற் றுழும் பூவும்
சருக்கி வீழக் காத்திருக்க
வாய்ந்த இளைஞர் ஒழுக்கம் அங்கே
வழுக்கி வீழக் காத்திருக்கப்
பேடன்னம் போகுதஹோ பார்!

# கொலைகாரி

பொல்லாத கொலைகாரி யம்மா!—இந்தப்
புன்னகைக் காரி; மின்னல் இடைச்சி!
பொல்லாத

வில்லாகப் புருவம் வளைத்தாள்!—அம்பு
விடுத்தாள்; என் உயிரைப் பறித்தாள்!
பொல்லாத

மையென்று நஞ்சினைத் தீட்டி—அவள்
மற்றென்மேல் கண்ணம்பு பாய்ச்சித்
தையென்று விலாவினைக் காட்டி—அவள்
தானேவி விட்டாளே ஐயோ!
பொல்லாத

கண்டாரின் மேற்பாய்ந்து குருதி—பட்டு
காவியாய்ப் போனவோ கண்கள்?
வண்டாகி என்னுள்ளப் பூவை—அவை
வந்திங்குத் துளைத்தன அம்மா!
பொல்லாத

# பித்தம் பிடித்தவள்

முத்தம் முத்தம் என்று சொல்லிப்
பித்தம் பிடித்தலை கிருய் பேதைப் பெண்ணே நீ
பித்தம் பிடித்தலை கிருய்!
அத்தனைக்கும் காரணம் உன்
அத்தான் அல்ல வோடி ஆசைக்குரிய உன்
அத்தான் அல்ல வோடி?

கொட்டைப் பாக்குப் போல்விழிக்கும்
குழந்தையைத் தூக்கிஞய் ஓடிப்போய்நீ
குழந்தையைத் தூக்கிஞய்
கட்டி முத்தம் இட்டு விட்டாய்
கள் வெறிதான் கொண்டுவிட்டாய்! பேதைப்பெண்ணே நீ
கள் வெறிதான் கொண்டுவிட்டாய்!

மீண்டுமீண்டு முத்தமிட்டாய்
மிரள மிரள விழித்ததே ஆசைக் குழந்தைதான்
மிரள மிரள விழித்ததே!
ஏண்டி யுன்றன் ஆசை வேகம்
எப்படித்தான் தாங்குமோ சின்னக்குழந்தைதான்
எப்படித்தான் தாங்குமோ?

கொஞ்சுகின்ற போக்குக் காட்டிக்
குழந்தை திணற வைத்தாய் சின்னஞ்சிறிய
குழந்தை திணற வைத்தாய்
கெஞ்சி நின்றுன் முத்தம் வாங்கும்
அத்தான் வந்து விட்டான் போடிபோ உன்
அத்தான் வந்து விட்டான்!

# வாட்டாதே!

சிலையைப் போலே அங்கே
நிற்காதே!—என் மனத்தை
மயக்காதே!
மயக்கம் இன்பத்தைப்
பெருக்காதே!

ஓரக் கண்ணாலே நீ
பாராதே!—என் உள்ளத்தைக்
கீறாதே!
வெறும் பார்வையில் ஆசை
தீராதே!

கட்டு முல்லைப் பல்லைக்
காட்டாதே!—புன் சிரிப்பால் இன்பம்
ஊட்டாதே!
ஏங்கும் மனத்தைப் பின்னால்
வாட்டாதே!

அழகுக் கொண்டையில் பூவை
அணியாதே!—என் உள்ளம்
பணியாதே
வீண் ஆசையில் இன்பம்
தணியாதே!

# முகம் மறைத்தாள்

வாச மலர்ச் சோலையிலே—கதிர்
சாயும் அந்தி நேரத்திலே
ஆசை முல்லைப் பூப்பறிக்கும்—ஓர்
அழகு மலர்க் கொடி கண்டேன்
வீசும் எழில் தாமரையோ—என
வியந்து முகம் பார்த்திருந்தேன்
கூசி மலர்க்கண் மறைத்தாள்—கருங்
கூந்தலையே காட்டி நின்றாள்.

மாடு கன்று தேடிவரக்—கதிர்
மறையும் அந்தி நேரத்திலே
ஆடு கின்ற பூங்கொடிபோல்—எதிர்
அசைந்து வரும் தேரினைப் போல்
பாடுகின்ற தேன் மொழியாள்—எதிர்ப்
பாங்கில் வரக் கண்டு நின்றேன்
மூடுகின்ற கைமலரால்—எழில்
முக மலரை மறைத்து விட்டாள்!

# காதல் கவர்ச்சி

தோழனே அவள் யாரடா?—பசுந்
தோகை மயிலோ பாரடா!

கானில் வளர்ந்த மடப்பிணையோ—பூங்
காவில் படர்ந்த மலர்க் கொடியோ
தேனில் கிடந்த கனியமுதோ—கலைத்
தேரில் உலவுந் திருவடிவோ?

காணக் காணவே கவர்ச்சியடா—அவள்
கண்களில் என்ன மலர்ச்சியடா
பூணத் தகுந்த மாலையடா—அவள்
புன்னகை கண்டுளம் துள்ளுதடா!

வேலினைப் போலிரு விழிகளுமே—மிக
வேகமாய்ப் பாயுதென் நெஞ்சினிலே
பாலினை நிகர்த்த மொழிபேசி—இன்பம்
பாய்ச்சுவளோ துயர் நீக்குவளோ?

வெண்ணில வொத்த முகத்தினிலே—முல்லை
விரிந்தது போல்நகை கூட்டினளே
பண்ணிகர் மொழியில் பேசுவளோ—கண்
பார்வையிலே பதில் கூறுவளோ?

நெஞ்சினில் ஆசை யூறுதே—என்
நினைப்பும் அளவினை மீறுதே
வஞ்சி என்நிலை அறிவாளோ—இன்ப
வாழ்வு தரவே வருவாளோ?

# இணைப் பாடல்

கோவை யிதழைக் கொஞ்ச வந்தேன்
ஆரணங்கே—செல்வக்
கோமகளை நான் கெஞ்சு கின்றேன்
பாரணங்கே!

பட்டத் தரசர் பாவையைப் போய்க்
கெஞ்சுவானேன்—கண்
பார்வைக் குள்ளே பாவை யுள்ளம்
தஞ்ச மாமே!

தேனும் பாலும் கலந்த சொல்லைக்
கேட்ட தாலே—மதுத்
தேடும் வண்டு போலே வந்தேன்
ஊட்டு வாயே!

தேனு மில்லை பாலு மில்லை
இங்கு வந்தால்—சற்றும்
தெவிட்டாத இன்ப முண்டு
பங்கு கொள்வீர்!

நீயும் நானும் நிலவும் வானும்
காதலியே—இனி
நிழலைப் போலே தொடரு மின்பம்
காதலியே!

பூவில்மணம் போலே வந்தீர்
காதலரே—இந்தப்
பூவைக் கின்பம் பாய்ச்ச வந்தீர்
காதலரே!

இன்பங் காதல்! இன்பம் வாழ்வு!
இன்பமெங்கும்—புவி
இன்பங் காணும் காத லாலே
என்று மென்றும்!

# புதிய வாழ்வு

அவன் :

நாட்டின் அரசாட்சி புதிதாகையிலே—மிக
நல்லர சாட்சிதான் ஓங்கையிலே
வீட்டில் மணங்கொண்டோம் காதலினுல்—இனி
வெற்றியே வாழ்வில் உண்டாகுமடி!

அவள் :

நாட்டில் உரிமை பிறந்ததனுல்—இனி
நங்கையர் காதல் உரிமை பெற்ருர்
கூட்டுக் கிளிநிலை போனதன்பே—இனிக்
கூடுவோ மின்ப வாழ்வினிலே!

அவன் :

வெற்றித் தமிழரின் கீர்த்தியெலாம்—எங்கும்
விளங்கித் திகழும் சீர்த்தியைப்போல்
பற்றுக் குறையாக் காதலினைச்—சுவை
பார்ப்போம் வாராய் பெண்மயிலே!

அவள் :

காதல் எனுமின்ப லோகத்திலே—நம்மைக்
கட்டும் கவலைகள் ஏதுமில்லை
மோதும்நல் லின்பக் கடலுக்குள்ளே—நன்ருய்
மூழ்கித் திளைப்போம் ஒன்ருகி!

# வெட்கமாயிருக்குதடி!

சொல்ல வெட்கமா யிருக்குதடி
இருந்தாலும்
சொல்லி விடவேமனம் துடிக்குதடி—தோழி
சொல்ல வெட்கமா யிருக்குதடி!

வீட்டுக் கொல்லைத் தோட்டத்திலே ஊஞ்சல்
ஆட்டத்திலே நாளும் நம்மை
வேட்டைக் காரன் போலே வந்து
வேர்க்கவேர்க்கப் பார்ப்பானே அவன்
ஐயையோ சொல்ல வெட்கமா யிருக்குதடி.

தன்னந் தனியாய் நானிருக்க வேலி
தாண்டி யுள்ளே நுழைந்தாண்டி
என்ன மாயமோ நானறியேன்—அவன்
இருகைக் குள்ளே விழுந்தேனடி
ஐயையோ சொல்லவெட்கமா யிருக்குதடி.

## கூத்தாடினாள்

ஆடலில் என்னுளம் கூட வைத்தவள்
மனம் நாட வைத்தவள்
உயிர் தேட வைத்தவள்
ஆடினாள் இசை பாடினாள்
அந்தமிழ் இன்பத் திசை பாடினாள்
கூத்தாடினாள்!

காலுயர்த்தி வலக்கையை
மேலுயர்த்தி மற்றொன்றினை நீட்டி
வேல்விழியை வளைத்தவள்
வில்லெய்தல் காட்டி மகிழ்வூட்டி
ஆடினாள் கூத் தாடினாள்.

மீண்டு முன்னே நடந்தவள்
ஈண்டிந்த நிலத்தை மிகநலத்தோ
டாண்ட மன்னர் தமிழ ரென்று
அங்கையை யுயர்த்தி விரல் குவித்தே
ஆடினாள் கூத் தாடினாள்.

மாபகைமேற் செலும் படைக்
கோபதியின் வீர நடை காட்டிப்
போபகையே எனச் சினம்
பொங்கும் கண் காட்டி எரியூட்டி
ஆடினாள் கூத் தாடினாள்.

# நீயே என் காதலி

செத்தாலும் பிழைத்தாலும் நீயே என் காதலி
சிவலோகம் சேர்ந்தாலும் நீயே என் காதலி
எத்தாலும் உன்னைநான் எய்தியே தீருவேன்
இடையூறு பலவேனும் உன்னைநான் சேருவேன்.

அத்தான்என் றென்னைநீ அழைத்தாலே போதுமே
அதுவேநல் லின்பத்தை அளிக்கின்ற கீதமே
முத்தான வாயால்என் முன்னின்று பாடுவாய்
மூன்றுனைக் காற்றும் சுதிவந்து கூடுமே!

வேண்டாத வெறுப்போடு நூறாண்டு வாழினும்
வீணான வாழ்வாகப் பாழாகிப் போகுமே!
தூண்டாத விளக்கேனும் எரிகின்ற மட்டிலும்
சுகமான ஒளிவீசித் திகழும்நன் றாகுமே!

கண்ணான கண்ணேஉன் கண்ணீரைக் கண்டு
கலங்காத நெஞ்சுந்தான் கலங்குதல் உண்டு
எண்ணாத எண்ணங்கள் எண்ணிநீ நெஞ்சில்
ஏங்குதல் கண்டுநான் உருகினேன் வஞ்சி!

செத்தாலும் பிழைத்தாலும் நீயேஎன் காதலி
சிவலோகஞ் சேர்ந்தாலும் நீயேஎன் காதலி
எத்தாலும் உன்னைநான் எய்தியே தீருவேன்
இடையூறு பலவேனும் உன்னைநான் சேருவேன்!

# ஒருமுறை கண்ட திருமுகம்

ஒருமுறை தான்அவள் திருமுகம் கண்டேன்!
எனினும் அவளையே நான்
உயிரினுக் குயிரெனக் காதலிக் கின்றேன்!
உயிருள்ள வரையிலும் காதலிப் பேனே!

திருமகள் போலவள் தெருவில் நடந்தாள்
இருவிழி குளிர்ந்திட ஒருமுறை கண்டேன்!

ஒருமுறை தான்அவள் திருமுகம் கண்டேன்!

திருவடித் தாமரை அசைந்தது! அன்னம்
தெருவில் நடந்தது போலிருந் ததுவே!
இருவிழித் தாமரை அசைந்தன! உள்ளம்
ஈர்த்தன! தம்வயம் ஆக்கிவிட் டனவே!

ஒருமுறை தான்அவள் திருமுகம் கண்டேன்!

பவளமென் உதடுகள் திறந்தன! முல்லைப்
பற்களின் இன்னொளி பாய்ந்தது கண்டேன்!
அவள்திரு வாயினின் றுதிர்ந்தது தேன்மழை!
அதுதான் யாழோ குழலோ அறியேன்!

ஒருமுறை தான்அவள் திருமுகம் கண்டேன்!

தெருவினைக் கடந்தவள் சென்றுவிட் டாளே!
தெய்வநல் லுலகமே சேர்ந்துவிட் டாளோ?
திருமகள் எவ்விடம் சென்றன ளேனும்
சிந்தையில் ஓவியம் ஆகிவிட் டாளே!

ஒருமுறை தான்அவள் திருமுகம் கண்டேன்!

# பிறர் தோட்டத்துப் பூ

சின்னஞ் சிறிய வயதினிலே—பள்ளி
    செல்லும் வழியில் ஒருசிறுமி
தின்னும் வடையில் மனம் வைத்தேன்—உள்ளத்
    தேவைக் கதனைப் பறித்து விட்டேன்.
பின்னும் ஒருநாள் வீதியிலே—அழகு
    பெற்ற பதுமை தூக்கிவந்தாள்
தன்னை மறந்தே சிறுமியினைக்—கையால்
    தாக்கிப் பதுமை தூக்கி வந்தேன்!

கொஞ்சம் வயது சென்றவுடன்—எழில்
    கூடும் பருவம் வந்தவுடன்
வஞ்சி யவளைப் பதுமையென—எதிர்
    வைத்துச் சிரித்து விளையாட
நெஞ்சந் துடித்திட்ட தென்றாலும்—அந்த
    நேரத்தில் பாவையைத் தூக்கிவரக்
கொஞ்சமும் வன்மை சேரவில்லை—இந்தக்
    கோழை யுள்ளத்தில் வீரமில்லை!

காட்டு மல்லிகை என்னிலதை—நான்
கைப்பற்றிக் கொள்ளல் எளிதாகும்—பிறர்
தோட்டத்துப் பூவைப் பறித்துவந்தால்—மிகத்
தொல்லை யடைந்திட நேருமன்றோ?
கூட்டுக் கிளியினைப் போலவளை—மிகக்
கொஞ்சி வளர்த்திட்ட பெற்றோரே
வீட்டில் அடைத்தவர் எழில் மறைத்தார்—இங்கு
வேதனை கொண்டுநான் வாடுகின்றேன்.

மீசை திருகி நடக்கவில்லை—அந்த
மின்னலைத் தாக்கிடும் எண்ணமில்லை.
ஓசைப் படாமலே கொல்லைவழி—அவள்
ஓடி வருவதை யெண்ணி யெண்ணி
ஆசைப் பட்டிங்கு வாடுகின்றேன்—அவள்
அருட்கண் பார்வையை நாடுகின்றேன்.
பாசங் கொண்டேன் இச்செய்தியினை—அந்தப்
பாவைக் குரைத்திட வேண்டுமடா!

# முத்தம்

முத்தத்தில் முடிந்ததடா உலகம்!
முற்றுபகையாற் போரிற் செல்லும்
சித்தக்கல் மன்னர்களும் பாவை
சிறுமுத்தம் வைக்கப் போர்மறப்பர்!

முத்தத்திற் கொருகன்னி மறுப்பின்
முதிர்ந்தே போர் எழுவதுவும் உண்டு
சித்தத்தை யிழந்திடுவார் மன்னர்
சிறுமுத்தம் பெரும்போரை யாக்கும்!

முத்தத்தை நஞ்சென்பான் உலகில்
முடித்துவிட்டான் வாழ்வுதனை யன்னான்
சித்தமினி மேல்மகிழ ஒன்றும்
சிறிதுமில்லை இவ்வுலகில் திண்ணம்!

முத்தம்பெற மறுக்கின்ற ஒருவன்
முதிர்ந்தஒரு தடியனெனச் சொல்வேன்
எத்தைத்தான் விழைகின்றான் பாரில்
ஏன் தின்னப் பிறந்தானோ சொல்லே!

## கட்டி முத்தம்

வன்ன மயில் தோகை அவள்
வந்தெனுளம் களிக்கக்
கன்னமதில் வைத்தாளே
கனி யிதழின் முத்தம்

ஆவலுடன் வாய்குவித்து
யான் அணுகும் முன்னர்
மேவிடுக என வைத்தாள்
மெல்லிதழின் முத்தம்

சாயும்வகை நாற்காலி
தனிலிருக்கும் போது
மாயமெனப் பின் வந்தே
மங்கைவைத்தாள் முத்தம்.

பொய்யாய்நான் தூங்குவதைப்
போலிருந்த போது
பையப் பைய வந்து வைத்தாள்
பவள இதழ் முத்தம்.

இயற்கையிலே ஈடுபட்டே
இருக்கும்பொழு தன்னுள்
கயற்கண்ணாள் மருட்டி எனைக்
கட்டி யிட்டாள் முத்தம்,

கன்னஞ் சிவக்கக் கணிகையிட்ட முத்தம்
காதல் வடியஅப் பாவையிட்ட முத்தம்
இன்னும் மனத்தைவிட் டேகவில்லை முத்தம்
என்றும் பெறுதற் கெனக்கினிமேல் சித்தம்

வாயின் அமுதம் வடித்தெடுத்தே என்றன்
வரிமீசை தன்னைப் பெரிதொதுக்கி மெல்லத்
தோயும் மதுவெனச் சொல்தொடுத்துப் பச்சைத்
தோகை எனக்கிட்ட தூய்முத்தம் மறவேன்.

காயும் உளத்தைக் கனிவிக்க, ஊறும்
கள்ளை வடித்துக் கனியிதழில் வைத்தே
ஈயும்ஒரு முத்தம் எனைக்கிறுக்கன் ஆக்கும்
எண்ணம் இனிமேல் எனக்கவள்மேல் ஆக்கும்.

மணம்வீசும் கனியுதட்டால்
மங்கை யவள் களிப்புளத்தால்
மணமெனவே இசைத்துவந்து
மகிழ்வுறவே தளிர்க் கரத்தால்
கணவ னெனக் கட்டிமுத்தம்
கனிந்தினிதே யிட்டுவக்கும்
அணங்கினையே இன்பத்திற்கிங்கு
ஆணிவேராம் என்னலாமே!

# இல்லம் விரைந்தேன்

பச்சைப் பசும்புல் தரைதனிலே—நான்
படுத்தேன் எதிரிலே வானழகி
மெச்சத் தகுந்த விதத்தினிலே—தன்
மேனி மினுக்கி நகைத்திருந்தாள்!

மெல்லப் புறவொன்று பெட்டையினைத்—தன்
மீதில் இன்பத்தைப் பொழிகெனவே
சொல்லி யணைத்தது மரக்கிளையில்—நான்
சொக்கிக் கிடந்தேன் தரைதனிலே!

மல்லிகைப் பந்தல் மணமிழைக்கும்—அதை
மாநில மெங்கும் பரப்பிவரச்
சில்லென்று தென்றல் புறப்படுமே—கண்டு
சிரிப்பளே மல்லிகைப் பூவழகி!

இத்தனை காட்சியும் கண்டவுடன்—மிக
என்றன் உடலத்தில் வேட்கை வந்து
சித்தம் கலைத்தது நானெழுந்தேன்—உடன்
சீக்கிரம் வீட்டினைத் தேடிவந்தேன்!

# திருமண வாழ்த்து

வாழ்க வாழ்கவே!
வாழ்க வாழ்கவே!
இன்று முதல் இவர் ஒன்ருய் விட்டார்!—இவர்
என்று மினி நனி நன்ருய் வாழ்க!
வாழ்க வாழ்கவே!

தனித்து வாழ்தல் இவரே மறுத்தார்
இனித்தம் உளமே ஒன்ருய் இணைத்தார்
பனித்த மலர்வாய், கருத்த கூந்தல்,
இனித்த சொல், அடல் ஏமெருடு சேர்ந்து
வாழ்க வாழ்கவே!

நறுமலர் மணம்கமழ் ஜின்றது பாரீர்!
உறவினர் மகிழ்ந்திடும் வாழ்த்தொலி கேளீர்
அறமுள வழியிவர் இனிநடந் திடுவார்
புறவுவான் பறப்பது போல்மிக மகிழ்வார்!
வாழ்க வாழ்கவே!

மைந்தர் நலமும் உறவினர் நலமும்
செந்தமிழ் நாட்டிற் பிறந்தவர் நலமும்
இந்த உலகத் தெல்லவர் நலமும்
எய்தத் தகுபணி இவரினிப் புரிவார்
வாழ்க வாழ்கவே!

## திருமணக் காட்சி

மாவிலை தோரணம் மணமிது காண
யாவரும் வருகென அழைத்தே நிற்க
பூவுங் கொழுந்தும் பூவையர் சூடித்
தூவிய பன்னீர்த் துளியிற் களிக்க,

துள்ளும் மகிழ்ச்சியில் தூய்மை தங்க
உள்ளமு மன்பும் ஒன்றாய் மருவத்
தெள்ளிய மனத்துத் தேன்மொழி யிவளும்,
அள்ளியே அன்பை அவளிடம் ஈந்திடக்

கருதிப் போந்த காளை யிவனும்
திருமணம் காணும் திருநா ளின்றே
திருவளர் செந்தமிழ் நாட்டவர் எல்லாம்
திருமணம் காணத் திரண்டனர் ஒருங்கே!

அத்தனை அன்பையும் இத்தமிழ்ச் செம்மல்
சித்தம் தேக்கிப் புத்தம் புதிய
இத்திரு நாளில் மெய்த்துணை நங்கைக்
கெத்தனை வகையில் வைத்துமகிழ் கின்றான்.

மாலையாய்ச் சூடி மகிழ்ச்சிகொள் கின்றான்
காலை இளங்கதிர் கண்சிவந்து நாண
வேலை யொத்த விழிஒளி மங்கை
பாலைப் பொழிந்து பனிமலர்ச் சிரிப்பைக்

காளைக் கீந்து களிகொள் கின்றாள்.
நாளுக்கு நாளே நாமிரு பேரும்
வேளைக்கு வேளை விருந்துவடித் துண்போம்
பாளைக்கு நிகர்த்த பல்வரி தோன்றப்

பாவை மொழிந்த பாட்டிது; கண்ணால்
ஆவி கவர்ந்தனள்! அவன்தன் கண்ணால்
தூவிய மலரே! துவள் கொடி! தளிரே!
ஓவிய நிகர்த்த ஒண்டொடி! கேளாய்!

இருவரும் திருமணம் புரிந்தன மினிமேல்
வருகிற நாளெலா திருநா ளென்றான்
ஒருமன தாகி உவந்தனர் இனிமேல்
பெரு மனதாகிப் பேரின் பார்ந்து

மழலை பேசும் மக்களைப் பெற்றுக்
குழைந்த அன்பிற் குழந்தைகள் பேச
விழைந்த மனமுடை யாராய்
வளம்பல கெழுமி வாழ்க வாழ்கவே!

## பெருகி வாழியவே!

அன்னமெனெ நடந்துவரும்
    அழகான பெண்ணொருத்தி
தன்னையெதிர் கண்டவுடன்
    தாவியெழும் ஆசையினல்
பின்னுமலர்க் கொண்டையினைப்
    பின்தொடர்ந்தே உறவாடிச்
சென்றிருந்து நட்படையும்
    தேர்ச்சிபெற்ருேர் வாழியவே!

வெட்டுவிழி யம்பாலே
    வீழ்த்துகின்ற கொடியவனைக்
கொட்டுமருட் பார்வையினைக்
    கொண்டவளாய் மாற்றுகின்ற
கட்டழகும் சொற்சுவையும்
    காதலெனும் ஒருணர்வால்
ஒட்டுறவும் கொண்டவர்கள்
    உயர்ந்தோங்கி வாழியவே!

செய்துகொள்ளும் திருமணத்தால்
    சேர்ந்துகொள்ளும் ஒருமனத்தால்
மெய்துவளும் பூங்கொடியின்
    மேல்வைத்த காதலினல்
எய்துகின்ற வாழ்க்கை நல்ல
    இல்வாழ்க்கை என்றறிந்து
செய்துவரும் நல்லறத்தார்
    சிறந்தோங்கி வாழியவே!

புன்னகையைச் சிந்துகின்ற
போதினிலும், தண்டையிட்ட
பொற்காலால் உதைக்கின்ற
போதினிலும், கைவிரலைச்
சின்னமலர் வாய் சுவைத்துச்
சிரிக்கையிலும், தவழ்ந்துமடி
சேர்கையிலும் இன்புறுத்தும்
செல்வமிகப் பெருகிடவே!

இல்லறத்தில் வளர்ந்தோங்கி
ஈருடலும் ஒன்ருகி
எய்துகின்ற உயிர்ப்பினிலே
இன்பமுற்றுப் பிள்ளைபெற்றே
நல்லறத்தார் வாழியென்று
நாடெங்கும் புகழ்ந்தேத்த
நாள்வளர்க்கும் முதுமையிலும்
நன்மை பெற்று வாழியவே!

பொங்கும் இளம்பருவம் பூக்கும் களவெல்லாம்
தங்கிச் செழிப்படையத் தாம்விரும்பி—மங்கலமாய்

ஆட வனுக்கோர் அழகுமலர்ப் பூங்கொடியைத்
தேடிப் பிடித்துத் திருமணத்தால்—கூட்டுவைத்து

வாழ்க்கை தொடங்குவதை வாடிக்கை யாக்கிவைத்த
மாக்கிழவர் முன்னோர் மலரடியில்—சேர்க்கின்றேன்

என்றன் வணக்கத்தை! இங்கு மணங்கமழும்
மன்றலுற்று நெஞ்சில் மகிழ்வேற—நின்றிருக்கும்

மாப்பிள்ளையும் பெண்ணும் மனமொத்து வாழ்வதற்கே
ஏற்புடைய இல்லறத்தின் ஏற்றத்தைப் — பாப்புனைந்து

கூறவந்தேன்; இங்குக் குழுமி யிருப்போரே
வீறு மொழியால் விளக்குங்கால்—மாறுபட்டுத்

தோன்றும் கருத்தெல்லாம் தோதில்லை என்றாலும்
ஊன்றிக் கவனித்தால் உண்மையென்று—தான்புரியும்

குத்துகின்ற முள்ளெனவே கூறும் கருத்துதனைச்
சித்தத்தால் ஆராய்ந்தால் தேனென்றே—புத்தி

தெளிவாகும் அஞ்சாமல் செந்தமிழில் சொல்லும்
மொழியறிந்தால் இன்ப முடிவாம்—தெளிவற்ற

முன்னோர் வழக்கத்து மூடக் கருத்தெல்லாம்
பின்னோரும் தாம்தொடர்ந்து பின்பற்றும்—தன்மையினால்

எந்நாட்டும் முன்னேற்றம் ஏறிவர நம்முடைய
தென்னாட்டிற் பிற்போக்கே சேர்ந்திருக்க—முன்னோடும்,

வேற்றார்முன் நம்தலைகள் வெட்கிக் குனிகின்ற
மாற்றத்தைக் கண்டு மனம்துடித்தேன்—போற்றியவர்

பாராட்டும் வண்ணம் பழந்தமிழர் பெற்றிருந்த
சீராட்சி யிங்குத் திரும்பிவர—நேரான

பாதை நடப்போம்; பகுத்தறிவுக் கொள்கையெலாம்
சாதிக்கும் உள்ளம் தனைப்பெறுவோம்—மேதைகளாய்

மாறிச் சிறப்படைவோம்; வாழ்வில் மடமையென
ஊறிக் கிடக்கும் உளைச்சேற்றைத் தூறெடுப்போம்

இல்லறமே நல்லறமாய் ஏற்றுக் களிப்படைவோம்
நல்லோர்கள் வாழ்த்த நயந்து!

எதிர்பார்க்கும் இன்பத்தை ஏந்து தற்கே
எய்துகின்ற துன்பமெல்லாம் பொறுத்தி ருந்து
புதுப்புனலாய், எழில்மலராய்த் தோன்றி நெஞ்சம்
பூரிக்க வைக்கின்ற மகவைக் கண்டு
நிதிபெற்ற புலவன்போல் மகிழும் அன்னை
நினைப்பினிலே இன்பம்தான் ஊற்றெடுக்கக்
குதித்தோமே அன்றுமுதல் அன்னைக் கென்றும்
குழந்தையென நின்றாலும் வளர்ந்து வந்தோம்!

பள்ளியிலே ஆசிரியர் பாடம் சொல்லப்
பாவலனாய் மாறுமொரு வளர்ச்சி பெற்றோம்
துள்ளியதும் குதித்ததுவும் சுட்டி யென்ற
தூற்றுதலைப் பெற்றதுவும் நினைத்துப் பார்த்தால்
உள்ளமெலாம் குறுகுறுக்கும் இன்பம் தோன்றும்
ஊமையைப்போல் நாகரிக உலகில் இன்று
கள்ளஉளத் தைமறைத்துப் பேசும் போது
கணக்கெடுத்துச் சொல்வழங்குந் துன்பம் போகும்!

துறந்தவர்போல் பிறர்எதிரில் பேசி னாலும்
துணைவியவள் தனித்திருக்க நேரும் போது
மறந்திடுவோம் வளர்ச்சியினைச் சிறுவ ராகி
மங்கையொடு விளையாடத் தொடங்கி நிற்போம்!
சிறந்திருக்கும் நாணத்தால் தலைகு னிந்தால்
சிறுகுறும்பு பெரிதாகும்! இன்பம் சேர்க்கும்!
அறந்தருமோர் இன்பத்தை வெல்லும் இன்பம்
அழகியுடன் விளையாடும் இன்ப மென்பேன்!

விளையாடத் துணையாகி இன்பம் சேர்த்து
வேடிக்கைப் பேச்சாலே துன்பம் போக்கிக்
களையாமல் அன்பனுக்குப் பணிகள் செய்து
கதைபேசும் மனையாட்டி, இன்பப் பாவை!

வளையாடக் கைவீசி நடந்து செல்வாள்
வரும்போதும் போம்போதும் 'மிஞ்சி' பேசும்!
களையான திருமுகத்தில் பொட்டு வைத்துக்
காட்சிதரும் மனைவிளக்கு கலைக்கண் காட்சி!

கைமணக்கும்; கைவைத்த பொருள்ம ணக்கும்
களைந்துவைத்த புத்தரிசி தான்ம ணக்கும்;
செய்துவைத்த காய்கறிகள் தாம்ம ணக்கும்;
சிற்றிலையின் சோற்றினிலே நெய்ம ணக்கும்;
மெய்மணக்கும்; பொன்னுடலில் ஒட்டியுள்ள
மேலாடை தான்மணக்கும்; மூடிம ணக்கும்!
கொய்துவைத்த பூமணக்கும்; கோதை நெஞ்சில்
குடியிருக்கும் மணவாளன் உளம்ம ணக்கும்!

இருகண்ணும் பார்க்கின்ற பொருளு மொன்றே
இரண்டுடலும் சேர்கின்ற உயிர்ப்பும் ஒன்றே
பெருகிவரும் மழைநீரின் வாய்க்கால் ஒன்றே
பெறுமின்பம் அனைத்துக்கும் இல்லம் ஒன்றே
வருகின்ற பெருமக்கள் வாயி லெல்லாம்
வழங்குகின்ற வாழ்த்தொலியும் ஒன்றே ஒன்றே
திருமணத்தால் சேர்கின்ற இல்ல றத்தில்
தினந்தினமும் பெருக்கெடுக்கும் இன்ப மொன்றே

கற்புடைய மனைவியுடன் ஒழுக்க மொன்றே
கற்றிருக்கும் மணவாளன் சேர்ந்தி ருக்கும்
பொற்புடைய இல்லறத்தைப் போலே இன்பம்
பூவுலகில் எங்கணுமே இல்லை என்பேன்.
கற்பனைக்கும் அப்பாலே இருப்ப தாகக்
காட்டுகின்ற உலகத்தும் காதல் என்னும்
அற்புதமாம் இன்பத்தைப் படைப்ப தற்கே
யாராலும் முடியாதென் றுறுதி சொல்வேன்!

ஒத்திருக்கும் இளம்பருவம் காதல் நெஞ்சம்
உடையவர்கள் மணமக்கள் என்ருல் அன்பு
வைத்திருக்கும் மனத்தின்பம் வளர்ந்தி ருக்கும்
வாழ்க்கையிலே நிலைத்திருக்கும் ஒருமை யெண்ணம்
சத்திருக்கும் பழம்போலே; உரமி ருந்தால்
தழைத்திருக்கும் செடிபோலே இல்ல றத்தில்
ஒத்திருக்கும் மனப்பான்மை குடியி ருந்தால்
உயர்ந்திருக்கும் குடித்தனமும்! வாழ்க்கை வெல்லும்!

இன்புற்று வாழ்கின்ற இல்ல றத்தில்
எய்துகின்ற துணைநலத்தால் மக்கள் பெற்றே
அன்புடைமை விருந்தோம்பல் இன்சொற் கூறல்
அயலவர்கள் செய்ந்நன்றி யறிதல், என்றும்
நின்றிடுதல் நடுநிலையில் அடக்கங் கொள்ளல்
நெறியொழுகல் பொறையுடைமை அழுக்கா ருமை
என்றுந் தீ வினையச்சம் இவற்றைக் கொண்டே
ஏற்றபுகழ் பெற்றிருக்க வேண்டும் நன்றே!

இளம்பருவக் கனவெல்லாம் எய்தி நல்ல
இன்பத்தைத் துய்ப்பதற்குக் காத்தி ருக்கும்
உளம்படைத்த கட்டழகி வண்ணத் தோளில்
ஒன்றவரும் ஆணழகன் இருவர் தாமும்
களமடைந்த வீரரெனத் துடித்தி ருப்பார்
காதலெனும் போரினிலே வெற்றி காண
இளந்தென்றல் முழுநிலவு மணப்ப டுக்கை
இரவுவரும் நேரத்தை எண்ணி யெண்ணி!

ஆசையுடன் மாப்பிள்ளை கனவு காண
அவர்பெற்ருேர் எண்ணமெல்லாம் பொருளைப் பார்க்கும்
வாய்சிவந்த பெண்ணுக்குச் செய்தி ருக்கும்
வைரநகை தங்கநகை குறைச்ச லின்றிப்

பேசிவைத்த சீர்வரிசை அனைத்தும் தந்து
பெண்சாமான் அடுக்கிவைத்த கோலம் பார்த்துக்
காசுபணம் ரொக்கமுடன் மாமி சாமான்
கனவரிசை சரிபார்த்துக் கணக்குப் பார்ப்பார்.

கைபிடித்த கணவனுடன் மங்கை சென்று
கலகலெனச் சிரித்திருந்து பேசி விட்டால்
மைவைத்துப் பிடிக்கின்றாள்; மயக்கு கின்றாள்;
மாபெரிய கைகாரி என்று சொல்வார்,
பெய்திருக்கும் அன்புடையாள் மீது கொண்ட
பெருங்காதல் மணவாளன் வேறு பெண்ணை
எய்துதற்கு நினையானென் றுணர்ந்து கொண்டால்
இவள்மயக்கம் நன்றென்று தெரிய லாகும்!

இல்லறத்தின் வெற்றிக்குத் தமிழர் நாட்டில்
எதிரியென நிற்பவர்கள் மாமி நாத்தி
சொல்லுகின்றேன் எனநினைத்துக் கோபம் கொண்டு
தூற்றாதீர்! நிகழ்வதையே சொல்லு கின்றேன்!
புல்லெனினும் கணவனையே பொருளாய்க் கொண்டு
புகுந்துவிட்ட மருமகளை ஏசி நின்றால்
நல்லவளின் மலருள்ளம் கசங்கிப் போகும்
நங்கையிடம் மகன்பார்க்கும் இன்பம் போகும்!

உயிரிலொரு பாதியென இருக்கும் பெண்ணின்
உளம்வாடப் பொறுப்பதுண்டோ கணவன் உள்ளம்
பயிரில் ஒரு புறம்பூச்சி யரித்து விட்டால்
பாழாகிப் போகாதோ வயல்கள் முற்றும்
அயராமல் பெற்றெடுத்து வளர்த்து விட்ட
அன்னைக்குப் பயப்பட்டு மனைவி தன்னைத்
துயர்ப்படுத்தும் கணவனொரு கோழை என்பேன்
துணைவிநலம் காப்பவனே வீர னென்பேன்!

பெற்றெடுத்த தாயைத்தான் போற்ற வேண்டும்
 பிழையில்லை உயர்வேயாம் ஒப்பு கின்றேன்
குற்றேவல் செய்யுமொரு பெண்ணிற் கீழாய்க்
 கொடுமையுற மருமகளை நடத்து கின்ற
சிற்றறிவு தாய்க்கிருந்தால் திருத்த வேண்டும்
 சேயிழைக்குத் துணையாக இருக்க வேண்டும்
பெற்றெடுத்த தாயேனும் பெண்டாட் டிக்குப்
 பெருந்துன்பம் தருவாரேல் எதிர்க்க வேண்டும்.

கட்டிவைத்த மனைவியையே வீட்டில் வைத்துக்
 கடல்கடந்து பொருள் திரட்டச் செல்லு கின்ற
கெட்டவொரு பழக்கத்தால் ஆண்க ளெல்லாம்
 கெட்டுவிட்டார்! பெண்களுக்கும் இன்ப மில்லை!
வட்டிக்கு வட்டியெனப் பொருள்பெ ருக்கி
 வாழ்ந்தவர்கள் சொத்தெல்லாம் வைப்புக் காசு!
தொட்டுவிட்ட மனைவிதனைத் தனியில் வைத்துத்
 தொலைபோகும் பழக்கத்தை நிறுத்த வேண்டும்!

கணவனொரு பாதியெனில் மனைவி பாதி
 காணுகின்ற இல்லறத்தின் ஒழுங்கு நீதி
மணவாழ்க்கை வெற்றிபெற வேண்டு மானல்
 மனத்தாலே இருவரும்தாம் ஒருமை யாகிக்
கணந்தோறும் ஒருவர்நலம் ஒருவர் கண்டு
 கண்டவர்கள் புகழ்ந்தேத்தும் நிலையில் நின்று
குணமொத்து மனமொத்துக் குடித்த னத்தில்
 கூடியிருந் தாடிநலம் பாடி வாழ்க!

கழுத்துக்குத் தாலியிட்ட கணவ னோடு
 கைப்பிடித்து நடப்பதற்குக் கூசு கின்ற
பழுத்திருக்கும் மாங்கனியைப் போன்ற பெண்கள்
 படைதிரண்டு கோயில்குளம் தீர்த்த மென்று

கொழுத்துப்போய் ஊர்சுற்றித் திரிந்தி ருப்பார்
கொண்டவனே தெய்வமெனக் கொள்ள மாட்டார்
அழுத்தமுள்ள வடசொல்லின் தருப்பைப் புல்லர்
அடிவணங்கிப் படியளப்பார் வெட்கம்! வெட்கம்!

ஊர்க்கதைகள் பேசுவதும், பொழுது போக
உறவினரை ஏசுவதும் சண்டை யிட்டுச்
சீர்பெருகும் நன்னாளில் கூட்டு விட்டுச்
சினம்பெருக்கி வாழ்வதுவும், குறையை எண்ணி
நேர்மையின்றி நடப்பதுவும் வாழ்வில் என்றும்
நிகழ்கின்ற தொடர்கதையாய்ப் போன தையா!
சீர்திருந்தும் மனப்பான்மை, அறிவுக் கொள்கை
தினம்பரவி நம்நாடு திருந்த வேண்டும்!

எங்கிருந்த போதினிலும் கணவ னோடே
இருப்பதற்கு மனைவிக்கும் உரிமை யுண்டு.
வங்கத்துக் கடல்கடந்து போகும் போதும்
வழித்துணையும் வாணிபத்தில் துணையும் செய்யப்
பங்கிருக்க வேண்டுமன்பு மனைவியாட் டிக்குப்
பலநாட்டு நாகரிகம் தெரிய வேண்டும்
மங்கையுடன் சேர்ந்திருக்கும் ஆட வர்க்கே
மற்றொருத்தி தனைநினைக்கும் நிலைமை யில்லை!

செங்கனிவாய் இதழ்துடிக்க இரவு நேரம்
சிற்றறைக்கும் அடுக்களைக்கும் சென்று சென்று
தன்கணவன் வருகைக்குக் காத்தி ருந்து
தையலவள் கண்ணிரண்டும் பூத்து நிற்கப்
பொங்கிவரும் இளம்பருவ சுகத்தைக் காணப்
பொருத்தமுள்ள காலத்தை மறந்து விட்டே
எங்கிருந்தோ சிட்டாடிப் பணமி ழந்தே
ஏமாறும் கோமாளிக் கென்ன சொல்வேன்!

ஒருத்தியுடன் ஒருவனுறும் மகிழ்வை யெண்ணின்
உலகத்தில் அதுபோல வேறொன் றில்லை.
பொருத்தமுள்ள மனைவிதனை விட்டு விட்டுப்
பூவுலகிற் பிறமாதர் நாட்டங் கொண்டோன்
வருத்தமுற்றுப் பிணியுற்று வாட நேரும்
வாழ்வினிலே தீராத துன்பம் சேரும்
கருத்துடனே நலந்தேடும் மனைவி தன்னைக்
கண்போலக் கருதுபவன் நலம்சிறக்கும்!

உடல்தளர்ந்து முதுமையுற்றுக் கிழவி யாகி
உடனிருக்கும் மனைவிக்கும் உள்ளம் உண்டு
நடப்பதற்கும் முடியாது படுக்கை மீது
நலிவடைந்து கிடக்கின்ற போதும் அன்புத்
தொடர்பிருக்கும் மணவாளன் அருகி ருக்கும்
தூயநினைப் பெழும்போது மனங்க ளிக்கும்
கடற்கரையும் முழுநிலவும் தென்றல் காற்றும்
கருத்தினிலே புகுந்தின்பம் மிகுத்துக் காட்டும்!

நல்லறிவுக் கொள்கையுள்ள தேனப் பர்க்கும்
நங்கையுண்ணா மலைக்குமிங்கு நடத்தி வைக்கும்
சொல்லரிய அழகுமண விழாவின் போது
துள்ளிவரும் இன்பத்தால் மனந்து ளும்ப
நல்ல தொரு செந்தமிழில் கவிவ டித்து
நாச்சியப்பன் வாழ்த்துகின்றேன் அன்பு மக்காள்
இல்லறத்தைத் தொடங்குகின்றீர் வெற்றி சேர்க
என்றென்றும் இன்புற்று வாழ்க நன்றே!

# ஈடில்லா இன்பம்

காணாத போதெல்லாம் உள்ள ரங்கில்
காட்சிதந்தே ஆடுகின்றாள்; காணும் போதோ
வீணாகத் தன்னருகில் இழுக்கின் றாளே!
'வெட்கமின்றி நானிழுத்தேன் கையை' என்று
பூணாத பழியென்மேல் பூட்டு கின்றாள்
புரியாமல் சொல்கின்றாள் அதனா லென்ன?
காணாத இன்பத்தைக் காணு கின்றேன்
கவின்வாழ்வு பெறுகின்றேன் மகிழ்கின் றேனே!

நடக்குங்கால் எழுகின்ற சதங்கைப் பேச்சும்
நவிலுங்கால் எழுகின்ற தமிழின் பேச்சும்
அடிக்கடிதாம் போட்டியிடும்; வழக்கு நீளும்!
அதற்குள்ளே சிரிப்பொன்று குறுக்கில் வந்தே
முடிக்காதே நானொருவன் இங்குண் டென்று
முழக்கிடுமாம்; நெறித்தலைவன் என்றன் நெஞ்சோ,
கிடக்கட்டும் இவையெல்லாம் என்று கூறிக்
கீழ்க்கடையில் புருப்பறக்கும் விழியைத் தாவும்!

தென்றல்வரும் பசுஞ்சோலை தன்னில் முல்லை
சேர்க்கின்ற பேரழகு பெருகு மேனும்
மின்னிமின்னி விண்மீன்கள் வானந் தன்னில்
விடியுமட்டும் பேரொளியை எழுப்பு மேனும்
பொன்வார்த்த மேனியிலே தோன்றித் தோன்றிப்
புத்துணர்வை எழுப்புகின்ற அழகின் பாய்ச்சல்,
என் கண்கள் தமைவந்து மோதுங் காலை
எழுமின்பக் காட்சிக்கோர் ஈடில் லையே!

மாங்குயில்கள் கூவிடுமோர் ஒலியி லேனும்
மகரயாழ் மீட்டவரும் இசையி லேனும்
பாங்கிருக்கும் மேடையிலே அமர்ந்து பாணன்
பக்கத்துக் கருவியெலாம் முழக்கும் போது
தீங்கவிதை செந்தமிழிற் பாடி, என்றன்
செவிகுளிர எழுப்புகின்ற பண்ணி லேனும்
நான்கேட்க மென்மொழியால் அவளெ ழுப்பும்
நாதத்திற் கீடான இன்ப மில்லை!

காற்ருடி சுற்றுங்கால் மேல்எ ழும்பும்
காற்றுவந்தென் உடல்குளிரத் தழுவும் போதும்
கோற்றொடியார் பலர்கூடிப் பறித்து வந்து
கொட்டிவைக்கப் பூக்காரன் கட்டி வைத்த
நாற்றமலர் மாலையிரு தோளும் மார்பும்
நலமடையக் குளிரடையப் புரளும் போதும்
மாற்றுடையோ டிரவினிலே அவள்வந் தென்றன்
மனங்குளிரத் தழுவிடுமோர் இன்ப மில்லை!

சோற்றினிலே நெய்மணக்கும்; குடிக்கும் தண்ணீர்ப்
பானையிலே நன்னாரி வேர்ம ணக்கும்;
காற்றினிலே பூமணக்கும்; பையில் வைத்த
கைக்குட்டை யிலேஅத்தர் தான்ம ணக்கும்;
போற்றிசெய்யும் கோயிலிலே சாம்பி ராணிப்
புகைமணக்கும் என்றாலும் மிகம ணக்கும்
நாற்றமலர் அவள்மேனி நுகரும் இன்பம்
நல்லின்பம் அதற்கீடு வேறில் லையே!

சத்தமிட்டு மலரணைந்து தேன்கு டிக்கும்
கருவண்டு தனக்கேனும், மாம்ப ழத்தைக்
கொத்திவிட்டுப் பறக்கின்ற பச்சை வண்ணக்
கிளிக்கேனும், கொத்தடிமை வேலை செய்து

இரத்தத்தைப் பிழிந்துவிட்டுப் பழைய சோற்றைச்
சுவைத்துண்ணும் ஏழைமக்கட் கேனும், பற்றி
முத்தமிட்டே அவள்கன்னக் கதுப்பை யுண்ணும்
போதடையும் இன்பத்திற் சிறிது மில்லை!

கண்ணுக்கோ மயிலைப்போல் காட்சி தந்தாள்
கவின்வாய்க்கு மாம்பழத்துக் கன்னம் தந்தாள்.
பண்ணமைந்த இசைதந்தாள் செவியி ரண்டும்
பருகுதற்கு! கரும்பான மேனி தந்தாள்
கண்ணொன்று போயவளை! மற்று மங்கே
கமழ்மணத்தைத் தந்துவிட்டாள் நுகர்வ தற்கே!
எண்ணத்தில் வரும்போதில் இனிக்கின் றாள்என்
இதயமெலாம் குளிர்வித்து மகிழ்கின் றாளே!

# நிலைத்த இன்பம், காதல்!

இனித்திருக்கும் காரிருளில் நீல வானில்
　　எழுந்துவரும் பந்தனைய நிலவின் கீழே
தனித்திருக்கும் உப்பரிகை மேலே, தென்றல்
　　தழைக்காட்டுப் பூமணத்தை வாரி வீசப்
பனித்திருக்கும் செவ்வாயில் முல்லை பூத்துப்
　　படர்ந்துவரும் தளிர்க்கொடியைச் சுற்றி யென்றன்
மனத்திருக்கும் ஆசையெலாம் நிறையக் கண்டேன்!
　　மற்றதனைச் சொற்படுத்தும் வகையைக் காணேன்!

தணியாத காதலினால் ஒன்றாய்க் கூடித்
　　தனித்திருவர் காணுகின்ற இன்பந் தன்னை
அணியாரும் பாவாகக் கதைப்ப தென்றால்
　　யாராலும் இயலாது; காதல் கொண்டு
மணியான சிற்றிடையை வளைத்த பேரும்
　　மனந்திறந்து வாய்திறந்து கூறு தற்குத்
துணியாரே; துணிந்தாலும் உலகப் பேச்சில்
　　சொல்லொன்றும் இல்லையெனக் கண்டு கொள்வார்!

மாதொருத்தி தனைக்கண்டு மயங்கி நின்று
　　மற்றவளின் உளங்கவர்ந்து காதலாகி
மோதிவரும் துன்பமெலாம் எதிர்த்து நின்று
　　முன்னேறிக் கைகூடும் இன்பம் கண்டார்
பாதியென நின்றஉடல் இரண்டு கூட்டிப்
　　பக்குவமாய் ஒன்றாக்கி உயிரைச் சேர்த்து
மேதினியில் தாம்கண்ட சுவையை யெங்கும்
　　வெளிப்படுத்த நினைத்தாலும் தோல்வி காண்பார்!

பருவமெனும் ஒரு நிலையில் நெஞ்ச மென்னும்
பாற்குடத்தில் தோன்றுகிற ததும்ப லொத்தே
உருவாகும் உணர்ச்சியினால் உந்தப் பட்டே
உண்டாகும் காதலினை விளக்க லாமோ?
உருவான எழிலோடு வருவா னான
ஒருமடந்தை நெஞ்சாரக் காத லிக்கும்
திருவாளர் மலைத்தோளிற் சேரும் போது
தீம்பாலால் நிறைந்தகுட மாகும் காதல்!

மோதிவரும் கடலலைகள் போல நெஞ்சில்
முன்னேறும் உணர்ச்சியிலே ஆசை பொங்கும்!
பாதியிலே மலைபோலே எழும்பி வந்த
பச்சையலை கரைமீதே மோதி வீழும்
காதலிலே பொங்கியெழும் நெஞ்சத் தானும்
கட்டழகி யொருத்தி கடைக் கண்ணின் பார்வை
மோதியபின் அவளடியில் வீழ்ந்தி ருப்பான்!
மொய்குழலாள் ஆதரித்தால் உயிர்பி ழைப்பான்!

கிணற்றடியில் பூத்திருக்கும் மல்லி கைக்கும்
கேடுவரப் பொறுக்காத உள்ளங் கொண்டாள்
மணற்கரையில் தன்மடியில் படுத்துக் காதல்
மணங்கொண்டான் ஒருதுன்ப மடையக் கண்டால்
தணற்புழுவாய்த் துடித்திடுவாள் காப்ப தற்குத்
தக்கபல அருஞ்செயல்கள் முயன்று செய்வாள்
எணற்கரிய இன்பமடா காதல் இன்பம்!
ஈருயிரும் ஒன்றாகி இயங்கு மின்பம்!

நள்ளிரவில் மின்னுகின்ற விண்ணின் மீன்கள்
நாடெல்லாம் ஒளிபரப்பும் நிலவு மங்கை
கள்ளரிவர் பாராமல் வீட்டி னுள்ளே
கட்டிலறை யுள்ளடைந்து விளக்க ணைத்துக்

கொள்ளுகின்ற இன்பத்தைக் காம மென்றார்
 கூடுகின்ற இன்பத்தைத் துன்ப மென்றார்
அள்ளுதொறும் குறையாமல் கொண்ட மட்டும்
 அடங்காத இன்பத்தைச் சிறிய தென்றார்!

நேற்றுவந்தாள்; அவளேதான் இன்றும் வந்தாள்;
 நீடுமின்ப வாழ்வினிலே வருவா ளென்றும்!
தோற்றுமெழில் குறைவதுண்டு முதுமை வந்து
 தோன்றுவதும் உண்டதனை மறுக்க வில்லை!
ஏற்றுமொரு விளக்கதுதான் பழைய தானால்
 எரியுங்கால் ஒளிகுறைவ துண்டோ சொல்வீர்?
ஊற்றுகின்ற எண்ணெயினால் வெளிச்சம் நிற்கும்;
 ஒளிசெய்வாள் காதலினால் வாழ்வு முற்றும்!

# குறள் நெறிக் குடும்பம்

## அவை யேற்றம்

தென்றலுக்கு மணஞ்சேர்க்கும் பூவைப் போலே
திரைப்படத்திற் சுவைகூட்டும் பாட்ட லிப்போன்
இன்றுகுறட் கவியரங்கம் தன்னில் வந்த
இசைக்கவிஞன் செந்தமிழன் கண்ண தாசன்
நன்றினிது தலைமைபெற்று வீற்றி ருக்க
நாட்டினரே திருக்குறளின் தலைவன் சீரை
மன்றேறிப் பாடுகின்றேன் வணக்கம்! அன்பு
மனங்கவரும் தமிழ்க்கவிதை கேட்பீர் கேட்பீர்!

## தலைவன்

தோல்சிவந்த மேனிகொண்ட பெண்ணொ ருத்தி
தோன்றிவரக் கண்டவுடன் காளை யர்தாம்
மால்படிந்த உளத்தினராய்ச் சுற்றி வந்து
மனத்தினிலே இலக்கியத்தில் வரும்த லைவர்
போல்நினைத்துக் கொண்டிடுவார்; காதல் சீட்டுப்
போக்கிடுவார்; தனியிடத்தைத் தேடி நிற்பார்
சேல்நிகர்த்த விழியாளைக் கண்டு நெஞ்சத்
தேன்குடத்துக் கற்பனையை வடித்து வைப்பார்!

அன்னவளின் செந்நிறத்தை மங்கச் செய்யும்
அழகுநிறம் கொண்டவளாய் இன்னொ ருத்தி
தன்னெதிரில் வரக்கண்ட கணமே நெஞ்சம்
தாவிமரக் கிளைமாறும் மந்தி போல
முன்னவளை மறந்துவிட்டுப் புதிய பெண்ணின்
முன்சென்று நின்றேங்கும்; காதல் சீட்டும்
பின்தொடரும்; தனியிடத்தை நாடும்; காதல்
பிறிதொருத்தி வரும்வரைக்கும் நிலைத்தி ருக்கும்!

கோவையிலே ஒருபெண்ணைக் காத லித்துக்
 கூடலிலே ஒருத்தியுடன் மணமு டித்துத்
தேவையுள்ள போதெல்லாம் வேறு வேறு
 தேடுகின்றார் சிலதலைவர் இந்த நாளில்!
காவியத்து நாயகரின் மேன்மை பற்றிக்
 கழகத்துக் கூட்டத்தும், பத்தி ரிக்கை
ஓவியத்தும் காண்பதன்றித் தலைவர் என்போர்
 உள்ளத்தில் நடைமுறையில் காணற் கில்லை.

எழுச்சியுறும் பருவத்துப் பசியைத் தீர்த்தும்
 இன்முகத்தில் மலர்ச்சிரிப்பை விரித்தும், தேனைக்
குழைத்துவைத்த இன்சொல்லால் குளிர வைத்தும்
 கொஞ்சிவிளை யாடியின்ப முத்தம் தந்தும்
அழைத்திருந்த போதெல்லாம் தனித்து வந்தே
 அன்புமழை பொழிந்திருந்த அழகை; இன்பந்
தழைத்திருக்கும் பூக்காட்டைத் தவிக்க விட்டுத்
 தான்வாழ நினைப்பவனும் மனித னாமோ?

அன்றன்று பூத்துவிழும் மலர்கள் போல
 அவதாரம் எடுத்துவரும் காதல் தானும்
அன்றன்றே விழுந்துவிடும் என்ற சேதி
 அறியாமல் தற்காத்து நெறிநில் லாமல்
நின்றபழி தீர்வதற்கு நஞ்சு தின்றும்
 நிறைகுளத்தில் பெருங்கடலில் கிணற்றில் வீழ்ந்தும்
சென்றொழிந்த மாதர்பலர் அந்தோ அந்தோ
 திருக்குறளின் நெறியுணர்ந்தால் தீமை யுண்டோ?

திருக்குறளின் நெறித்தலைவன் காத லித்த
 சேயிழையாள் தனைப்பிரிய நினைப்ப தில்லை!
உருக்கொண்ட காதலெனும் தீயைப் பற்றி
 உரைக்கின்ற தத்துவத்தின் விளக்கம் காணீர்;

நெருக்கத்தில் வரும்போது குளிர்ச்சி காட்டி
நீங்குகின்ற போதுசுடும் தீயைக் கொண்டாள்!
பெருக்கெடுக்கும் அமுதனைய தோளும், காதல்
பிணிதீர்க்கும் மருந்துமுடை யாளே என்றான்!

மயில்தானோ அழகுமகள் தானோ இந்த
மங்கையென மயங்கியவள் தாக்கும் கண்கள்
உயிர்கொல்லும் கூற்றமென உணர்ந்து, கொல்லும்
ஒருகளிற்று மதவெறியை நிகர்ப்ப தான
உயர்ந்திருக்கும் மார்பகத்தைக் கண்டு நெஞ்சில்
உண்டாகும் அச்சத்தால் வலிமை மாறித்
துயர்தீரக் காதலெனும் மதுக்கு டிக்கத்
தோகைகடைக் கண்பார்வைக் கேங்கி நிற்பான்!

நோக்குமவள் பார்வையினால் நோய்வாய்ப் பட்டுஅந்
நோயொடுங்கக் கண்களவு கொண்டு நிற்பான்
தாக்குமவள் பார்வையிலும் சொல்லி னுள்ளும்
தனைவிரும்பும் குறிப்புளதோ என்று ராய்ந்தே
ஏக்கமுடன் பார்த்திருப்பான்; புன்சி ரிப்பில்
ஏந்திழையாள் கருத்தறிவான்! பாயும் கண்கள்
தோக்கொத்த போதிருவர் நெஞ்சத் துள்ளும்
நுழைந்துவிடும் காதலுக்குச் சாவே யில்லை!

தெய்வீகக் காதலென எதையோ சொல்வார்
திருக்குறளில் அதுபற்றிக் கண்ட தில்லை
பெய்கின்ற மழைப்புனலும் நிலத்தில் வீழப்
பிளவுடைய விதையதுதான் முளைத்தல் போல
மைநின்றே எழில்கூட்டும் கண்ணின் பார்வை
மழைப்புனல்தான் ஆடவனின் செங்கண் என்னும்
செய்நிலத்தில் வீழுங்கால் காதல் என்னும்
செடிமுளைக்கும்! அன்பாலே செழிக்கும்! ஓங்கும்!

ஒத்திருக்கும் பருவத்தார் இருவர் கூட
உள்ளத்தில் எழும்பிவரும் உணர்ச்சி யாலே
ஒத்தமனம் உடையாராய்த் தங்கள் வாழ்வில்
ஒருவருக்கு மற்றொருவர் உடைமை யாகி
நித்தநித்தம் அவருருவும், அன்பும் பண்பும்
நினைத்திருக்க நினைத்திருக்க வளரும் காதல்!
பித்தர்மொழி தெய்வீகப் பேச்சை நம்பிப்
பெருங்காதல் சிறிதென்று வெறுக்க வேண்டாம்.

தன்னெஞ்சங் கவர்ந்தவளும் ஒருத்தி யேதான்!
தன்காதல் அவளொருத்தி யிடத்தி லேதான்!
என்றுரைப்பான்! அவளுயர்வைத் தெரிவிக் கின்றான்!
எழிற்பூவும் வான்மதியும் இவளை யொக்கும்
என்றுரைக்க முடியாதே; அவையி ரண்டும்
எவர்வரினும் முகங்காட்டும்; குவளை நாணும்
சின்னவிழி மெல்லியலோ என்னை யன்றித்
திருமுகத்தைப் பிறர்காணத் தோன்ற மாட்டாள்!

தன்னையவள் காதலிக்கும் குறிப்ப றிந்து
தாவிவரும் பேரன்பால் ஒன்று சேர்ந்து
பின்னையவள் நலங்கூறிக் கொண்ட காதல்
பெருஞ்சிறப்பை யெடுத்தெடுத்துக் கூறு கின்றான்!
என்னையுடல் என்றுரைத்தால் உயிரே போல்வாள்
எழில்மடந்தை யவள்பிரிந்தால் சாவு நேரும்!
என்றுரைத்தான் திருக்குறளின் தலைவன் என்றால்
இதுபோன்ற மெய்க்காதல் எங்கு முண்டோ?

மறுவற்ற மதிமுகத்தாள் காதல் கண்டு
மனந்துணிந்து குறைகூறும் உலக மென்றால்,
அறிவற்ற சிலர்போலப் பெற்றோர் தேடி
யளிக்கின்ற ஒருத்தியுடன் வாழ்க்கை காணும்

நெறியற்ற போக்கினிலே செல்ல மாட்டான்
நீதிசொல்லும் திருக்குறளின் தலைவன் கற்பு
நெறிபற்றி வாழ்கின்ற இல்ல றத்தில்
நேர்பட்ட காதலியின் தோளை சேர்வான்!

தேவைக்குப் பெய்யென்னப் பெய்மழை போல்
தெள்ளமுதாய் வாய்த்துவிட்ட காதல் மங்கை
சேவைக்கு முந்திடுவாள்; கணவன் சொல்லைச்
செவியேற்று நடந்திடுவாள்; கற்பின் மாட்சி
யாவர்க்கும் தெரிந்திடவோர் எடுத்துக் காட்டாய்
அலங்கரிப்பாள் மனையகத்தை! அந்த அன்புப்
பூவைக்கு நான்கணவன் எனநி னைத்துப்
பூரிக்கும் நெஞ்சுடையான் குறள்த லைவன்!

கற்கின்ற போதெல்லாம் அறிவு கூட்டிக்
கல்லாத போதிருந்த மடமை காட்டி
அற்புதத்தைச் செய்கின்ற கல்வி போலே
அழகுடைய காதலியைத் தேடிச் சென்று
வெற்பனைய தன்தோளில் அணைக்கும் போது
விளைகின்ற இன்பத்தை எண்ணிப் பார்த்து
முற்காணு இன்பமிதே என்று சொல்லி
முறுவலித்துக் குறள்படிப்பான் நற்ற லைவன்!

பெற்றவர்க்குப் பெயர்பெற்ற பிள்ளை யாவான்
பிள்ளைகளை முன்னேற்றும் தந்தை யாவான்
சுற்றத்தார்க் குறவாவான் நட்பி னர்க்குத்
துணையாவான் நாட்டினர்க்குத் தொண்ட னாவான்
கற்றறிந்த மாணவனும் ஆசா னுக்குக்
கல்விதரும் கணக்காயன் மாண வர்க்கு!
பற்றுவைத்த மனைவிக்கோ தெய்வ மாவான்
பண்புடைய தலைவன்நல்ல துணையு மாவான்!

மனமாரக் காதலித்த ஒருத்தி தன்னை
மணந்தின்பம் காணுகின்ற கார ணத்தால்
தினந்தினமும் பிறர்வாழப் பொறுமை கொண்டு
தீயாகத் தன்நெஞ்சை மாய்ப்ப தில்லை.
நினைக்கின்ற போதெல்லாம் இன்பஞ் சேர்க்கும்
நேரிழையைக் காதலியாய்ப் பெற்ற தாலே
தனைக்கொல்லும் நோய்வழங்கும் மாத ரோடு
தனித்திருக்க நினைப்பதில்லை குறள்த லைவன்!

குணக்குன்றாய் ஒருமனைவி வாய்த்த தாலே
குறையின்றி வாழ்ந்திருப்பான்; மழலைப் பேச்சில்
கணக்கின்றி இன்பத்தைச் சேர்க்கும் பிள்ளைக்
கனிகளையும் பெற்றெடுத்தான்; மகிழ்ச்சி பெற்றான்!
மணக்கின்ற தென்றலுக்கும், அடர்ந்தி ருக்கும்
மரநிழற்கும், பூத்திருக்கும் மலர்க ளுக்கும்
துணைக்கிருக்கும் தலைவிக்குத் துணைவ னாகத்
தொடர்கின்றான் தலைவன்இனி நிறுத்திக் கொள்வோம்!

# துறந்தோர் காதல்

பற்றுவிட்டோம்; துயர்விட்டோம்; காதல் என்னும்
பாசத்தை மறந்துவிட்டோம்; ஈசன் தாளைப்
பற்றிவிட்டோம்; அழியாத இன்பந் தன்னைப்
பார்த்துவிட முயல்கின்றோம்; தவத்தில் நின்றே
முற்றிவிட்டோம்! உலகத்தீர், காமச் சேற்றில்
முளைத்திருக்கும் ஆம்பலெனக் காய வேண்டாம்!
எற்றிவிட்டே துன்பத்தைத் துறவு கொள்வீர்!
எந்நாளும் அழியாத இன்பம்! என்பார்.

முழுமுதலாம் ஒருபொருளை உருவ மாக்கி
முடிசூட்டி வைத்தவர்கள், பெண்ணைச் சேர்ந்து
தழுவட்டும் எனஎண்ணித் தேவி மாரைத்
தாம்படைத்து விட்டார்கள்; இன்பந் துய்த்தால்
எழுபிறவி தனைக்காட்ட பிள்ளைப் பேற்றை
இறைவர்பெறச் செய்தார்கள்! கோயி லெங்கும்
வழிவழியாய் இல்லறத்தைப் படம்பி டித்து
வைத்தவர்கள் ஆண்டவனின் பக்தர் கண்டீர்!

ஈசனைப்போய் பக்திசெய்யும் அன்ப ரெல்லாம்
எப்படிநாம் அவனடியைப் பிடிப்ப தென்று
பூசனையாய்த் தொழுகின்ற போதி லெல்லாம்
பூனைவந்து பால்காத்த கதையாய் முன்னை
வாசனையை மறவாமல் கடவு ளாரை
வடிவான மாப்பிள்ளை யாக்கித் தம்மை
ஆசையுள்ள காதலியாய்க் கொண்டு பாடல்
ஆக்கிடுவார்; பாடிடுவார்; 'பக்தி' செய்வார்!

கவினுற்ற திருவாழ்வில் பெண்ணொ ருத்தி
கைப்பிடித்துக் காதல்செய்யும் இன்ப மான
புவிமீதில் கற்பனையாய் உறுப்பு மாற்றிப்
போற்றிசெயும் ஆண்டவனைக் காத லித்தால்,
செவிகுளிர, வாய்குளிரப், பாடிக் கேட்டுச்
சென்றிடலாம் என்றாலும் உள்ள மெல்லாம்
குவிகின்ற இன்பத்தைக் காண்ப துண்டோ?
கூத்தாட்டம் வாழ்வாமோ? சிந்திப் பீரே!

எல்லாமும் துறந்தவர்கள் என்று சொல்லி
இல்லத்தைத் துறந்துநடுக் காட்டில் சென்று
வல்லார்போல் தவம்செய்வார் மனத்தி னுள்ளே
வந்துறுத்தும் ஆசையினை அடக்க மாட்டார்!
தில்லானாப் பாடிவரும் விறகுக் காரி
தேம்பியழக் கூடிடுவார்; ஆசை தீரப்
பொல்லாங்கு செய்திடுவார்; இல்வாழ் வெண்ணார்;
புலம்பியவள் உயிர்நீத்து மானங் காப்பாள்!

புல்லுண்ணேன் புலியானேன் என்று சொல்லிப்
புலித்தோலை யணிந்திருக்கும் மாடு மீட்டும்
புல்லுண்ணச் செல்லுதல்போல் துறவு பூண்டு
புலித்தோலை யணிந்தவரும் காமங் கொள்வார்!
வில்லுடனே புதர்மறைந்து புள்ளி னத்தை
வீழ்த்துகின்ற வேடன்போல் துறவு பூண்டு
புல்லுடலில் காவியுடை போர்த்த தீயோர்
பூவையரைக் கெடுத்திடுவார்; விழிப்பு வேண்டும்!

காதலிலே தோற்றவரும்; இன்ப வாழ்க்கை
காண்பதற்கே எளியவழி தேடு வோரும்;
பூதலத்தே உழைப்பின்றி உண்ப தற்குப்
பொருத்தமுள்ள வழிதேடித் திரிந்த பேரும்,

மாதொருத்தி யுடன்சேர்ந்து வாழு கின்ற
    மனமின்றிப் பலபேரை யெண்ணு வோரும்,
கூதலுக்கு நெருப்பெனவே ஒண்டு கின்ற
    கொள்கையுடன் துறவிகளாய் மாறு கின்றார்!

செய்கையிலே மெய்யில்லை; நினைப்புக் கொள்ளும்
    சிந்தையிலே உண்மையில்லை; நாளும் நாளும்
தெய்வமெனக் கூவிடுவார்; வாய்மை யில்லை.
    சிறப்பான போக்கெதுவும் காணற் கில்லை!
வைகையிலே நீராடிக் காவி கட்டி
    வந்திடுவார் உடலெங்கும் பூச்சுப் பூசி
பொய்மைக்கே சான்றாகத் தோன்றி யிந்தப்
    பூவுலகில் திரிந்திடுவார், நம்ப வேண்டாம்!

# காதற் சோலை

பேசிக் கொண்டே வழிநடந்தோம்
　　பெண்ணும் ஆணும் கைகோர்த்து
ஆசை தீரத் தென்றலிலே
　　ஆடிப் பாடி மிதந்தபடி
வீசும் இன்ப நறுமணத்தின்
　　விந்தை தன்னில் திளைத்தபடி
பேசிச் செல்லும் அழகுடைய
　　பெரும்பூஞ் சோலை வந்தடைந்தோம்.

கொடிகள் மரத்தை வளைத்திருக்கும்
　　குண்டு மல்லி மலர்ந்திருக்கும்
செடியில் மலர்ந்த பூவினிலே
　　சென்று தும்பி தேன்குடிக்கும்
அடிகள் பட்ட இடமெல்லாம்
　　அழகிய பச்சைப் புல்லிருக்கும்
நெடுநற் காற்றின் மணமெங்கும்
　　நிறைந்தி ருக்கும் பூஞ்சோலை.

மரத்தின் கிளையில் புறவிருக்கும்
　　மற்றதன் கீழே மானிருக்கும்
அரண்டே ஓடும் பெட்டையினை
　　அடையப் பறக்கும் ஆணினமே
இரண்டி ரண்டே எங்கணுமே
　　இணையும் துணையும் எங்கணுமே
மருண்ட விழிகள் இன்பத்தில்
　　மலரும் காட்சி தருஞ்சோலை

வாளும் வேலும் எனத்தோன்றி
வடிவில் அழகிய மீளுகி
நாளில் மலரும் பூவாகி
நல்லின் பந்தரும் கண்ணுடையாள்
ஆளன் மேலே சாய்ந்தபடி
அல்லிக் கொடிபோல் கிடந்திடுவாள்
பாலை பிளந்த சிரிப்பினிலே
பதிந்து இடப்பான் ஆணழகன்.

காளை யொருவன் தோன்றிடுவான்
காதல் மங்கையைத் தேடிடுவான்
நீளும் புருவம் காதளவாய்
நிற்கும் இன்பச் சேயிழையின்
தோளொடு தோளைப் பின்னிடுவான்
துவளும் இடையைத் தாங்கிடுவான்
மீளச் சிரித்து நடந்திடுவார்
மின்னித் திகழும் பூஞ்சோலை.

எங்கு நோக்கினும் காதலர்கள்
இணையிணை யாகச் சென்றிடுவார்
தங்கும் புன்னகை ஒளிதனிலே
தகத்தக என்னும் பூஞ்சோலை
அங்கும் இங்கும் என்கண்கள்
அழகே கண்டன என்செய்வேன்
பொங்கும் காதல் என்னிலுமே
பூரித் தெழும்பி விம்மியதே.

சொற்களில் அழகைப் பூசிடுவேன்
சொக்கத் தங்கம் ஆக்கிடுவேன்
மற்றப் படியென் கவிதையிலே
மனத்தைக் கவர்வது நீயன்றே

கற்பனைப் பெண்ணே! என்னிதயம்
    காத லூற்றுத் தவிக்கிறதே
இப்படி வாவென் றழைத்தேன் நான்
    என்றன் அருகில் வந்தமர்ந்தாள்.

தென்றலிற் கலந்த மணம்போலே
    தேனிற் கலந்த சுவைபோலே
அன்றில் பொருந்திய பேடெனவே
    அழகிற் பொருந்திய ஒளிபோலே.
நின்ற கவியும் கற்பனையும்
    நேரிற் கலந்து மகிழ்ந்திருந்தோம்.
சென்றன மற்ற நினைவெல்லாம்
    சேர்ந்தது காதல் இன்பமொன்றே!

# முத்துப்பூங்குழலி திருமணப் பாட்டரங்கம்

## தலைமையுரை

முத்தான முத்துப்பூங் குழலி மன்றல்
முடிந்தவுடன் நடந்திடுமோர் வாழ்த்துமன்றில்
சத்தான தலைமையினை ஏற்ப தற்குத்
தான்வருதல் தேனும் என்ற ழைத்தார்
முத்துப்பூங் குழலிதிரு மணத்த லைமை
முத்துப்பட் டணத்தார்க்கே பொருத்தம் என்றே
ஒத்துப்பார்த் திட்டாரோ எனநி னைத்தேன்
உவகையுடன் மணவாழ்த்துக் கூற வந்தேன்.

உலகத்து நாகரிகம் அனைத்தி னுள்ளும்
உயர்ந்ததுகாண் பாரதப்பண் பென்று சொல்வார்
நலமிக்க பாரதத்தும் தமிழ்ப்பண் பாடே
நற்சிறப்பு வாய்ந்ததென ஆய்ந்தோர் சொல்வார்
புலமிக்க தமிழ்நாட்டும் நகரத் தார்தாம்
பொருளுள்ள வழக்கங்கள் கொண்டோர் என்று
தலமுற்றும் சென்றுய்ந்தோர் கூறு கின்றார்
தனிநாக ரிகங்கொண்டோர் நகரத் தாரே!

நகரத்தார் திருமணத்துச் சடங்கெல் லாமே
நம்பழமைச் சிறப்புகளை உணர்த்தி நிற்கும்
சிகரத்தில் ஏறிவிட முயன்ற தன்றிச்
செட்டிமக்கள் என்றேனும் தாழ்ந்த தில்லை
மகரத்தைக் கொடியாகக் கொண்ட பாண்டி
மண்டலத்தில் வாழ்கின்ற நாட்டுக் கோட்டை
நகரத்தார் வரலாறு தமிழர் நாட்டின்
நாகரிக வரலாற்றின் பகுதி யாகும்.

முயற்சியுடன் உழைப்பிருந்தால் உயர்ந்து வாழ
முடியுமென நிலைநாட்டும் நம்மூ ரெல்லாம்
வயற்சரிவில் காணுகின்ற வாய்க்கால் முற்றும்
வறண்டிருக்கும் பெரும்பாலும் வானம் பார்த்துப்
பயிர்க்குலங்கள் வளர்ச்சிபெறக் காத்தி ருக்கும்
பார்க்குமட்டும் முட்புதரே செழித்தி ருக்கும்
தயக்கமின்றி இந்நிலத்தில் வாழ்ந்து காட்டும்
தனவணிகர் வரலாறு முயற்சிக் காதை!

வரலாற்றுச் சிறப்பாலே உயர்ந்தி ருக்கும்
வாழ்வுடைய நகரத்தார் திரும ணத்தில்
மரபுவழி நடக்கின்ற வழக்கம் கூறி
மாண்புகளை நிலைநாட்டக் கவிஞர் ஐவர்
வருகைபுரிந் திருக்கின்றார்; கவிதை பாடி
மலர்வாழை விருந்துதாலி சந்த னத்தின்
பொருள்விளக்கம் கூறியிங்கே நம்மை யெல்லாம்
பூரிக்கச் செய்திடுவார் வாழ்க நன்றே!

கசப்பென்ற சொல்லிங்கே வெறுப்பைக் காட்டும்
கரிப்பென்று மொழிந்தாலே சலிப்புத் தோன்றும்
துவர்ப்பென்று சொல்லமுகம் தொங்கிப் போகும்
உறைப்பென்று சொன்னாலே காட்ட முண்டாம்
புளிப்பென்றால் முகஞ்சுளிக்கும் மனித ரெல்லாம்
பூரிப்பார் இனிப்பென்று புகன்ற போதே!
அளிக்கின்ற விருந்தினிலே இனிப்பா போதும்?
அறுசுவையும் சேர்ந்திருக்க வேண்டும் அன்றோ?

அதனால்தான் விருந்துகளில் எண்ணி எண்ணி
அறுசுவையும் படைக்கின்ற வழக்கம் கண்டோம்
எதிலும்ஒரு புதுமையினை விழையும் நெஞ்சம்
இருக்கின்ற காடப்பர் தமது வீட்டில்

பதினைந்து சுவைவழங்கத் திட்ட மிட்டுப்
பாட்டரங்கம் என்றிங்கே கூட்டி இவ் ஒன்
பதுசுவையும் அறுசுவையும் சேர்த்து வைத்துப்
பரிமாறிப் பேத்திமணம் சிறக்கச் செய்தார்.

காடப்ப செட்டியார் சிகப்பி ஆச்சி
கனிந்தமுதற் பிள்ளை அருணாசலந்தான்
ஏடொப்ப எழுதுகின்ற எழுத்து முத்தாம்
இவன்குணமோ மாணிக்கம் தங்கக் கட்டி
ஆடகப்பொன் சோலைச்சி துணையாய்க் கொண்டான்
அழகுமகள் முத்துப்பூங் குழலிப் பெண்ணை
ஈடற்ற தவத்தாலே பெற்றான்; இன்பம்
இழையமணம் நடத்துகின்றான் வாழி வாழி!

திறமைமிகு பெரிச்சியப்பன் காந்தி பெற்ற
செல்வமகன் சுப்பையா துணைவ னாகப்
பெறுமினிய முத்துப்பூங் குழலி வாழ்க
பேறுபதி னாறுமுழு தாகப் பெற்றுக்
குறள்நெறியில் இல்லறத்தை நடத்தி அன்பு
கூடுகின்ற நல்வாழ்வு பெற்று வாழ்க!
அறந்தழுவு மக்கள்தமைப் பெற்று வாழ்க
ஐயாமார் கொஞ்சவரும் பேரர் வாழ்க!

எண்ணாத எண்ணமெலாம் எண்ணி யெண்ணி
எத்தனையோ கற்பனைகள் கட்டிக் கட்டி
வண்ணமுறு வாழ்க்கைதனை அமைத்துக் கொள்ள
வைத்திருப்பாள் திட்டங்கள் கோடி கோடி
கண்ணான கண்ணனிவன் சுப்பை யாவைக்
கலியாணம் கொண்டதனால் வாழ்க்கை முற்றும்
வண்ணங்கள் நிறைந்திங்கே சுவைபெ ருக்கும்
வாழியரோ முத்துப்பூங் குழலி வாழ்க!

### மலர்—புலவர் மீனவன்

பூக்கின்ற போதுமலர் மணத்தை வீசும்
பொருத்தமுடன் ஒருத்தியையும் ஒருவனையும்
சேர்க்கின்ற போதுமணம் கூட லாலே
திருமணமென் றுரைத்தார்கள்; முன்னோர் செய்த
பாக்களினால் கண்டரமா ணிக்கம் தந்த
பாவலராம் மீனவனார் மலரைப் பற்றிச்
கோர்க்கின்ற மாலைகளை மணமக் கட்குக்
கொடுக்கின்ற பரிசாகக் கொள்ளு வோமே!

### வாழை—அர. சிங்காரவடிவேலன்

வாழையடி வாழையெனக் குலந்த ழைக்க
வாழ்கவென மணமக்கள் தம்மை வாழ்த்திச்
சூழழகு பொலிகின்ற வாழை பற்றிச்
சுவையாகச் சிங்காரப் பாட்டில் சொல்வார்
ஆழ்புலமை மிக்கவராம் கண்ட னூரார்
அன்புடைய சிங்கார வடிவேல் என்றும்
வாழியென மணமக்கள் தம்மை வாழ்த்தி
வரும்புலவர் தரும்கவிதை மனத்திற் கொள்வோம்.

### உக்கிராணம்—சோம சிவப்பிரகாசம்

இலைவிருந்து பரிமாறும் திரும ணத்தில்
எல்லாமே உக்கிராணப் பெருமை யாகும்.
நல்மகனும் முத்தப்பப் பாடு வார்முன்
தமிழ்வழங்கு சிவப்பட்டிப் புலவர் சோம
சிவப்பிரகாசம் வழங்கு கவியை நன்கு
செவிமடுக்க வேண்டுகின்றேன் சுப்பை யாவும்
தவமகளாம் முத்துப்பூங் குழலி தானும்
தழைத்தினிது வாழ்கவென வாழ்த்தி நின்றே!

### தாலி — அழ. அண்ணாமலை

புலிப்பல்லைத் தட்டிவந்து கழுத்தில் கட்டிப்
பூவையரை மணந்தார்கள் அந்தக் காலம்
எலிப்பல்லுக் கஞ்சிமருந் தூசி போட்டே
இறங்காமல் நஞ்சகற்றல் இந்தக் காலம்
கலப்பில்லாத் தனித்தமிழில் சுவையைக் கூட்டிக்
கவிதையெனப் புலவர் அண்ணா மலையார் இங்கே
சலிப்பில்லை எனும்படிக்குத் தருவார் நாமும்
தாலிபற்றி அவர்கருத்தை அறிந்து கொள்வோம்!

### சந்தனம் — மா. கண்ணப்பர்

வீசுகின்ற தென்றலினால் உடலுக் கின்பம்
விரிகின்ற முல்லையினால் நாசிக் கின்பம்
பூசுகின்ற சந்தனத்தால் இரண்டும் இன்பம்
பொருந்துகின்ற தன்மையினைக் கண்டோம் அன்றோ?
ஆசுகவி போல்விரைந்து பாட வல்ல
ஆசிரியர் கல்லூரித் தமிழ்த் தலைவர்
நேசமிகு கண்ணப்பர் கவி மணத்தில்
நிச்சயம்நம் உளத்துக்கும் இன்பம் ஆமே!

# பாரதியார்

வெட்டரிவாள் போல்முறுக்கி விட்ட மீசை
விழிகளிலே ஒளிபெருக்கும் வீரப் பார்வை
கட்டற்ற உரிமைதனை விரும்பும் நெஞ்சம்
கற்பனையில் நனைந்ததமிழ் பாடும் செவ்வாய்
சட்டைக்கு மேல்பழைய கோட்டு மற்றும்
சரிகையின்றித் தலைமேலே சேரன் போலே
கட்டிவைத்த தலைப்பாகை இதுதான் அந்தக்
கவியரசன் பாரதியின் தோற்றம் கண்டீர்!

நீருக்குள் விளக்கெரியும் விந்தை யான
நிகழ்ச்சிதனைக் கதைக்கின்ற புலவன் அல்லன்.
பாருக்குள் தான்பிறந்த நாட்டில் உள்ளார்
படுந்துயரம் தனைக்கண்டான். வளமி ருந்தும்
சீருக்கும் சிறப்புக்கும் இடமில் லாத
திருநாட்டின் அடிமைநிலை கண்டான். யாண்டும்
வீரக்கும் மாளமிட்டுத் தன்தாய் நாட்டார்
விளங்கும்நாள் தனைக்கொணர முயன்ற வீரன்!

கலிங்கத்தை வென்றாராம் கண்ண கிக்குக்
கல்சுமக்க வைத்தாராம். இமய மீது
புலிபொறித்து வந்தாராம், புகழ்கொண் டாராம்.
புலவரெல்லாம் கதைக்கின்றார், அணுவு மின்று
வலிவில்லை தாய்நாட்டின் மக்க ளென்போர்
வாலறுந்த குரங்குகளாய் மாற்றான் ஆட்சி
வலைப்பட்டுச் சிதையும்நிலை கண்டான். இந்த
வாழ்வுநிலை மாறாதோ எனநி னைத்தான்.

கரும்புவினை தோட்டத்தில் அரும்பு போன்ற
கைவிரல்கள் நோவெடுக்க வேலை செய்யும்
திருநாட்டின் மாதர்நிலை கண்டு கண்ணீர்
சிந்திநின்றான். தொண்டுசெய்யும் சிப்பாய்க் கஞ்சிப்
பெருமக்கள் ஓட்டமெடுத் தொளிந்து வாழும்
பேடிநிலை, பேய், பூதம், பிசாசு போன்ற
வெறும்எண்ணத் தோற்றத்திற் கெல்லாம் அஞ்சி
வீழடிமை நிலைபோக்கத் திட்டமிட்டான்.

வாக்கினிலே உறுதியில்லை, செய்கை தன்னில்
வலிவில்லை, மாற்றானை எதிர்த்தொ ழிக்க
ஊக்கமில்லை, ஒற்றுமையோ சற்று மில்லை.
உயிரடிமை ஆய்விட்டார் எனினு மிங்கே.
மேற்குதனைத் தொழுபவரும் கிழக்கு நோக்கி
மெய்வணக்கம் செய்பவரும் உரிமை போன
தாக்குமெனத் தமக்குள்ளே தாக்கி மாய்வார்
தம்மடிமை நிலைபோக்க நினைக்க மாட்டார்!

கவிதையினாற் செந்தமிழிற் புரட்சி சேர்த்த
கவியரசன் பாரதியின் கருத்தில் இந்தச்
சுவையற்ற வாழ்க்கைநிலை போக்கும் எண்ணம்
தோன்றியதே நொடிதோறும் தோன்றி யிந்தக்
கவைக்குதவா வாழ்வுதனை மாற்ற உன்றன்
கவிதையினைப் பயன்படுத்து கவின்சேர் வாழ்வைப்
புவியிலுன்றன் தாய்நாடும் பெற்று வாழ்ந்து
புதுநலத்தைச் சுவைக்குமெனக் கூறிற் றாமே!

முன்னாளில் ஒருபுலவர் கடவுள் பேரில்
முழநீளம் பாட்டெழுதிக் காம எண்ணம்
தன்னையங்குப் பொழிந்திருப்பார் மீண்டும் அந்தத்
தனிக்கடவுள் தனைநோக்கி ஒருவர் சொல்வார்

என்னேஇவ் வாழ்க்கைபெரும் மாய மென்றே
இன்னொருவர் கடவுள்களின் லீலை யெல்லாம்
தன்னேரில் லாதசெந் தமிழிற் பாடித்
தாம்பெரிய புலவரெனத் தருக்கிக் கொள்வார்!

ஒருநாட்டின் நாகரிக வளர்ச்சி தன்னை
உணர்த்துகின்ற கண்ணாடி இலக்கி யந்தான்
பெரும்புலவர் பலருமிதை மறந்தார். ஈசன்
பெருமைகளைப் பாடுவதே தொழிலாய்க் கொண்டார்.
அரும்புலவன் பாரதிதான் பிறந்த நாட்டின்
அவலநிலை சித்திரித்தான் இடித்துக் காட்டித்
''திருநாடே விழித்திடுக'' எனும்பு ரட்சித்
தேன்மொழியைச் செவிகுளிரப் பாய்ச்சி விட்டான்.

உழக்குக்குள் கிழக்கென்ற வாறே யிங்கே
ஊரெல்லாம் வெள்ளையருக் கடிமை யான
இழுக்கிருக்கும் போதுயர்ந்த சாதி என்னும்
இறுமாப்பும் நிலைத்ததுவே சிலரி டத்தில்,
முழக்கினர் ''இழிசாதி மக்கள் எங்கும்
முன்வரக்கூ டாதென்றே!'' எதிர்மு ழக்கம்
முழக்கினன் பாரதிதான் ''இந்த நாட்டின்
முடிமன்னர் யாவருங்காண்'' என்று ரைத்தே!

பாரதிதன் தாய்நாட்டின் மீது வைத்த
பற்றிற்கோர் எடுத்துக்காட் டுரைப்பேன் கேளீர்!
''சீரியஎன் தமிழ்நாட்டுப் பெண்ணைத் தோற்கச்
செய்யும்அழ குடையாள்இன் னொருத்தி யென்று
கூறிடினும் உளம்பொறுப்ப தில்லை'' யென்று
கூறினன் உயர்கவிஞன் அவனே யன்றோ?
கூறியதும் வீறுதனை உளப்ப டுத்தும்
கொள்கையின லன்றோசெந் தமிழ்நாட் டாரே!

உரிமையினை முழுமையுற அடைய வேண்டின்
உணர்வடைய வேண்டுமிந்த நாட்டு மக்கள்
சரியான உணர்வுபெற வேண்டு மென்ருல்
சற்றேனும் மடமையச்சம் கூடா தன்றே?
புரிந்துகொண்டான் பாரதிதான் அச்சந் தானே
போக்கற்ற அடிமைநிலை சேர்க்கு மென்றே!
வரிந்துகட்டிக் கொண்டடிமை நிலைமை போக்க
வாழ்நாளைச் செலவிட்டான் புரட்சி வேந்தன்!

வாழ்நாளின் பாரதியை இழந்து விட்டோம்
வந்துவிட்டான் நம்முளமாம் மண்ட பத்தில்
வாழ்கின்ருன்! வீரத்தை வெற்றி தன்னை
வாழ்வுரிமை யத்தனையும் அடைந்த நெஞ்சில்
வாழ்கின்ருன்! அவன்உயர்வை எண்ணி யெண்ணி
மகிழ்கின்ற பெருமக்கள் உள்ளந் தன்னில்
வாழ்கின்ருன்! பாரதிதான் சாக வில்லை!
வாழ்கின்ருன்! வாழ்கின்ருன்! வாழ்க நன்றே!

# பாரதிதாசன்

பாண்டிய நாட்டி லந்நாட்
    பைந்தமிழ்ப் புலவ ரெல்லாம்
மாண்டனர் என்றால் சங்க
    மாண்புநம் முன்னே தோன்றும்
மீண்டவர் வந்தா ரென்று
    விளம்பிடப் பாட லைக்கை
யாண்டவன் புகழைப் பெற்றோன்
    பாரதி தாச னன்றோ?

மிகுத்திடு மூடத் தன்மை
    மேவிடும் சாதித் தீமை
நகத்தகுஞ் சமயக் கொள்கை
    நாட்டினின் றோட்டத் தானே
தொகுத்ததன் நூலி லெல்லாம்
    தூண்டினான் விளக்க மென்னும்
பகுத்தறி வியக்கந் தன்னைப்
    பாரதி தாச னன்றோ?

நாட்டினில் மூடக் கொள்கை
    நாட்டித்தம் வாழ்வை யின்பத்
தோட்டமாய் அமைத்துக் கொள்ளத்
    தோன்றிய கயவ ரெல்லாம்
ஏட்டினை மூட்டை கட்டி
    எடுத்தனர் ஓட்ட மென்னப்
பாட்டினை முழக்கு கின்றோன்
    பாரதி தாச னன்றோ?

கம்பனும் பாடி வைத்தான்
    கவிநயம் சொட்டச் சொட்ட
என்பவர் தாமும் பொய்யே
    எழுதினு னென்று சொல்வார்!
நம்புதற் கியலாப் பாதை
    நடப்பதில் உள்ள கேட்டை
மன்பதைக் கெடுத்து ரைத்தோன்
    பாரதி தாச னன்றே?

இடைக்காலப் புலவ ரெல்லாம்
    இறைவனைப் பாடி மெய்யாய்
நடக்காத கதைக ளெல்லாம்
    நாடியே எழுத லானார்
துடிக்காத உளந்து டிக்கத்
    தோன்றிய இந்தப் பாதை
நடக்காமற் புதுமை கண்டோன்
    பாரதி தாச னன்றே?

பாரதி பாடி வைத்த
    பார்ப்பானை எனத்தொ டங்கும்
நேரிய கவிதை யெல்லாம்
    நினைத்தவா றழித்து விட்டார்!
பாரதி தாசன் தோன்றிப்
    பாடிடும் புரட்சி கண்டு
காரியச் சூழ்ச்சி வல்ல
    கயவரு மயர்ந்து போனார்!

தமிழெனில் உயிரே யென்பான்
    தரிக்குமென் மூச்சே யென்பான்
அமிழ்தெனு முணவே யென்பான்
    அகத்தெழு முணர்ச்சி யென்பான்

கமழ்ந்திடு மணமே யென்பான்
கவிதையின் சுவையே யென்பான்
தமிழ்க்கவி பார திக்குத்
தாசனும் நானே யென்பான்!

இலக்கண இலக்கி யத்தில்
எதுவுமே தெரியா ராகிக்
கலைக்களம் வளர்ப்போ ரென்றும்
கவிஞர்கள் யாமே யென்றும்
தலைக்கனம் கொண்டு நாட்டில்
தருக்கிடுங் கூட்டந் தன்னைத்
தொலைக்கவே பிறந்த தோன்றல்
பாரதி தாச னன்றோ?

காதலின் தூய்மை காட்டிக்
கவிதையின் சுவையைக் கூட்டி
மாதரின் இன்பந் தன்னை
மறுத்திடும் கூட்ட மோட்டிச்
சாதியு மதமு மன்பைத்
தடுத்திடும் சதியைப் போக்கிப்
பாதகம் வீழச் செய்தோன்
பாரதி தாச னன்றோ?

ஒளிந்தொரு கூட்டம் நம்மை
ஒழித்திடச் செய்யும் சூழ்ச்சி
தெளிந்திடச் செய்தான்! நன்மை
திகழ்ந்திடச் செய்தான்! முன்னர்
இழந்தநம் வீரப் பண்பை
ஏற்றிடச் செய்தான்! மீண்டும்
பழந்தமிழ் வாழ்வைச் சேர்த்தான்
பாரதி தாச னன்றோ?

வறுமையைக் களைந்து நல்ல
 வாழ்வினை நடத்து தற்கும்,
சிறுமையைப் போக்கி நல்ல
 சிறப்பினை எய்து தற்கும்,
பொறுமையை நீக்கி நாட்டுப்
 பொறுப்பினை ஏற்ப தற்கும்,
திறமையை யுணர்ச்சி தன்னைச்
 சேர்த்திடும் தாசன் பாட்டே!

## பாரதியும் பாரதிதாசனும்

பல்லாண்டு பல்லாண்டாய்த் தமிழர் நாட்டில்
 பாவானம் வெறும்வெளியாய் நீலம் பூத்தே
இல்லாமை நிலையெய்திக் கிடந்த போதில்
 எழுகதிர்போல் பாரதியார் தோன்றி வந்தார்.
சொல்லாண்டு நாட்டுமக்கள் நெஞ்சை யாண்டு
 சுடர்க்கவிகள் பலப்பலவாய்த் தோற்று வித்து
வல்லாண்மை யுணர்வெழுப்பி உரிமை வேட்கை
 வளர்த்திந்தத் திருநாட்டை உயரச் செய்தார்.

வேதாந்தம் பாடுகின்ற புலவர்; தெய்வ
 விளையாடல் பாடுகின்ற புலவர்; மாதர்
பாதாதி கேசங்கள், புகழ்ச்சி மாலை
 பல்லிளித்துப் பாடுகின்ற புலவர், கற்றோர்
மூதேவி வளர்ப்பாளர் என்று நெஞ்சம்
 முறிந்திருக்கும் புலவர்பரம் பரையில் நாட்டு
மாதாவைப் பாடுகின்ற சக்தி யாக
 மாவீரர் பாரதியார் தோன்றி வந்தார்.

வித்தகனும் பாரதியின் வழியில் வந்தோர்
    விதவிதமாய்ப் புதுப்பாக்கள் குவிக்க லானார்
கத்தியின்றி ரத்தமின்றி என்ற நாமக்
    கல்லாரும் கவிமணியும் பாடு வோரின்
சித்தத்தில் இடம்பிடிக்கும் யோகி யாரும்
    சிதம்பரனார் பொதுவுடைமை ஜீவா னந்தம்
இத்தனைபேர் மத்தியிலும் சுப்பு ரத்னம்
    இணையற்ற புரட்சிப்பா வேந்த ரானார்.

சிறுபுலி யனையதொரு தோற்றங் கொண்டோன்
    சினமுழக்கம் செய்தானேல் பகை நடுங்கும்
வீறுமிகு சொற்களினால் புரட்சிப் போரை
    விளைவிக்கும் ஆற்றலுளான் சுப்பு ரத்னம்
ஏறுபோற் பீடுநடைப் பார திக்கே
    யான்தாசன் யான்தாசன் என்று சொன்னால்
மாறுபடும் கருத்துடையார் அல்லர் என்றே
    மனங்கொண்டே இனங்கண்டு கொள்ள லாகும்.

கண்ணனையும் முருகனையும் காளியையும்
    கனிந்துருகிப் பாடுகின்ற பார திக்கோ
எண்ணத்தில் நாத்திகமே குடிகொண் டுள்ள
    இச்சிங்கம் எவ்வாறு தாசன் ஆனான்?
வண்ணத்துக் கவிபாடத் தெய்வ சக்தி
    வளமிருக்க வேண்டுமெனும் பார திக்கு
விண்ணளவு கற்பனையை நாத்தி கத்தால்
    விரித்துரைக்கும் புலவனொரு தாச னாமோ?

பாரதியார் தெய்வீகம் போற்றி னாலும்
    பழமையிலே வெறுப்பு டையார்; நாடுகாக்க
வீரர்களே வேண்டுமெனும் புரட்சி நோக்கர்
    வெறும்பஜனைக் கூட்டத்தை வெறுக்கும் சிலர்

தேரெனினும் விரைந்தோட வேண்டு மென்னும்
சிந்தனையில் ஞானத்தேர் உலாவந் தாராம்
யாரிவரென் றறிந்தேதான் தாச ஞர்
அரட்டுகின்ற பார்வையுள்ள புரட்சி வேந்தர்.

ஏய்த்துத்தான் உயிர்வாழ வேண்டு மென்றே
எவர்முயன்று வாழ்ந்தாலும் கடிந்து நிற்கும்
காய்த்தெழுந்த நெஞ்சத்தான் பார திக்குக்
கனகசுப்பு ரத்தினம்தான் தாச ஞன்!
வாய்த்துள்ள உயிரிங்கே நாட்டுக் காக
வழங்கிடலே சிறந்ததென்னும் கருத்தில் இந்தச்
சேய்த்தமிழர் இருவரிலும் வேறு பாடு
சிறிதுமில்லை ஐயமில்லை உண்மை காணீர்!

பாரதத்தை ஆண்டுவந்த வெள்ளைக் காரப்
பரங்கியரை ஓட்டுதற்குத் துடித்த நெஞ்சும்
சீரதிக முடையதமிழ் நாட்டில் இங்கே
சிலர்வாழப் பலர்மாயும் நிகழ்ச்சி கண்டு
நேர்மையுடன் கொதித்ததன் மான நெஞ்சும்
நிகரில்லை என்றெவரே கூற வல்லார்
பாரதிக்குத் தக்கதொரு தாசன் தானே
பண்புடைய கனகசுப்பு ரத்னம் காணீர்!

வில்லாளி அருச்சுனனைப் பார திக்கு
மிகப்பிடிக்கும் உயர்வீரன் என்ப தாலே
சொல்லாலும் செயலாலும் வாய்மை காத்துத்
தோற்றாலும் பணியாத நெஞ்சங் கொண்ட
வல்லாளும் இராவணனைப் பாவேந்தர் தம்
வழிமுதல்வன் எனவீர வணக்கம் செய்வார்
வல்லாண்மை மிக்கஇரு கவிஞர் கட்கும்
பகைமுடிக்கும் வீரரையே மிகப் பிடிக்கும்.

தலைப்பாகைச் சுடர்விழிகொள் பாரதிக்குத்
தமிழ்ப்பெண்ணின் விடுதலையே நோக்க மாகும்
சிலைபோன்ற பெண்ணுக்குக் கைமை நோன்பு
சிறைப்படுத்தும் கொடுமையெனத் தாசன் கூறும்
அலைகின்ற இருநெஞ்சங் காதல் கொண்டே
அன்பாக அணைகின்ற வாழ்வு தானே
நிலையான இன்பத்தை யளிக்கு மென்று
நினைப்பவர்கள் இருவருமே ஒருநோக் குள்ளார்.

பக்தியிலே சக்தியுண்டென் றெண்ணி னாலும்
பழமூடப் பழக்கத்தைச் சாடி நிற்கும்
மிக்கபுதுக் கொள்கையிலே ஊறி நிற்கும்
மீசையுள்ள பாரதிக்குத் தாசன் எந்தப்
பக்கத்தில் வந்தாலும் மூடப் போக்கைப்
பாய்ந்தெதிர்க்கும் வெறியுள்ளான் ஆகை யாலே
சிக்கென்று பாரதியைக் குருவாய்க் கொண்டான்
சிங்கத்தைப் பின்பற்றும் சிங்க மானான்!

குயில்பாட்டு பாரதிக்குப் பெருமை சேர்க்கும்
கோலமிகும் அப்பாட்டுப் போற்ப டைத்த
மயில்ஆடும் சஞ்சீவி பர்வ தத்தின்
மலைச்சாரல் கதைதாசன் பெருமை யாகும்
மயல்சேர்க்கும் கற்பனையாம் குயிலின் பாட்டு
மற்றிந்தச் சஞ்சீவி மலைக் கதையோ
துயில்தீர்க்கும் பகுத்தறிவுக் கருத்து மிக்க
துடிப்பான புத்தெழுச்சிக் கீதம் ஆகும்!

பாஞ்சாலி சபதத்தில் புதுமைப் பெண்ணின்
பகுத்தறிவு வாதத்தைக் கேட்க லாகும்
நோஞ்சானும் தருமர்தனைச் சூதில் விற்கும்
முறைகேட்டை எதிர்க்கின்ற புலியா னின்றாள்!

வாஞ்சையுடன் தன்மகற்குப் போர்ப் பயிற்சி
வழங்குகின்ற வீரத்தாய் தாசன் காட்டும்
தேன்சுவையாம் கற்பனையில் காணுகின்றேம்
திருநாட்டிற் பெண்ணினத்தில் எழுச்சி கண்டோம்

புதுக்கருத்தின் விடிவெள்ளி பார திக்குப்
பொற்கதிராய்ப் பின்தோன்றும் தாசன் ஆவான்
எதிர்க்கின்ற வீரத்தால் பழமை சாடி
எழுச்சிமிகும் உலகத்தைப் படைக்கும் போக்கில்
நதிமூலம் பாரதியாம் கடலிற் கூடும்
காவிரியாம் தாசனிவன் என்ன லாகும்
குதிகொள்ளும் புதுக்கருத்தை ஏற்று நிற்கும்
கொள்கைக்கிவ் விருவருமே தலைமை யாகும்!

# பாரதியார் விரும்பிய மொழி

பாரதியார் கண்டமொழி என்ன வென்று
பகுத்தறிய முனைந்திருந்தேன்; மொழிகள் யாவும்
நேரெதிரே வந்துநின்று 'நீநான்' என்றென்
நெஞ்சுதனைத் தொட்டுரைத்த செய்தி யெல்லாம்
கூறுகின்றேன் கேளுங்கள்; சிறிது கூடக்
குறையின்றி அவைசொன்ன பேச்சை யெல்லாம்
பாரறியச் சொல்லுகின்றேன்; கேட்ட றிந்து
பயன் பெறுவீர் நலம்பெறுவீர் வாழி வாழி!

கங்கையினால் வளமுற்றுச் சிறப்புப் பெற்றுக்
கவினழகு பெற்றிருந்த வங்கப் பெண்ணாள்
செங்கையினை கூப்பியெனை வணக்கம் செய்தாள்.
''சிறந்ததொரு தமிழ்ப்புலவா, பாரதிக்குத்
தங்கை யெனை மிகப்பிடிக்கும் செல்வன் பங்கிம்
சந்திரனின் தாய்நாட்டு வாழ்த்தை யன்னோன்
மங்காத செந்தமிழில் மொழிபெ யர்த்து
வரைந்ததனை யறியாயோ?'' என்று கேட்டாள்.

அங்கவளைத் தள்ளிவிட்டுத் தெலுங்கு மங்கை
அருகில்வந்து நின்றுகொண்டாள்; என்னைப் பார்த்தாள்
''பொங்கிவரும் தமிழ்க்கவிதைப் பெருக்கால் நாட்டில்
புதுமைவளம் மிகப்புரியும் புலவா, என்றன்
அங்கமெலாம் கவியின்பம்; அழகு வெள்ளம்
அதுகண்டே சுந்தரத் தெலுங்கென் றோதித்
தங்கமனப் பாரதியும் எனைப்பு கழ்ந்தான்
தானறிய வேண்டு''மென வேண்டி நின்றாள்

குடுகுடென மற்றொருத்தி ஓடி வந்தாள்
குலுங்கியவா றென்னெதிரில் வந்து நின்றாள்
மடமடென ஒருகவிதை பாடி நின்றாள்
மராட்டியப்பெண் நானென்று கூறி நின்றாள்
தடதடென மலைக்காட்டில் குதிரை மீது
தாவிவரும் வீரரென்றன் மைந்தர். எம்மைப்
படபடெனத் துடிக்கின்ற வீர மீசைப்
பாரதிக்கு மிகப்பிடிக்கும் என்று ரைத்தாள்.

மேற்றிசையில் ஒருகோயில் உள்ளி ருந்து
மிகமுதிய பெண்ணொருத்தி வெளியில் வந்தாள்
ஆற்றல்மிகும் ஆடவரின் குரலில் அன்னாள்
''அட தம்பி, பாரதிக்கு மிகப்பி டித்த
கோற்றொடியாள் நான்;எனது வேத நூலும்
குறைவற்ற இலக்கியங்கள் அனைத்தும் அந்த
நாற்கவிஞன் போற்றுவன வாகும்'' என்றே
நவின்றாளவ் வடமொழியாள் கேட்டுக் கொண்டேன்.

சீரளவு தெரிந்தவனே இனிப்பைக் கூட்டிச்
செய்யுளென வடிக்கின்ற புலவா, இங்குப்
பாரெனவே கேட்டதொரு குரலின் பக்கம்
பார்வையினை நான்பாய்ச்ச அழகு மிக்க
கேரளத்தாள் மலையாள மொழியாள் வந்து
கிறுகிறுக்கச் செய்யும்இள வடிவைக் காட்டிப்
பாரதிக்குப் பிடித்தவள்நான் என்று ரைத்தாள்
பச்சைமயில் போலங்கே நின்றி ருந்தாள்!

சிங்களத்துப் பெண்ணொருத்தி வந்து நின்றாள்
சிந்தியொடு குசராத்திப் பெண்ணும் வந்தாள்
தங்கநிற ராசபுத் தானத்துப் பெண்ணும்
தளிர்போன்ற கன்னடத்து மங்கை தானும்

அங்கங்கே என்னெதிரில் நின்று கொண்டே
யாரழகு பாரென்பார்; மயங்கி நின்றேன்
இங்கிவரில் யாரைத்தான் விரும்பி நின்றார்
இளஞ்சிங்கப் பாரதியார் எனநினைந்தே!

அப்போதோர் ஒளிதோன்ற முகிலி னூடோர்
அழகுமுகம் வீரத்தின் பொலிவு கொண்டே
தப்பாமல் எனைநோக்கி நிற்றல் கண்டேன்
தமிழ்வல்லான் பாரதியென் றறிந்து கொண்டேன்
அப்பாநான் சொல்லுவதைக் கேட்பாய் இந்த
அழகுமிகு கன்னியருள் எவளும் என்தாய்க்
கொப்பாகார்; அவளெழிலைத் தோற்கச் செய்யும்
ஆற்றலிந்தப் பூமியிலே யார்க்கும் இல்லை!

இப்படியோர் கருத்துரைத்தான் சிரித்து நின்றான்
எதிர்நின்ற கன்னியரோ மறைந்து போனார்
செப்படிவித் தையென்று நினைக்கு மாறே
செந்தமிழ்த்தாய் அவ்விடத்தே தோன்றி நின்றாள்.
அப்படியே தரைவிழுந்தேன் பொற்ப தத்தை
ஆர்வமுடன் பற்றிவிட்டேன் வாழ்த்துச் சொன்ன
எப்பொழுதும் அவளருளென் பாலிருக்க
எனைவாழ்த்திப் பாரதியார் விடைபெற் றாரே!

# பாவேந்தரின் இளைஞர் இலக்கியம்

அன்புத் தலைவரே ஆற்றற் கவிஞர்களே
இன்பச் சுவைநாடி இங்குவந்த மூத்தோரே
அச்சுத் தொழிலாளி யான்பாடும் பாட்டிதனை
மெச்சிப் புகழ்வீரோ, வேறாய் நினைப்பீரோ
என்னென் றறியேன் இருந்தாலும் பாவேந்தர்
தன்னை நினைக்குங்கால் தன்னை யறியாமல்
உள்ளம் குதுகலிக்க ஊற்றுப்போல் பாய்ந்துவரும்
வெள்ளக் கவிப்புனலை வீறு கவியாக்கி
உங்கள்முன் வைத்தேன் உவந்து திறப்பீரே
தங்கள் மனக்கதவைத் தான்.

வண்ண எழிலும் வழவழப்பும் கொண்டதுவாய்
கண்ணுக் கழகாய்க் கலைப்படைப்பாய் ஓர்அழைப்பை

கோத்துப் படியெடுத்துக் கூர்மையுடன் வாசித்துப்
பார்த்துத் திருத்திப் பதிப்பித்த பின்னாலே

பச்சைக் குழந்தை பளபளக்கும் தேன்முகத்தில்
மச்சமிட்டு வைத்து மருவாக்கும் தன்மையென

அச்சுப் பிழைதோன்றி நம்மை அசடாக்கிக்
கொச்சைச் சிரிப்பால் குறும்பு முகங்காட்டும்!

அவனென்ற சொல்லோ அவளாய் இனமாறும்
சிவமயமோ மாறிச் சில மயமாய்க் காட்சிதரும்.

காலமணி பத்து கருத்தூன்றிப் பார்த்ததுதான்
கோலக் கலைமணிபத் தாய்க்குறுகிக் காட்சிதரும்.

மூன்று முறைவாங்கி முப்பத்து மூன்றுமுறை
தானே படித்துத் தலைப்பில் அடிப்பானைக்

கையெழுத்துப் போட்டவரே காட்ட முகத்தோடு
ஐயா பிழையாய் அடித்தீர் எனக்குதிப்பார்.

வாளின்றி வேலின்றி வாழ்க்கைக் களத்தினிலே
நாளும் பிழைகள் அறப்போர் நடத்திவரும்

அச்சகத்தான் என்னை அழைத்துக் கவியரங்காம்
இச்சகத்தில் சற்றே இணைந்திடலாம் வாவென்றார்.

அச்சிட்டுப் புத்தகங்கள் ஆக்குமெனைப் பாவேந்தாம்
இச்சிட்டைப் பாடிடவே இங்கேநீ வாவென்றார்.

எழுத்திற் சுவைகூட்டும் ஏந்தலினைப் பாடுதற்கே
எழுத்திற் பொருள்கூட்டும் எம்தோழா வாவென்றார்

மூடத் தனத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த

ஈடற்ற தோளானை என்னுசான் பாவேந்தைப்
பாடற்றேர் ஏற்றிப் பவனிவரச் செய்கின்ற

இந்த அரங்கில் எனக்குமொரு பங்களிக்கச்
சிந்தைகொண்ட அன்பர்க்கு நன்றி செலுத்துகின்றேன்.

என்ன தலைப்பிலே யான்பாட வேண்டுமெனில்
சின்னஞ் சிறுவர்க்குத் தேன்தமிழில் தந்த

இளைஞர் இலக்கியத்தை ஏற்றிடுக என்று
தலைவர் மொழிகின்றார்; சிந்தித்துத் தான்பார்த்தேன்.

கோலக் குயில்போலக் கூவிப் பறந்துவிட்ட
ஞாலத்துக் காசானை நான்நினைந்து பார்க்கின்றேன்.

நாடி துடிக்க நரம்பு முறுக்கேறப்
பாடியநூல் அத்தனையும் பாரில் இளைஞர்க்கே

பாரடா வையப் பரப்பை எனும்வரி
யாரை யழைப்பதோ? அயராப் பணிக்குச்

சிறுத்தைப் புலியே வெளியில்வா வென்ற
உரத்த குரலின் முழக்கம் எவருக்கோ?

கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்

காதலையும் காதலினுல் ஆற்றலுறும் கட்டிளைஞர்
சாதலையும் எண்ணிச் சலியாத போர்க்குணத்தார்

தம்மை யழைத்துத் தமக்குள்ள வேதனையைச்
செம்மையுறச் சொல்லும் சிலவரிகள் கேட்டிடுவீர்!

"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்முனே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்முரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?"

இப்படி யெல்லாம் இளைஞரைக் கூவியே
தப்படி வைத்தல் தடுக்கும்பா வேந்தர்தாம்

சூதாடித் தோற்றகதை சோதரரை மாய்த்தகதை
நீராடும் பெண்கள்துகில் நீக்குஞ் சிறுகதைகள்

நாட்டுச் சிறுவர்க்கு நச்செண்ணம் சேர்க்குமென
வாட்டமுற்று நல்ல வழிகாட்ட எண்ணி

இளைஞர் இலக்கியத்தை ஏட்டில் எழுதி
எளிமைக் கிலக்கியம் ஈதெனக் காட்டினர்.

செந்தமிழ் நாட்டுச் சிறுமி படித்தேனும்
செந்தமிழ் தன்னைப் படித்தேன் எனுமொழியும்

சிங்கம் பிடரைச் சிலிர்த்து விடுதல்போல்
தங்கக் கதிரவன் வருதலைச் சாற்றலும்

கண்ணீர்க் குளத்தை வரைந்து மடந்தையர்
எண்ணக் குமுறலை ஏந்தி வடித்தவர்

தண்ணீர்க் குளத்தினைப் பாடிச் சிறுவர்க்கு
வண்ணத் தமிழை வழங்கும் சிறப்பையும்

குருமார் கொடுமைக் கொதிப்பை மறந்து
பெருமாள் மாட்டினைப் பாடிச் சிறுவர்தம்

அன்புக் குரியதாய் ஆகிய பாவேந்தர்
இன்னும் தூக்கமா பாப்பா எழுகெனக்

கூவி யழைத்துக் குயிலும் மயிலும்
தாவித் திரியும் குரங்குங் குதிரையும்

யானையும் பாம்பும் அணிலும் குருவியும்
தேனெனச் செந்தமிழ்ப் பாட்டில் வடித்திங்கு

நாட்டுச் சிறுவரை நல்ல குடிகளாய்
மாற்றும் பொறுப்பை மகிழ்ந்தேற்றார் கண்டீரே.

பாவேந்தர் எண்ணம் பலிக்கத் தொடர்ந்திங்கே
நாமேந்து வோம்நற் பணி.

கரும்புதந்த தீஞ்சாறே! கனிதந்த
நறுஞ்சுளையே! கவின்செய் முல்லை
அரும்புதந்த வெண்ணகையே! அணிதந்த
செந்தமிழே! அன்பே! என்று
விரும்புகின்ற பசுந்தமிழை வேண்டுகின்ற
படியெல்லாம் கொஞ்சிப் பின்னர்
வரும்புதிய சமுதாயம் வகுத்திடவே
பாவேந்தர் படைத்த பாட்டே
இளைஞர் இலக்கியம்!

வான்முட்டும் இமயத்தைத் தானடக்கி
வென்றிகண்ட சேர லாதன்
தேன்சொட்டும் செந்தமிழாம் ஒருமொழிவைத்
துலகாண்டான் என்மூ தாதை!
நான்மட்டும் சோடையா என்றிளைஞர்
நரம்பெல்லாம் முறுக்கி விட்டே
தோள்தட்டும் சமுதாயம் தோன்றிடவே
பாவேந்தர் தொடுத்த பாட்டே
இளைஞர் இலக்கியம்!

இரும்படிக்கும் பட்டறையில் இன்னிசையா
கேட்டிருக்கும் ஹே ஹே என்று
வரும்படிக்குப் படிக்கின்ற ஒருமொழியில்
வளம்பொருந்தி இருப்ப துண்டா?
கரும்படிக்குச் சுவைமிகுதி தனித்தமிழும்
அவ்வாறே அதனைக் காக்க
வரும்படிக்குப் பாவேந்தர் இளைஞர்களைக்
கூவிவர வழைக்கும் பாட்டே
இளைஞர் இலக்கியம்!

சதகோடித் தெய்வங்கள் புராணங்கள்
சாத்திரங்கள் யாவும் கூடி
மதமான பேய்பிடித்து மடங்கொண்டு
சதிராடும் மக்கள் நெஞ்சில்;
புதுமானந் தன்மானம் புகுத்துகின்ற
மருத்துவத்தைக் கற்ற வேந்தர்
பதமான செந்தமிழில் பகுத்தறிவுக்
கருத்தேற்றிப் பாடும் பாட்டே
இளைஞர் இலக்கியம்!

வெண்தாடி வேந்தரெங்கள் பெரியாரின்
எண்ணங்கள் வெளிப்ப டுத்திப்
பண்பாடி நின்றதமிழ்ப் பாவேந்தர்
இலக்கியங்கள் படித்த வர்க்கு
கண்பாடும் கைபாடும் கனல்கின்ற
புரட்சியிலே வாயும் பாடும்
மண்மூடிப் போகுமடா பழவேத
சாத்திரங்கள் மடமை யோடும்!

மழையில்லாப் பயிர்வாடும் மதியில்லாச்
செயல்வாடும் மனத்தில் சற்றும்
விழைவில்லா மணம்வாடும் விரைவில்லா
மான்வாடும் விரும்பி மக்கள்

பிழையில்லாத் தமிழ்கற்க வில்லையெனில்
நூற்கல்வி பெரிதும் வாடும்
விழைவெல்லாம் செழுந்தமிழாய்ப் பாவேந்தர்
இளைஞர்க்கு விரித்த பாட்டே
இளைஞர் இலக்கியம்!

காசுக்குப் பாட்டெழுதிக் கம்பர்ஒரு
பெருங்கவிக்கோ ஆகி விட்டார்.
ஆசைக்குப் பாட்டெழுதி அழகுகவி
என்றுசிலர் அரங்கு காண்பார்
வாசிக்கப் பாட்டெழுதிப் புதுக்கவிதை
என்பர்சிலர் வார்த்தெ டுக்கும்
தோசைக்கும் பாட்டெழுதிப் பாவேந்தர்
தொடக்கநிலைக் கல்வி காத்தார்

மூச்சுக்கு மூச்சிங்கே தமிழென்று
முழங்குகின்ற பாவின் வேந்தர்
ஏச்சுக்குத் தக்கசெயல் இதுவென்று
தடங்காட்டி இளைஞர் தம்மை
வீச்சொன்று துண்டிரண்டாய் வீழ்த்துங்கள்
மதக்கருத்தை வீணும் சாதிப்
பேச்சொழிய பணிசெய்யப் புறப்படுவீர்
சிங்கங்காள் என்ற ழைத்தார்.

## மத வெறிக்குப் பலியானர்

உலகமெலாம் துன்பமுற்ற தெதற்கடி தோழி?—மிக
உத்தமர் காந்தியார் செத்தனர் ஆகையால் தோழா!—உயிர்

விலகிடவே செய்துவிட்ட நோயென்ன தோழி?—மத
வெறியென்னும் நோய்வந்து குறிவைத்துச் சுட்டதடா
தோழா!—நல்ல

காந்தியுயிர் போக்கவந்தோன் யாரடி தோழி?—தினம்
கல்வணங்கும் இந்துமதக் கல்நெஞ்சக் காரனடா தோழா!
—அவன்

சாந்திசொல்லும் காந்திக்கெதிர் ஆனதேன் தோழி?—அந்தச்
சண்டாளன் மதவெறி கொண்டவன் ஆகையால் தோழா!
—அந்த

உத்தமர் மதத்தைஎதிர்த் தாரோடி தோழி?—அவர்
உண்மையில் இந்துமதம் கண்ணென்று சொன்னரே
தோழா!—பின்

செத்துவிழச் சுட்டதன் மூலமென்ன தோழி?—தீமை
செய்யாதீர் நபிவழி உய்வோருக் கென்றதால் தோழா!
—அதை

ஒப்பாமல் சுட்டானே யாரடி தோழி?—அவர்
உயிர்கொண்டோன் ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக்
சங்கத்தான் தோழா!—அவர்

சிப்பாய்கள் போலுடை பூண்டதேன் தோழி?—சண்டை
செய்திட நாட்டிடை எண்ணியே பழகினர் தோழா!
—அந்தச்

சங்கத்தின் எண்ணந்தான் என்னடி தோழி—மதச்
சண்டை வளர்ப்பது கண்ணிய மழிப்பது தோழா!—இந்தப்

பங்கந்தான் மறைந்திட வழியென்ன தோழி—இந்தப்
பாழான சங்கத்தை வாழாமற் செய்வது தோழா!—அது

வாழாமற் செய்திடும் வகையென்ன தோழி?—சட்டம்
வகுத்ததைப் பரவாமல் தடுப்பது காணென்றன் தோழா!
—பலிக்கு

ஆளானவர்க் கென்ன மரியாதை தோழி?—இனி
அமைதியாய் இருமென்ற பெரியார்சொல் பின்பற்றல்
தோழா!

---

## மனம் துடித்தது

மனமும் துடித்த தம்மா—நமது
மாபெரும் தலைவராம் காந்தியை இழந்ததால்
மன......

அமைதி நிலவிடப் பரத கண்டத்தில்
அரும்பணி யாயிரம் புரிந்தவர் பிரிவெண்ணி
மன......

நாடி யிறைவனை வேண்டச் சென்றார் கெட்ட
நஞ்சு நெஞ்சன் ஒருவன் சுட்டுவிட்டான் அவரை
வாடிட நாடெலாக் காந்தியும் வீழ நாம்
வழியிலாது திகைத்து நின்று சோர்வடைய
மன......

பேய்மதத் தீயனல் நாடே துயருறப்
பேதையர் போல்பொது மக்கள் அழுதிடத்
தீயர்கள் வாய்சுவை காணும் நிலைகண்டு
திகைப்படைந் தோவென நின்று கதறி
மன......

## வாழ்த்திடக் கூடுவீர்!

எழுப தாண்டுகள் எய்திய கிழவரின்
பிறந்தநாள் தமிழினம் பெருமை யுடையும்நாள்
வந்தது தோழர்காள்! வாழ்த்திடக் கூடுவீர்!

ஆரிய மாயையில் ஆழ்ந்து நாமெலாம்
சீரிய மானம் சிறப்பிழந் தடிமையாய்
ஏங்கும்நாள் அறிவின் ஏற்றம் காட்டினோன்
தன்மானக் கொள்கையைத் தமிழர்க் களித்தோன்
பிறந்தநாள் தமிழ்ப்புகழ் பேசும் திருநாள்
வந்தது தோழர்காள்! வாழ்த்துகள் பாடுவீர்!

செந்தமிழ் நாட்டில் வந்திரு முறைகள்
புகுந்த இந்திதான் புறங்காணச் செந்தமிழர்
போர்நாட்ட நல்லறப் போர்தொடுத்த ஏந்தல்
ஈரோட்டுப் பெரியார் எழுபதாம் ஆண்டு
நினைவுநாள்; செய்நன்றி நினைக்கும் பெருநாள்
வந்தது தோழர்காள்! வாழ்த்தொலி முழக்குவீர்!

# கிழச் சிங்கம்

தமிழர் தலைவர் ஈ. வே. ரா.—மூடத்
தனத்தை யொழிக்கப் பிறந்தவராம்!
அமைதி, ஒய்வே யில்லாமல்—என்றும்
ஆடி ஓடி உழைப்பவராம்!

வெண்மை யான தாடியுளார்—கொள்கை
விளக்கிப் பேசும் சொற்பொழிவில்
உண்மை யிருக்கும்; பயனிருக்கும்—தமிழர்
உயர்வுக் கான கருத்திருக்கும்!

சூதும் வாதும் செய்பவரைக்—கண்டால்
தூவென் றுமிழ்ந்து தள்ளிடுவார்
சாதி வெறியும் மதவெறியும்—போனல்
தானே நன்மை வருமென்பார்

பழக்க வழக்கம் எனச்சொல்லி—நல்ல
பாதை விட்டு நடப்பதையே
இளக்கம் என்று கருதிடுவார்—தாம்
எண்ணிய தெல்லாம் மொழிந்திடுவார்!

பழைய புராணம் படித்ததனை—நாட்டில்
பரப்பு வோர்க்குப் பகையாவார்
உழைப்பு முயற்சி பகுத்தறிவு—மிகவும்
உடையோர்க் கன்புத் தாயாவார்!

இறைத்துப் பாய்ச்சும் தண்ணீர் போல்—அவர்
எழுச்சிக் கருத்தும் பயன்தருமே!
நரைத்துத் திரைத்து மூத்திடினும்—தமிழ்
நாட்டுக் குழைக்கும் பெரியாரே!

நேரிய ஒழுக்கம்; பண்புடைமை—நாட்டில்
நிலைபெற் றேங்க வேண்டுமெனும்
சீரிய கருத்தை உடையவராம்—கிழச்
சிங்கம் பெரியார் வாழியவே!

# பெரியார்

வெண்தாடி வேந்தரடி—தமிழர்
கொண்டாடும் சாந்தரடி!
வெண்தாடி வேந்தரடி!

பெரியார் என்றவர் புகழைப் பேசிடுவார்
புரியாமல் சிலர் அவரை ஏசிடுவார்
வெண்தாடி வேந்தரடி!

பெற்ற பிள்ளைக்குப் புத்தி சொல்வது போல
பேசிப் பேசியவர் நாளும் உழைப்பது போல
மற்றவர் யாரும் உழைத்துக் கண்டதும் இல்லை
மாசில்லாதவர் அவர் போல் இங்கினி இல்லை
வெண்தாடி வேந்தரடி!

எண்ணும் கருத்தெல்லாம் சொல்லி யகன்றிடு முன்னல்
எதையும் சிந்தித்துக் கொள்க என்றுரை சொன்னல்
கண்ணும் கருத்துமாய்த் தன் மானத்தினுக் குழைக்கும்
கைத்தடிக் கிழவரின் மெய்யன்றோ பயன் விளைக்கும்!
வெண்தாடி வேந்தரடி!

# பெரியார் வாழ்க!

பார்ப்பனியக் கொடுமைகளை வேரறுக்கப்
பண்டொருநாள் புத்தனெனும் அறிஞன்தோன்றி
ஆர்ப்பரித்தான்! வாளொடுங்கிக் கிடந்து புத்தன்
அமைதியுற இயற்கையுடன் கலந்த பின்பு
வேர்கிளைத்துச் சூழ்ச்சிஎனும் ஆயு தத்தால்
வேலைதனைத் தொடக்கிற்றுத் துடித்தெழுந்த
சீர்த்தமிழர் இடைநின்று ஒளிபரப்பும்
செங்கதிர்போல் ஈவேராப் பெரியார் வந்தார்!

நேரெதிர்த்துப் போர்புரியும் மறவர் நம்மை
நீர்வாரீர் திறங்காண்போம் என்ற ழைத்துப்
போரிடலாம்! போரென்றால் புறங் கொடுக்கும்
புல்லர்களைச் சூழ்ச்சியிலே வல்லர் தம்மை
நேரெதிர்க்கும் வகையில்லை ஆகை யாலே
நிறைமக்கள் மன்றத்தில் பெரியார் வந்து
யாரெதிர்த்தும்; கல்லடிக்கும் அஞ்சாமற்றான்
அறிவியக்கம் பரப்புகின்றார் வாழ்க! வாழ்க!

சூழ்ச்சிஎன்றும் மடமைஎன்றும் தமிழ கத்தில்
சூழ்ந்துள்ள இருள்கிழிக்கப் புரட்சி என்னும்
வாளெடுத்துத் தந்திட்டார். கதிர வன்தன்
வருகையினை விளக்கஇருட் கருப்பிடையே
தோளெனவே உயர்குன்றின் மேற்கி ளம்பும்
தோன்றுகதிர்க் கொடிகாட்டி அழைத்து நின்றார்
நாளெல்லாம் அடிமைஎனும் நிலையைப் போக்க
நாம்விரைவோம் பெரியாரின் தலைமை யின்கீழ்!

மதமென்னும் மடமைப்பேய் மக்கள் ரத்தம்
　　மாந்திவரும் நாளையிலும் மதம்வ ளர்க்கும்
மதமதப்புக் காரர்களைத் தொலைத்து விட்டு
　　மாபெரிய தமிழ்நாட்டின் தந்தை யாராம்;
சிதைவின்றி மக்கள்உயிர்ச் சேத மின்றிச்
　　சென்றிடுவோம் மதத்தினைநம் நாட்டை விட்டு
உதைத்தடிப்போம்! யாவருமிங் கொருநி லையில்
　　ஒன்றிடுவோம் என்றவராம் பெரியார் வாழ்க!

புராணம் இதி காசமெல்லாம் பொய்யே என்று
　　போதித்தார் உறுதியிலார் அகத்தெ ழுந்த
விரோதவினுக் களுக்கெல்லாம் விடையிறுத்து
　　விளைந்தசிறு ஐயமெலாம் நீக்கி வைத்தார்.
புராதனமாம் தமிழகத்தில் இந்தி என்னும்
　　போக்கற்ற மொழிக்கிடமே தேடி ஞர்க்குத்
திராவிடத்தின் கைவண்மை காட்டிவிட்டுச்
　　சிறைசென்றும் தமிழ்காத்த பெரியார் வாழ்க!

பிறந்ததெலாம் தமிழ்நாட்டில்! உண்ணச் சோறு
　　பெற்றதெலாம் தமிழ்நாட்டில்! எனினும் தாமே
திறமுடையார் எனச்சொல்லி வெள்ளை யர்க்கும்
　　தீங்குமிகும் வடவர்க்கும் வால்பி டித்த
சிறுநரிகள் செயல்காட்டித் தீயர் ஆட்சிச்
　　சிறுமையினை மனுநீதிப் பாசி சத்தின்
உறவுதனை நீக்கிடவே தமிழ கத்தின்
　　உயர்விறுக்கே உழைத்திடுவார் பெரியார் வாழ்க!

# தமிழர் தலைவர்

அருள் பொலியும் திருமுகத்தான்
அன்பு நிறை நெஞ்சத்தான்
இருள் விலகப் பணிபுரியும்
இனியதவம் இயற்றுகின்றான்!

தமிழரெல்லாம் தலைநிமிர்ந்து
தன்மானம் மிக்கவராய்
வாழ்வதற்குக் காரணனாய்
வந்துதித்த பெருந்தலைவன்!

கண்மூடி வழக்கமெலாம்
மண்மூடிப் போவதற்கே
எண்ணி எண்ணிச் செயலாற்றும்
இதயமுள்ள மாமனிதன்!

தீதுக்குக் காரணமாம்
தெய்வமத சாத்திரத்தை
வாதிட்டே யொழிக்கவந்த
வண்டமிழர் தலைவனிவன்!

## இயக்கமாய் நின்ற தந்தை

பிறவியில் உயர்வு தாழ்வுப்
பிரிவினை எண்ணங் கொண்டோர்
உறவினர் ஆக வாழ
ஓய்விலா துழைத்த தந்தாய்
துறவியின் தோற்றம்; நெஞ்சில்
தூயதாம் எண்ணம் வாழ்வின்
அறவினை விட்டி யற்கை
யடைந்துவிட் டீரே ஐயா!

ஐயாவென் றழைக்கும் போதில்
யாரென்றே நிமிர்ந்து பார்க்கும்
மெய்யான கண்ணில் தோன்றும்
மினுமினுப் பொளியில் இந்த
வையக மடமை யெல்லாம்
வலிவிழந் தொடுங்கிப் போகும்!
பொய்யான சாத்தி ரங்கள்
பொசுங்கிடும்; எரிந்து போமே!

எரித்திடு தமிழர் மாண்பை
யிழித்திடு நூலை; வாழ்வை
யரித்திடு மடமை தன்னை
யழித்திடு; புதிய வாழ்வில்
சிரித்திடு மகனே யென்று
சிந்தனை தந்த தந்தாய்
விரித்திடு மியற்கைத் தாயின்
விருந்திலே மயங்கி னீரோ!

மயக்கினை யகற்ற வந்தோன்
மயங்கியே வீழ்ந்து விட்டால்,
தயக்கமே காட்டா வீரன்
தலையினைச் சாய்த்து விட்டால்,

இயக்கமாய் நின்ற தந்தை
    இயற்கையை யெய்தி விட்டால்,
துயர்க்கடல் வெள்ள மிங்கே
    சூழாது விலகிப் போமோ?

இருளினை விலக்க வானில்
    எழுகதிர் சாய்ந்த தேபோல்
அருளினை நல்க வந்த
    அன்புருக் கரந்த தேபோல்
உருளுமோர் காலத் தேரின்
    ஊடுபோய் வீழ்ந்து விட்டீர்
பொருளினைப் பெற்றி ழந்தாற்
    போலுளந் துடிக்கு தையா!

ஆயிரம் பிறையைக் காணும்
    அரும்பெறற் பேறு பெற்றீர்
தாயினைப் போலு வந்து
    தமிழர்கள் திருந்தி வாழ
ஓய்தல் இன்றி நாளும்
    உழைத்துவாழ் விழிவொ ழிக்கத்
தூயநும் உளந்து டித்த
    துடிப்பினை அளக்கப் போமோ!

துடிப்பெலாம் அடங்கி, நெஞ்சச்
    சூடெலாம் தணிந்து, கையின்
பிடிப்பெலாம் தளர்ந்து சாவுப்
    பேழையுள் ஒடுங்கி விட்டீர்!
படிப்பெலாம் மறந்து போமோ,
    பழந்தமிழ் உணர்வு போமோ,
வடிப்பெலாம் அமுத மாக
    வழங்கினீர் போற்றி வாழ்வோம்!

# தென்னாட்டின் விடிவெள்ளி

அருட்பாவை மருட்பாவென் றோதி யிங்கே
    அறிவான திருவிளக்கை ஏற்று வோரை
இருட்பாவக் குட்டையிலே அழுத்து கின்ற
    இரக்கமிலா நெஞ்சத்தார் ஓங்கி வாழ்ந்தார்.
குறட்பாவும் மக்களிடைப் பரவா வண்ணம்
    குறுமூடக் கொள்கைகளைப் பரப்பி வந்தார்
வறட்பாலை நிலநடுவே சோலை போல
    வளமாக்கும் அறிவியக்கம் தோன்றிற் றம்மா!

தோன்றியதோர் அறிவியக்கத் தந்தை; அன்புச்
    சுடரொளிரும் திருமுகத்தார்; எளியர் தம்கால்
ஊன்றுதற்குத் தெம்பளித்த பெரியார் தம்கை
    ஊன்றிவரத் தோள்கொடுத்தார் எங்கள் அண்ணா!
நான்றமிழன் நான்றமிழன் என்று சொல்லி
    நாற்றிசையும் உணர்வெழும்பச் சூரைக் காற்றைப்
போன்றெழும்பிப் பேரறிஞர் அண்ணா தானே
    புத்துணர்ச்சிப் பெருமழையைப் பொழியச் செய்தார்!

செந்தமிழை அரியணையில் ஏற்று தற்குச்
    சிந்தையிலே உறுதிகொண்ட தாலே யன்றோ
இந்தநிலத் துள்ளமக்கள் அண்ணா வைத்தம்
    எண்ணமெனும் அரியணையில் ஏற்றி வைத்தார்
மந்தமதி படைத்தவர்கள் பிறமொழிக்கே
    மாநிலத்தை யாளுகின்ற திறனுண் டென்று
விந்தைமொழி பேசியதால் வீழ்ந்து விட்டார்
    விடிவெள்ளி போல் அண்ணா மேலெ ழுந்தார்!

தன்மக்கள் தன்மக்கள் எனநி னைக்குந்
தாய்போலே அன்புடையார் அண்ணா வால்தான்
இந்நாட்டுக் கிதுதேவை என்று ணர்ந்தே
எழில்வளங்கள் சேர்த்தற்கு முடிந்த தன்றோ?
தன்னோடு போகாமல் பொறுப்பு மிக்க
தம்பியரைத் தேர்ந்தெடுத்தே ஆள வைத்துத்
தென்னாட்டின் புகழுயரச் செய்தா ரந்தத்
திருச்செல்வர் பெயர்பாடிச் செம்மாப் போமே!

## அண்ணன் எங்கள் கண்ணன்

அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்—அவர்
அன்பு மொழியே வேத மென்பேன்—புது
கீதை யென்பேன்—திருப் பாதையென்பேன்!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

ஏழை உழைப்பவர் ஏற்றம் பெறவே—அவர்
இசைத்த தெலாம்புது மறைக ளன்றோ!
கோழை கிளர்ந்தெழத் தூண்டிய தெல்லாம்—அவர்
கூறிய செழுஞ்சொல் கீதை யன்றோ!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

கள்ளப் பார்வையும் குறுகுறு நகையும்—அந்தக்
கண்ணனின் கவர்ச்சிச் சொத்துக ளென்பார்
உள்ளங் கொள்ளைகொள் செந்தமிழ் உரையும்—நெஞ்சில்
உண்மையும் எங்கள் அண்ணனின் சொத்தாம்!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

மாயமோ சித்தோ மக்களைக் கவர்ந்தார்—திரு
வாயினற் றமிழால் ஆட்சியுங் கவர்ந்தார்
காயமோ போரோ விளைந்திடாமலே—அரி
யணையிலே தமிழை அமர்ந்திடச் செய்தார்.
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

அன்பு வழியிலே அடக்கத் துடனே—மிக
அமைதி யாய்ப்பணி செய்திடும் படிக்கே
தன்பின் இன்பத் தமிழகம் காக்கத்
தம்பியர் படையைத் தந்தவ ரன்றோ!
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

ஆகுலம் காத்தான் அந்தநாள் கண்ணன்—எங்கள்
அன்னை நாடிதனைக் காத்தார் அண்ணன்
மாகுலந் தமிழினம் வாழ்ந்திட வேதன்—வாழ்
நாளெலாம் உழைத்த நல்லவர் அண்ணன்.
அண்ணனே எங்கள் கண்ணன் என்பேன்!

## எங்கள் அண்ணா; சான்றோர் தம்பி

அண்ணா அண்ணாவென்றே ஆர்த்தமக்கள்; வெள்ளந்தான்
அண்ணாந்து பார்த்திருக்க ஐயாநீ—விண்ணேடிச்
சென்ற திருக்காட்சி சிந்தை படுமுன்னே
நின்ற திருகண்ணும் நீர்.

தம்பிஎன் தம்பியெனத் தாங்கி யழைத்தகுரல்
நம்பித் தொடர்ந்துவந்தேன் நாள்தோறும்—வெம்பியழச்
சான்றோர்க்குத் தம்பியெனத் தான்விளங்கப் போனீரோ
வான்றேயம் தன்னை மதித்து.

காந்தி மகான்வழியைக் கண்ணியமாய்ப் பின்பற்றும்
சாந்தமுகம் காணத் தமிழ்நாட்டு—மாந்தரெலாம்
செய்ததவம் போதலையோ சென்றுவிட்டீர் அண்ணாவே
எய்துதுயர் போமோ எளிது.

கூற்றுவனை நாம்வெற்றி கொண்டிடுவோம் என்றெண்ணிப்
போற்று மருத்துவரும் போராடித்—தோற்றாரே
தோற்றதுயர் ஆற்றாமல் துக்கித்த நாட்டையினித்
தேற்றுவார் யாரண்ணா செப்பு.

மதியும் நிதியும்தான் வேண்டுமென வாழ்த்தி
விதிநோக்கிச் சென்றுவிட்டாய்; வேண்டும்—கதியின்றிக்
கண்ணீரில் மூழ்கும் கழகத்துத் தம்பியினி
அண்ணா வெனவழைக்க யார்?

## அருந்தமிழ்ச் செல்வன்

அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!
நெஞ்சில் கருணை யுள்ளான்—தமிழ்
நிதியம் அவன்தா னடி!
அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!

அண்ணன் வழியில் வந்தான்—தமிழ்
அன்பில் சிறந்தானடி
எண்ணும் புதுமை யெல்லாம்—மிக
எளிதில் வடிப்பா னடி!
அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!

இலக்கிய ஆர்வ முள்ளான்—கவி
இன்பங் கொடுப்பானடி
மலர்க்குவை சூட்டி இந்த—முழு
மாநிலம் போற்று தடி!
அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!

உலகக் கவிஞ னென்றே—புகழ்
ஒன்றிச் சிறந்தானடி
பலகற் றோர்க ளெல்லாம்—அவன்
பாவைப் புகழ்ந்தா ரடி!
அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!

நாடகம் ஆக்கி நிற்பான்—அதில்
நடித்துப் பெருமை கொள்வான்
ஆடகப் பொன்னி கர்த்தான்—கலை
ஆர்வம் அளப்ப துண்டோ!
அஞ்சுகச் செல்வ னென்பார்—கிளியே
அருந்தமிழ்ச் செல்வ னடி!

# நிமிர்தோள் நெடுஞ்செழியன்

நாட்டு நலமொன்றே நாடிப் பெருந்தொண்டு
வேட்டுச் செயல்புரியும் வேங்கைப்புலி இளைஞர்
கூட்டத் தொருதலைவன்; கொள்கை மறவன்; உயர்
பாட்டுப் பொருளான பண்பார் நெடுஞ்செழியன்!

மூடத் தனத்தில் முழுகிக் கிடப்பாரைச்
சாடிப் பகுத்தறிவுத் தன்மானக் கொள்கைதனை
ஏடு நிறைகொள்ள இல்லம் ஒளிபெருக
நாடு வளங்காண நாட்டும் நெடுஞ்செழியன்!

அல்லும் பகலும் அயரா உழைப்பாலே
எல்லா வகையாலும் இந்தத் தமிழ்நாட்டைக்
கல்வி மணங்கமழ்பூங் காவாக்கிக் காட்டுகின்ற
சொல்லின் உயர்செல்வன் தூயன் நெடுஞ்செழியன்!

கோவேந்தர் பாண்டியரைக் கொண்ட திருவுருவம்!
நாவேந்தர் அண்ணாவின் நம்பிக்கைப் பேரிமயம்!
பாவேந்தர் பாராட்டும் பைந்தமிழின் பொற்பேழை!
மூவேந்தர் பண்பும் முதிர்ந்த நெடுஞ்செழியன்!

எந்தை பெரியார் எழிற்கருத்தைக் கேட்போரின்
சிந்தை பதியத் தெருத்தோறும் பாய்ச்சிவரும்
மைந்தன்; இளந்தாடி என்னும் மணிப்பெயரன்
நிந்தைக் கினியா நிமிர்தோள் நெடுஞ்செழியன்!

சாடும் புயற்காற்றைச் சங்கார நாதத்தால்
ஓடப் புரியும் உரமபெற்ற நெஞ்சத்தான்!
ஓடுநீர் ஓட்டும் உண்மையே வெல்லுமெனப்
பாடுந் தமிழ்ச்சங்கம்! பண்பார் நெடுஞ்செழியன்!

# சம்பத்துக்கு வாழ்த்து!

அந்தநாள் மறைமலைபோல்
　　அழகிய தமிழைக் காக்க
இந்தநாள் எழுச்சி பெற்றே
　　எழுந்தநம் வீரர்க் கெல்லாம்
வந்துளாய் தலைவ னாக
　　வாழ்த்தினேன் சொல்லின் செல்வா!
இந்தியை முறிய டித்தே
　　இன்றமிழ் காப்பாய் வாழி!

இரத்தமே சிந்தி னாலும்
　　இன்னுயிர் போய்விட் டாலும்
அருத்தமே இல்லா இந்தி
　　ஆட்சியால் விளையும் தொல்லை;
வருத்தமே மீண்டும் வாரா
　　வகையிலே ஓட்டி, வெற்றி
நிறுத்தவே முனைவாய் வாழி!
　　நெடுங்குன்றத் தோளாய் வாழி!

மொழிப்போரில் வெற்றி பெற்று
　　முடிவிலே நாட்டுப் போரும்
விழிப்போடு நடத்து தற்கு
　　வேண்டிய தகுதி பெற்றாய்!
செழிப்பான தமிழர் நாட்டுச்
　　செல்வமே 'சம்பத்' தென்னும்
எழிற்பேராய் வாழி! வாழி!
　　இளஞ்சிங்க மனையாய் வாழி!

# வற்றாத களஞ்சியம்

## ஔவை டி. கே. சண்முகம்

தவஞானச் சங்கரதாஸ் வழியைப் பற்றித்
தமிழ்நாட்டில் நாடகமாம் கலைவ ளர்ப்போன்
நவஞானந் தமிழரெலாம் பெறுதல் வேண்டி
நாடோறும் செயலாற்றும் நல்ல தொண்டன்
புவிஞானந் தமிழ்நாட்டில் பெருக வேண்டின்
போதனைக்குத் தமிழ்மொழியே சாலு மென்னும்
சிவஞானத் தோடிணைந்து தமிழர் வாழத்
திருப்பணிசெய் சண்முகத்தை வாழ்த்தாய் நெஞ்சே!

கற்றவரைப் பின்பற்றும் கலைஞன்; நல்ல
கவிஞர்களைப் போற்றுகின்ற சுவைஞன்; தன்னைப்
பெற்றவரைத் தவம்பெற்றார் ஆக்கி விட்ட
பெருமைந்தன்; தமிழன்னை பெற்ற செல்வன்;
உற்றபெருந் தலைவர்கட்கு நிதி வழங்கும்
ஒருவள்ளல்; கூத்தியலாம் தமிழ்க்க லைக்கு
வற்றாத ஊற்றனைய களஞ்சி யம்போல்
வளஞ்சுரக்கும் சண்முகத்தை வாழ்த்தாய் நெஞ்சே

சிங்கமாக் கவிஞன்போல் நடித்தா னென்றால்
செய்யுள்செயும் புலவர்களின் சிறப்புத் தோன்றும்
பொங்கிவரும் தேசபக்த வேடம் பூண்டால்
புதுக்கிளர்ச்சி இதயத்தில் ஊற்றெ டுக்கும்
மங்கையரின் காதலனாய்த் தோன்றும் போதோ
மனந்தெளிந்து காதலினை உயர்வாய்க் கொள்ளும்
தங்கமகள் ஔவையுருச் சண்மு கத்தில்
தமிழ்ச்சிறப்புப் பரிமளிக்கும் வாழ்த்தாய் நெஞ்சே!

# தம்பிக்கோட்டைக் கணபதி

நெஞ்சு துடிக்கிறதே—ஆ! எம்
நெஞ்சு துடிக்கிறதே!

தஞ்சைவள நாட்டில்—உள்ள
தம்பிக் கோட்டையில் தோன்றிய கணபதி
துஞ்சச் செய்து விட்டார்—அந்தத்
தொழிலாளர் தலைவனைத் தூக்கிட்டு விட்டார்.
கொஞ்சமும் இரக்கமின்றி—வெள்ளைக்
கொடியர் இயற்றிய தீமையைக் கேட்டதும்
நெஞ்சு துடிக்கிறதே!—மலயா
நிகழ்த்திய கொலையின் பயங்கரத்தாலே
நெஞ்சு துடிக்கிறதே!

பெற்ற தமிழகமும்—அவரைப்
பேண வகையின்றிச் சேணுக் கனுப்பியதோ?
மற்றந்த மலயாவும்—அவர்
மாநிற மேனியின் வேர்வையைக் குடித்ததனுல்
சற்றுத் தமிழகத்தின்—குருதி
தன்னை மாந்திச் சுவைக்க நினைத்ததுவோ?
பெற்ற நாட்டரசியலார்—சொன்ன
பேச்சையும் மதிக்காமல் தூக்கிட்டு விட்டார்!
நெஞ்சு துடிக்கிறதே!

சற்றுப் பொறுத்திடுவீர்—தீர
விசாரித் தறிந்துபின் மெய்யைத் தெளிந்திடுவீர்!
குற்றம் செய்வதில்லை—தமிழ்க்
குருதி படைத்தவர் கொடியரில்லை என்று
கற்றுக் கற்றுரைத்தோம்—மலயா
காது கொடுக்கவில்லை; நீதி நிலைக்கவில்லை!
முற்றும் துயரத்திலே—நாடு
முழுதும் அழுகுரல் எழும்பி யொலிக்கிறதே!
நெஞ்சு துடிக்கிறதே!

# வள்ளுவர் காட்டும் ஈகை

ஆறுமுக நாவலரோ சமய மாறும்
    அறியாமை யொழிக்கின்ற அறிவை ஈந்தார்;
வீறுமிகு *பாரதியோ தமிழு ணர்ச்சி
    விளைக்கின்ற ஆய்வுரையாம் அமுதை ஈந்தார்;
ஏறுநடை நெடுஞ்செழிய நாவலர்தாம்
    இழிவகற்றும் தன்மானக் கருத்தை ஈந்தார்;
பேறுபெற்றோம் வள்ளுவர்தம் ஈகை யாலே
    பெரும்பயனைக் கண்டோமே; இன்பங் கண்டோம்!

போர்க்களத்துச் சென்றொருவன் இறந்தா னென்றால்
    புகழுலகு சென்றானென் றுலகம் போற்றும்;
ஆர்க்கின்ற பேருந்தின் விழுந்து மாண்டால்
    அறியாமைக் கிரையானான் என்றி ரங்கும்;
வார்க்கின்ற அம்மையினால் நச்சுக் காய்ச்சல்
    வந்திறந்தால் விதியென்றே அமைதி கொள்ளும்;
வேர்க்கின்ற படியலைந்தும் பசிதீ ராமல்
    விழுந்திறந்தான் எனுஞ்சொல்லோ நாட்டுக் கீனம்!

மாவென்று கத்துகின்ற மாட்டுக் கோர்கை
    வைக்கோலைப் போடுவது மனத்திற் கின்பம்;
காவென்று கரைகின்ற காக்கைக் கோர்கை
    கலயத்துச் சோறெடுத்து வைத்தல் இன்பம்;
ஆவென்று பசியோடு வாசல் தன்னில்
    அம்மாவென் றழைத்துநிற்கும் ஏழை தன்னைப்
பூவென்ற மனத்தோடு குந்த வைத்துப்
    புதுச்சோறு போட்டனுப்பல் இன்பம்; இன்பம்!

அறியாமை நிறைந்திருக்கும், மக்களின் கல்வி
    அடைகின்ற வகைசெய்தல் அறிவுத் தொண்டாம்;
பறியாத மலர்போன்ற மங்கை வாழ்க்கைப்
    படியேற மணமுடித்தல் அறத்தில் ஒன்றும்;
குறியாக ஒருகொள்கை கொண்டவர்க்குக்
    கொடுக்கின்ற ஒத்துழைப்பு மக்கள் தொண்டாம்!
வறியார்க்கொன் றீவதுநல் ஈகை யாகும்!
    மற்றவையோ வான்கோழித் தோகை யாகும்!

* பாரதி : நாவலர் ச. சோமசுந்தரபாரதி

# பம்பாய்ப் புயல்

ஐயோ பாவம் ஐயோ பாவம்
பம்பாய் மக்களே!
அங்கே சூறைக் காற்றின் வீச்சில்
அதிக நட்டமே!

தந்திக் கம்பம் மரங்க ளெல்லாம்
சாய்த்துப் போட்டதாம்
எந்தப் பக்கத் தூரின் தொடர்பும்
இன்றிச் செய்ததாம்!

தெருவில் போன பேரை யெல்லாம்
தூக்கி யெறிந்ததாம்
ஒரு தொழிலும் நடக்க விடா(து)
ஊதிப் பறந்ததாம்!

மரம் விழுந்து மாண்டுபோன
மக்கள் மிகுதியாம்
உரம் இழந்து மக்கள் வீட்டில்
ஒண்டச் செய்ததாம்!

போக்கு வரத்து யாவு மங்கே
நின்று போனதாம்!
பேர்த்து வீட்டுக் கூரை யெல்லாம்
பறக்க வைத்ததாம்!

அலை படித்து மதிலிடிந்த
 கதையைக் கேட்டதால்,
குலை நடுக்கம் கொள்ளுதந்தக்
 கடலை நினைக்கவே!

சூறைக் காற்றின் வேகம் சொல்லச்
 சொல்ல நடுங்குதே!
நேரே கண்டோர் நிலைநினைத்து
 நெஞ்சுள் ளொடுங்குதே!

ஐயோ பாவம் ஐயோ பாவம்
 பம்பாய் மக்களே!
அங்கே சூறைக் காற்றின் வீச்சில்
 அதிக நட்டமே!

# படிப்பும் பயனும்

பாலும் பழமும் கொண்டூட்டிப்
பச்சைக் கிளியை வளர்த்தாலும்
நாலு பேச்சுப் பழக்கி வைத்தால்
நன்றுயிருக்கும் பயனுண்டாம்!

பஞ்சு மெத்தை போட்டுவைத்துப்
படுத்துக் கொள்ளப் போனாலும்
நெஞ்சில் அமைதி கண்டால்தான்
நினைப்பில் லாமல் தூங்கிடலாம்!

வீட்டைப் பெரிதாய்க் கட்டிவைத்து
விளக்குப் போட்டால் போதாது
பூட்டிப் போடா தெங்களுமே
புழக்கங் கொள்ள வேண்டுமடா!

பணத்தைச் சேர்க்கும் வழிதன்னைப்
படித்துக் கொண்ட வாணிகரும்
குணத்தைப் பெயரைக் காப்பாற்றிக்
கொண்டால் தானே நன்றாகும்.

பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள்
பாடம் சிறப்பாய்ப் படித்தாலும்
தெள்ளிய வாழ்வுக் கிலட்சியமே
தேடிக் கொள்ள வேண்டுமடா!

# ஏனிந்த மாற்றம்?

வாளோச்சி வாளோச்சி வெற்றி
வாகை கொண்ட நாளெல்லாம் பற்றி
நாளெல்லாம் கதைபேசும் வெற்று
நாளான தேனிந்த நாளே?

யாருக்கும் வணங்காத தலையே
அயலாரின் பணிவேற்கும் நிலைபோய்ப்
பாருக்கு ளெல்லார்க்கும் சிலையாய்ப்
பணிகின்ற நிலையின்றுள் ஏனோ?

வில்லுக்குப் பணியாத வீரன்
வீரத்திற் கிநப்பிடக் காரன்
புல்லுக்குப் பணிகின்ற நேரம்
பொருந்திய தேனிந்த நாளே?

தமிழாலே உலகத்தைக் காத்தோன்
தமிழிலே இன்பத்தைச் சேர்த்தோன்
தமிழென்ற பெருமையை நீத்தேன்
தலைகுனிந் தான்பிற மொழிக்கே?

வந்தார்க்கு விருந்திட்டு மகிழ்ந்து
வாழ்வின்பம் தனிலென்றும் படிந்து
சிந்திசைத்துக் கூத்தாடல் மறைந்து
சிறுநாய்எச் சிலுக்கின்றேன் சண்டை?

# திருத்த வேண்டும்

உலகந் தன்னில் செல்வ ரென்றும் ஏழை யென்றும்
உலவும் தீய கொள்கைதன்னை ஒழிக்க வேண்டும்.
கலக மென்ன மக்களெல்லாம் ஒன்றாய்க் கூடிக்
களிப்புடனே வாழும்வகை செய்ய வேண்டும்.

நிறத்தில் காணும் வேறுபாடு நீக்க வேண்டும்
நிலத்தில் மக்க ளாய்ப்பிறந்த யாவ ருக்கும்
புறத்தி லென்ன வேறுபாடு தோன்றி னாலும்
போற்ற வேண்டும் நம்மை யொத்த பிறவி என்றே!

சாதி யென்றும் சமய மென்றும் மக்களுள்ளே
சண்டையிட்டுக் கொண்டிருக்கும் முண்டர்தம்மை
நீதிக்கூண்டில் ஏற்றிவைத்து தண்டித்தேநல்
நெறிநடக்க அறிவுறுத்தித் திருத்தவேண்டும்!

சூழ்ச்சியாலே மக்கள் சொத்தைக் கொள்ளை கொள்ளும்
சுயநலத்துக் கொள்கைதன்னைச் சுட்டெரிப்போம்!
வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் ஏழை மக்களுக்கே
வேண்டுங் கல்வி கற்றுவைக்க விரைவோம் வாரீர்!

# மடமையின் ஆட்சி

(தீபாவளி யன்று ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ருக்மணி, பாமா சமேதராய் வீற்றிருக் கின்றார். சிறு தெய்வங்கள் ஆடிப் பாடிக் கூத்தடிக் கின்றனை.)

**தெய்வங்கள் :**

கொண்டாட்டம் கொண்டாட்டம் தெய்வங்களே—நல்ல
கும்மாளம் போடுங்கள் தெய்வங்களே!
அண்டங்கள் அத்தனையும் கலக்கிவந்த—அசுரன்
அழிந்தநாள் கொண்டாட்டம் ஆடுங்களே!

(அப்பொழுது நாரதர் அங்கே தோன்றுகிறார்.)

**நாரதர் :**

நாராயணாய நம பூவுலகில்—உள்ள
நாற்றிசையும் சுற்றிவந்தேன் நாரதனே!
பாரோடு விண்ணையும் ஆட்சிசெய்யும்—எங்கள்
பரமாத்மா! ஸ்ரீகிருஷ்ணா! நமஸ்காரம்!

**பரமாத்மா :**

நாரதரே! நாரதரே! வாருமையா!—மிக
நல்ல செய்தி யுண்டானால் கூறுமையா!

(நாரதர் பாடுகிறார்.)

நாரதர் :

பாரதத்தில் தேவமொழி பயிலுகின்றார்—அதைப்
பார்க்கும் நல்ல பேறடைந்தேன் பரமாத்மா!

ஊருக்கொரு கோயிலுண்டு முன்னாளில்—இன்று
சந்துக் கேழு கோயில் கண்டேன் கண்ணாலே—கடல்
நீர்கடந்து செல்லும் தபால் தலைகளிலும்—ஆட்சி
நிகழ்த்தும் தெய்வம் பலகண்டேன் பரமாத்மா!

கீதைதன்னை உலகெங்கும் பரப்பிவரத்—தூரக்
கிழக்காப்ரிக்கா செல்லுமொரு கோஷ்டி கண்டேன்!
—தெய்வ
மேதையினை இந்தியாவின் ஆட்சியாளர்—மிக
மிகப்பரப்பும் முயற்சிகண்டேன் பரமாத்மா!

கீதைபக்தன், ராஜதந்திரம் மிக்கவராம்—மிகக்
கீர்த்திவாய்ந்த கவர்னர் ஜனரல் ஆச்சாரியார்
ஆதிமனு நீதிதன்னைப் போதிக்கின்ற—நல்ல
ஆர்வங் கண்டு களிப்படைந்தேன் பரமாத்மா!

இந்தியாவில் தீவாளித் திருநாளை—மக்கள்
எல்லாரும் கொண்டாடும் காட்சிகண்டேன்
சந்தேகம் வேண்டாமே மடமைதான்—அங்கே
சாஸ்வதமாய் ஆட்சிசெய்யும் பரமாத்மா!

(இதைக் கேட்டதும் தெய்வங்கள் மீண்டும் அதிகமாகக் கும்மாளம் போடுகின்றன.)

# தீப தரிசனம்

காற்றையும் தீயையும் தன்வசமாக்கிக்
காட்டினார் மேலே நாட்டினோர்—திரு
நீற்றையும் மண்ணையும் குழைத்து நெற்றியில்
தீட்டினார் தமது நாட்டிலே!

கண்ட புதுமைக் கங்கே காட்சி சாலைகள்
வைத்திடுவார் மக்கள் மொய்த்திடுவார்—இந்தக்
கண்டத்தில் உள்ளவர் கடவுளைத் தேடிச்
சென்றிடுவார் கூடி நின்றிடுவார்!

அரைநொடியில் ஒருபாலம் ஆற்றைக் கடக்க
அமைத்திடுவார் படை நடத்திடுவார்—நாம்
ஒருதேரைச் செப்பனிட ஆண்டுகள் பல
போக்கிடுவோம் நலம் நீக்கிடுவோம்!

காசொன்றைப் போட்டால்நம் கனத்தைக் காட்டிடும்
இயந்திரங்கள் அங்கே விந்தையில்லை—நம்
தேசத்திலே உண்டியலில் காசைப் போட்டால்
திருநீற்றையே அள்ளித் தருவார்களே!

அருமையாய்ப் பறவைக்கப்பல் ஐநூறு பேரை
ஏற்றிச் செல்லும் அதைப் போற்றிநிற்பார்—நாம்
திருவண்ணாமலைக் கார்த்திகை தீப தரிசனம்
கண்டுநிற்போம் நல்ல மண்டுகள் போல்!

# தீபாவளித் திருநாள்

புரோகிதன் :-

தேவர்களை மகிழ்விக்கப் பார தத்தில்
  தீவிரமாய்ப் பூசுரர்கள் செய்து வந்த
பாவமிலா யாகத்தைக் கெடுக்க வென்றே
  பாவிநர காசுரன்தான் வெறிகொண் டானே!
கோவையிதழ்ப் பாமாவும் துணிந்து சென்று
  கொன்றுவிட்டாள் ராக்கதனை வெற்றி கண்டோம்.
மேவு மிந்தத் திருநாளை ஆண்டு தோறும்
  மேதினியில் தீவாளி யான தப்பா!

காசியிலே கங்கையிலே நீரா டத்தான்
  கர்மமெலாம் தீர்ந்திடுமாம் சாஸ்தி ரங்கேள்.
தேசமெலாம் தீவாளி கொண்ட நாளில்
  தெளிந்திடுநல் லெண்ணெய்நீ ராடி வந்தால்
கூசாமல் செய்தகொலைப் பாவங் கூடக்
  கூண்டோடு போயகலும் புண்ணியந் தான்
நேசனைப்போல் தேடிவரும் கங்கையாடும்
  பலனுந்தான் கிட்டிடுமாம் நிகழ்த்தி னேனே!

செல்வன் :-

நாடெங்கும் தீவாளி என்றே பேச்சு
  நல்லெண்ணெய் குளித்தவுடன் கோடி கட்டி
வீடெங்கும் வாசமுறும் பலகா ரங்கள்
  வேண்டுமட்டும் தின்றதன்பின் வெடியெ டுத்தே
ஓடுங்கள் எனச்சிறுவர் கைக்கொ டுத்தால்
  உடனேபட் படாரென்று சத்தங் கேட்கும்
ஆடுங்கள் பாடுங்கள் என்று சொல்லி
  ஆனந்தங் கண்டிடலாம் நல்ல நாளே!

ஆண்டுக்கோர் தீவாளி தான்வ குத்தார்
ஆறேழு வகுத்தாலும் மகிழ்ச்சி தானே
ஈண்டுமிக்க மகிழ்ச்சியிலே கோடி கட்டி
இனிப்புள்ள பண்ணியங்கள் பலகா ரங்கள்
வேண்டுமட்டும் செய்துதின்று வெடிகள் சுட்டு
வேடிக்கை தெருக்கூத்து நாட கங்கள்
காண்பதற்கோர் திருநாளே! களிப்பு வெள்ளம்
கரைபுரளும் தீவாளி நல்ல நாளே!

ஏழை :-

தீவாளி தீவாளி என்று சொன்னார்
திருநாட்டார் ஆர்ப்பாட்டம் போடு கின்றார்
பூவாணம் பட்டாசு கொளுத்து கின்றார்
புத்தாடை பற்பலவும் கட்டு கின்றார்
சாவாது நானுந்தான் வாழு கின்றேன்
சஞ்சலத்தால் பெண்டாட்டி பிள்ளை யெல்லாம்
கூவாத குயிலாகக் குந்தி விட்டார்
கொஞ்சமுந்தான் இன்பமில்லை துன்பந் தானே!

அவதாரம் எடுத்துவந்த கடவுள் தோன்றி
அழகான பெண்ணொருத்தி தன்னை ஏவிக்
கவலைதரும் அசுரனையே கொன்ற துண்டாம்
கதைசொன்னார் தீவாளி கொண்டா டத்தான்
சுவையுள்ள பண்ணியங்கள் வேண்டாம்; கோடித்
துணிவகையும் பட்டாசும் வேண்டாம் வேண்டாம்.
இவையெல்லாம் ஏழைகளைக் கொன்ற ழித்தே
இருந்துதின்னும் கூட்டத்திற் கேற்ற தாமே!

ஞானி :-

கத்திபிடித் தொருகையால் வீசிக் கொண்டு
களங்குறித்த வீரன்பகை வீழக் கண்டு
செத்தவனின் வீரத்தைப் புகழ்ந்து பேசி
திருநாட்டில் கல்நாட்டும் வழக்க முண்டு!

செத்தவனின் சவத்தின்மீ தேறி நின்று
திருவிழாக்கள் கொண்டாடும் மனித ரெல்லாம்,
இத்தினமே தீவாளி கண்டு விட்டார்
எண்ண எண்ணப் பரிதாபம் தோன்று தையா!

வெற்றிவிழாக் கொண்டாடும் தமிழர் நாட்டில்
வெட்கமின்றிப் பெண்ணைவிட்டு வீர முள்ள
நற்றலைவன் தனைக்கொன்ற நாளை யின்று
நடத்துகின்றார் தீவாளித் திருநா ளென்று!
கற்றோரும் மற்றோரும் தூற்று கின்ற
கதையன்றோ? நாகரிகப் பண்பு முண்டோ?
சற்றேனும் பொருத்தமுண்டோ, வீரத் தாலே
சாதித்த செயலுண்டோ போற்று தற்கே?

கவிஞன் :

பழுக்கவிலை போலாடை யணிந்து வந்த
பண்புடைய தோழனை நான் கேட்டேன், அன்பா!
அழுக்குடுத்தி வந்துள்ளாய் ஏன்? வெளுப்பார்
அகப்படவோ இல்லை?'' என்றே. அவன்க ழுத்துச்
சுளுக்கும்வரை சிரித்துவிட்டுச் சொல்லு கின்றான்
''தோழனே நீ இவ்வுலகில் இல்லை யோ? நெய்
முழுக்காடிக் கோடியுடை யுடுத்தி வந்தேன்
முதல்தீபா வளியிதுவே அறிக'' வென்றே.

எண்ணெய்முழுக் காடுவார்க்கு நரக மென்னும்
இன்னலுல கதுகிடையா தென்று மக்கள்
கண்ணை மறைத் தோதிடுவார் மதம் வளர்க்கும்
காவியுடைப் பாதகர்கள்; அதையே எண்ணித்
திண்ணையிலே கிடப்பவனும் தெருவோ ரத்தே
தேய்பவனும் ஏங்கிடுவார் தேய்ப்ப தற்கே
எண்ணெய்பெறக் காசில்லை நரக வாழ்வை
ஏற்பதல்லால் வேறுவழி இல்லை என்றே.

நொடிக்குநொடி கணவர்களை மாற்றுகின்ற
நோய்பிடித்த அழகியரும்; இரவிற் கொள்ளை
யடிக்கவரும் திருடர்களும்; கைக்கூலிக்கே
அலைகின்ற எத்தர்களும்; அவரை நம்பி
அடுக்கடுக்காய்ப் பகற்கொள்ளை யடித்துச் செல்வம்
அடைவோரும்; அச்சடித்துப் பச்சை நோட்டை
விடுகின்ற கள்ளர்களும் நரகஞ் சேரா
திருப்பதற்கே எண்ணெய்முழுக் காடினாரே!

இழுக்குடைய புராணத்துக் கதையைக் கேட்டும்,
ஏற்றமிலா வழக்கங்கள் கொண்டும் சற்றும்
ஒழுக்கமிலா வாழ்க்கையினை நடத்தி வந்தும்
உயர்நாட்டார் மடமையெனும் சேற்றிறங்கி
முழுக்கெடுப்பார்; கொண்டாட்டம் என்று சொல்லி
முழங்கிடுவார்; பகுத்தறிவில் வெடிவைப்பார், நெஞ்
சழுக்குதனை நீக்காதார் உடையும் ஐயோ!
அழுக்காக உடுத்துகின்றார்! என்சொல்வேனே!

# அறிவியக்கம் பரப்புவோம்

அண்ணன் தம்பி மாரே—நாட்டில்
அறிவியக்கம் பரப்பிடு வோமே!
இனிதாமே
பிரசாரம் செய்யப் புறப்படுவோமே
வருவீரே
அண்ணன் தம்பி மாரே!

பூசுர ரென்றும் வேதிய ரென்றும்
பூமியில் எங்கும் மூடத் தனத்தால்
காசு பறிப்பார் ஆசை பறக்கக்
காரியம் தொடக்கு வோமே
அண்ணன் தம்பி மாரே!

நாட்டினி லெங்குஞ் சாத்திரக் குப்பை
நாறுவ தெல்லாம் தீருவ தென்நாள்?
வீட்டினை நீங்கிப் பாட்டுகள் பாடி
வெளியிலே புறப்படு வோமே!
அண்ணன் தம்பி மாரே!

# திருக்குறள் பரப்பிடுவீர்!

திக்கெட்டும் திருக்குறள் பரப்பிடுவீர்!—இந்தச்
செந்தமிழ் நாடெங்கும் பேருல கெங்கணும்
திக்கெட்டும் திருக்குறள் பரப்பிடுவீர்!

மக்களின் வாழ்வு மலர்ந்திடச் சிலசில
சொற்களில் வள்ளுவன் சொல்லிய பெரும்பொருள்!
(திக்கெட்டும்

உலக வாழ்வின் உயர்வினை உரைத்திடும்
ஓச்சும் அரசியல் முறையைக் கூறிடும்
இலகு மாந்தர்தம் காதல் நெறியினை
எடுத்துரைத் தின்பம் சேர்த்திடும் ஒருநூல்!
(திக்கெட்டும்

பாழும் புராணங்கள் நச்சுநீர் பாய்ச்சிப்
பகுத்தறி விழக்கச் செய்தமை நீக்கி
வாழும் முறையினை வாய்மை நெறிதனில்
வகுத்துநல் வழியினைக் காட்டிடும் பெருநூல்!
(திக்கெட்டும்

தமிழர்க் கொருநெறி வகுத்தவன் வள்ளுவன்
தந்த உயர்நூல் தானிந்த உலகில்
நமக்கினி இலக்கியம், வாழ்வின் குறிக்கோள்
நன்றாய் வாழவே ஒன்றாய் உலகமே!
(திக்கெட்டும்

# பொருந்தா மணம்

மனம் பொருந்தாமலே தோழி—என்னை
மணந்திடச் சொன்னால் ஒப்புவே னோடி!
மனம்......

விருப்ப மில் லாத கணவனைக் கூடி
இருப்பாய் என் றுரைத்தால் இயன்றிடு மோடி!
மனம்......

பற்றாத கொடியைப்போய்ச் சுற்றி வளைத்தால்
பட்டுப் போகுமென் றறியாமலே தான்
வற்றாத ஊற்றென இன்பம் சுரக்கும்
வாழ்வினைப் பாழாக்க வருபவ னோடு
மனம்......

பஞ்சணை மீதினில் காதல் பேசி
நெஞ்சினில் களிடபோடு கடைக் கண் வீசிக்
கொஞ்சியே விளையாடல் தவறென் றேசிச்
சஞ்சலம் தந்திடும் வஞ்சக னோடு
மனம்......

தேம்பிநாள் முழுதும் அழுதிடல் நன்றோ!
ஆமெனும் பெற்றோரின் மனம்கற் குன்றோ?
கூம்பியே தாமரை வாடிடல் நன்றோ?
குருட்டு வழக்கங்கள் துன்பமே யன்றோ?
மனம்......

# பாழ்படலாமோ?

அம்மையும் அப்பனும் அன்பாய்க் கூடி
நம்மைப் பெற்ற நாள்முதல் இன்றும்
மண்ணில் நம்போல் மனித இனத்தவர்
எண்ணில் லாதவர் இறத்தல் கண்டோம்!

இப்புவிப் பிறந்த எல்லா மக்களும்
எப்பொழு தாயினும் இறப்ப துறுதி
எனத்தெளி வுற்றோம் தினைப்படி ஆவி
தனையிழப் போர்க்குத் தத்தம் உறவினர்
வழக்கத் தின்படி வந்து கூடி
இழவு கொண் டாடி ஏகு கின்றார்!

நாட்டிற் குழைத்த நல்லோ ராயின்
ஏட்டிற் புகழ்ந்தவர் ஏற்றம் எழுதியும்
ஆண்டிற் கொருநாள் அவர்நினை வேற்று
வேண்டும் அவர்போல் வீர இளைஞரென(று)
ஆர்த்துப் பேசியும் அவர்பெயர்ப் புகழ்ந்தும்
பேரியல் விழாவாய்ப் பெருமைசெய் கின்றோம்!

வாழ்நாள் முழுதும் வருத்தங் கொண்டு
பாழென் றுலகைப் பழிக்கின் றோமா
இறந்தவர் நினைவே என்றுங் கொண்டு
இறந்தநம் வாழ்வைச் சிதைக்கின் றோமா?

கூழ்கிடைத் தாலும் குடித்து விட்டு
வாழ்ந்திட வழிகள் வகுக்கின் றோமே!
பெற்று வளர்த்த பெரியோர் சாவிற்
குற்ற துயரில் ஒருநாட் போயின்
மற்ற நாளெலாம் மகிழ்கின் றோமே!

மனைவி யிறந்த மறுமா தத்தே
நினைவு மறக்கவும் நெஞ்சு குளிரவும்
புதுவாழ் வின்பம் புகுந்து திளைக்கவும்
மதிமுக வெழில்நகை மங்கை யொருத்தியை
மறுமணம் செய்து மனமகிழ் வுற்றுக்
குறுநகை என்றும் கொள்கின் றோமே!

ஆனால்
கணவனை யிழந்த காரிகை மட்டும்
உணவைக் குறைத்தும் வெள்ளுடை யுடுத்தும்
இயற்கை யன்னை எழிலின் முடியெனப்
பயந்த கருங்குழல் பறிக்கப் பெற்றும்
தான்செயாக் குறைக்கவள் நோன்பிருந் துத்தன்
ஊனுடல் வருத்தியும் உளத்துய ருற்றும்
வாழ்நாள் முற்றும் வாடிய மலராய்ப்
பாழ்பட லாமோ? பாழ்பட லாமோ?

நல்மனங் கொண்டோ கருதா திருந்தீர்
பல்சான் றீரே! பல்சான் றீரே!

# தவளையின் சொர்க்கம்

தென்றல் சிலிர்சிலிர்க்கத் தேன்மாரி பெய்திருக்கக்
கன்னல்நேர் மங்கை கருப்புத் தவளையாள்

மன்னன் தவளை மடியிருக்கும் வேளையிலே,
''சொன்னநாள் வந்ததையா! சொர்க்கம்போம் வேளையிது''
என்றிவை சொன்னான் எதிர்வந் தமைச்சன்!

''புரோகிதன் வந்தேன். நீர் போவதற்குத் தக்க
சிரோன்மணிகள் பாதை திறந்துள்ள திப்போதே,

செல்லும் சடங்கெல்லாம் செய்யவோ?'' என்றந்தப்
புல்லன், புரோகிதன் பொய்நாக்குப் பாம்பண்ணன்,

சொல்லியதும் வெற்றிலை சூடமொடு பாக்கெல்லாம்,
கொண்டுவந்து பாம்பண்ணன் வாய்முன் படைத்துச்

''சடங்கெல்லாம் செய்து சடுதியில் நான் போகத்
திடமான மந்திரங்கள் செப்புகவே'' என்றன்னான்

தாள்வணங்கிச் சொன்னான் தவளை யரசன். ''நீர்
மால்மருகா! மால்மருகா! வாமுருகா! என்றெல்லாம்

சொல்லியென்றன் பின்னே சுறுசுறுப்பாய் ஓடிவந்து
கல்லென்றும் மேடென்றுங் காடென்றும் பாராமல்

வந்தால் விரைவில் வரவேற்கும் சொக்கமுமை''
என்றந்தப் பாம்பார் இசைக்கச் சரியென்று

மன்னன் தவளை யரசி தவளையிடம்,
''இன்ப புரிக்குநான் ஏகுகின்றேன் மங்காய்நீ
இன்னும் சிலநாளில் இன்பபுரி வந்திடுக;

பாம்புப் புரோகிதர்தம் பாதம் பணிந்திடுக!
தேம்பா திருந்திடுக!'' என்றவளைத் தேற்றித்

தவளையும் பாம்பாரின் தாள்தொடர்ந்தே யோடச்
''சிவசிவ'' என்றுரைத்துச் சீறிப்போம் பாம்பதுவும்,

வட்டமாய் ஓடி வளையத் தவளையும்,
திட்டமுடன் வால்தொடர்ந்து செல்கின்ற வேளையிலே

வாயின் அருகினிலே வந்தவுடன் சீறிப்போய்ப்
பாய்ந்தத் தவளையைப் பாம்பும் விழுங்கியதால்!

மண்டும் அறிவீனத் தாலிந்த மக்களெல்லாம்
கண்டபடி ஏமாந்து காசைப் புரோகிதர்க்குக்

கொண்டு கொடுக்கும் கொடுமைபோற் போனதே
மண்டுத் தவளையும் மாய்ந்து!

# அழுது விட்டாள்

போர்க்களத்தில் புகுந்துபகை மறவ ராலே
பொன்னுயிரை யிழந்தஅவள் அத்தான் போட்ட
வீரஉடல் தனைக்கொணர்ந்து வீட்டில் விட்டு
விளைவையெதிர் பார்த்திருந்த அணங்கி னர்க்கே
ஆர்த்தழுதல் இன்றியவள் அமைதி பூண்ட
அந்நிலையே பெருவியப்பை எழுப்பிற் றாக
நேரிழையாள் அழல்வேண்டும். இன்றேல் ஆவி
நீப்பளென்றார் சற்றுமவள் அழவில் லையே!

பின்அவளின் அத்தானின் வீரம் பற்றிப்
பெருமைபல சொன்னார்கள். புகழ் உடம்பில்
இன்னும்நூ றாண்டுபல இருப்ப னென்றும்
இணைந்துவாழ் தற்குரிய ஆள னென்றும்
தன்னுடைய நண்பர்களுக் குண்மை யான
தகவுடையோன் என்றுமவன் பகைவர் போற்றும்
நன்னனென்றும் அவனுடைய சீர்த்தி யெல்லாம்
நவின்றார்கள் எனினுமவள் அழவில் லையே!

அணங்கொருத்தி இடம்விட்டுப் பெயர்ந்து பின்னால்
அடியெடுத்து வைத்துமெல்லச் சென்று வீரன்
பிணம்அருகி முகமறைத்துக் கொண்டி ருந்த
பெருஞ்சால்வை தனைநீக்கி விட்டாள். காதற்
பிணைமுகத்தின் வெளுப்புதனைக் கண்ட பேதை
பெரும்ஓலம் இட்டழுவாள் எனநினைத்தாள்
அணங்குசற்றும் அசையவில்லை; கண்கலக்கம்
அடையவில்லை நினைத்தபடி அழவில் லையே!

எழுந்திருந்தே ஒருகிழவி இல்லுட் சென்றே
இறந்தஅவள் அத்தானும் அவளுங் கூடி
விழுந்த இன்பச் சேற்றினிலே விளைந்த பூவை
வேல்பிடித்துப் போர்புரியப் பிறந்த காதற்
கொழுந்துதனை மெல்லியலின் காற்புறத்தில்
கொண்டுவைத்தாள்! மடமடென நீருகுத்துக்
குழந்தையுனக் காகஇனி வாழ்வே னென்று
கூறியடங் காமலவள் அழுது விட்டாள்!

## அன்புத்தாய்

அன்னாய் உன்றன் அன்புதான்
அண்ணல் அருளுக் கடுத்ததாம்
இன்னல் வருங்கால் உன் கைகள்
என்றும் அணைத்துக் கொள்ளுமே!

மங்கல் இருளின் நிழலெனும்
மருளை விரட்டும் உன்குரல்
தங்க விளக்கின் கதிரொளி
தாயே எனக்கு நீயன்றோ?

—லாரா பாய்டு அம்மையாரின்
ஆங்கிலக் கவிதை.

# தெரு வோரப் பாதையிலே!

தென்னாட்டுத் தலைநகரம்
சென்னைத் திரு நகரம்
செழிப்பைக் கொஞ்சம் கேளுங்களே
சிந்தித்துத்தான் பாருங்களே!
நல்லாச் சிந்தித்துப் பாருங்களே!

நாறிவரும் கூவம்நதி நடுவோடத் தவம்செய்து
பேறுபெற்ற சென்னையிது பெருமைபெற்ற சென்னையிது!
புத்தம்புது வீடுகளாம் போய்நீளும் பாதைகளாம்
எத்திக்கும் ஓடுகின்ற எழிலான காருகளாம்!

தெருவீதி யோரத்திலே இருமருங்கும் நடைபாதை
நடைபாதை யோரத்திலே படைபடையாய்க்
குடும்பங்களாம்!
கெஞ்சிநின்று தொழில்நடத்திக் கிடைத்தமுத்து
அரிசிகொண்டு
கஞ்சிவடித் துண்பதற்குக் கல்லடுக்கித் தீவளர்ப்பார்!

வானகத்துக் கூரையடி வாழ்ந்துவரும் ஞானிகளாம்!
ஞானிகளின் குடித்தனமோ நாள்தோறும் பெருகிடுமாம்!
தீவளர்க்கும் வேளையிலே திருவளர்க்கும் மழைபொழிந்து
போயணைக்கும்! பானையிலே பொங்குவதும் கண்ணீரே!

வாடைபனி ஒரு நாளில் வந்துநம்மைத் தாக்கிவிட்டால்
கோடையிடி போலிருமல் குளிர்காய்ச்சல்
வரக்காண்போம்!
பனிக்காற்றை தென்றலெனப் படுத்திருக்கும் நடைபாதை
மனிதனுக்கு காய்ச்சல்வர மார்க்கமில்லை எனநினைப்போ!

பதைபதைக்கும் வெய்யிலிலே பலமுறையும் வெளிச்சென்றால்
சதைகருத்துப் போகுமென உளம்பதைக்கும் சீமானே!
தினந்தினமும் வெய்யிலிலே தெருவோரப் பாதையிலே
மனந்துணிந்து வாழ்ந்திருக்கும் மனிதருடல்
கருக்காதோ!

கட்டழகு மனைவியுடன் காதல்செய்யும் போதினிலே
பட்டுமெத்தை கட்டிலுள்ள படுக்கையறை நாடுகின்றீர்.
வெட்டவெளித் தெருவோரம் விண்மீனின் கண்ணெதிரே
கட்டிவைத்த நடைபாதைக் காதலுக்கோர் ஓரமில்லை

உடையுமில்லை; உணவுமில்லை; ஓய்ந்திருக்க நிழலுமில்லை;
கிடைத்ததையே உண்டிடுவார்; கிழிந்ததையே
உடுத்திடுவார்;
நடைபாதை யோரத்திலே நலிந்துறங்கிக் கிடந்திடுவார்
தடையின்றிப் பிள்ளைபெற்றுத் தாம்வளர்ப்பார்!
அயராமல்!

வெள்ளையனைப் போகவிட்டு விடுதலையும் வாங்கிவிட்டோம்
சள்ளையின்றி மனிதரெல்லாம் சமதர்மம் பேசுகின்றோம்.
நாடுவளம் பெறவேண்டி நாம்போடும் திட்டமெல்லாம்
நீடுநடை பெறவேண்டி நிதிசேர்த்துக் குவிக்கின்றோம்!

கொசுப்படையும் ஈப்படையும் கொஞ்சி விளையாடுகின்ற
பிசுபிசுத்த நடைபாதைப் பெருங்குடும்பம்
நினைத்தோமா?
ஆண்டாண்டாய்த் திட்டமிட்டோம் அழகழகாய்ச்
சட்டசபை
வேண்டாத வாதங்களிலே வேடிக்கை மனங்களித்தோம்

நம்மைப்போல் உருவுடையார் நம்மைப்போல்
மதியுடையார்
செம்மையில்லா வாழ்வுதனைச் சிந்தித்துப் பார்த்தோமா?
நடைப்பிணமாய்க் கிடப்போர்க்கு நல்வாழ்வு
கிடைத்தால்தான்
நடைமுறையில் முன்னேற்றம் நாடுபெறக் கூடுவதாம்.

# பிச்சைத் தொல்லை

பிச்சைக்காரர் தொல்லைரெம்பப் பெருத்துப் போச்சுங்க
—ஆளும்
பெரியவங்க மனசுவச்சா நிறுத்த லாமுங்க!
நச்சுப்பிச்சுனு காருவண்டி நிக்குமெடத்திலே—நம்மை
நாலுபக்கமும் சுற்றிக்கொண்டு பிச்சுப் பிடுங்கிறார்!
பிச்சைக் காரர்......

ஆனைக்காலு வியாதிவந்தவன் ஐயோ சகிக்கலே!—போகும்
ஆளுப்பேரு ஊடேவந்து பிச்சை கேக்கிறான்.
ஊனக்கண்ணுப் பொட்டைவந்து ஒருத்தி தோளிலே
—கையை
ஊன்றிநடந்து தட்டித்தடவித் துட்டுக் கேக்குறான்.
பிச்சைக்காரர்......

அழுகிவடியும் குட்டத்தோலன் வந்துநிக்கிறான்—நம்மை
அணுகியணுகிக் காசுகேட்டே அவதிப் படுத்துறான்.
பிழைத்தொழியக் காசுபோட்டுப் பின்னால் திரும்பினால்
—காலைப்
பிடித்துநன்றி சொல்லவர்றான் பொறுக்க முடியலே!
பிச்சைக்காரர்......

காத்துநின்றே உந்துக்காகத் தவங்கி டக்கையில்—வரும்
காரிலிடம் கிடைக்குமோன்னு கலங்கி நிற்கையில்
வாத்துப்போலோர் சித்திரக்குள்ளன் வந்துநிற்குறான்
—கையை
வச்சுநம்ம தொடையைத்தட்டி வணக்கம் செய்யுறான்.
பிச்சைக்காரர்......

வயசுப்பொண்ணும் கூடவந்து ரயிலிலேறியே—ஐயா
வயித்துப்பசி தீர்க்கவேணும் தருமப்ரபுவே!—என்று
துயரக்குரல் எழுப்புவதைப் பார்க்க முடியலே—இந்தத்
துன்பமெல்லாம் நம்மளாலே தீர்க்க முடியலே!
பிச்சைக்காரர்......

வீட்டுவாசல் படியைத்தாண்டி வெரசா நுழையுறான்
—என்ன
வேணுமுன்னு கேட்டாஅம்மா தாயே யிங்குறுன்
போட்டுவைத்த கொடியின்மேலே சேலையைக் காணும்
—அந்தப்
பொல்லாப்பய பிச்சைக்காரன் வேலையி தானே?
பிச்சைக்காரர்... ..

ஆளைப்பார்த்தா வீமசேனன் போலிருக்குறுன்—ஐயோ!
அவனுங்கூட மானம்விட்டுத் தானங் கேக்குறுன்.
காளைபோலே இருக்குறேநீ உழைக்கக்கூடாதா—என்றால்
காட்டமாக வேலைகேட்டு மூக்குடைக் குறுன்!
பிச்சைக்காரர்......

ஒன்றிரண்டு காசுபோட்டா உசிரைக் காக்குமா—இல்லை
உபத்திரவத்தை வளர்ப்பதுக்கே ஊக்கம் சேர்க்குமா?
தின்றசோற்றில் மீந்தவற்றை அள்ளிக்கொடுத்ததால்
—வறுமை
தீர்ந்துபோயி வாழ்ந்தபேர்கள் யார் இருக்கிறுர்?
பிச்சைக்காரர்......

ஊருக்கொரு பிச்சைக்காரர் விடுதிவேணுங்க—அங்கே
ஊமைசெவிடு குருடையெல்லாம் சேர்க்க வேணுங்க
ஊருநடுவே பிச்சைகேட்டால் பிடிக்க வேணுங்க — அவரை
உடனே அங்கே கொண்டுபோயி அடைக்க வேணுங்க!
பிச்சைக்காரர்......

# ஏன் போனாய்?

பெற்றதாய் நாட்டை விட்டுப்
பிறநாட்டுக் கேன்போனாய்?—தமிழா!
பிறநாட்டுக் கேன்போனாய்?—தமிழா!

பாடுபட்டு மாடெனவே பகலிரவாய் உழைத்தாலும்
பணங்காசு சேரவில்லை பட்டினியும் தீரவில்லை
கேடுகெட்ட பிழைப்பிதனைக் கேட்பவர்கள் யாருமில்லை
கேவலமாய்ப் போனதிந்த வாழ்வெனவே நினைத்தாயோ?
பெற்ற தாய்......

கடல்கடந்து போனவர்கள் காசுபணம் சேர்த்தார்கள்
கண்ணியமாய்த் திரும்பிவந்து காட்சியளித் தார்களென்றே
உடன்நீயும் புறப்படவே ஊக்கமிகக் கொண்டாயே
உண்மையிலே கண்டதென்ன உத்தமனே சொல்லிடுவாய்!
பெற்ற தாய்......

போயிருந்த நாட்டினிலே பொருள்சேர்த்துக்
கொண்டாயோ?
புகழோடு சுகமாகப் பூமான்போல் வாழ்ந்தாயோ?
ஓயாமல் மறுபடியும் உழைத்துழைத்துத் தேய்ந்ததல்லால்
உருவான பலனேதும் உண்டாகக் கண்டாயோ?
பெற்ற தாய்......

நீபிறந்த நாட்டைப்போல் நேர்மையுடன் அயலாரை
நெஞ்சார வரவேற்கும் பிறநாடென் றெண்ணினையோ?
வாய்திறந்து விழுங்குதற்கு வந்துவிட்டான் எனஉன்னை
வஞ்சகரை விரட்டுதல்போல் விரட்டிவிடத் துடித்தாரே!
பெற்ற தாய்......

அடையாளச் சீட்டின்றி நடமாட முடியாதாம்
அயல்நாட்டுத் தெருக்களிலே! அநியாயம்! இதுமெய்யே!
தடையின்றி வாழ்வதற்குத் தலைவரியும் கொடுத்தால்தான்
தங்கியிருந் திடலாமாம்! தவறிவிட்டால் விரட்டுவராம்!
பெற்ற தாய்......

கொண்டமனை யாட்டியுடன் கூடியிருந்து வாழ்வதற்குக்
கூடுதலாய் வரிக்கொடுக்க வேண்டுமெனக் கூறுகின்றார்.
வண்ணமுறு மக்களையோ வரவழைத்துக் கொள்வதற்கு
வழியில்லை எனச்சட்டம் வகுத்துவிட்டார் அங்கெலாம்!
பெற்ற தாய்......

செத்தாலும் தாய்நாட்டில் சாவதிலே சிறப்புண்டு
சென்றுபிற நாட்டினிலே சீரழிய வேண்டாமே!
எத்தனைதான் வறுமையிலே இடருற்ற போதினிலும்
இனிமேலே பிறநாட்டை எண்ணாதே! எண்ணாதே!
பெற்ற தாய்......

# பொய்மகள்

பஞ்சாங்கம் பார்ப்பவன் சோதிடமாம்
பாவையைத் தான்மணம் செய்தபின்னே
நெஞ்சாரக் காதலித் தின்பமுற்றே
நீள்புவி மீதென்னைப் பெற்றனரே.

சூரியனைப்பாம்பு கௌவுமொரு
தோதான நேரத்தில் தோன்றியதால்
ஆரிய நாட்டினர் யாவருமே
ஆனந்தத் தாடினர் பாடினரே!

பகையைக் கடித்து விழுங்குமொரு
பாம்பினைப் போலிந்தத் தெய்வமகள்
வகைப்பட்ட நன்மைசெய் வாளென்றே
வகுத்தஎன் சாதகம் கூறியதாம்!

பொய்யென்று பேரிட்டு நீராட்டிப்
புராணப்பா லூட்டிப்பின் தாலாட்டி
ஐயர் மகளென்னைச் சீராட்டி
ஆரியப் பெண்கள் வளர்த்தனரே!

ஐந்து வயது நிறைந்த வுடன்
அருமைக் கலைகள் அறிந்திடவே
சுந்தர வாலிபர் சூதாடும்
துறைதொறும் கல்வி பயின்று வந்தேன்!

நல்லநல்ல பாடம் படித்துவந்தேன்
நடந்த செயலொன்றைப் பத்தாக்கிச்
சொல்லிடும் வல்லமை பெற்றுவிட்டேன்
தொல்புவி யெங்கும் புகழ் பெற்றேன்!

தொல்லை யடைந்தவர் வீடுவந்தால்
துரத்தும் கருமியைப் பாரியென்று
சொல்லும் கவிவாணர் நாவினிலே
தோன்றி நடனமிட் டாடிவந்தேன்.

கற்ற அறிவின் திறத்தாலே
கட்சி நிலைக்க வழிதேடிக்
குற்றத்தை மாற்றும் வழக்கறிஞர்
குடியுள்ள வீடெல்லாம் போயிருந்தேன்!

பெட்டிப் பணத்தையே பூட்டிவைத்துப்
பிச்சைக்கு வந்தவர்க் கில்லையென்னும்
வட்டிக் கடைகாரர் ஏட்டினிலே
வாடிக்கை யாகப் படுத்திருப்பேன்!

பொன்னுக்குத் தம்முடல் விற்றுவிட்டுப்
பூரித்துப் பேசி மகிழ்ந்திருக்கும்
மின்னற் கொடிநிகர் வேசையரின்
வீடெல்லாம் ஆட்சி செலுத்திவந்தேன்!

புடவைக் கடையிலும் போயிருப்பேன்
புரோகிதர் நாவிலும் தானிருப்பேன்
கடன்காரர் வீட்டிலே என்றென்றுமே
கவிபாடிக் கொண்டுநான் வீற்றிருப்பேன்!

பத்திரிகைக் காரர் பேனாவிலே
பாய்ந்தோடும் மையில் கலந்திருப்பேன்
சித்திரப் பெண்கள் நினைத்தவுடன்
சிந்திடும் கண்ணீரில் சேர்ந்திருப்பேன்!

நீதி நெறியைத் தலைகாக்க
நின்றிடு மன்றிலுஞ் சென்றிருந்தே
பாதி கலந்துநான் உண்மையெனும்
பாவையை வஞ்சப் பழிதீர்ப்பேன்!

பஞ்சமா பாதகம் செய்பவர்க்குப்
பக்கத் துணையாக நானிருப்பேன்
நெஞ்சார என்னை நினைப்பவர்க்கு
நித்தமு மோடிப் பணி புரிவேன்

எத்தனை எத்தனை யோ இடத்தில்
என்கொடி கட்டிப் பறக்குதையா!
சத்திய ஞானம் படைத்தவரும்
தஞ்ச மடைவதுன் டென்னிடமே!

பொய்மக ளென்னை யொருமுறையே
புணர்ந்தவர் மீண்டும் மருக்கொண்டே
எய்தித் தொடர்ந்து கலந்திடுவார்
எத்தனை நாளைக்கும் சலிப்படையார்!

# சிறு கதைகள்

பொய்வேண்டாம் பொய்வேண்டாம் என்று சான்றோர்
புகன்றதெலாம் அதுவிளைக்கும் தீமை நோக்கி
நெய்கின்ற தீமையெவாம் நீங்கி விட்டால்
நிகழ்காலம் பொற்காலம் ஆகி நிற்கும்!
வைகின்ற மனம்போனல் அன்பு கூடும்;
வாழ்வினிலே முன்னேற்றம் உண்மை யாகும்!
செய்கின்ற செயலெல்லாம் உயர்ந்த தானல்
தேனருவி பாய்ந்தோடும் வைய மெங்கும்!

இருப்பது பொய்; போவதுமெய் என்று சில்லோர்
இவ்வுலகை வெறுக்கின்ற கருத்து ரைப்பார்
கருப்பத்தை நிறுத்திவிட்டால் உலக மில்லை;
காண்கின்ற தத்துவங்கள் எதுவு மில்லை.
விருப்பத்தை நிறைவேற்ற ஆற்ற லற்றோர்
வெறுப்புற்றுச் சொல்லுகின்ற வேதாந் தத்தால்
உருப்பெற்ற பொருளெல்லாம் பொய்யாய்க் கொண்டால்
உலகத்து மண்துகளே மிஞ்சிக் காணும்!

பொய்யென்று கற்பனையைப் பழித்துச் சொன்னல்
பொருளற்றுப் போய்விடுமே! உண்மைக் கிங்கே
செய்கின்ற அழகன்ருே? சான்ருேர் கொள்கை
சிறப்படையக் குழைக்கின்ற வண்ண மன்ருே?
தெய்வத்தைக் கண்குளிரக் காட்டு கின்ற
திருவன்ருே? கற்ருேர்தம் நெஞ்ச ரங்கில்
பெய்கின்ற மழைநீரில் உரமும் சேர்த்துப்
பெறுகின்ற விளைவன்ருே? இன்பக் காட்சி!

நெஞ்சத்துக் கற்பனையைக் கல்லில் தேக்கி
நிறுத்துபவன் சிற்பி, அதை ஓவிய ன்தான்
கொஞ்சுகின்ற திரைப்படமாய் வண்ணங் கூட்டிக்
கொடுத்திடுவான். பாவலனே காவி யத்தில்
விஞ்சுகின்ற சொற்களிலே படைத்த ளிப்பான்
வியப்படையக் கற்றவர்கள் துய்க்கும் பட்டுக்
குஞ்சத்தை எளியவனும் தொட்டுக் கொஞ்சக்
கொடுத்திடுவான் கதைபடைக்கும் எழுத்து வேந்தன்!

அடுத்தடுத்து வாழ்க்கையிலே தொடரும் சிக்கல்
அத்தனையும் வகைப்படுத்திப் பிரித்தெ டுத்துத்
தொகுத்துரைக்கும் ஆற்றலினல் உண்மை வெல்லச்
சொல்லுகின்ற பாங்கிருக்கும் பெருங்க தையில்!
விடுத்ததொரு கவண்கல்லில் மோதிக் கீழே
விழுகின்ற கனிச்சுவையைத் துய்த்தல் போலே
எடுத்ததொரு கற்பனையின் திறத்தி னலே
இசைப்பதுதான் சிறுகதையின் ஆற்றலாகும்!

மின்னுகின்ற நொடிப்பொழுதில் முடிந்த போதும்
மீளாது நெஞ்சத்தில் தேங்கு கின்ற
சன்னமெனும் உணர்வுதனைக் கற்ப னைக்குச்
சதிராடும் சொற்களினல் சேர்த்துக் கூட்டி
உன்னதமாம் உருவகத்தைப் படைத்துக் காட்டி
ஒப்பரிய சித்திரமாய்ச் செய்தி றத்தால்
சின்னதொரு வடிவத்தில் எழுத்து வல்லார்
சேர்த்தளிக்கும் சிறுகதைகள் சுவையின் கோவை!

நீர்க்குவளை நீட்டியவள் கையைப் பற்றி
நின்றவனின் செய்கைக்குப் பயந்து கூவி
ஆர்ப்பவளைத் தேடிவந்த அன்னை யின்பால்
அம்மாநீர் விக்கியதிக் காளைக் கென்றே

வேர்த்தவுடல் காயுமுனம் தன்னைக் காக்க
விழைந்தவளின் போக்கெண்ணி நகைத்தான் கள்வன்
கோக்கின்ற உள்ளத்துக் காதல் கூறும்
குறுங்கதைகள் கலித்தொகையில் கொள்ளை! கொள்ளை!

புறமுதுகு காட்டினனோ மைந்த னென்று
போர்க்களத்துப் பிணம்புரட்டிப் பார்த்த போது
திறன்மிகுந்த விறல்மைந்தன் மார்பில் அம்பு
செருகியுள்ள உண்மைதனைத் தெரிந்து கொண்ட
மறமகளின் நெஞ்சத்தில் பொங்கு கின்ற
மகிழ்ச்சிதனைப் புறப்பாட்டில் வடித்தி ருக்கும்
அறங்கூறும் சிறுகதைகள் சங்க நூலுள்
ஆயிரமாம் ஆயிரமாம் காண லாமே!

சிறுகதைகள் அறுபத்து மூன்றின் கோவை
சேக்கிழார் அருள்பெரிய புராண மாச்சாம்!
குறுகுறுக்கும் குழந்தைகட்கு வள்ளி யப்பா
கொடுத்ததெலாம் சிறுவர்சிறு கதைக ளாச்சாம்!
மறுமலர்ச்சிக் காலத்தில் புதுமைப் பித்தன்
வரைந்ததெலாம் சிறுகதையின் பெருமை யாச்சாம்!
விறுவிறுப்புச் செந்தமிழில் அறிஞர் அண்ணா
விரல்படைத்த சிறுகதைகள் வெல்லப் பாகாம்!

அயராமல் தொடர்ந்தெழுதும் கலைஞர் பூவை
ஆறுமுகம் அநுத்தமா கமலா லட்சுமி
வியன்திறமை மிகு பி. எஸ். இராமையா நல்
விளையாட்டுத் தமிழ்எழுதும் அழகர் சாமி
ஜெயகாந்தன் ரகுநாதன் வல்லிக் கண்ணன்
தில்லைவில்லா ளன் டி. கே. சீனிவாசன்
பயன்கவிதைக் கதையெழுதும் நாச்சியப்பன்
பல்சுவைசேர் சிறுகதையை வளர்க்க லானோம்!

சமுதாய இருள்கிழியக் கதிர் விரிந்தால்
      தலைநிமிர்ந்து வாழ்ந்திடலாம்; இருட்ட றையின்
கமுக்கத்தை வெளிப்படுத்தல் விகட மாமா?
      கண்கூசும் மனங்கூசும் பழியும் சேரும்!
குமுதமலர் விரித்தழகு கொடுக்க லாகும்
      குமட்டுகின்ற புகைநச்சைப் பரப்ப லாமா?
அமுதான கதைபடைக்க மறுத்து நாட்டில்
      அவமானம் வளர்ப்பவரைத் தடுத்தல் வேண்டும்!

ஆடைகுறைக் கின்றகதை வேண்டாம்; நல்ல
      அறிவுவளர்க் கின்றகதை படைத்தல் வேண்டும்!
வாடைமதுக் குடிக்கதைகள் வேண்டாம்; தூய்மை
      வளர்க்கின்ற சிறுகதைகள் வரைதல் வேண்டும்!
பீடைமதஞ் சாதிகதை வேண்டாம்; அன்பு
      பெருக்குகின்ற திருக்கதைகள் மிகுதல் வேண்டும்
மேடையிலே வீசுகின்ற பூங்காற் றைப்போல்
      மிகவினிய சிறுகதைகள் படைப்போம் வாரீர்!

# நூல் வெளியீடு

கொல்லர்களின் வீதியிலே ஊசி விற்கக்
கூவுகின்ற பான்மையெனக் காப்பி யத்தில்
வல்ல தமிழ்ப் புலவர்களின் அவையிற் சென்று
வாதமிடும் பேதையென நூற்ப திப்பில்
வல்லவர்கள் கூட்டத்தில் வெளியீட் டிற்கு
வகைகூறும் நகைமொழியைப் பாட வந்தேன்
தில்லைநா யகங் கொடுத்த தெம்பல் லாமல்
திறன்வேறில் லாதவெனைப் பொறுத்துக் கொள்வீர்!

தழைக்காட்டு மரமெனினும் பூத்த போது
தனிக்கவர்ச்சி கொண்டிருக்கும்; வண்டு கூடும்!
மழைமேகக் கருப்பெனினும் முகக்க ளையால்
மணச்சந்தை மதிப்பிற்பெண் உயர்ந்து நிற்பாள்
தழலாக இருந்தாலும் சுடர் விளக்கில்
தனங்கூட்டும் திருமகளாய்ப் பொலிவு காட்டும்;
அழகாக வெளியிடுக நூலை யாரும்
ஆவலுடன் வாங்குதற்குத் துணையா கும்மே!

அறவாணர் வரலாற்றை வரைக! கெட்ட
ஆசைகளைப் பேசுகின்ற கதைகள் வேண்டாம்!
மறவீரர் திறன்வரைக! திரைப்ப டத்து
மங்கையரின் வரலாறு பரப்ப வேண்டாம்!
அறிவாளர் ஆய்வுகளை விளக்கம் செய்க!
அந்தரங்க மருமங்கள் வேண்டாம்! நல்ல
தரமாக வெளியிடுக நூலைப் பண்பு
தழைத்தோங்கி மக்களினம் சிறப்ப தற்கே!

களையின்றிச் செய்திடுக வயலை! அங்கே
கண்டிடலாம் நல்விளைச்சல்! எழுதும் கைக்குத்
தளையின்றிச் செய்திடுக; கருத்து வெள்ளம்
தடையின்றிப் பாய்ந்தறிவு வளத்தைக் கூட்டும்!
விழைவின்றிச் செயல்புரிதல் வேண்டாம்! நாட்டு
வேட்கையுடன் எப்பணியும் செய்க! என்றும்
பிழையின்றி வெளியிடுக நூலை! நல்ல
பெயரோடு பயன்மிகவே பெறலா கும்மே!

பொலிவாக மோதிரங்கள், வயிரத் தோடு
போடுவது சிலருக்கே வாய்ப்ப தாகும்!
வலிவான கோட்டையென வீடு கட்டி
வாழ்ந்திடவே எல்லோரும் நினைக்கொ ணாது!
சலியாமல் போராடும் வாழ்வில் மக்கள்
தலையாய அறிவுபெறச் செய்தல் வேண்டும்
மலிவாக வெளியிடுக நூலை, ஏழை
மகன்கூட வாங்குதற்கிங் கெளிதா கும்மே!

நலமான வாழ்க்கைக்கு மருத்து நூலும்
நாட்டுவளம் கூட்டுவர லாற்று நூலும்
நிலநூலும் உயிர்நூலும் வேதி நூலும்
நீதிநெறி நன்னூலும் சட்ட நூலும்
வலமிடுகோள் அறிநூலும் வான நூலும்
வாழ்வுயர்த்தும் பயிர்நூலும் பாட்டு நூலும்
பலவாக வெளியிடுக நூலை எந்தப்
பாங்கினரும் வாங்கிமிகப் படிக்க லாமே!

வணங்குகின்ற பண்பிருக்க வேண்டும்! தீமை
வரும்போதில் இரும்பாகும் ஆற்றல் வேண்டும்
குணங்குடிகொண் டிருக்கின்ற நெஞ்சம் வேண்டும்
குறையாத தன்மான உணர்ச்சி வேண்டும்

கணந்தோறும் இந்நாட்டு மக்கள் வாழ்வில்
 குறையின்றி நிறைபெருக வேண்டு மென்னும்
உணர்வுடனே வெளியிடுக நூலை! நாட்டை
 உயர்த்துகின்ற செயலாகும்! முயற்சி வெல்லும்!

தலைப்பினிலே ஒருகவர்ச்சி! எழுது கின்ற
 தமிழ்நடையில் ஒரு கவர்ச்சி! படிக்கும் நெஞ்சை
வலைப்படுத்தும் அச்சமைப்பில் ஒருகவர்ச்சி!
 வரைபடத்தில் ஒருகவர்ச்சி! வண்ணங் காட்டி
மலைப்படையைச் செய்கின்ற ஓவி யங்கள்
 வாய்ந்திருக்கும் புதுமைகளின் கோவை என்னக்
கலைப்படைப்பாய் வெளியிடுக நூலைக் காணும்
 கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தா கும்மே!

வரங்கொடுக்கும் பரம்பொருளின் தத்து வத்தை
 வழங்குகின்ற மெய்யுணர்வு விளக்க மேனும்
சரங்கோத்த மலர்போன்ற தூய காதல்
 தன்மையினை வெளிப்படுத்தும் கவிதை யேனும்
கரங்குவித்துத் தாள்பிடித்து வாழ்ந்த மக்கள்
 கண்டவிடு தலைப்போரின் காதை யேனும்
அரங்கேற்றி வெளியிடுக நூலை! மக்கள்
 ஆர்வமுடன் வாங்குதற்குத் துணையா கும்மே!

## பதிப்பாளர்

வானத்து மதிதோன்றின் இருட்டு நீங்கும்
மாந்தர்க்கு மதிவந்தால் திருந்தும் வாழ்வு
தேனொத்த மங்கைமுக மதியைக் கண்டால்
தேடிவந்த காதலற்குக் களிப்புத் தோன்றும்!
கூனொத்த நெஞ்சுடையார் கொடுமைக் கஞ்சிக்
குனிந்திருக்கும் வாழ்வுடையார் நிமிர்ந்து நிற்க
ஏனத்து மருந்தெனவே மதிவல் லார்தம்
ஏடுகளைப் பதிப்பாளர் நாட்டுக் கீவார்!

அமுதாக ஏருழவர் படைத்த வெல்லாம்
அங்காடிப் படியேற வில்லை யென்றால்
கமகமெனச் சமையலறை மணத்தல் உண்டா?
களிப்பாக்கு வெற்றிலையின் சுவையு முண்டா?
சமுதாயச் சந்தையிலே வணிகர் இன்றேல்
தறிப்போட்ட துணியெல்லாம் விலைக்குப் போமா?
அமைதிமிகும் அறிஞர்படைத் தளித்த வெல்லாம்
அச்சேற்றப் பதிப்பாளர் இன்றேல் என்னும்?

கம்பனையும் மில்ட்டனையும் ஒப்பு நோக்கிக்
காந்தியையும் லிங்கனையும் சேர்த்துக் கூட்டித்
தும்பியென நூல்தோறும் சுவையு றிஞ்சித்
துய்க்கின்ற வாசகரின் இன்ப மெல்லாம்
தம்பெரிய சாதனையால் அச்சில் ஏற்றித்
தருகின்ற பதிப்பாளர் செயலே யன்றோ?
கொம்புத்தேன் கைக்குவரத் துணையாய் நிற்கும்
குறித்தொண்டர்! அறிவொளியைக் கொணரும் தூதர்!

மூலிகையின் பெரும்பயனைக் கண்ட முன்னோர்
முடிவைத்தார்; இந்நாளிற் பயனி ழந்தோம்
தோலுரிக்கும் பாம்பெனவே நஞ்சு கக்கித்
துண்டாடும் சாதிவெறி கொண்ட தாலே

வேலிவைத்துச் சதிகாரர் ஒருசா ரார்க்கே
வித்தையினைப் பயிற்றுவித்த வஞ்சம் கண்டோம்!
நூலனைத்தும் பதிப்பவரோ நுகர்வோர்க் கெல்லாம்
நூற்றுக்கு நூறுதரும் தூய தொண்டர்!

சமுதாயம் காக்கின்ற நூல்கள் தம்மைத்
தருகின்ற பேரறிஞர் மேலோர் ஆவார்.
அமுதாகப் படைக்கின்ற அறிஞர் நூலை
அளிக்கின்ற பதிப்பாளர் நல்லோர் ஆவார்
நமநமக்கும் உணர்ச்சிக்குத் தீனி கூட்டி
நல்குகின்ற புல்லறிவு நூல்ப டைப்போர்
குமுகுமென வளர்கின்ற சமுதா யத்தைக்
கொடுநஞ்சால் அழிக்கின்ற மாக்கள் ஆவார்!

வள்ளுவனைக் காப்பியனைக் கற்ற வர்கள்
வைத்திருந்தார் தம்நெஞ்சப் பெட்டிக் குள்ளே!
கொள்ளைகொள்ளை யாயிருந்த அறிவுச் செல்வம்
குறைப்பட்டுச் சிறைப்பட்டு நின்ற தம்மா!
அள்ளிவந்து வெள்ளமென உலகுக் கெல்லாம்
அச்சேற்றிப் பதிப்பித்துத் தந்தார் தம்மை
உள்ளுதொறும் உள்ளுதொறும் நன்றி யாலே
உவகைவந்து நெஞ்சகத்தில் பொங்கு தம்மா!

ஆறுமுக நாவலராம் அறிஞர் சைவ
ஆகமங்கள் புராணங்கள் திருமு றைகள்
கூறுகூ றுய்க்கிடந்த வற்றைச் சேர்த்துக்
கூட்டிஒழுங் காக்கிஉயர் பதிப்பாய்த் தந்தே
ஏறிவந்த பரங்கியரின் சமயந் தன்னை
எதிர்த்துநின்று சைவத்தைக் காத்தார்; சற்றும்
ஊறின்றிப் பிழையின்றித் தமிழைக் காத்தார்;
உத்தமரின் தொண்டெண்ண உள்ளந் துள்ளும்!

நேற்றிருந்த காப்பியங்கள் இன்றைக் கில்லை
நீரோடு போயினவோ தீயில் வெந்து
காற்றோடு சாம்பலெனக் கலந்து போச்சோ!
கவிஞர்படைப் பத்தனையும் வீணாய்ப் போச்சே!
கூற்றுவர்போல் பிறசமயம் சார்ந்தோர் தம்மைக்
கொலைசெய்த பாதகர்கள் அன்னார் செய்த
ஏற்றமிகு நூல்களையும் அழித்து விட்டார்!
எழில்மிகுந்த தமிழ்த்தாயின் அணி பறித்தார்!

சேமித்து முன்னோர்கள் வைத்த கல்விச்
செல்வத்தைக் காப்பியங்கள் தம்மை யெல்லாம்
ஓமத்தில் எரித்தவர்கள்; ஓடும் ஆற்றில்
உடன்போக விட்டவர்கள் தம்மைக் கெஞ்சி
மீதத்தை மீட்டுவந்து பதிப்பித் திந்த
மேதினிக்குத் தமிழ்த்தொண்டு செய்த நல்லார்
சாமிநா தப்பெரியார் தம்மை எங்கள்
தமிழ்த்தாத்தா என்றழைத்துப் பெருமை
கொள்வோம்!

பழந்தமிழ்நூல் ஏற்றமுறப் பதிப்பிப் போரும்
பழந்தமிழர் அடியொற்றிப் புதுமை சேர்த்தே
அழகொழுகப் புதுப்படைப்பை ஆக்கு வோரின்
அரியநூல் பலவற்றைப் பதிப்பிப் போரும்
இழந்ததமிழ்ப் பெருமைதனை மீட்போ ரென்பேன்
எழில்மிகுந்த தமிழ்த்தாயின் தொண்ட ரென்பேன்
குழந்தைகளும் இளைஞர்களும் வளர்ந்தோர் தாமும்
குறையில்லா அறிவுபெறச் செய்வோ ரென்பேன்!

வளர்ந்துவரும் விஞ்ஞான முன்னேற் றத்தை
வடிவாக்கித் தருகின்ற நூல்கள் கண்டேன்
கிளர்ந்துவரும் தொழிலாளர் முன்னேற் றத்தைக்
கேடகற்றித் தருகின்ற நூல்கள் கண்டேன்

தளர்ந்துவரும் போதெல்லாம் உணர்வு கூட்டித்
தருகின்ற நெறிநூல்கள் பலவுங் கண்டேன்
உளந்தளரா திவற்றையெலாம் பதிப்பிப் போர்கள்
உயர்ந்ததமிழ்த் தொண்டரெனப் போற்றுகின்றேன்!

பயிர்விளையும் அதனிடையே களையும் தோன்றும்
பயன்விளையும் அதனுடனே துயரும் தோன்றும்
உயர்தமிழ்நூல் பலவற்றின் ஊடே தீய
உடல்வெறிநூல் சிலதோன்றும்; அவற்றை யெல்லாம்
தயவுடனே கேட்கின்றேன்; பதிப்பா ளர்தம்
தரங்கெடுக்கும் அழுக்கெனவே ஒதுக்க வேண்டும்
பயனுடைய நூலன்றி வேறு நூல்கள்
பரவாமல் தடுத்தல்பெருந் தொண்டா கும்மே!

மேற்படிக்கு முன்னேற்றல் அறமாம்; அந்த
மேற்படிக்கு ஊறுவரின் தடுத்தல் நன்றாம்!
காற்படியை முழுப்படியாய் நிறைத்தல் நன்றாம்
கலக்கவரும் துளிநஞ்சும் விலக்கல் நன்றாம்!
பாற்பசுவைக் காப்பதுபேர் அறமாம்; நச்சுப்
பாம்புகளைக் கொல்லலுமோர் அறமே யாகும்!
நூற்படியே நடப்பதுநல் அறமாம்; கெட்ட
நூல்பரவா வணந்தடுப்ப தறமே யாகும்;

அடிக்கின்ற தென்றலினல் உடலுக் கின்பம்!
அலைமோதி எழுங்கடலோ கண்ணுக் கின்பம்!
துடிக்கின்ற பூங்கொடியின் அசைவு தோறும்
தோன்றுகின்ற எழிலுக்கோ இணையே யில்லை.
படிக்கின்ற போதெல்லாம் இன்பம் இன்பம்!
படித்தவர்கள் சுவைவிளக்கும் போதும் இன்பம்!
முடிக்கின்ற இன்பமில்லை இந்த இன்பம்
முடிவின்றித் தொடர்கின்ற இன்ப மாகும்!

# வெற்றித்தாய் சிரித்தாள் இங்கே!

கீழ்நாட்டார் என்ப தாலே
கீழ்ப்பட்டார் எனநி னைத்துப்
பாழ்நாட்டங் கொண்ட மேற்குப்
பாக்கிஸ்தான் ஆள வந்தார்
வாழ்நாட்டங் கொண்டெ ழுந்த
வங்கத்தை நசுக்கி வந்தார்;
சூழ்வாட்டம் போக்க மக்கள்
சுழற்காற்றுப் போலெ ழுந்தார்!

ஆதிக்க வெறிக்கும் எல்லை
அளவுண்டே மக்கள் தம்மைப்
பாதிக்கும் ஆட்சி தன்னைப்
பலநாட்கள் பொறுப்ப துண்டோ?
சாதிக்கும் பொய்யும், ஒற்றைச்
சமயத்தார் என்னும் கூற்றும்
வாதிக்கும் உயிரை என்றால்
மறுப்பின்றி ஏற்ப துண்டோ?

எண்ணத்தால் தொலையர்; நாட்டின்
எல்லைக்கும் தொலையர்; பேசும்
வண்ணத்தாய் மொழிக்கும் அந்த
வன்னெஞ்சர் தொலையர்; ரத்தம்
உண்ணத்தான் அலைந்தி ருக்கும்
ஓநாயைப் போன்றோர் வங்க
மண்ணைத்தாம் விட்டொ ழிந்தால்
வாழ்வுண்டென் றுணர்ந்தார் மக்கள்.

வங்கத்தின் எண்ணம் முஜ்புர்
ரகுமானாய் வடிவெ டுத்துத்
தங்கத்தாய் நாட்டை மீட்கத்
தகுஞ்சேனை யாய்வ ளர்ந்து
சிங்கத்தைப் போலெ ழுந்து
சீற்றத்தைக் காட்டி, மேலைப்
பங்கத்தான் யாயா கானின்
படைமேலே பாய்ந்த தம்மா!

ஊரெல்லாந் திரண்டெ ழுந்தே
உரிமைக்குக் குரலெ ழுப்பப்
பாரெல்லாம் பார்த்தி ருக்கப்
படைகளை யனுப்பி வாழ்வின்
வேரெல்லாம் இற்று வீழ
வெடிகுண்டைப் போட்டு நற்றாய்
மாரெல்லாங் கற்ப ழித்து
மாபாவி கொடுமை செய்தான்.

படையாட்சி கொண்ட மேற்குப்
பாக்கிஸ்தான் வெறியொ ழிக்கத்
தடையாக எழுந்த வங்கத்
தலையெல்லாம் சாய்த்து நாட்டின்
கடையாணி போலி ருந்த
கற்றாரைச் சுட்டுக் கொன்று
தொடைதட்டி மேலும் மேலும்
துள்ளாட்டம் போட்டி ருந்தான்.

உரிமைக்குக் கிளர்ந்தெ ழுந்த
ஊராரைக் கொன்றொ ழித்தல்
சரிதானா என்று கேட்கத்
தக்கோர்கள் உலகத் தில்லை;

சிரிமாவும் இதுகு றித்துச்
சிந்திக்க வில்லை, ஆனால்
அரிமாப்போல் பெண்ணொ ருத்தி
ஆர்ப்பரித்துக் குரல்கொ டுத்தாள்!

ஆகாத செயல்கள் செய்யும்
யாயாகான் பூட்டோ கும்பல்
போகாத நெறியிற் போகும்
போக்கினைத் தடுக்க எங்கள்
மாகாளி சக்தி வீர
மாதாவே படைத்தெ ழுந்தாள்
ஆகாகா! பார தத்தாய்
அவள்பேர்தான் இந்தி ராவே!

உள்ளூரின் கலகத் தைத்தான்
ஒழிப்பதற்குப் படைய னுப்பி
வெள்ளம்போல் குண்ட டித்து
வீழ்த்துகின்றோம் என்று ரைத்தார்
கள்ளத்தால் அவர்கள் செய்யும்
கயமையை வைய மெங்கும்
விள்ளத்தான் பறந்து சென்றாள்
வெற்றித்தாய் இந்தி ராவே!

பூட்டோவும் யாயா கானும்
பொங்கித்தான் பொரும லானார்
கூட்டாக நிக்சன் மாவோ
கொடுப்பார்கள் தோட்டா வென்று
தீட்டாத திட்டம் தீட்டிச்
சிங்கத்தை இடறி னாற்போல்
போட்டார்கள் இந்தி யாவில்
போர்க்குண்டு போட்டே விட்டார்!

ஈழ்வங்க மக்கள் செய்த
    கிளர்ச்சிக்குத் தோள் கொடுத்து
வாளேற்கச் சூளு ரைத்து
    வரமீந்தாள் இந்தி யத்தாய்!
பாழாக்க வந்த மேற்குப்
    படைக்கொடியர் அட்ட காசக்
கீழாண்மைச் செயல்த டுக்கக்
    கிளர்ந்தெழுந்தார் வீர ரெல்லாம்!

வம்புக்குப் போவ தில்லை
    வந்தாலோ விடுவ தில்லை
தெம்புக்குக் குறைவில் லைஎம்
    தேயத்திற் கோழை யில்லை
கும்பிட்ட கையைப் போற்றிக்
    குறுக்கிட்ட கைமு றித்துச்
செம்பாலைச் சிந்தும் வீரச்
    சிங்கத்தின் கூட்டம் நாங்கள்!

ஐந்தாண்டின் முன்னே உங்கள்
    அய்யூப்கான் வெள்ளோட் டத்தில்
செந்தேளாய்க் கொட்டிக் கொட்டித்
    தீர்த்தோமே மறந்து போச்சோ?
வந்தீரே புத்தி கெட்டும்
    வான்படையும் கடற்ப டையும்
வெந்தேதான் போயிற் றேஎம்
    வீரத்தைக் கண்டீரன் றோ?

வெறியாட்டம் தவிர்க்கச் செய்த
    விளையாட்டுப் போரி லேசெம்
மறியாட்டைப் போல்வி ழுந்து
    மடிந்தீரே சரண டைந்தீர்!

பறியுற்ற பின்னே அங்கே
பலவாறு பேசி நிற்றல்
அறிவாமோ? உலகம் உங்கள்
அழிவைத்தான் கண்ட தின்றே!

வெற்றித்தாய் சிரித்தாள் இங்கே
வெற்றுரைக் கூச்சல் அங்கே!
முற்றத்தான் தோற்று லன்றி
முடிக்கிரோ வெறிப்போ ராட்டம்?
கற்றுத்தான் கொடுக்க லாகும்
கண்மூடிக் கொண்டே பாம்புப்
புற்றுக்குள் கையை விட்டால்
பொறுத்துக்கொண் டாயி ருக்கும்?

## பேருந்தைக் கொளுத்துவார்

வல்லமையைக் காட்டுதற்கு மக்கள் மன்றில்
வந்து நின்றால் தெளிவாகும்; அத்தை விட்டு
நல்லவர்தம் வரிப்பணத்தில் ஓடு கின்ற
நாட்டுடைமைப் பேருந்தைக் கொளுத்தி விட்டுக்
கல்லெறிந்து வழிமறித்துக் கூச்ச லிட்டுக்
காட்டுநரி போலிங்கே நடந்து கொள்ளும்
புல்லர்களைக் கண்டிங்கே இளைத்து விட்டால்
புதுவாழ்வு காண்பதுதான் முயற்கொம் பாகும்!

# நகை கொடுப்போம்

''ஏனத்தான்! உங்களைத்தான் ஒன்று கேட்பேன்,
இருந்துபதில் பொறுமையுடன் சொல்ல லாமா?''
''தேனொத்த திருவாயால் நூறு கேள்வி,
தினந்தினமும் கேட்டாலும் சலிக்க மாட்டேன்;
மீனொத்த கருவிழியே, கேட்பாய்! இந்த
மேதினியில் நீ கேட்கும் கேள்விக் கெல்லாம்
நானொத்த பதில்சொன்னால் ஈரச் செவ்வாய்
நற்சான்று முத்திரைநீ பதிக்க வேண்டும்.''

''சீனத்தான் இமயவரை தாண்டி வந்தால்
சேயிழையார் அணிந்துள்ள நகையை எல்லாம்,
மானத்தைக் காப்பாற்றத் தருக வென்று
மந்திரியார் நாட்டின்மேல் ஆணை யிட்டே
ஏனத்தான் கேட்கின்றார்? நகையி னாலே
எப்படித்தான் தப்பிழைத்த சீனத் தானும்
வானத்தை முட்டுகின்ற இமய எல்லை
வரைக்கோட்டை விட்டகல்வான் சொல்லு வீரே!''

''புன்னகையைக் காட்டியுளம் கவரு கின்ற
பொற்கொடியே! மணிவாயால் கேட்ட கேள்வி
சின்னதல்ல என்றாலும் விடைப கர்வேன்;
சீனத்தான் போர்தொடுத்து வந்து விட்ட
இன்னலினைத் தவிர்ப்பதற்கு நம்மி டத்தில்
இருக்கின்ற போர்க்கருவி எல்லாம் போதா!
பொன்னிருந்தால் பிறநாட்டார் தம்மி டத்தே
போர்க்கருவி விலைகொடுத்து வாங்க லாகும்!''

''விளக்கமுறச் சொன்னீர்கள் அத்தான்! இந்த
விளக்கத்தை அமைச்சர்திரு வாயால் சொன்னால்,
விளக்கமுற இல்லறத்தை நடத்தும் அன்பு
விளக்கனைய மாதரெலாம் மனங்க னிந்தே

அளக்கலரும் பொன்னகைகள் நாட்டைக் காக்க
அளிப்பதற்குத் தயக்கமுற மாட்டா ரன்றோ!
களக்கமுறச் சட்டத்தால் எங்கும் தங்கக்
கட்டுப்பா டெதற்கியற்ற வேண்டும் சொல்வீர்?''

''தாய்நாட்டின் மீதன்பு கொண்டி ருக்கும்
தாய்மார்கள் தங்கள்நகை தங்கள் அன்புச்
சேய்களுக்குச் செய்துவைத்த தெல்லாம் கொண்டு
திருநாட்டைக் காப்பதற்குச் சேர்த்து விட்டார்!
பேய்போலப் பணங்காக்கும் கொள்ளை லாபப்
பெரியவர்கள் தங்கத்தைப் பதுக்கி விட்டார்!
வாய்மையிலார் அவர்செய்யும் தீமை நீக்க
வந்ததுதான் கட்டுப்பா டறிக பெண்ணே.''

''கட்டுப்பா டெனவொன்று வந்த தாலே
கட்டுகின்ற தாலிக்கும் கேடா யிற்றே;
சுட்டபசும் பொன்னாலே செய்யும் தாலி
தொங்கியதங் கக்கழுத்தில் மட்டத் தங்கம்
கட்டுவதோ புனிதமெனக் கனன்று கேட்கும்
கனவான்கள் கேள்விக்கிங் கென்ன சொல்வீர்?
சட்டத்தை மதிப்பாரோ தாலி தெய்வம்
தானென்று மதிக்கின்ற பெண்கள் அத்தான்!''

''காதலினால் இரண்டுள்ளம் சேர்ந்த பின்னே
கட்டுவதேன் தாலியெனக் கேட்டோ ரெல்லாம்,
பேதையராய்ப் பெண்களையே வைத்தி ருக்கப்
பெரியவர்கள் முன்னாளில் செய்து வைத்த
சூதறிக! தாலியென்ப தடிமைச் சின்னம்!
தொன்று தொட்ட மடமையிது! சீர்திருத்தப்
பாதைக்கொவ் வாததெனச் சொன்னோ ரெல்லாம்
பாடுகின்றார் புனிதப்பாட் டின்று காணாய்!

''தங்கணவர் மேலன்பு கொண்ட பெண்கள்
தாலியினைப் புனிதமென நினைப்ப துண்டு.
தங்கத்தால் ஆயிடினும், மஞ்ச ளிட்ட
தனிக்கயிற்றினால் ஆயிடினும், தன்னைக் காக்கும்
சிங்கமென வந்திணைந்த கணவன் தொட்டுச்
சேர்த்திறுக்கிக் கட்டியநற் றாலி தன்னை
எங்குமுள தெய்வத்தின் மேலா யெண்ணி
இருப்பவரே கற்புடைய பெண்கள் ஆவார்.

''தாலிகட்டும் வழக்கத்தை மடமை என்று
தள்ளிவைத்த புதுமகளிர் தம்உ யிர்க்கு
மேலவராய்த் தம்கணவர் தம்மை எண்ணி
மேம்படுத்தி நடத்துதலும் கற்பே யாகும்!
வாலிபர்கள் அந்நாளில் புலியை மாய்த்து
வன்பல்லைப் பிடுங்கிவந்து வீரங் காட்டித்
தாலியெனக் காதலியர் மனமு வக்கச்
சந்தனத்துச் சிறுகழுத்தில் கட்டி விட்டார்.

''புலியடிக்கும் காலமெல்லாம் மறைந்த பின்னே
பொற்றாலி கட்டுகின்ற வழக்கம் கண்டோம்.
எலியடிக்கும் பூனையையும் அடித்துத் தின்னும்
இழிசெயலான் சீனத்தான் போர்தொ டுத்து
மலையடுத்த திருநாட்டில் காலை வைத்தான்;
மனங்குமுறி இளைஞரெல்லாம் இமயந் தாண்டித்
தலையெடுத்த சீனத்தான் பல்லு டைத்துத்
தாலியெனப் பெண்களுக்குத் தருதல் வீரம்!

''வீரத்தை மானத்தைத் தாய கந்தான்
வேண்டுகின்ற காலமிது; வெங்கா யத்தின்
காரத்தைச் சொற்களிலே ஏற்றி வீணே
கலகத்தைக் கிளப்புகின்ற சூர ரெல்லாம்

ஓரத்தில் ஒதுங்கட்டும்! புனிதப் பாட்டின்
உரைவிளக்கம் செய்யட்டும்! நாட்டைக் காக்கும்
தீரத்தை யுடையவரே திரளட் டும்நம்
திருநாட்டைக் காப்பதற்குச் சேரட் டும்மே.

''தங்கத்தைப் பதுக்குபவர் நாட்டைக் காட்டித்
தருகின்ற பகைவரடி! சீனத் தான்போல்
இங்கிவரும் சேர்ந்தொழிய வேண்டி யோரே!
இளம்பெண்கள் மணிக்கழுத்தில் தொங்கு கின்ற
தங்கத்தால் அழகேனும் சேர்வ துண்டு!
தனிப்பட்டோர் பெட்டகத்தில் தூங்கும் கட்டித்
தங்கத்தால் என்னவந்து சேரும் பெண்ணே?
தாய்நாட்டின் தேவைக்குப் பயனில் லாமல்!''

''பெருகிவரும் உணர்ச்சியுடன் நீங்கள் சொன்ன
பேச்சினிலே உண்மைமிக உள்ள தத்தான்
கருமிகளின் பெட்டகத்தில் தூங்கு கின்ற
கணக்கற்ற தங்கத்தை நாட்டுக் காக்க
அருமைமிகு சட்டத்தைக் கொண்டு வந்த
அமைச்சரைநான் பாராட்டு கின்றேன்; நல்ல
உருவழகு தருமெனினும் நாட்டைக் காக்க
உதவுவது பெரிதத்தான்; நகை கொடுப்போம்!''

''அத்தனையும் கேட்டறிந்து கொண்டு விட்டாய்,
அதற்குரிய பரிசுதர மறந்து விட்டாய்!
மொத்தம்நீ கேட்டவினு அத்த னைக்கும்
முழுவிளக்கம் சேர்த்துவிடை தந்தே னன்றோ!''
''புத்தறிவு மணங்கமழச் செய்த வர்க்குப்
பொல்லாத ஏமாற்றம் பரிசா காதே!
அத்தனைக்கும் எண்ணியெண்ணித் தருவேன் அத்தான்
அருகில்இதோ வந்துவிட்டேன் உங்கள் அன்பே!''

# கதை பேசம்மா, கதை பேசு!

பெண்ணே! பெண்ணே! கதை பேசு!
பிறந்த வீட்டுக் கதை வேண்டாம்!
கண்ணே! கண்ணே! வாழ்வி னிலே
களிப்பு நல்கும் கதை பேசு!

அன்பே! அன்பே! கதை பேசு!
அடுத்த வீட்டுக் கதை வேண்டாம்!
இன்பம் நல்கும் பெரு வாழ்வை
எடுத்துச் சொல்லும் கதை பேசு!

திரைப்படத்துக் கதையெல்லாம்
சிறுமை சேர்க்கும் அவை வேண்டாம்!
பிறையைப் போலே விழாக் கூட்டும்
பெரியோர் வாழ்வுக் கதை பேசு!

வேளைக் கொன்றாய் வேடத்தை
விரும்பி மாற்றும் மாதர் கதை
ஆளை மாற்றும்; மன மாற்றும்;
அறிவை மாற்றும்; அவை வேண்டாம்!

நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும்,
நல்கும் பாலைச் சுரந் தூட்டும்
வீட்டுத் தாயின் கதை பேசு;
வீரத் தாயின் கதை பேசு;

அன்பு, பண்பு, வீரம், உயர்
அறிவு நல்கும் கதை பேசு
இன்பம் இவைதாம்; பிறவெல் லாம்
இன்னல் சேர்க்கும் அவை வேண்டாம்!

# புகழ்தேடி ஓடாதீர்!

என்னைப்போல் யாருண்டு நாட்டி லென்றே
எல்லோரும் அறிவதற்குச் சொல்ல வேண்டாம்.
தன்னைப்போல் எல்லோரும் தெரிந்து கொள்ளத்
தக்கசெயல் செய்துவிட்டால் புகழே தங்கும்!

புகழ்பெறவே வேண்டுமென ஓடி ஓடிப்
பொருளில்லார் போற்பலரை அண்டி நின்று
நகைசெய்து நில்லாதீர்! நற்செ யல்கள்
நாடோறும் செய்துவந்தால் புகழே நண்ணும்!

செல்வாக்குப் பெற்றவரைத் தேடிச் சென்று
சேர்ந்திருந்து புகைப்படங்கள் எடுக்க வேண்டாம்
நல்லவாக்கும் அருஞ்செயலும் தொண்டு நெஞ்சும்
நற்புகழைச் சேர்த்துவிடும் ஐயமில்லை

மற்றவரைத் தூற்றுவதால் குற்றம் சொன்னால்
மக்களெல்லாம் போற்றிடுவார் நம்மை யென்று
சற்றேனும் நினைக்காதீர்! ஆக்க வேலை
சாதித்தால் புகழ்தானே வந்து சேரும்.

அரும்பசியைக் களைவதற்கும் மற்ற வர்க்கோர்
ஆபத்தைத் தவிர்ப்பதற்கும் முயலு வோர்க்கே
பெரும்புகழே நிலைத்திடநாம் கண்ட துண்டு
பிறிதெல்லாம் வெறும்புகழே! நீர்எ ழுத்தே!

எதிர்நின்று புகழ்வானை நம்பி நம்பி
ஏமாற வேண்டாமே இகழ்வான் பின்னே!
புதர்நின்று மறைத்தாலும் முரசின் சத்தம்
புவியறியும்! தன்னடக்கம் புகழைச் சேர்க்கும்!

# நான் எழுதப்போகும் கவிதை

காலைக் கதிரின் கவர்ச்சியும்
கடலின் அலையின் கிளர்ச்சியும்
மாலை மதியின் தோற்றமும்
மலையின் முடியின் ஏற்றமும்
கோலைக் கொண்டிங் கெழுதியே
குவித்து விட்டார் கவிஞரே
வேலை யின்றி மீண்டும்நான்
விளம்ப லாமோ இவற்றையே?

இன்பம் கமழும் தமிழிலே
இளம்பெண் அழகைப் பாடினர்
அன்பு நிறைந்த நெஞ்சிலே
அரும்பும் காதல் பாடினர்
பொன் படைத்த இன்பமும்
புரியக் கவிதை பாடினர்
என்படைப்பாய் மீண்டும் நான்
இவற்றைப் பாட லாகுமோ?

உழவர் பெருமை பாடினர்
உழைப்போர் உரிமை பாடினர்
இழவர் இளைஞ ராகியே
கிளர்ந் தெழுந்த வீரமும்
அழகு மடவார் வாளெடுத்
தரசு புரிந்த காதையும்
எழுதி விட்டார் நானுமே
இவற்றை மீண்டும் எழுதவோ?

அத்த னைக்கும் மேலதாய்
அறிஞர் போற்றும் நூலதாய்ப்
புத்தம் புதிய பாடலாய்ப்
பொருளும் சுவையும் கூடவே
மெத்த மெத்த முயன்றுநான்
விரும்பிப் படைக்கப் போகிறேன்
இத்த ரைக்கோர் புதுமையாய்
இருக்கும் அந்தக் கவிதையே!